819

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

அலுவலக வெளியீடு

தொகுதி – 20 எண் – 2

மார்ச் – 1992

D
V211,31'N92
N92.20.2
64971

வெளியீடு 1-12-1992 | Issued 1-12-1992

819/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 25, 1992 - தொகுதி 20 எண். 2
Wednesday, the 25th March 1992 - Volume 20 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

லை ரூ. 3—00] | [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

25—3—1992.

பக்கங்கள்.


. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 238—279

. 25—3—1989 ஆம் நாளன்று அவையில் இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனமும், அந்த அநீதியை எதிர்த்துப் போராடி மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்று வெற்றி வாகை சூடிய முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளும், வாழ்த்துக்களும் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையும். 279—296

3. கவன ஈர்ப்பு—

(அ) ஆலங்குடி தொகுதியில் வெட்டன்விடுதி மற்றும் வாலக்கன்காடு கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து. 296—299

(ஆ) பழனி நகராட்சியில் போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லாதது குறித்து .. 299—301

4. மானியக் கோரிக்கைகள், 1992-93 விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி). 301—395

(அ) கோரிக்கை எண் 47—செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. ..

(ஆ) கோரிக்கை எண் 51— சுற்றுலா .. ..

(இ) கோரிக்கை எண் 52—தமிழ் வளர்ச்சி—பண்பாடு .. .. .. ..

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா .. } 301—358

திரு. எஸ். எஸ். ராமசுப்பு .. .. .. 304—315


டி2 53-48—1

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. கு. லாரன்ஸ் .. .. .. .. | 315–321 |
| *திரு. சி. இராமசுவாமி .. .. .. | 321–325 |
| திரு. செ. கு. தமிழரசன் .. .. .. | 325–332 |
| *திரு. கே. கந்தசாமி .. .. .. .. | 333–336 |
| *திரு. எம். பூராசாமி .. .. .. .. | 336–339 |
| *திரு. எச். எம். ராஜு .. .. .. | 339–348 |
| திரு. ஜி. பழனிசாமி .. .. .. | 348–351 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 351–358 |
| 5. 25–3–1989 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் தொடர்பான பிரச்சினை | 358–359 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 395–396 |
| 7. இணைப்புகள் .. .. .. .. | 397–472 |


164971

D

V 211, 31/1992

11·2·2012

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 12, பிரஜோற்பத்தி—திருவள்ளுவராண்டு 2023**

**1992, மார்ச் 25, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். "

முக மகிழ்ச்சியோடு விருந்தினரைப் போற்றுபவர்கள் வீட்டில் செல்வம் எனப்படும் திருமகள் எப்போதும் மன மகிழ்ச்சியோடு இருந்திடுவாள்.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 337, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

337—

### குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டிடம்.

*5642 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மங்களூர் தொகுதி திட்டக்குடி குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடி குற்றவியல் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலத்தினைப் பெறுவதற்கு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1992 மார்ச் 25

<u>திரு. ச. புரட்சிமணி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டுக் காலமாக நீதிமன்றம் தொடங்கப்பட்டு கட்டிடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டு நிலத்தைக் கையகப்படுத்தி கட்டிடம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையின் மீது அதுபோன்ற நடவடிக்கையெடுத்து எதையும் விரைந்து செய்யக்கூடிய டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் என் தொகுதியில் திட்டக்குடியில் ஒரு நீதி மன்றத்திற்குக் கட்டிடம் கட்ட அவசர நடவடிக்கை எடுக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திட்டக்குடி வழக்கறிஞர் சங்கத்திலிருந்து திட்டக்குடியில் அமைந்திருக்கிற தாசில்தார் அலுவலகத்தில் ஒரு இடமிருக்கிறது என்றும், அந்த இடத்திலே இந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் ஒரு மனுவை அரசுக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த மனுவினை நாங்கள் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். உயர்நீதி மன்றமும் பரிவுடன் பரிசீலனை செய்து வருகிறது. விரைவில் உயர்நீதிமன்றம் அனுமதித்த பிறகு அந்தக் கட்டிடம் கட்டப்படும்.

<u>திரு. ச. புரட்சிமணி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் இந்த ஆண்டிலே கட்டி முடிக்கப் படுமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றம் அனுமதித்த பிறகு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண். 338 திரு. கே. தவசி, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

338—

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதிகள்.

* 3618 <u>திரு. கே. தவசி, திரு. வ. சத்தியமூர்த்தி</u>: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்குத் தகுதிகள் என்ன ?

(ஆ) எவ்வளவு நிலம் ஒப்படைப்பு செய்யப்படுகிறது ?



1992 மார்ச் 25]

(இ) 1990-91, 1991-92 ஆம் ஆண்டில் எத்தனை நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது ?

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) குடும்பத்தினுடைய ஆண்டு வருமானம் 6,400 ரூபாய்க்குக் குறைவாய் இருக்கிற வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு இலவச ஒப்படை செய்யப்படுகிறது.

(ஆ) அது மாநகராட்சியாக இருந்தால் ஒரு செண்டும், நகரப் பகுதியாக இருந்தால் ஒன்றரை செண்டும், மற்றப் பகுதிகளுக்கு மூன்று செண்டும் ஒப்படைக்கப்படுகிறது.

(இ) 1990-91-இல் 3,77,069 பேர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1991-92 இல் 4,01,823 பேருக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

<u>திரு. கே. தவசி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் நிலத்தைக் கையகப்படுத்துகின்ற நிலையில் பல்வேறு அரிசன பொது மக்களுக்குத் தொந்திரவு கொடுக்கின்ற வகையில் நிலங்களைக் கையகப்படுத்துவதில் ஸ்டே முதலியவைகள் கொடுக்கப்பட்டு விடுகின்றன அரசு, அதை ஆராய்ந்து ஸ்டேயை உடனே காலி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீட்டு மனைப் பட்டா கொடுப்பதில் மூன்று விதமாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசு நிலங்களைக் கொடுப்பது தான் இப்பொழுது கேள்வி. ஆதி திராவிடர்களுக்குக் கொடுப்பது என்பது அதை அரசு கையகப் படுத்திக் கொடுக்கிறது. அதைப்போல பின்தங்கியவர்கள் இருக்கிறார்களே, சலவைத் தொழிலாளர்கள், மற்றவர்களுக்கெல்லாம் கொடுப்பது வகைப்படுத்தப்பட்டு கொடுக்கப்படுகிறது. இப்பொழுது இங்கே கொடுக்கப்படுவது அரசினுடைய நிலங்கள், இதிலே தடை உத்தரவு வாங்குவதற்கு வாய்ப்பே இல்லை.

முற்பகல் 9-35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமனை இல்லாதவர்கள் குடிமனைப் பட்டா கோருகிறபோது, அதற்கான மனு போடுகிறபோது, அரசுத் தரப்பிலிருந்து, அந்தக் குடிமனைக்குச் சொந்தக்காரர்களுடைய—

சம்மதக் கடிதம் பெற்றால்தான், குடிமனை வழங்கப்படும் ; ஆகவே, சம்மதக் கடிதம் பெற்று அனுப்புங்கள் என்று மனுக்கள் முழுவதும் திருப்பி அனுப்பப்படுகின்றன. புதிதாக இணைக்கப் பட்ட அந்த ஷரத்தை ரத்து செய்து, அவர்களுக்கு பட்டா, அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, வீட்டுமனை இலவசமாகக் கொடுக்கப்படுவதுபற்றி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது, குடியுரிமைப்பட்டா. குடியுரிமைப் பட்டா என்பதற்கும், வீட்டுமனைப் பட்டா என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. குடியுரிமைப் பட்டா என்றால், யாராவது நிலமற்றவர்கள், நிலமற்ற விவசாயிகள், கிராமக் கைவினைஞர்கள், யார் நிலத்திலாவது பல ஆண்டுகள் குடியிருந்தால், அதை அரசு எடுத்து அரசினுடைய செலவில் அவர்களுக்குக் கொடுக்கப்படுவது. போக்குவரத்துப் பாதையும் அமைத்துக் கொடுக்கப்படும். அப்படி அவர்கள் கேட்டால், அத்தாட்சி இருந்தால், அரசு இந்த காரியங்களைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை கொடுக்கிற நேரத்தில், அங்கே குடியிருப்பவர்களுக்கு, நகரப் பகுதிகளிலும், மாநகராட்சிப் பகுதிகளிலும் சில தடைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தத் தடைகளை நீக்குவதற்கான முன்மொழிவுகள் ஏதேனும் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படுகிற நிலம் அரசுக்குத் தேவைப்படுமானால், அது நிறுத்தி வைக்கப்படுகிறது. அரசுக்குத் தேவையில்லை என்கிற நிலங்களைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். குறிப்பிட்ட இடங்களில் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால், அதை மட்டும் தனியாகப் பார்த்து, தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மக்கள் மனுப் போட்டு, பல இடங்களிலே வாங்கி வைத்திருக்கிறார்கள். இப்படி ஒரே நபர் பல இடங்களிலே இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வாங்குவதை, எந்த வகையில் ஆய்வு செய்து கண்டு பிடிக்கிறீர்கள்? ஒருவருக்கு ஒன்றுதான் என்று உறுதி செய்து கொண்டு, கொடுக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்கு ஒன்றுதான் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்கள், சமுதாயத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். அதேபோல், வீட்டுமனைப் பட்டாவிலும் அப்படி சிலர் இந்த முறையைக் கையாளுகிறார்கள். அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு சில இடங்களில் வீட்டுமனைப் பட்டா கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கிறபோது, சில இடங்களில் ஒரு சென்ட், $1\frac{1}{2}$ சென்ட் என்று வீட்டுமனை கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களில், ஊரக வளர்ச்சித் துறை மூலம் தொகுப்பு வீடுகள் கட்டுகிறபோது, குறைந்தது 3 சென்ட் இருந்தால்தான், அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் வழங்கப்படுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இது பல இடங்களில் இருக்கிறது. எனவே, வருவாய்த் துறை மூலம், ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கிறபோது, குறைந்தது 3 சென்ட் கொடுப்பதற்கு ஒரு விதியை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளெல்லாம் இப்போது கிராமப்புறங்களில் தான் கட்டப்படுகின்றன. அப்படி கட்டப்படுகிற தொகுப்பு வீடுகளுக்கு, நிலப்பட்டா முதலிலே அவர்களுக்கு உரிமையாக இருந்தாக வேண்டும். அப்படி இருந்தால்தான், தொகுப்பு வீடுகள் கட்டுவார்கள். அப்படிப் பார்க்கும்போது, எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் ஆதி திராவிடர்களுக்கு 3 சென்ட் கொடுக்க வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்யும் என்பதையும், எங்கேயாவது தவறு நடந்தால், அதைத் திருத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக வீட்டுமனை பெறுபவர்களுக்கு குறிப்பிட்ட வருமானத்தை வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழைகள் தான் இலவச வீட்டுமனைகளுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். ஆகவே, மேற்படி வருமானத்தை குறைக்கிற எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் வருட வருமானம் ரூ. 5,000 ஆகத்தான் இருந்தது. இப்போதுதான், புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், அவர்கள் ரூ. 6,400 ஆகக் கொண்டு வந்தார்கள். ரூ. 6,400 கொண்டு வருவதற்குக் காரணம் கூலி வேலை செய்கிறவர்கள் கூட இன்றைக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 6,000 வாங்கி விடுகிறார்கள். அப்படி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் கூலி வேலை செய்கிறபோது, பல இடங்களில் பணம் வந்துவிடுகிறது. என்பதாலும், அவர்களுக்கு இருக்கிற உரிமைகள் பறிக்கப்படுகிறது என்பதாலும் தான் இது உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்த்தப்படுகிறபோது, அந்தத் தகுதி வருகிறபோது, கீழ்மட்டத்திலேயிருந்துதான் அதைப் பார்க்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9—40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 339.—திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

339—

ஆவணப் பாதுகாப்பு முறையை நவீனமயமாக்குதல்.

*6226 திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப் பாதுகாப்பு முறையை நவீனமயமாக்குவதற்காக கணிப்பொறிகளை (Computers) பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பதிவுத்துறையில் கணிப்பொறி புகுத்துவது சம்பந்தமாக கருத்துரு அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சமயங்களிலே வில்லங்கச் சான்றிதழ்கள் பெறுவதற்கும், பத்திர நகல்கள் பெறுவதற்கும் மிகுந்த காலதாமதம் ஆகின்றது. அதேபோல, மிகப் பழைய பத்திரங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு இப்போது இருக்கிற முறையிலேயே வழியில்லாமல் இருக்கிறது. இப்படி நவீனமய





மாக்குவதன் மூலம் அதையெல்லாம் floppy டிஸ்க்கில் பதிவு செய்து விட்டால், வேண்டும் என்று நினைக்கின்ற பொழுது அந்த நகல்களை எடுத்துக் கொள்வது எளிதாக இருக்கும். அத்துடன், சார்பதிவாளர் அலுவலகங்களில் ஒரு 'செராக்ஸ்' மிஷினும் வைக்கப்படும் என்று சொன்னால், அது நகல் எடுப்பதற்கு எளிதாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கணிப்பொறி வைக்கப்படுமா என்று கேட்டு, இப்போது செராக்ஸ் மிஷின் வைக்கப்படுமா என்றால் எப்படி ? கணிப்பொறியிலேயே நில்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுதான் 'ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டியில்' இது தேவை என்று நினைத்து 10.75 இலட்சம் ரூபாய்க்கு கணிப்பொறி வாங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி இதையெல்லாம் உணர்ந்துதான் ஒவ்வொரு மாதத்திலும் ஏற்படுகிற நில உரிமை மாற்றங்கள், தன்மைகள், மற்றும் பதிவு விவரங்கள் புள்ளி விவரங்களை எடுப்பதற்காகவும், அதேபோல் பொது மக்களுக்குத் தேவையான நகல்களை உடனுக்குடன் கொடுப்பதற்காகவும், நிலப் பதிவுகள், திருமணப் பதிவுகள், பிறப்பு, இறப்பு பதிவுகள், நிறுவனப் பதிவுகள் இது போன்றவைகளை எல்லாம் உடனடியாகக் கொடுப்பதற்காகத்தான் இதை நிறுவுவதற்கு இந்த ஆண்டு ரூ. 10 இலட்சத்து 75 ஆயிரம் ஒதுக்கி இருக்கிறது என்பதையும், விரைவிலேயே இது நிறுவப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கணிப்பொறி வைக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் மேலை நாடுகளில் 'கம்ப்யூட்டர் வைரஸ் டிசீஸ்' என்று வருகிறது. அப்படி கம்யூட்டருக்கு வைரஸ் டிசீஸ் அதிகமாக வந்து அதனுடைய மெமரி பவர் முழுவதுமாக பாதிக்கப்படுகின்றது. அப்படியிருக்க கம்ப்யூட்டரில் பதிவுகள் வைக்கப்படுமானால் அதில் தவறு நடந்து விட்டால்—ஏற்கனவே என் பெயரில் பட்டா இருந்தால் வேறு ஒருவர் பெயருக்கு நடைமுறையில் இருக்கிறது—அதிக அளவு பாதிப்பு

ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா, அதைக் களைய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தவறு வராமல் தடுப்பதற்கு பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 340.— திரு. வ. சத்தியமூர்த்தி— மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

340—

சீர்மரபினருக்கு மானியத்துடன் வீட்டுவசதி.

*4732 திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்டோர் நல அலுவலகத்தின் மூலம் சீர்மரபினர்களுக்கு மானியத்துடன் வீடு கட்டிக்கொடுக்க பல்வேறு கிராமங்களிலுள்ள பயனாளிகளிடம் கிராம நிர்வாக அலுவலர் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட் டனவா ?

(ஆ) அப்படியாயின் எந்த ஆண்டு பெறப்பட்டது ?

(இ) விண்ணப்பதாரர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) , மற்றும் (இ) : இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி நேரத்தில் புகாராகச் சொல்லவில்லை. தகவலாக நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் புகார் கூடாது. தகவல் தெரிவியுங்கள்.



திரு. வ. சத்தியமூர்த்தி : புகார் அல்ல. தகவலாக நான் சொல்வதை எடுத்துக் கொள்ளுங்கள். இராமநாதபுரம் மாவட் டம் முதுகுளத்தூர் வட்டத்தில் சீர்மரபினர் வாழ்கின்ற கிரா மப்புறங்களில், ஏழை எளியவர்களிடம் 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு கிராம நிர்வாக அதிகாரிகள், உங்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட இருக்கின்றன. உங்களுடைய பட் டாக்களைக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, அவர்களிடம் செலவுத் தொகை என்ற பேரில் ஒன்றையும் வாங்கி, அதற்கு மதிப்பீடு தயார் செய்து, பிற்பட்டோர் நல அதிகாரி மூலம், பிற்பட்டோர் நல இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து, உங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை இருக்கிறது என்ற தகவலை அனுப்பிக் கொண்டு, தொடர்ந்து அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏமாற்றப் படாமல் அவர்களுக்கு இந்த நிதி ஆண்டில், சீர் மரபினர்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய் வதற்கு நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நடவடிக்கை எடுக்க முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கி றேன்.

முற்பகல் 9—45

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் . கேட்டு இருக்கிறார்கள், இந்த ஆண்டிலாவது சீர்மரபினருக்கு வீடுகள் கட்டித்தர இயலுமா என்று. இந்த ஆண்டு அரசு, குறிப்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை எப்படியாவது நிறைவேற்றுவதற்காக எப்படி திட்டங் களைத் தீட்டுவது, எப்படி நிதி ஒதுக்கீடு செய்வது, மத்திய அரசினிடத்திலேயிருந்து இப்போது, புதிதாக அமைக்கப்பட்டிருக் கிற பிற்படுத்தப்பட்டோர் பொருளாதாரக் கழகத்தில் இருந்து நிதியுதவி பெற முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிக் கும்படி துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்குப் பிறகு தான் இதைப்பற்றிய ஒரு முடிவெடுக்க முடியும். ஆனால், சீர்மரபினருக்காக வீடுகள் கட்டுகிற திட்டம் 1981ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறைவேற்றப்பட வில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தெரி விப்பதைப்போன்று யாராவது அந்தப் பகுதியில் இருக்கின்ற அதிகாரிகள் இப்படி தவறாக, பொது மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டதை அவர்கள் ஆதாரத்தோடு தெரிவித்தால், உடனடியாக அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம். இது இராமநாதபுரம் மாவட்டம் பற்றியது.

திரு. கி. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் வரும் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்காக 5,000 வீட்டுமனைகள் கொடுப்பதாக இந்த அரசு அறிவித்ததைக்கண்டு மகிழ்ச்சி எய்தி அந்த 5,000 வீட்டுமனைப்பட்டாக்களைக் கொடுக்கும்போது அதைத் தொகுப்பு வீடுகளாக அரசு அவர்களுக்குக் கொடுத்து உதவுமா என அறிய விரும்புவதோடு, அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பெயரைச் சூட்டி அந்த மாபெரும் திட்டத்தின் பயன் கூட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக துறை அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, சீர்மரபினருக்கு, சலவையாளர் போன்ற வாழ்க்கையில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக நிலங்கள் ஒதுக்கித் தருவதற்காக நிலங்களைக் கையகப்படுத்துகிற திட்டம்தான் இப்போது அரசு அறிவித்திருக்கிற திட்டம். நடைமுறைப்படுத்துகிற திட்டம். ஆகவே, வீடு கட்டுகிற திட்டம் இதில் அடங்காது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புகிற கேள்விக்கு விடையளிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 341— திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

**341—**

மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம்

***1318 திரு. பே. தர்மலிங்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவில் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்யப்படுகிறது.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியின் பயனை அனைவரும் அடையவேண்டும் கல்லாதார் இல்லை என்ற நிலை வரவேண்டும் என்கிற வேட்கை



யோடு கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட, அறிவொளி இயக்கத்தைப் புகுத்தி வரும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கிராமந்தோறும் உள்ள பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை, நல்ல முறையில் அவர்கள் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்பதற்காக, குறைத்து கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க நமது அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிதியாதாரத்திற்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரம் 1 : 60 அல்லது 1 : 70 என்ற அளவில் கிராமப்புறங்களில் உள்ளதால் இதை 1 : 40 என்ற அளவுக்குக் குறைக்க, கூடுதலாக கிராமப்புற ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள நிலையில் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரப்படி நாம் ஆசிரியர் பணியிடங்களை வழங்கவேண்டுமாயின் 40,000 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாகத் தேவை. 1989–90இல் 500 ஆசிரியப் பணியிடங்களும் 1990–91இல் ஆயிரம் பணியிடங்களும் அரசால் தரப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் 1,200 ஆசிரியர்களை அப்பாயிண்ட் செய்வதாகச் சொல்லப்பட்டிருந்தது. இந்த நிதி நிலை அறிக்கையில் 1,400 இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, சென்ற ஆண்டு அறிவித்த அந்த 1,200 பேர் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ள 1,400இல் அந்த 1,200 அடங்குமா அல்லது 2,600 ஆசிரியர்கள் நியமிக்கப்படப் போகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1991–92க்கு என்று ஒதுக்கப்பட்ட ஆசிரியர்கள் பணியிடங்கள் வேறு, 1992–93க்கு என்று ஒதுக்கப்படுகின்ற ஆசிரியர்கள் பணியிடங்கள் வேறு.

[1992 மார்ச் 25

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் '' காலேஜ் ஆப் ஆர்ட்ஸ் அன்ட் கல்ட்சர் '' என்று சொல்லப்படுகிற கல்லூரிகள் 3 இடங்களில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன். பள்ளிகளில் மாணவர்களுடைய எண்ணிக்கைக்குத் தக்கபடி ஆசிரியர்களை நியமிப்பது பற்றிய கேள்வி. கல்லூரிகள் இதிலே வராது.

திரு. இராம. இராமநாதன் : ஆசிரியர்கள் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. இது பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றியது. அது வேறு துறை. இது வேறு துறை. உட்காருங்கள். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆரம்பப் பள்ளிகளிலே எண்ணிக்கையின் அடிப்படையிலே வைப்பதைக் காட்டிலும் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு ஆசிரியர் என்று இருந்தால் தான் அவர்கள் உயர்நிலை மேல்நிலை பள்ளிகளுக்கு வருகின்றபோது அந்தத் தரமே மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தினாலே இங்கே ஒரு மெடிக்கல், இன்ஜினியரிங் படிப்புக்கு எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு மார்க் குறைந்து விடுகிறது. ஆகையால் அந்தக் கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்காக. இங்கே 1, 2 வகுப்புகளுக்கு வேண்டுமானால் ஓராசிரியர் வையுங்கள், 3, 4, 5 என்ற வகுப்புகளிலே தனித்தனி ஆசிரியர்கள் வைத்து அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? அரசுக்கு பணம் செலவழிந்தால் கூட கல்விக்காக ஆசிரியர்களை அதிகமாக்கி தரத்தை உயர்த்துவதற்காக விதியை கொஞ்சம் தளர்த்தி ஆசிரியர்கள் அதிகமாக நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய நோக்கம் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியரைப் போடுவதுதான், ஆனால் கிராமங்களிலே பள்ளிகளை ஆரம்பித்தபோது ஓராசிரியர்கள் பள்ளிகள் என்று ஆரம்பித்து, 1வது முதல் 5 வது வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று போட்டிருக்கிறோம், அது தவறு என்று கண்டுதான் ஈராசிரியர்களாக அமர்த்துவது என்கின்ற முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது. அப்படி போடும்போது முதல் வகுப்புக்கு ஒரு ஆசிரியரும், மற்ற வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தால்தான் கல்வியினுடைய தரம் உயரும்.



1992 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மெ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. என்னுடைய தொகுதியிலே 100 குழந்தைகளுக்குக் கூட ஒரு ஆசிரியர் இல்லாமல் இருக்கிறார்கள், அதைக் கணக்கிலே எடுத்து ஒரு 30,35 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சாரப்படி அரசாங்கம் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற பள்ளிக்கூடங்களினுடைய தேவைகளுக்கு ஏற்ப எங்களுக்குத் தரப்படுகின்ற இடங்களை நாங்கள் பகிர்ந்து கொடுத்து வருகிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு,

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் 1991–92. 1992–93 ஆகிய இரண்டு நிதி ஆண்டுகளிலே ஆசிரியர்களை நியமிப்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த தாய்மார்களுக்கு, பெண் ஆசிரியர்களுக்கு வாய்ப்பு தருகின்றபோது, அதில் எத்தனை சதவிகிதம் அடங்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் 5 வகுப்புகளுக்கு பெண் ஆசிரியர்கள் நியமிப்பது என்ற அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு சட்டமன்ற கேள்வியின் வாயிலாக சுமார் 12 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, அந்தப் பணியிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை, அவை நிரப்பப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்,

[1992 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 பணியிடங்கள் என்று திடீரென்று சொல்கின்றார்கள். அது பற்றிய விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனியாகக் கேள்வி போடச் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றி சொல்லலாம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 342. திரு. கே, கே, சின்னப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

342—

அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வசதி,

*5246 திரு. கே. கே. சின்னப்பன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.எஸ்சி., எம்,காம்,) தொடங்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பகுதி என்பது பெரம்பலூர் நாடாளுமன்றத்தினுடைய மத்திய பகுதியாகும். அது 3 தாலுக்காக்களும் 6 சட்டமன்ற தொகுதிகளும் அடங்கிய, அதிகப்படியான தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் பின்தங்கிய மக்களும் வாழ்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலிருந்து, கல்வி கற்கின்ற மாணவர்கள், மேல் படிப்பிற்கு, பட்டப் படிப்பிற்கு 100, 200 கிலோ மீட்டர் சென்று, திருச்சி, தஞ்சை, சிதம்பரம்-அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. நம்முடைய பின் தங்கிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களும், பின் தங்கிய மக்களும் பயன்படுகின்ற வகையில் மீண்டும் நம்முடைய அரசு பரிசீலனை செய்து அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு பயன்படுகின்ற வகையிலே மேல்படிப்பு படிப்பதற்கு அங்கே மீண்டும் ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் கல்வியாண்டில் பட்ட மேற்படிப்பு துவக்க வேண்டிய கருத்துரு கல்லூரி முதல்வரிடம் இருந்து ஏதும் பெறப்படவில்லை. 1992–93 ஆம் ஆண்டில் பட்ட மேல் படிப்பு துவக்குவது குறித்த செயற் குறிப்பு பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.

முற்பகல் 9–55

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதியிலே படிக்கின்ற மாணவர்களும், அந்தப் பகுதியிலே இருந்து மற்ற இடங்களில் இடம் கிடைக்காத மாணவர்களும், சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின் போதே அந்தப் பகுதியிலே உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பிரேரணையை அந்தக் கல்லூரியின் முதல்வர் அனுப்பாவிட்டாலும் நம்முடைய அரசே அவர்களிடமிருந்துபெற்று மீண்டும் அந்தப் பகுதியிலே படிக்கமுடியாத நிலையில் இருக்கின்ற பின்தங்கிய மாணவர்கள் மேல்படிப்பு படிக்க வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே எல்லா பள்ளிகளுக்கும் என்னென்ன தேவை என்று கருத்துரு அனுப்பச் சொல்கிற பழக்கம் இப்போது இல்லை. கல்லூரி முதல்வர் தான் அனுப்ப வேண்டும். அவர்களை அனுப்பச் சொல்லி சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள், மக்கள் பிரதிநிதிகள் போன்றவர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் சு.மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து யாரும் தன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை

யென்று சொன்னார்கள். அரியலூர் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. பல முறை, பல ஆண்டுகளாக கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் அங்கே பி.காம். பட்டப் படிப்பு இல்லாத நிலையை மாற்றி அதனை வருகிற கல்வி ஆண்டிலாவது துவக்க அரசு முன் வருமா என அறிய விரும்புவதோடு, நானே இது குறித்து கோரிக்கை விடுத்திருக்கிறேன். பி.காம் பட்டப் படிப்பு இல்லை யென்று கடந்த ஆண்டு மாணவர்கள் உண்ணாவிரதம் இருந் தார்கள். அப்போதே நான் இந்த கோரிக்கையை விடுத்திருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளை ஆங்காங்கே பொதுக் கூட்டங்களில் வைக்கலாம் அல்லது உண்ணாவிரதங் களில் வைக்கலாம் அல்லது சட்டமன்றத்திலும் பேசலாம். ஆனால் முறையான கோரிக்கை கல்லூரி முதல்வரிடமிருந்துதான் வர வேண்டும். இது அரசு கலைக் கல்லூரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 343, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343—

## ஆலங்குளம் அரசு மருத்துவமனை.

*1192 திரு. எஸ் எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங் குளம் அரசு மருத்துவமனையில் உள்ள எக்ஸ்ரே கருவியை இயக்க பணியாளர் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட் டம் ஆலங்குளத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர் வீச்சாளர் பதவி 8–11–1991 அன்று நிரப்பப்பட்டது.



திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரப்பப் பட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே நிரப்பப் பட்டுவிட்டது. மகிழ்ச்சியடைகின்றோம். அதே சமயத்தில் அது இன்னும் இயக்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச் சர் அறிவாரா? அங்கே ஏற்கெனவே ஒரு ரேடியோகிராப்ரை போட்டாலும், ஒரு டாக்டரையும், அசிஸ்டெண்டையும் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, அது இன்னும் சரி யாக இயங்காமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து உடனடியாக இயக்க வைக்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியிலே இந்தப் பணியிடம் நிரப்பப் படுமா என்று கேட்ட காரணத்தினால் நிரப்பப்பட்டது என்று சொன்னேன். இதுவரை அந்த எக்ஸ்ரே மெஷின் இயங்காமல் இருக்கிறது என்கிற தகவல் இப்பொழுது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். எனவே, நான் அன்றைக்கு மானியக் கோரிக்கையின்போது கூட சொன்னேன். சின்னச் சின்ன கருவி கள் கூட அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்றன. ஏறத்தாழ 1,703 மருத்துவமனைகள் இன்றைக்கு இருக்கின்றன. எல்லா இடங்களிலேயும் பல கருவிகளை நாம் வைத்திருக்கிறோம். அவைகள் சில நேரங்களில் இயங்காமல் போய்விடுகிற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. எனவே, நீங்கள் இங்கே சொன்ன கருத்தை வைத்து, அதனை ஆதாரமாக எடுத்து, அதை இயக்கு வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 344, திரு. தி. சாத்தையா. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

344—

## வனத்துறை ஊழியர்களின் அடிப்படை ஊதியம்

*5291 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வனத்துறையில் பணிபுரியும் பாரஸ்டர்களுக்கும், ரேஞ் சர்களுக்கும் கல்வித் தகுதியும், பயிற்சியும் (டிரெயினிங்) ஒரே மாதிரியாக இருக்கும் பொழுது அடிப்படை ஊதியம் ரூ. 600 வேறுபாடு உள்ள நிலைமைய மாற்ற அரசு ஆவன செய்யுமா?

[1992 மார்ச் 25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரேஞ்சர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி பயிற்சி மற்றும் பணிப்பொறுப்புகள் பாரஸ்டர்களைவிட உயர்ந்ததாக உள்ளதாலும், ரேஞ்சர்கள் பதவியிடம் பாரஸ்டர்களைக் கொண்டு பதவி உயர்வின் மூலம் நியமிக்கப்படுவதாலும், ரேஞ்சர்களுக்கு பாரஸ்டர்களைக் காட்டிலும் அதிக ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, ஒரே மாதிரியான ஊதியம் வழங்கும் நிலை எழவில்லை.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாரஸ்டர்களுக்தும், ரேஞ்சர்களுக்கும் அடிப்படைக்கல்வித் தகுதியும், பயிற்சித் தகுதியும் ஒரே நிலையில் இருக்கும்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் மட்டும் ஏன் வித்தியாசம் இருக்க வேண்டும் ? இப்போது ரேஞ்சர்களுக்கு 2,000 ரூபாயாகவும், பாரஸ்டர்களுக்கு 1,400 ரூபாயாகவும் ஊதியம் இருக்கிறது. இந்த ரேஞ்சர்கள் பயிற்சி முடிந்தவுடன் நிர்வாகப் பிரிவுக்குப் போகிறார்கள். ஆனால், இந்த பாரஸ்டர்கள் பயிற்சி முடிந்தவுடன் பீல்ட் ஓர்க்குக்குப் போகிறார்கள். இப்படி பாரஸ்டர்கள் பீல்ட் ஓர்க்குக்குப் போவதால் அவர்கள் நிறைய ரிஸ்குகளை எடுத்துப் பணியாற்றுகிறார்கள். ஆகவே, இந்த ஊதிய வேறுபாடுகளைக் களைந்து, அவர்களை ஊக்குவித்து, ஒரே சீரான ஊதியத்தையும், அந்தஸ்தையும் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருப்பது ரேஞ்சர்களுக்கும், பாரஸ்டர்களுக்கும் இருக்கிற வித்தியாசம். ரேஞ்சர்கள் ஆற்றும் பணி வேறு, பாரஸ்டர்கள் ஆற்றும் பணி வேறு. ரேஞ்சர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஏரியா என்பது ஒரு குறிப்பிட்ட வரையறையில் வகுக்கப்பட்டிருக்கிறது. பாரஸ்டர்களுக்கும் அதுபோல வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாரஸ்டர்களாக இருக்கிறவர்கள்தான் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ரேஞ்சர்களாகப் பதவி உயர்வு பெறுகிற காரணத்தால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையில் உள்ள ரேஞ்சரும், பாரஸ்டரும் காவல் துறையில் உள்ள இன்ஸ்பெக்டருக்கும், சப்-இன்ஸ்பெக்டருக்கும் சமம். இரண்டும் கிட்டத்தட்ட ஒரே அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், ரேஞ்சர்கள் ட்ரெயினிங்



1992 மார்ச் 25]

முடித்தவுடன் அவர்களுக்கு 2,000 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகவும், பாரஸ்டர்கள் ட்ரெயினிங் முடித்தால் அவர்களுக்கு 1,400 ரூபாய் அடிப்படைச் சம்பளமாகவும் பிக்ஸ் பண்ணுகிறார்கள். ஆனால், காவல் துறையில் பர்ஸ்ட் அப்பாயின்ட்மென்ட் எஸ்.ஐ.ஆக இருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துறையில் இருக்கக்கூடிய இரண்டு பதவிகளுக்குரிய வித்தியாசத்தைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். இன்னொரு துறையோடு சேர்த்து, ஒப்பிட்டால் பதில் கொடுக்க முடியாது. அது பே கமிஷனில் சொல்ல வேண்டிய ஒன்று. கேள்வி நேரத்திலே இது வராது. இது தொடர்பான கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தி, சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைக் கேள்வி. ட்ரெயினிங் எல்லாம் ஈக்குவலாக இருக்கும்போது. அவர்கள் ட்ரெயினிங் முடித்தவுடன்—ரேஞ்சர்களானாலும் சரி. பாரஸ்டர்களானாலும் சரி— அவர்கள் முதலிலே பீல்ட் ஓர்க் என்று 3 வருடங்களோ அல்லது 10 வருடங்களோ செய்துவிட்டு, அதன் பிறகு அட்மினிஸ்ட்ரேடிவ் சைடில் உள்ள ரேஞ்சர் பொசிஷனை அவர்களுக்கு கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன், மேலும் அவர்களுடைய சம்பள வீதத்தையும் சரிப்படுத்தி, சீராக அமைத்து, அவர்களை ஊக்குவித்தால், பீல்ட் ஓர்க் பண்ணும் பாரஸ்டர்களுக்கு ஊக்கமேற்பட்டு, காடுகளைப் பாதுகாக்க வசதியாக இருக்குமென்று கூறி, இதில் ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல கல்வித் தகுதியை வைத்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் சம்பளத்தைக் கொடுக்க முடியாது. காரணம் ஒருவர் ஒரு இடத்திலே கிளார்க்காகப் பணியாற்றலாம், இன்னொருவருக்கு மேலிடத்திலே வருவதற்கு வாய்ப்பு கிடைக்கலாம், இப்போது ரேஞ்சர்களை குறிப்பிட்ட அளவுக்குத்தான் பணியிலே அமர்த்த முடியுமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல பாரஸ்டர்கள் அத்தனை பேரையும் ரேஞ்சர்களாக்க முடியாது, அந்த அளவுக்கு வேலை வாய்ப்பு இல்லை, உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு துறையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள், அந்தத் துறைக்கும் இந்தத் துறைக்கும் வித்தியாசம் இருக்கிறது, ஒவ்வொரு துறைக்கும் பே கமிஷனில் இவ்வளவு சம்பளம் வழங்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதை எல்லாம் கருத்திற் கொண்டு ரேஞ்சர்கள் வேறு. பாரஸ்டர்கள் வேறு என்று பிரிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் பாரஸ்டர்களாக பணியாற்றுவதற்கு அவர்கள் வருகிற காரணத்தாலே

[1992 மார்ச் 25

தான் அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த வித்தியாசம் இருக்கத் தான் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்,

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாத்தையா அவர்கள் குறிப்பிட்டதுபோல பாரஸ்டர்களும், ரேஞ்சர்களும் தனித் தனியாக ரெக்ரூட் செய்யப்படுகிறார்களா? காவல் துறையிலே எஸ்.ஐ. மட்டும்தான் ரெக்ரூட் செய்யப்படுகிறார்கள், இன்ஸ்பெக்டர் ரெக்ரூட்மென்ட் கிடையாது, அவர்கள் பதவி உயர்வு பெறுகிறபோது, அந்தப் பாகுபாடு தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் இதற்கும். தொடர்பில்லை என்னும்போது நீங்கள் அதிலே விளக்கத்திற்குப் போனால் எப்படி? அமைச்சரவர்களே, அது தொடர்பில்லை என்று சொல்லிவிட்டார்கள், நீங்கள் எஸ்.ஐ. ஆக இருந்தவர் தான், அதை நியாயப்படுத்த இது நேரமில்லை. இந்த வினாவில் நீங்கள் துணை வினாக் கேட்கலாம்,

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பி,எஸ்சி, (பாடனி). எம்,எஸ்சி, (பாடனி) படித்தவர்கள் பாரஸ்டர்களாக, ரேஞ்சர்களாக ரெக்ரூட் செய்யப்படுகிற காரணத் தால் சம்பள வித்தியாசம் தெரிகிறது. எனவே பாரஸ்டர் ரெக்ரூட்மென்டை மட்டும் வைத்துக் கொண்டு, ரேஞ்சர்கள் ரெக்ரூட்மென்டை நிறுத்தி. தகுதியானவர்கள், க்ளீன் ரிக்கார்ட் வைத்திருக்கிற பாரஸ்டர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதோடு, ப்ரமோஷன் ஸ்கோப்பையும் அதிகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பாரஸ்டர்களிலிருந்து ரேஞ்சர்களாகப் பதவி உயர்வு தர வேண்டும்; ரேஞ்சர்களை நேரடியாகத் தேர்வு செய்யக்கூடாது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கோரிக்கையை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கும் வகையில் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 345, திருமதி மரியமுல் ஆசியா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

345—

கைத்தறித் தொழிலாளர்களுக்கு சலுகைகள் மீண்டும் அளித்தல்.

*2513—திருமதி மரியமுல் ஆசியா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மானியமும். ஊக்கத் தொகையும் அளிக்கப்பட்டது நிறுத்தப்பட்டுள்ளதால், அந்த சலுகைகளை மீண்டும் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மானியமோ அல்லது ஊக்கத்தொகையோ எதுவும் நிறுத்தப்படவில்லை.

முற்பகல் 10–05

திருமதி மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருந்த மானியமோ, ஊக்கத்தொகையோ நிறுத்தப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறி மூலம் உற்பத்தி செய்து விடுகிறார்கள். அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு உரிய கூலி கிடைப்பதில்லை. இந்த கைத்தறி ரகத்தை கைத்தறி நெசவாளர்களே உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: இது குறித்துப் பரிசீலிக்கப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கந்தசாமி,

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தள்ளுபடி கொடுத்த

வகையில், மாநில அரசு பல லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டி உள்ளது. அதை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக மானியம் தரவேண்டுமென்று தெரிவிப்பார்களானால், அதற்குரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிட்டா நூல் பெற தனியார் ஆலைகளையே பெரிதும் நம்பி யிருக்கிறார்கள். மேலும் சிட்டா நூல் கிடைப்பது சற்று கடின மாக இருக்கிறது. நியாயமான விலையில் உரிய நேரத்தில் கிடைக்க கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மா, இந்தக் கேள்வி, மானியம் மற்றும் ஊக்கத் தொகை பற்றியது. சிட்டா நூலுக் கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவும். வினா எண் 346. திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

346—

## நீர்த்தேக்கத் திட்டங்கள்.

* 1022 திரு. ஆர். ஈஸ்வரன்:
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

உள்ளார் நீர்த் தேக்கத் திட்டம், கோம்பை ஆறு அணைத் திட்டம், செண்பகவல்லி அணைத்திட்டம் ஆகிய திட்டங்களை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

| திட்டத்தின் பெயர். | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| 1. உள்ளார் நீர்த் தேக்கத் திட்டம். | அரசின் பரிசீலனையில் உள்ளது |
| 2 கோம்பை ஆறு அணைத் திட்டம். | பயன் பெறத் தக்க வகையில் நிறைவேற்ற சாத்தியக்கூறு இல்லை. |
| 3 செண்பகவல்லி அணைத் திட்டம். | கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. |



திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளார் அணைத் திட்டம் சுமார் 17 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்தத் திட்டம் நிறைவேறினால் 12,000 ஏக்கர் பாசன வசதி பெறக் கூடிய நிலை உள்ளது. ஆகவே அந்தத் திட்டத்திற்கு ஏன் கால தாமதம் ஏற்படுகிறது? போன தடவை இந்தத் துறை மானியக் கோரிக்கையில் அது சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். அதேமாதிரி, கோம்பை ஆறு அணைத் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசு ஆய்வு செய்து அதுவும் பொதுப் பணித்துறையில் இருக்கிறது. இப்போது திட்டம் கைவிடப்பட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். அதே நேரத்தில் செண்பகவல்லி அணைத்திட்டம் 1986-லேயே கேரளாவில் இருக்கக்கூடிய எல்லையில் பெரிய உடைப்பு ஏற்பட்டு, அந்த உடைப்பை அடைப்பதற்கு தமிழ்நாடு அரசு முன்பணமாக 5 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. ஆனால் இதுவரை அந்த உடைப்பை அடைக்காமல் தாமதமாகிக் கொண்டு இருக்கிறது. அதற்கு என்ன காரணம்? மாண்புமிகு அமைச்சர் அந்த உடைப்பை அடைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்த உள்ளார் நீர்த் தேக்கத் திட்டம் 1991 ஆம் ஆண்டு விலை விகிதப்பட்டியல்படி மதிப்பீடுகள் ஏறத்தாழ 16 கோடியே 68 இலட்சம் ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு உரிய benefit – cost ratio என்று சொல்லப்படுகின்ற பயன் செலவு வீதம் இன்றைக்கு சரியாக இருக்கின்ற காரணத்தாலே அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்வோடுதான் சென்ற தடவை மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நேரத்தில் எடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் சொன்னேன். இன்றைக்கு இந்தத் திட் டத்தை எடுத்து ஏறத்தாழ 2,610 ஏக்கர் பாசனத்தை உறுதிப் படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அதைப்போல ராசிங்கபுரம்பேரி கண்மாய் பகுதி பாசனதாரர்களுக்கும், குலசேகரபேரி கண்மாய் பகுதி பாசனதாரர்களுக்கும் உள்ள நீர்ப் பங்கீடு சம்பந்தமான சர்ச்சைகளை தீர்ப்பதற்காகவும், அந்த நீர்ப் பங்கீட்டை முறைப்படுத்துவதற்காகவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் கைவிடப்படவில்லை. அரசின் பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த திட்டத்திற்கு உரிய நிதி ஒதுக்கீடு அடிப்படையில் இந்தத் திட்டம் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும். இது குறித்து நில நிர்வாக ஆணை யரிடத்திலே தொடர்பு கொண்டிருக்கிறோம். அவருடைய அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்தவுடனே இத்திட்டம் பற்றிய முழு வேலைகளும்

[1992 மார்ச் 25

முனைப்போடு தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக, கோம்பையாறு நீர்த் தேக்கத் திட்டம். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், சிவகிரி வட்டம், கோம்பையாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் ஏற்கெனவே இருந்தது. ஆனால் இப்போது கோம்பையாற்றில் நீர் எடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, 'தியோரிட்டிக்கல்' என்று சொல்லக்கூடிய அந்த நீர் வரத்தை ஒப்பிட்டுப் பார்த்ததில் இத்திட்டம் பயன் தரத்தக்க வகையில் இல்லை என்ற காரணத்தால்தான் இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று நான் தெரிவித்தேன். அதைப் போல செண்பகவல்லி அணைத் திட்டத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய அரசு, கேரள அரசோடு தொடர்பு கொண்டு அந்த அணையைச் சீர்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ரூ. 5,15,000-ஐ நாம் ஏற்கெனவே தந்திருக்கிறோம். அது போக மறுபடியும் கேரள அரசோடு நாம் தொடர்பு கொண்டு அந்த அணையை பழுது பார்ப்பதற்காக ரூ. 10,29,000–ஐயும் நாம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் கேரள அரசு தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் முனைந்து, கிடப்பிலே கிடந்த அந்த பிரச்சினையை எடுத்து, கேரள அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறது. 12–9–1991 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேரள அரசு தமிழக அரசுக்கு பதில் எழுதியிருக்கிறது. அதில் நிச்சயமாக நாங்கள் உடனடியாக எடுத்து செய்கிறோம் என்று கேரள அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஆகவே நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன். இதில் ஏற்கெனவே மூன்று கேள்விகள், மூன்று பதில்கள் வந்திருக்கின்றன உங்களுக்கு.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து உள்ளார் நீர்த் தேக்கத்திட்டத்தைப் பற்றி வருகிற ஆண்டிலேயாவது நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, செண்பகவல்லி திட்டத்தைப் பற்றி சொன்னார்கள். நீண்ட நாட்களாக கேரள அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற விடாமல் அப்படியே ஆண்டுதோறும் நீட்டித்துக் கொண்டே போகிறார்கள். 1956 ஆம் ஆண்டு கேரள அரசோடு ஒப்பந்தம் பண்ணி சுமார் 5,200 அடிக்கு ஒரு ஏ. பி. வாலன் மாதிரி கட்டப்பட்டிருக்கிறது. அங்கே உடைப்பு ஏற்பட்டிருப்பதால் நேரிடையாக என்னுடைய தொகுதிக்கு வர வேண்டிய தண்ணீர் கேரளாவிற்குச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே அந்த உடைப்பை



1992 மார்ச் 25]

விரைவாக அடைத்தால் சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெறும். ஆகவே கேரள அரசுடன் துரிதமாக பேச்சு வார்த்தையை நடத்தி அந்த உடைப்பை விரைவில் அடைத்தால் என்னுடைய தொகுதிக்கு பாசன வசதி ஏற்பட வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றி தெளிவான விளக்கத்தைத் தந்திருக்கிறேன். நில நிர்வாக ஆணையாளருடைய அறிக்கை வந்ததற்குப் பின்னாலே, இந்தத் திட்டம் ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருப்பதால், நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும். செண்பகவல்லி அணைத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அது இரண்டு மாநிலங்களுடைய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், நாம் நம்முடைய பங்குக்கு நம்முடைய பணத்தைச் செலுத்தி இருக்கிறோம். அந்த அரசை நாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. வேண்டுகோளாகத்தான் சொல்ல முடியும். கடிதம் மூலம் எழுதியிருக்கிறோம். தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டிருக்கிறோம், அதை உடனடியாக சீர்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறோம், நீண்ட நாட்களாகக் கிடப்பிலே போடப்பட்ட பிரச்சினை என்று நான் சொன்னேன். நம்முடைய அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னாலேதான் கேரள அரசு செவிசாய்த்திருக்கிறது. அதற்கான கடிதமும் 12–9–1991–ல் வந்திருக்கிறது. ஆகவே கிடப்பிலே போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேறும் இந்த நேரத்தில் இந்த செண்பகவல்லி அணைத் திட்டத்தை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 347. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

347—

## திருமணஞ்சேரி பாசனக்கால்வாய் சீர்செய்தல்.

* 4267 திரு. எஸ். ஆசைமணி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடுதுறை தாலுகா திருமணஞ்சேரி பாசன மைலன் வாய்க்கால் தூர்ந்துபோய் உள்ளதை புல்டோசர் மூலம் வெட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 மார்ச் 25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மைலன் வாய்க்கால் காவிரியின் இடது கரையில் பிரிந்து சுமார் 8.7 கி.மீ. சென்று ஏறத்தாழ 3,044 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கின்றது. இதில் தூர்ந்து போயிருந்த தலைப்பு பகுதி 6 கி.மீ. வரை கடந்த கோடையிலே குடிமராமத்து திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்திருக்கிறோம், எனவே தற்போது புல்டோசர் மூலம் அந்தப் பகுதியை சீர்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

முற்பகல் 10—15

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம் விவசாயத்தை முழுவதும் நம்பியுள்ள மாவட்டம். அந்த மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வு கண்ட தங்க மனம் கொண்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வாயார மட்டுமல்லாமல் மனதாரவும் நன்றி செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் விவசாய உற்பத்தியிலும் மாநிலத்திலே முதலிடம் வகிக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையில் இந்த மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தூர்ந்து போயுள்ள பாசனக் கால்வாய்களை புல்டோசர் மூலம் வெட்டித் தர வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதேபோலத்தான் பராமரிப்புப் பணியிலே அந்த வாய்க்கால் வெட்டிக் கொடுக்கப்பட்டாலும், முழுமையாக புல்டோசர் வைத்து வெட்டிக் கொடுத்தால் தான் நிரந்தரத் தீர்வு காண முடியும். அங்கே அடிக்கடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகின்ற நேரத்தில் இதுபோன்ற வாய்க்கால்கள் வெட்டிக் கொடுத்தால் தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள். நான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நினைவுபடுத்துவதைப் போல வைத்துக் கொள்ளக் கூடாது. கேள்வியாகத்தான் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஆசைமணி: எனவே, மீண்டும் அந்த வாய்க்கால்களை புல்டோசர் மூலம் வெட்டிக் கொடுத்து விவசாயிகளினுடைய குறை தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி வளர்ச்சிப் பணிகள் திட்டக் கோட்டம் மூலம்—பிரதான வாய்க்காலின் தூரம் 8.75 கிலோ மீட்டர்—இதிலே 6.7 கிலோ மீட்டர் வரை லைனிங் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு ஏறத்தாழ



1992 மார்ச் 25]

6.7 கிலோ மீட்டரிலிருந்து 7.3 கிலோ மீட்டர் வரை லைனிங் பணி எடுக்கப்பட்டு இருக்கிறது. 1992—93 ஆம் ஆண்டு மீதி இருக்கிற பகுதிகளை எடுத்து லைனிங் வேலை செய்வதற்கு இருக்கின்றோம். பொதுவாக காவிரியை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு மைய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதற்கு இடையிலே அந்த வாய்க்கால் பகுதி எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று இந்த காவிரி வளர்ச்சிப் பணிகள் திட்டக் கோட்டத்தின் மூலம் பல்வேறு பணிகளை இந்த அரசு செய்து கொண்டு இருக்கின்றது. ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழே இந்த வாய்க்காலை சீரமைக்கும் பணி முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

348—

## திண்டுக்கல்—மூணாறு சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்தல்.

*4765 திரு. கே. பி. மணிவாசகம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரு மாநிலங்களை இணைக்கும் இச்சாலையின் இன்றியமையாத் தன்மை கருதி திண்டுக்கல்-மூணாறு உடுமலை வழியாகச் செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் கருத்துரு தற்சமயம் மாநில அரசிடமோ, மத்திய அரசிடமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு—கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களை இணைக்கும் திண்டுக்கல், மூணாறு, உடுமலைப்பேட்டை வழியாக

செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும்படி நான் இந்தக் கேள்வியைக் கேட்டு இருந்தேன், ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது கருத்துரு இல்லை என்று கூறினார்கள். Nothing is impossible என்று சொல்வார்களே, அந்த வகையிலே மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் அரசால் முடியாதது ஒன்றும் இல்லை. எனவே, உடுமலைப் பேட்டை தொகுதி மக்களின் நன்மை கருதி, அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வழியாக கோயம்புத்தூர் செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் திட்டம் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஏற்பட்டு 26–4–1990 அன்று அனுப்பப்பட்டு, 16 சாலைகளில் இந்தச் சாலையும் இடம் பெற்றுள்ளது. உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் சாலை தமிழக எல்லை வரை 29 கிலோ மீட்டர் நீளமும், தமிழக எல்லையிலிருந்து மூணாறு வரை ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரமும் இன்றைக்கு கேரள மாநிலத்தில் உள்ளது. மேலும், திண்டுக்கல், மதுரை, உசிலம்பட்டி, தேனி, போடி வரை செல்லும் சாலையை 1989 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தி உத்திரவு பெறப்பட்டது. இந்த இரு சாலைகளையும் கேரள மாநிலத்திலிருந்து இணைக்கும் சாலையில் போடி சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது. ஆகவே உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் கருத்துரு தற்போது அரசிடமோ மைய 'அரசிடமோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்,

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூணாறிலே இருக்கக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் கன்னியாகுமரி மாவட்டம், திருச்சி மாவட்டம், சேலம் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே பணியாற்றுகிறார்கள், அவர்கள் தங்களுடைய ஊர்களுக்கு வருவதும், அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதும் உடுமலைப்பேட்டைக்கு வந்துதான் படிக்க வைக்கிறார்கள். மேலும், அவர்கள் பழனி போன்ற கோயில்களுக்கும் வருகிறார்கள். ஆகவே, வர்த்தக ரீதியாகவும், அவர்களுடைய வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளைக் கருதியும் இந்த மூணாறு-திண்டுக்கல் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றினால் அந்த மக்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்று கருதுவதால் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அதைச் செய்து



தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு. அதை துரிதமாகச் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் இன்றைக்கு பல்வேறு சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறோம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல இந்த இரண்டு சாலைகளுக்கும் இடையேயுள்ள தூரம் 30 கி.மீ. என்ற காரணத்தால் இதை தனியாக நெடுஞ்சாலைத் துறை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுகிற பரிந்துரையை செய்ய இயலாமல் இருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதியை முன்னிட்டு அந்தச் சாலையை சிறந்த முறையில் செப்பனிட்டு போக்குவரத்து வசதி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்கிற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 349. திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

349--

## குளத்தூர் தொகுதியில் குடிநீர் தட்டுப்பாடு

* 334 திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியானதால், குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வறட்சி நிவாரணத் திட்டம் 1991-ல் 42 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குளத்தூர் தொகுதி மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் காலம் முதல் இன்றைக்கு பல கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலம் வரை நம்முடைய கோட்டையாக விளங்கி வருகிறது. தமிழகம் முழுவதும் வெள்ளம் ஏற்பட்டபோது எங்கள் குளத்தூர் தொகுதியில் மட்டும் வறட்சியால் பாதிக்கப்பட்டு கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அங்கேயுள்ள மக்களும் கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, குழாய் மூலம் குடிநீர் சப்ளை செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டும் இந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக கருதப்பட்டு மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 350, திரு. ம. சின்னசாமி, திரு. ஆர். பி. பரமசிவம், திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

350—

## புதிய குடும்ப அட்டை வழங்குதல்.

*9319 திரு. ம. சின்னசாமி,

திரு. ஆர். பி. பரமசிவம், திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதியதாக குடும்ப அட்டை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிய அட்டை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு புதியதாக குடும்ப அட்டைகளை





வழங்குவதை நிறுத்தி வைக்கவென்று எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு துணைக் கேள்வியா அல்லது இரண்டு கேள்வியா.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான். அதுவும் நேரிடையான கேள்வியாக இருக்க வேண்டும்..

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைகளை புதியதாக வழங்குவது நிறுத்தி வைக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் வட்ட வழங்கல் அதிகாரியிடம் கேட்கும்போது ஒரு தெளிவில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு சுற்றறிக்கை வழங்குவாரா என்பது ஒன்று. அடுத்து, புதிய அட்டைகளை புதுப்பிக்கும்போது சிலபேர் தெரியாமல் அப்பாவித்தனமாக அந்த மனுவை கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கால நீட்டிப்பை அளிக்க முடியுமா என்பது இரண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்று, இரண்டு, மூன்று என்று அடுக்கிக் கொண்டு துணைக் கேள்விகள் கேட்கக் கூடாது. இந்த இரண்டு கேள்விகள் போதும் , உட்காருங்கள். அமைச்சர் இதற்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைத்திருந்தால்தான் அதை மாற்றுவதற்கு மறு உத்தரவு அனுப்ப வேண்டும். நிறுத்தியே வைக்காத போது அந்தப் பிரச்சினை எழவில்லை. இரண்டாவது கேள்வி மறந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிலர் மனு கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி யாராவது பாரத்தை வாங்கிப் பூர்த்தி செய்து கொடுக்காமல் இருந்தால் அவைகள் பரிவோடு மீண்டும் பரிசீலனை செய்யப்படும், வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேண்டுமென்றே நமக்கு ஆதரவாக உள்ள மக்களுடைய கார்டுகளைப்

[1992 மார்ச் 25

பிடுங்கி அவற்றை கான்சல் செய்திருக்கிறார்கள். அது போன்ற கார்டுகளுக்கு மீண்டும் புதிய அட்டைகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களிலே அப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்களை சட்டமன்ற உறுப்பினர்கள் அனுப்பி வைப்பார்களானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சிபாரிசின் பேரில், தகுதியானவர்களுக்கு சிபாரிசு செய்தால், அவர்களுக்கு ரேசன் கார்டுகள் வழங்கப்படும் என்று பத்திரிகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருப்பது செய்தியாக வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அமைச்சரே பதில் சொல்லியிருக்கிறாரே.

திரு. க. அர்ச்சுனன் : அதையொட்டி, நிறைய பேர்கள் என்னிடத்திலே சிபாரிசு தேடி வருகிறார்கள். நமது புரட்சித் தலைவியின் மீது நம்பிக்கை வைத்திருக்கிற ஏழை எளியவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கிடைத்து, மலிவு விலையிலே பொருட்கள் வாங்குவதற்கு ஏதாவது ஒரு திட்டவட்டமான அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ரேஷன் கார்டுகளை வழங்குகிறபோது, வசதி படைத்தவர்களும் ரேஷன் கார்டு வைத்திருக்கிறார்கள். வசதியற்றவர்களும் ரேஷன் கார்டுக்காக அலைகிறார்கள். எனவே திட்டவட்டமான அடிப்படையிலே, ரேஷன் கார்டுகள் எல்லோருக்கும் வழங்கி— சில பேர்களுக்கு நியாய விலைக் கடைகளிலே பொருட்கள் வாங்குவதற்கு என்றும், சில பேர்களுக்கு ரேஷன் கார்டுகள் பல்வேறு வகைகளுக்குத் தேவைப்படுகிற காரணத்தால், அந்த வகையிலே ஒரு கலர் வித்தியாசத்தை அந்த அட்டையிலே வழங்கி, நியாய விலைக் கடைகளிலே இவர்களுக்கு மட்டும்தான் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் என்கிற ஒரு திட்டத்தை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், தாங்கள் கூறியவாறு, ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பப்பட்டு உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்கு நேரிடையாகத் தெரிந்தவர்களை, இவரை



1992 மார்ச் 25]

எனக்கு நேரிடையாகத் தெரியும், இவர் கூறுவது உண்மை, இவருக்கு ஏற்கனவே கார்டு இல்லை என்ற உறுதிமொழி தந்தால் எந்தவிதமான பரிசீலனையும் இல்லாமல், உடனடியாக அவர்களுக்கு கார்டுகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மற்றபடி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 351, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

351—

தொழிற்கல்வி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு.

* 5277 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டங்களிலுள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தொழிற் கல்வி படித்து பதிவு செய்துள்ள வேலையற்றோர் வேலை வாய்ப்பு பெற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மூடிய தொழிற்சாலைகள் திறக்கப்பட வேண்டும், நலிவுற்ற தொழிலாளர்கள் வாழ்வு நலம் பெற வேண்டும் என்று எண்ணி, சிந்தித்து செயல்படுகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகத்திலே தொழிற்சாலைகளே இல்லாத மாவட்டம் என்று எந்த மாவட்டமும் இல்லை. எனினும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொழிற் கல்வி படித்து, பதிவு செய்து உள்ளவர்களுக்கு, மாவட்டத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெறவும், மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் சுய தொழில் வழங்கவும் வாய்ப்புகள் உள்ளன. மேலும், அந்த மாவட்டத்திலே வேலை வாய்ப்புக்கு உரிய அழைப்புகள் இல்லாத நிலையில், அடுத்த மாவட்டத்திலிருந்து அழைப்புகள் வந்தால், அவர்கள் வேலை வாய்ப்பு பெற, பதிவு மூப்பு மற்றும் விதிமுறைகளின்படி, பரிந்துரை செய்யப்படுகிறது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாவட்டங்களில் தொழிற்சாலைகளே இல்லை. தொழிற்சாலை இல்லாத மாவட்டம் இல்லை என்று

சொன்னார்கள். ஆனால், என்னுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. என்னுடைய மாவட்டத்திலே தொழிற் கல்வி படித்து, வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களுக்கு வேறு மாவட்டங்களில், அதாவது தொழிற்சாலை உள்ள மாவட்டத்தில் வேலை வாய்ப்பு கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் கூட, செய்யாறிலே மாடர்ன் ரைஸ் மில் போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதே போல், போளூரிலும் இருக்கின்றது. எனினும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அவர்களுக்கு எப்போது வேலைவாய்ப்புக்கு உரிய அழைப்புகள் வந்தாலும், அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உரிய பரிந்துரையை மட்டும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செய்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: பேரவைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்ட மாவட்டமாகிய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணும் அளவுக்குத்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தொழில் கல்வி பயின்றவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களின் வேலை வாய்ப்புக்கு என்று மாநிலம் தழுவிய ஒரு பதிவு மையத்தை தலைநகராக உள்ள சென்னையில் அமைத்து, அங்கே பதிவு செய்தவர்களுக்கு பிரியாரிட்டி அடிப்படையில் வேலை கிடைக்க, பொன்மனச் செம்மலின் மறு பதிப்பான எங்களுடைய தங்கத் தலைவியின் ஆட்சியிலே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் பட்டதாரிகள் சென்னையிலே பதிந்து கொள்வதற்கான வசதிகள் உள்ளன. மற்ற பட்டயத் தொழில் நுட்பத்தில் படித்து இருப்பவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலே அவர்கள் பதிந்து கொள்வதற்கு இப்போது வசதிகள் இருக்கின்றன. மேலும், சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களிலே தொழில் கல்வி படித்தவர்கள் பதிவதற்கான வசதிகள் இருக்கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 352. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.



352—

போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டுமானப்பணி.

* 6798—திரு தா. வேடியப்பன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கட்டுமானப் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போளூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டுமானப் பணிகளின் பெரும்பகுதி முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் கட்டி முடிக்கக்கூடிய இந்த இரண்டு கட்டிடங்களினுடைய மதிப்பீடு எவ்வளவு? அவைகள் அரை குறையாக இருக்கும்போதே, ஒரு கட்டிடத்திலே ஆக்குபேசன் செய்துள்ளதாக எனது தொகுதி மக்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். அதை நிறுத்தி கட்டிட வேலைகள் ஒழுங்காக நடைபெற்ற பிறகு, அதை ஆக்குபை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மார்ச் 25. கொடுங்கோலர்களின் கொடூரமான தாக்குதலால் புரட்சித் தலைவி அவர்கள் தாக்கப்பட்டு, களங்கம் அடைந்தது இந்தப் பேரவை மட்டுமல்ல, தமிழகமே. களங்கப்படுத்தியவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெறாத திட்டங்கள் எல்லாம் இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேளாண் விளைபொருள்களை ஏலம் விடக் கூடிய கொட்டகை ரூ. 5 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டு அது பிப்ரவரி மாதம் 92-ல் ஒப்படைக்கப்பட்டது. அலுவலகம் இணைந்த கிடங்கு ரூ. 5 லட்சம் செலவிற்கு பணிகள் தொடரப்பட்டு

வருகிறது. சுற்றுப்புறச் சுவர் ரூ. 2 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு விரைவிலே அரசிடம் ஒப்படைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண். 353, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

353—

சென்னை மாநகரத்திலிருந்து மீனம்பாக்கம் வரை நடப்போர் பாதை.

* 2061—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரத்திலிருந்து மீனம்பாக்கம் வரை நடப்போருக்கென பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெடஸ்ரிடியன் ரோடு என்பது முந்தைய அரசினுடைய கொள்கை விளக்கத்திலே இருந்தது. பத்திரிகையிலே கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதை வைத்துத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். இது பம்பாய் போன்ற மாநகராட்சியிலே செயல்பட்டு வருகிறது. நம்முடைய டிராபிக் நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இத்தகைய ஃபிளைஓவர் ரோட்ஸ் நம்முடைய சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து மீனம்பாக்கம் வரையில் போட்டால், நிச்சயமாக அந்த



டிராபிக் நெரிசலைக் குறைக்க முடியும். அதற்கு நிதியில்லை என்றால்கூட, இந்தியன் ஏர்லைன்ஸ், அதே போன்று நம்முடைய ரயில்வே அதாரிட்டீஸ் ஆகியோர் மத்திய அரசுக்கு கேட்டு அவர்களிடம் பணம் வாங்கி செய்தால், 'டோல் கேட்' மூலமாக பணம் வசூல் செய்து, அத்தகைய நிலைமையை உருவாக்கினால், நம்முடைய சென்னையில் இருக்கின்ற நெரிசலைக் குறைப்பதற்கு முடியும். ஆகவே இதை மறுபரிசிலனை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டில் அண்ணா சாலையிலே போக்கு வரத்தினுடைய அளவு 94,600 பாசஞ்சர் கார் யூனிட்டாக இருந்தது. அதுவே 2011 ஆம் ஆண்டில் 1,76,800 வாகனங்களாக அதிகமாகக் கூடிய நிலைமை உருவாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் 1989 ஆம் ஆண்டில் சென்னை பெருநகர் குழுமத்தின் உதவியினால் பல்லவன் போக்குவரத்துக் கழக ஆய்வுக் குழுவின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கையில் அண்ணா நெடுஞ்சாலைக்கான 20 ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் அதிகப்படியான வாகனக் கொள்ளளவு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் ஒரு உத்தேசப் பேருந்து தனி வழிப் பாதை அண்ணாசாலையை ஒட்டி 12.8 கிலோ மீட்டர் நீளம் தரை மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டம் உலக வங்கியின் ஒப்புதலுடன் பொறியியல் ஆய்வு மற்றும் திட்ட வடிவமைப்புக்கு விரைவில் எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் செய்வதற்கு, நம்முடைய தமிழகத்திலே இப்போது நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தால் அது முடியவில்லை என்று சொன்னால்கூட, தனியாரிடமோ இல்லையென்று சொன்னால் மத்திய அரசிடமோ அல்லது உலக வங்கியிடமோ பணத்தை வாங்கி, செய்தால் அதை 'டோல் கேட்' மூலமாக வசூலித்து நாம் செய்யமுடியும். ஆகவே உடனடியாக அதைச் செய்வதற்கு அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இதை ஆய்வுசெய்து தனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 354, திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

[1992 மார்ச் 25

354—

## ஆதி திராவிடர் பட்டா நிலத்தில் ஆக்கிரமிப்பு.

*3729 திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடுமுடி ஒன்றியம் கொல்லங்கோவில் தாண்டாம்பாளையத்தில் 30 ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலத்தில் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம் கொடுமுடி ஒன்றியத்திற்குட்பட்ட கொல்லங்கோவில் கிராமம் தாண்டாம்பாளையத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்க அக்கிராம க. ச. எண். 769/3-ல் 1.73 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 16—11—1980 அன்று வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. வீட்டு மனை பெற்ற ஆதி திராவிடர்கள் நில உரிமையாளரின் மிரட்டலுக்கு அஞ்சி அதனை அனுபவம் செய்யாமல் விட்டு விட்டனர். அதனால் நில உரிமையாளரே அந்நிலத்தினை ஆக்கிரமித்து, சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார்.

(ஆ) இந்நில எடுப்பு 1978-ல் புதிதாக இயற்றப்பட்ட அரிசன நலத் திட்டங்களுக்காக தமிழ்நாடு நில எடுப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 31/78) மேற்கொள்ளப்பட்டது. இச் சட்டத்திற்கெதிராக இந்நில உரிமையாளரும் (W. P. No. 6203/80) இச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட பிற நில உரிமையாளர்களும் உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த நீதிப் பேராணை மனுக்களை விசாரணை செய்த உயர்நீதி மன்றம் 9—9—1981 தேதியிட்ட தன் தீர்ப்பில், அரசியல் சட்டத்திற்கு முரணாக இச்சட்டம் உள்ளதால் செல்லாது என்று தீர்ப்பு வழங்கி விட்டது. இத்தீர்ப்புக்கெதிராக 1981-லேயே டெல்லி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அவ்வழக்கு (C.A. 3312/81) இன்னமும் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரே இதுபற்றி ஆராய முடியும்.



1992 மார்ச் 25]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வாறு விரிவான விடை அளிக்க விரும்புகிற மாண்புமிகு அமைச்சர்கள் அதை அவையில் வைத்து விடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே 55 சதவீதம் மக்கள் ஆதிதிராவிட மக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பட்டா விஷயத்தில் 17 பகுதிகளிலே ஆக்கிரமிப்புகள் நடந்து இருக்கின்றன. அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் அதற்குரிய நிலச் சொந்தக்காரர்கள் தடை செய்வதற்காக உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடரக்கூடிய ஒரு இழி நிலையை மாற்றுவதற்கு சட்ட திருத்தம் ஏதேனும் செய்யக்கூடிய ஆலோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இது போன்ற ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு சென்று அது தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகையினால் இது போன்ற கோரிக்கை சட்டத் துறை மூலம் ஆலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

355—

## மீனவர்களைத் தேட ஹெலிகாப்டர்.

*4364 திரு. எஸ். டேனியல் ராஜ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் காணாமல் போன மீனவர்களை தேடுவதற்கு தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் நிறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துரு ஏதுமில்லை.

[1992 மார்ச் 25

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மீன் பிடிக்கச் செல்லுகிற மீனவர்கள் இயற்கை சீற்றத்தின் காரணமாகவோ திடீர் என்று படகுகள் பழுதடைந்து விடுவதன் காரணமாகவோ கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்கின்ற வகையிலே, காணாமல் போன மீனவர்களை தேடி கண்டு பிடிக்கின்ற வகையிலே தூத்துக்குடியிலே ஒரு ஹெலிகாப்டர் நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்கள் காணாமல் போன செய்தி கேட்டவுடன் உடனடியாக மீனவர்கள் குறித்த விவரங்களை கடல் ஒர பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், இந்திய கடற்படை அதிகாரிகள் மற்றும் எல்லாத் துறைமுக அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு அவர்கள் மூலமாக கடலில் உள்ள எல்லா கப்பல்களுக்கும் தெரிவித்து மீனவர்களைக் கண்டு பிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர்கள் நிறுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆகவே காணாமல் போன மீனவர்களை உடனடியாகத் தேடி கண்டு பிடிப்பதற்கு அதிவேகமாக செல்லக்கூடிய இயந்திரப் படகு ஒன்றை தூத்துக்குடியில் நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் நிறுத்துவதால் அரசுக்கு கூடுதல் செலவு ஆகும். எனவே காணாமல் போகும் மீனவர்களையும் படகுகளையும் தேடி மீட்க ராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ரேடியோ தொலைபேசி அமைத்து அதாவது நோடல் பாயிண்ட்ஸ் அமைத்துத் தேடுவதற்கான தொடர்பு முனைகள் ஏற்படுத்தவும் புரட்சித் தலைவியின் அரசு ஆராய்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிவேக மோட்டார் படகைப் பற்றி கேட்டார்கள். அது பற்றியும் அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி,



1992 மார்ச் 25]

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன மீனவர்களை உடனடியாக தேடுவதற்கு அரசு என்ன வழி முறைகளை கையாளுகின்றது, அதை நிரந்தரமாக ஆக்குவதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இது பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அவசர காலங்களில் நமது அண்டை நாடுகளான இலங்கை, பங்களா தேஷ் முதலிய நாடுகளில் உள்ள இந்திய ஹைகமிஷனர் அவர்களையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அந்நாட்டு அரசு உதவியுடன் காணாமல் போன மீனவர்களை கண்டு அறிந்து நம் நாட்டிற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் ஹெலிகாப்டர் மூலம் மீனவர்களை தேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல உடனடியாக மீனவர்கள் காணாமல் போன செய்தி கேட்ட உடன் இந்திய கடற் படை அதிகாரிகளுக்கும் மற்றும் எல்லா துறைமுக அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக எல்லா கப்பல்களுக்கும் தெரிவித்து மீனவர்களைக் கண்டு பிடிக்க எல்லா விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தின் கரையோரம் பல இலட்சம் மீனவர்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி மீனவர்களுக்கு விபத்துக்களும், மீனவர்கள் காணாமல் போகின்ற நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற காரணத்தினாலே மீனவர்களை பாதுகாப்பதற்காகவே ஒரு ஹெலிகாப்டர் வாங்கப்பட்டு அது பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடி விமோசனம் கிடைக்கின்ற விதத்தில் அவர்களுக்கு பணி புரிய இந்த அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தற்போது இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஹெலிகாப்டர் வாங்குகின்ற உத்தேசம் இல்லை என்று கூறியிருக்கிறேன். மீனவர்களைத் தேடுவதற்காக இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நோடல் பாயிண்ட்ஸ் அமைக்கப்பட்டு,

தேடுவதற்காக தொடர்பு முனைகள் ஏற்படுத்தவும் டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஆராய்ந்து வருகிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்.

356—

## திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை.

*5897 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தில் தொழில் துறையிலே பொற்காலத்தை படைக்க வேண்டும் என்று பல்வேறு சலுகைகளை அளித்துள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், சிட்கோ, திருப்பத்தூரில் தொழிற்பேட்டை அமைக்க வேலூர் மாவட்டத் தொழில் மையத்தின் உதவியுடன் முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளும்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருப்பத்தூர் தொகுதி 1977 முதல் 1989 பொதுத் தேர்தல் வரை தி.மு.க. கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட கோட்டையை, இந்தப் பொதுத் தேர்தலிலே உடைத்து நொறுக்கி எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி கோட்டை என நிரூபித்துக் காட்டிய திருப்பத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை திருப்பத்தூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பதே. அரசு இதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய முயற்சியின் மூலமாக ஏற்பாடு செய்வார்களேயானால் மாவட்டத் தொழில் மையம் சிட்கோ உதவியுடன் தொழிற்பேட்டையை மிக விரைவிலே அமைக்கும்.





திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் திருப்பத்தூர் தொகுதியின் முதல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையை எனக்கு வாங்கிக் கொடுத்தவர் எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவிதான். மாண்புமிகு அமைச்சர் சொன்னபடி நான் திருப்பத்தூருக்குச் சென்று கண்டிப்பாக 10 பேரைக் கலந்து தொழிற்பேட்டை அமைக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2, 25—3—1989 ஆம் நாளன்று அவையில் இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனமும், அந்த அநீதியை எதிர்த்துப் போராடி மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்று வெற்றி வாகை சூடிய முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய தன் இன்றியமையாமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே இதேநாள் அன்று மார்ச் 25 ஆம் நாள், அன்றைய தினம் இந்த மாமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவியாக அமர்ந்திருந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வன்முறையாளர்கள் தமிழ் பண்பாட்டிற்கு மாறாக இந்த அவையிலே அவமானப்படுத்தி, வன்முறைக்கு அவர்களை ஆளாக்கி, இந்த அவையிலிருந்து ரத்தம் சொட்டச் சொட்ட, குருதிதோய்ந்த உடலோடு, கண்ணீரும் கம்பலையுமாக, தலைவிரி கோலத்திலே அவர்கள் இந்த மாமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் அந்தநாள்

தான் இந்த மார்ச் 25 ஆம் நாள். ஆனால் அன்றைய தினம் அவர்கள் இந்த அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட, அந்தச் செய்தியினை தொலைக்காட்சியின் மூலமாக, வானொலியின் மூலமாக, செய்திப் பத்திரிகைகள் மூலமாகப் பார்த்த தமிழ் மக்கள் அன்றைய தினமே ஆர்த்தெழுந்து இனி தமிழக சட்ட மன்றத்திற்கு புரட்சித் தலைவி அவர்களை அனுப்பிவைக்கி றோம் என்றால், அவர்களை முதலமைச்சராகத்தான் அனுப்பி வைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் உலக வரலாற்றிலே இதுவரையிலே எந்த முதலமைச்சரும் பெறாத அளவிற்கு வெற்றியைத் தந்து அனுப்பிவைப் போம் என்று அன்றையதினம் தமிழ்கூறு நல்லுலகம் ஒரு குறிக்கோளை எடுத்து, அந்த குறிக்கோளின் மூலமாக இன்றைய தினம் இங்கே தர்மதேவதையாக ஆட்சிக் கட்டிலிலே அமர்ந் திருக்கிறார்கள் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அன்றைய தினம் இந்த அவையிலே நடந்த அப்படிப்பட்ட வன்முறை நிகழ்ச்சிகள் இனி இந்த அவையிலே நடக்காது என்பதையும் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பண் பாட்டினைப்பற்றி இந்த மாமன்றத்திலே நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவிக்கு நிகழ்ந்த நிகழ்ச்சி அது. ஆனால் 4, 5 நாட்களுக்கு முன்னாலே புரட்சித் தலைவி அவர்கள், இதே மாமன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவரை மனதார, உளமார பாராட்டினார்கள். இந்த பண்பாட்டினையும் நாம் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10—45

வின்ன விதைத்தவர்கள் இன்றைய தினம் வினையை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்—நாம் தினையை விதைத்தோம், இன் றைய தினம் தினையை அறுத்துக் கொண்டிருக்கிறோம் என்று ஒரு கூட்டத்தில் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முற்பகல் செய்த வினை வந்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தண்ட னையைக் கொடுத்து விட்டது. இன்றையதினம் தமிழகத்தினு டைய மக்கள் எல்லாம் தமிழ் பேசும் நல் உலகத்தில் வாழும் நல்லவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட ஆட்சி மலர்ந்து இருக்கிறதே



164971

இதற்கு நாம் கொடுத்துவைத்து இருக்கிறோம் என்று நாட்டு மக்கள் எல்லாம் ஏகோபித்தமுறையில் பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக இந்த நிலையை தமிழ் மக்கள் அளித்தார்களே அந்த தமிழ்கூறு பெருமக்களுக்கு எங்களுடைய நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தநேரத்தில் இங்கே தர்ம தேவதையாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று நிலையான உடல் நலத்தைப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட ஆயுளையும், நிலையான உடல் நலத்தையும் பெற்று நெடிய இந்த ஆட்சியை நடத்தவேண்டுமென்று கூறி அமர்கிறேன், வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவை மண்டபத்திற்குள்ளே நுழை கின்ற நேரத்திலேகூட எனக்கு 3 ஆண்டுகள் ஓடிவிட்டது நினை விலே இல்லை, நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்றைய தினம் இந்தப் பேரவையிலே நானும் உறுப்பினராக இருந்தேன். மார்ச் மாதம் 25 ஆம் தேதி 1989 ஆம் ஆண்டு இந்தப் பேரவை யிலே 2-வது வரிசையில் நான் இடம் பெற்று அமர்ந்து இருந்தேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, அன்று சாதாரணமாக பிரச்சினைகளை எழுப்பினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பினார்கள், எங்களுடைய கட்சியின் சார்பில் துணைத் தலைவராக இருந்த திரு. குமரி அனந்தன் அவர்கள் பிரச்சனையை எழுப்பினார்கள். இங்கே அவை உரிமை மீறல் பிரச்சனை எழுப்பப்பட்டது, அந்தப் பிரச்சனை எழுப்பியதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியாத காரணத்தால் அன்றைய தினம் இங்கே ஆடிய வெறியாட்டத்தை என் வாழ்நாளில் என்றுமே மறக்கமுடியாது. பெண் என்றும் பார்க்காமல் அவர்கள் ஐயோ! ஐயோ, என்று

D
V211, 31 'N92
N92, 2012

அலற, அலற அடித்த அடிகள் இன்றைய தினம் நினைத்துப் பார்த்தால் உள்ளபடியே நெஞ்சம் பதைக்கிறது. யாராக இருந்தாலும் பொது வாழ்வில் வன்முறைக்கு இடம் இருக்க முடியாது, பெண் என்றும் பார்க்காமல் அன்றையதினம் அடித்து வெளியே விரட்டினார்கள். மார்ச் மாதம் 25 ஆம் தேதி வெளியேறினார்கள், இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக அல்ல, ஆளுங்கட்சித் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் அவரை இங்கே அனுப்பிவைத்து இருக்கிறார்கள். பொதுவாக அரசியலில் வன்முறை வெற்றிபெறும் என்று யாராவது கருதுவார்களானால் அவர்களுக்கு தமிழக மக்கள் பாடம் கற்பிக்க ஒருபோதும் தவறமாட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் முதலமைச்சராக இங்கே வீற்று இருக்கிறார்கள்.

இதேபோல் இதே அவையில் இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறை வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். 2½ மணி நேரம் மைக்கே இல்லாமல் அவர் பேசியது இன்றையதினம் அது வரலாறாக ஆகியிருக்கிறது. ஆக யாராக இருந்தாலும் வன்முறையின் மூலமாக மிரட்டி அரசியலை விட்டு விரட்டிவிட முடியும் என்று யாராவது கருதுவார்களானால் அவர்களுக்கு தமிழக மக்கள், இந்திய மக்கள் பாடம் கற்பிக்க ஒருபோதும் தவற மாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

இதேபோல் 1977 ஆம் ஆண்டு அன்னை இந்திரா காந்தி மீதும் வன்முறை தூண்டிவிடப்பட்டது; வன்முறை ஏவி விடப்பட்டது, பெண் என்றும் பார்க்காமல் அன்றையதினம் ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் வேட்டை ஆடினார்கள். பெண் என்று பார்த்து அவரை விட்டுவிடவில்லை, வேட்டை ஆடியதற்குப் பின்னால்தான் 1980 ஆம் ஆண்டு அன்னை இந்திரா காந்தி அவர்கள் அன்றையதினம் அங்கே பிரதமராக பதவி ஏற்றார்கள்.

அதேபோல் இன்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகி எதிர்க்கட்சிகளோ, நம்முடைய அணிக்கு எதிராக போட்டியிட்ட யாருமே வெற்றிபெற முடியாத அளவுக்கு துடைத்து எறிந்து விட்டு இன்றைய தினம் முதலமைச்சராக அவர்கள் வீற்று இருக்கிறார்கள். அன்றைய



தினம் வன்முறையை ஏவி விட்டவர்கள் இன்றைய தினம் இந்த சபையிலே இடம்பெற முடியாத அளவுக்கு தமிழக மக்கள் தீர்ப்பு அளித்து இருக்கிறார்கள்.

வரலாற்று மாணவன் என்ற முறையிலே நான் மிகப் பெரிய வீரனாக மதிப்பது ஒரு சிலரை, குறிப்பாக நெப்போலியன் போன்ற ஒரு வீரனை வரலாற்றில் சந்திப்பது மிகவும் கஷ்டம், அவனைப் பற்றித் தான் சொல்லுவார்கள் எதைக் கண்டும் அஞ்சாதவன் என்று, அவன் சொல்லுவான். ஆளுக்கு 2 மணி நேர தூக்கத்திற்கு மேல் ஒரே நேரத்தில் தேவையில்லை என்று சொல்லக்கூடிய மா வீரனாக நெப்போலியன் திகழ்ந்தான், நெப்போலியனுடைய கையில் ஒரு மதுக் கோப்பையைக் கொடுத்து குதிரையின் மேல் வீற்றிருக்கின்ற நேரத்தில் ஒரு கையில் குதிரையின் லகானை பிடித்து உட்கார்ந்தால் பின்னால் குண்டு போட்டால்கூட குதிரை சிறிது கூட அசைய முடியாத அளவுக்கு குதிரையை நிறுத்தக் கூடிய வீரன் என்று நெப்போலியனைச் சொல்லுவார்கள். அந்த நெப்போலியன் கடைசி நேரத்தில் செயின்ட் எலினாவில் இருந்தபோது அவன் சொன்னதை யாரும் மறந்துவிட முடியாது, 'Brute force could achieve nothing enduring' நிரந்தரமாக எதையும்வன்முறையால் சாதிக்க முடியாது.

இன்றைய தினம் வன்முறையாளர்கள் மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சரை. நம்முடைய முதல்வர் அவர்களுடைய உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும் என்ற பேச்சு இன்றைய தினம் பரவலாக அடிபடுகிறது, கடந்த இரண்டு மூன்று நாட்களாக முதல்வர் அவர்களே இங்கே குறிப்பிட்டார்கள், இன்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன, ஒரு தற்கொலைப்படை தமிழ்நாட்டிலே உலவிக் கொண்டிருப்பதாக சொல்லுகிறார்கள். நான் செங்கற்பட்டு சிறைச்சாலையைப் பற்றி அன்றைய தினம் கூட குறிப்பிட்டேன், இன்று மீண்டும் அதே செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன, செங்கற்பட்டு சிறைச்சாலை தகர்த்து எறியப்பட்டு அங்கே இருக்கிற கைதிகளை விடுதலை செய்வதற்காக இங்கே பல புலிகள் வந்து இருக்கிறார்கள், தற்கொலைப்படை வந்திருக்கிறது; அந்த தற்கொலைப்படை

நம்முடைய முதல்வர் அவர்களுடைய உயிருக்கு உலை வைக்க இருக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள், நான் நிச்சயமாகச் சொல்கிறேன். தமிழக மக்கள் உங்களுக்கு பின்னாலே இருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய உயிரை காவு கொள்ள எந்த சக்தியாலேயும் முடியாது, (மேசையைத்தட்டும் ஒலி) ஆனால் அதே நேரத்திலே நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துத்தான் ஆக வேண்டும், நான் குறிப்பிட்ட விஷயங்களை நீங்கள் நிச்சயமாக நல்லமுறையில் இதுவரை விசாரித்து இருப்பீர்கள் என்று நம்புகிறேன், அந்த பகுதிக்கு, அந்தச் சிறைச் சாலைக்கு அடிக்கடி ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலேயிருந்து. அங்கே இருக்கிற கைதிகளைச் சிலர் சென்று பார்த்து வருவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதையும் நீங்கள் தீர விசாரிக்க வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் என்கிற முறையிலே எங்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு, தமிழக மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை முதல்வர் அவர்களுக்கு உண்டு . என்றாலும் முதல்வர் அவர்கள் இந்த அவையிலே ஒரு அங்கமாக இருக்கிறார்கள். பேரவைத் தலைவர் என்கிற முறையிலே அவருடைய உயிருக்கு மட்டுமல்ல, அவருக்கு எந்தவிதமான ஆபத்தும் வராமல் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை, பேரவைத் தலைவர் என்கிற முறையிலே, பேரவையின் காப்பாளர் என்கிற முறையிலே உங்களுக்கு இருக்கிறது, அந்த வகையில் நீங்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சியின் சார்பில் எங்களுடைய முழுமையான ஆதரவை நான் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் இன்றைய தினம் தமிழக மக்களாலே ஏகோபித்த அளவிலே தேர்ந்தெடுக்கப்பட்டு முதல்வராக இங்கே வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ வேண்டும், தமிழகத்தில் பல நல்ல திட்டங்கள் நிறைவேறி, தமிழக மக்கள் இதை ஒரு பொற்காலமாக நினைக்கக் கூடிய அளவிற்கு இங்கே நல்லாட்சி நிலவ வேண்டும், 5 ஆண்டு காலத்திற்குள்ளாக, தமிழகம் அமைதிப்பூங்காவாக திகழ்ந்து, தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை பெறுகின்ற ஒரு மாநிலமாக இருக்க வேண்டும், அவர் 5 ஆண்டுக் காலமும் இங்கே ஆட்சிப் பீடத்திலே இருப்பதோடு, அவர் நீண்ட



காலம் வாழ எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளைத் தர வேண்டும் என்று இறைவனை இறைஞ்சி அமைகிறேன், வணக்கம்.

முற்பகல் 10-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு பேரவை முன்னவர்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

<u>திரு, இளம்வழுதி</u> : தலைவர் அவர்களே.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பேரவை முன்னவர் பேசிக் கொண்டிருக்கிறார், (குறுக்கீடு) திரு. இளம்வழுதி நீங்கள் என்னிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இந்த நேரத்தில் பேசுவதற்கு நீங்கள் என்னிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் உட்காரச் சொல்லி இருக்கிறேன், நீங்கள் உட்கார வேண்டும், நான் பேரவை முன்னவரை அழைத்து இருக்கிறேன். நீங்கள் என்னிடம் அனுமதி பெறாமல் பேச முடியாது. உட்காருங்கள், (குறுக்கீடு) என்னிடம் அனுமதி கேட்டிருந்தால்தான் நீங்கள் பேச முடியும், கேள்வி நேரம் முடிந்தவுடன், பேசுவதற்கு என்னிடம் அனுமதி பெறாமல் இப்படி எழுந்திருப்பது முறையல்ல. நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) என்னுடைய அனுமதி பெறாமல் இந்த நேரத்தில் நீங்கள் எழுந்திருக்கவே முடியாது. உட்காரவும், (குறுக்கீடு) உட்காருகிறீர்களா. இல்லையா? உட்காரவேண்டும். நான் மாண்புமிகு பேரவை முன்னவரை அழைத்து இருக்கிறேன், (குறுக்கீடு) இந்த நேரத்திலே பேசுவது முறையல்ல. உட்கார வேண்டும், (குறுக்கீடு) நான் நிற்கிறேன். நீங்கள் உட்கார வேண்டும், என்னிடம் நீங்கள் அனுமதி கேட்கவில்லை. அனுமதி கேட்காமல் இப்படி நிற்பது சரியல்ல, (குறுக்கீடு) ஏற்கெனவே 3 ஆண்டுகளுக்கு முன்னர் அன்று நடந்த திருவிளையாடலில் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும், நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரவைத் தலைவர் எழுந்து நின்று ஒரு உறுப்பினரை 'அமருங்கள்' என்று சொன்னதற்குப் பிறகு அந்த உறுப்பினர் அமராமல், வேண்டுமென்றே, பத்திரிகைகளிலே பல்வேறு செய்திகள் வரவேண்டுமென்பதற்காக இதுபோன்று செய்வதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், (குறுக்கீடு),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை உட்காரச் சொல்லி பலமுறை சொல்லிவிட்டேன், (குறுக்கீடு) இளம்வழுதி உட்கார வேண்டும், உட்கார வேண்டும், உட்கார வேண்டும், (குறுக்கீடு), நீங்கள் அனுமதி கேட்க வில்லை. அனுமதி கேட்காமல் பேச முடியாது, உட்கார வேண்டும், திரு. இளம்வழுதி அவையை விட்டு வெளியேற உத்திரவிடுகிறேன், வெளியேற உத்திரவிடுகிறேன், வெளியேற உத்திரவிடுகிறேன், (குறுக்கீடு) மார்ஷல். திரு. இளம்வழுதியை அவையை விட்டு வெளியேற்ற உத்திரவிடுகிறேன்.

(திரு. இளம்வழுதி பேரவைக் காவலர்களால் பேரவையினின்றும் வெளியேற்றப்பட்டார்),

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக ஒரு அறிவிப்பு, கேள்வி நேரம் முடிந்தவுடன் தான், ஒரு பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று என்னுடைய அறையிலே வந்து கேட்பது மரபு, அல்லது இங்கேயாவது வந்து என்னிடத்தில், கேள்வி நேரம் முடிந்தவுடன் இந்தப் பிரச்சினையில் நான் என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டும் என்று கேட்டு அனுமதி பெற்றதற்குப் பிறகு தான் எப்பொழுதும் அனுமதிப்பது என்பதை மரபாகக் கடைப்பிடித்து வருகிறோம். அந்த வகையில் அரசுக் கொறடா திரு. கா. ப. பட்டாபிராமன் இந்தப் பிரச்சினையைப்பற்றி அவையில் நினைவுகூர வேண்டும் என்று கேட்டார். அவருக்கு அனுமதி அளித்தேன். எப்பொழுதும் எழுந்து பேசுவதற்கு உரிமை படைத்திருக்கிற எதிர்க் கட்சித் தலைவரவர்களேகூட என்னிடத்திலே இங்கே வந்து நானும் இதைப்பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று அனுமதி பெற்றுவிட்டுப் பேசுகிறார்,



அப்படியிருக்கிறபொழுது, எல்லா மரபுகளையும் மீறி இப்படி எழுந்துகொண்டு, இந்த அவையினுடைய ஒரு களங்கமாக அமைந்து விட்ட ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறபொழுது அதற்கு எதிரான சில கருத்துக்களை இங்கே பத்திரிகையிலே வர வைக்க வேண்டுமென்பதற்காகப் பரிதி இளம்வழுதி செய்த இத்தகைய முறைகேடான நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்று கூறி, அவரை அவையை விட்டு வெளியேற்றியதைத் தவிர, அவர் இங்கே பேசியது எதுவும் அவைக்குறிப்பிலே இராது, ஏறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்றாண்டுக் காலத்திற்கு முன்பு இந்த அவையிலே ஏற்பட்ட ஒரு அவல நிகழ்ச்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பட்டாபிராமன் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவிக்க, அதைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் தன்னுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

மக்களுடைய பிரதிநிதிகளாக வந்து அமர்ந்து, மக்களின் சார்பாகப் பேசப்படுகின்ற ஒரு பாராளுமன்றத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற நெறி தெரியாமல், கருத்து வேறுபாடு கொண்டவர்களை வன்முறையின் மூலம் அழித்து விடலாம் என்று கருதி, அன்று எப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீது எப்படிப்பட்ட வன்முறை தாக்குதல்கள் வீசப்பட்டன என்பதையும் இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

அப்படி வன்முறைகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் நாங்கள்தான் என்று காட்டுகின்ற வகையில், இன்று அந்த இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் இங்கே நடந்து கொண்டார். மக்களுக்கு— இப்பொழுது வந்திருப்பவர்களுக்கு எங்கே ஐயப்பாடு ஏற்படுகிறதோ என்று கருதி, 'அதை நாங்கள்தான் செய்தோம், அந்த நிலையிலேயும் செய்தோம், இந்த நாள் அப்படி வன்முறைக்கு எடுத்துக்காட்

டாக விளங்கத் தக்க அளவிற்கு 'இன்றைக்கும் தங்களுடைய இயல்புகளை வெளிப்படுத்துவோம்' என்கின்ற வகையிலேதான் அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால், கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து, கருத்துக்கு, மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய மரியாதையும் காட்டி, ஜனநாயகத்தில் முடிவுகள் எடுப்பதுதான் ஜனநாயகப் பண்பு. அந்த வகையிலேதான் இந்த மன்றம் அமைந்திருக்கிறது.

அந்த முறையிலேதான் சிலபல வினாக்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கின்ற பொழுது எழுப்பினார்கள். அதைஎழுப்புவதற்கு முழு உரிமையும் இருக்கின்றது. அந்த வகையிலே, லீடர் ஆஃப் தி அப்போசிஷன் என்று வருகின்றபொழுது, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறவர்கள் அத்தனைபேருக்கும் எடுத்துக்காட்டாக இருந்து, உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியதும், குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியதும், குற்றங்களைச் சுட்டிக் காட்ட வேண்டியதும், மக்களுடைய உரிமைகளை, நிலைமைகளைக் காப்பாற்ற வேண்டியதும் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு. அந்தப் பொறுப்பை ஏற்றுத்தான் அன்று சிலபல கேள்விகளைக் கேட்டார்கள். அந்த கேள்விகளுக்கு உண்டு என்று சொல்லலாம், இல்லை என்று சொல்லலாம்; முடியாது என்றும் சொல்லலாம் சொல்வதாக இல்லை என்றும் சொல்லலாம்; எது வேண்டுமானாலும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதை விட்டு விட்டு அன்று வன்முறைகளின் மூலமாகவே தீர்த்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு வன்முறை தலைவிரித்தாடியது என்பதை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

ஆகவே, இங்கே நீதி கிடைக்காவிட்டாலும், ஆக இந்த மன்றத்திலே நீதி வழங்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படாவிட்டாலும், மக்கள் மன்றம் நீதி அளிக்கும் என்கிற வகையிலேதான், இங்கே கிடைக்காத அத்தகைய நீதியை மக்கள் மன்றம் அளித்தது. அதன் காரணமாக, ஆட்ட முடியாத, அசைக்க முடியாத ஒரு வலிமையை இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தந்தது. அந்தக் கொடுமைகளினுடைய விளைவுதான்.



அதனால் என்ன ஏற்படுகிறது என்றால், அந்த வன்முறைச் செயல்கள் நம்முடைய உள்ளத்தை மட்டும்தான் தொட்டன என்பது அல்ல; தமிழகத்திலே வாழ்கின்ற கோடானுகோடி மக்களுடைய உள்ளத்தையே அது தொட்டது. அந்த நியாயத்தை முழுக்க பிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலேதான் முழு ஆதரவையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் மக்கள் மன்றம் தர இங்கே அவர்கள் வீற்றிருக்கிறார்கள்.

ஆகவே, அப்படிப்பட்ட வன்முறைச் செயல்களுக்கு இடம் தர வேண்டிய அவசியமில்லை. கருத்துக்குக் கருத்து எடுத்துச் சொல்லி, தங்களுடைய கருத்தை நிலைநாட்ட முயல்வதுதான் நல்லது. அதற்கு எச்சரிக்கையாக அமைந்த நாள்தான் இந்த நாள். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அந்த வன்முறைத் தாக்குதலிலிருந்து தப்பித்தார்கள் என்ற முறையிலேயும், அதற்குப் பிறகு பெற வேண்டிய புகழையும், பெருமையும் இன்று புரட்சித் தலைவி அவர்கள் பெற்றார்கள் என்ற நிலையிலேயும், அந்த வகையிலே தொடர்ந்து பெறுவார்கள் (மேசையை தட்டும் ஒலி) என்ற தன்மையிலேயும், அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்களை வாழ்த்துகிற முறையிலேயும், அதை நினைவுபடுத்துகிற முறையிலேயும் இன்றைக்கு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது விவாதத்திற்குரிய ஒரு பொருளல்ல. ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாதிக்கப்பட்டவரைப் பாராட்டுவதற்காக ஏற்பட்டதே தவிர, இங்கு விவாதத்திற்காகக் கொண்டு வரப்பட்ட பொருள் அல்ல.

முற்பகல் 11-00

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போன்று, இப்போதும் வன்முறைகள்—வன்முறையினால், அவர்களுக்கு பெரும் பாதகம் ஏற்படத்தக்க அளவுக்கு சுற்றிலும் சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றன என்பதையும், அது எவ்வளவு கொடுமையாக அமைந்திருக்கிறது என்பதையும், சிலபல நாட்களாக எவ்வளவு தலைவிரித்து ஆடுகிற அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதையும் காண்கிறபோது, அவர்களுக்குப் பாதுகாப்புத்தர வேண்டியது, இந்தத் தமிழக மக்களுடைய முழு பொறுப்பாகவும், முழு கடமையாகவும் இருக்கின்றன. அவர்கள் பல்லாண்டு காலம் வாழ வேண்டும்; நாட்டுக்கான நல்ல பல

பணிகளைச் செய்ய வேண்டும்; அந்த வகையில் அவர்களை வாழ்த்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நாள் மறுபடியும் வரக்கூடாது; இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படக் கூடாது என்பதற்கும், நம்முடைய நல்லெண்ணத்தை தெரிவிப்பதற்கும் இந்த வாய்ப்பு பயன்படுகிறது என்ற முறையில் அவர்கள் வளம் பல பெற்று, நலம் பல எய்தி, நீடித்த காலம் இன்புற்று வாழ வேண்டுமென்று இந்த அவையின் சார்பில் நான் வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு கா.ப. பட்டாபிராமன் அவர்களும் எடுத்துத் தெரிவித்த கருத்துக் களோடு இந்த அவை தன்னையும் இணைத்துக் கொள்கிறது என்பதைக் கண்கூடாக நாம் பார்க்க முடிகிறது. இந்த மார்ச் 25, 1989ஆம் ஆண்டின் நாள் என்பது, இந்த அவையின் ஒரு கருப்பு நாள் என்று வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக நாட்டில் எது நடக்கக் கூடாதோ அதை இந்த அவை அன்றைக்குச் சந்திக்கிற ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு, அன்றையதினம் இருபதாம் நூற்றாண்டுக்கான பாஞ்சாலி சபதத்தை இந்த அவையிலே எடுத்து, அந்தச் சபதம் நிறைவேறி, இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சராக அமர்ந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு அவையின் சார்பிலேயும், அவை உறுப்பினர்கள் சார்பிலேயும், பல்லாண்டு, பல்லாண்டு, எத்தகைய குறையுமின்றி வாழ வேண்டும் என்கிற வாழ்த்துக் களைத் தெரிவிக்கிற அதே நேரத்தில், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, எந்தச் சூழ்நிலையிலேயும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எத்தகைய இன்னலில் இருந்தும் காக்கின்ற கடமையை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வினை, சில நாட்களுக்கு முன்னர்கூட அவையின் சார்பிலே தெரிவித்தேன். அதை மீண்டும் அவையின் சார்பில் ஊர்ஜிதம் செய்கிற வகையில், அவர்களுக்கு ஏதாவது நிகழ்ந்தால், அவர்கள் மீது ஒரு துரும்பு பட்டால்கூட, இந்த நாடு தாங்காது என்கிற நிலைமையையும் எடுத்துச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி), அத்தகைய நிலைமை ஏற்பட்டு விடாது காக்கின்ற முயற்சியில் மத்திய





அரசு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்கிற உணர்வினை, அவையின் சார்பில் மத்திய அரசுக்குக் கோரிக்கையாக எடுத்து வைக்க இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்து, இந்த மார்ச் 25 ஆம் தேதி கருப்பு தினம். ஜனநாயக நாட்டில் எந்த மூலையிலேயும் இதுபோன்ற சம்பவம் இனி எந்தக் காலத்திலேயும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதை மட்டும் அவையின் சார்பில் என் சார்பில் என்னுடைய பிரார்த்தனை யாகக் கூறி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க என்று மீண்டும், மீண்டும் அவையின் சார்பில் வாழ்த்தி முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 11.05

*<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகப் பணிகள், சட்ட மன்ற நிகழ்ச்சிகள், இன்று என்னுடைய மானியக் கோரிக்கை, இதற்கான பதில்கள் என இந்தப் பணிகளைக் கவனிப்பதிலேயே நான் மூழ்கி இருந்தேன். எனவே, இன்று இந்த அவைக்குள் வந்து இங்கே அமரும்வரை, இந்த மார்ச் 25 ஆம் நாள் எப்படிப்பட்ட நாள் இதற்கு என்ன முக்கியத்துவம் இதை எல்லாம் நான் மறந்தே விட்டேன். எனவே, அரசு கொறடா மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் அவர்கள் அதை நினைவூட்டுகிற வரையில் எனக்கே இந்த நிகழ்ச்சி நினைவிலேயே இருக்கவில்லை.

இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், அரசுக் கொறடா அவர்களும் தெரிவித் துள்ள கருத்துக்களும் வாழ்த்துக்களும் உண்மையிலேயே என் நெஞ்சை நெகிழ வைத்துள்ளன. இங்கே அவர்கள், பேரவைத் தலைவர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவை முன்னவர் அவர்களும் இந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கிறார் கள் என்றால், இந்த அவையின் ஒட்டுமொத்தக் கருத்துக் களைத்தான், அனைவருடைய உணர்வுகளின் பிரதிபலிப்பைத் தான் இங்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகின்றேன். முதற்கண் உங்கள் அனைவருக்கும், மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்

களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும் இங்கே வீற்றிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த மார்ச் 25 ஆம் நாள் ஒரு கருப்பு தினம். சட்டமன்ற வரலாற்றிலேயே ஒரு 'கருப்பு தினம்' என்று, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டீர்கள். இது கருப்பு தினம் மட்டுமல்ல. வன்முறையால் அரசியலில் எதையும் சாதித்து விடமுடியும் என்று தப்புக் கணக்கு போடுகிறவர்களுக்குப் பாடமாக அமையும் தினம் இது (மேசையைத் தட்டும் ஒலி).

தேர்தலிலே மக்கள் இத்தகைய வீழ்ச்சியினை அளித்த பிறகும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு உறுப்பினர் இந்த அவையில் இருந்து கொண்டு சற்று முன்பு எத்தகைய ஒரு சலசலப்பை ஏற்படுத்த முனைந்தார் என்பதை இங்கே அனைவரும் பார்த்தோம். ஆக, என்ன காரணத்திற்காக மக்கள் இவர்களுக்கு இப்படி ஒரு 'சாட்டை அடி', 'சம்மட்டி அடி' கொடுத்து, விலாசம் தெரியாமல் கடந்த தேர்தலின்போது விரட்டியடித்தார்களோ அந்தக் காரணத்தை அவர்கள் இன்னும் உணர்ந்தபாடில்லை. அவர்கள் இன்னும் திருந்தவில்லை என்பதைத்தான் அந்த சட்டமன்ற உறுப்பினரின் செயல்பாடுகள் இங்கே எடுத்துக்காட்டின (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய விஷயம்தான். ஏனென்றால், அவர்களும் திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள். திராவிட இயக்கத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருப்பவர்கள். எனவே அவர்கள் விலாசம் தெரியாமல் போக வேண்டுமென்று நான் என்றும் நினைக்க மாட்டேன். அவர்களும் அரசியலில் இருக்க வேண்டும். ஆனால், ஆரோக்கியமான அரசியலை நடத்த வேண்டும் என்றுதான் நான் என்றும் எண்ணுவேன். இங்கே அந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் நடத்திய அட்டகாச நாடகத்தைப் பார்க்கின்றபோது, இவர் ஒருவர் எதிர்க்கட்சியிலே இருக்கும் போதே இப்படி நடந்து கொள்கிறார் என்றால், இவருடைய கட்சியினர் ஆளும் கட்சியாக இருந்த போது என்னென்ன செய்திருக்க மாட்டார்கள், எப்படியெல்



லாம் ஆட்டம் போட்டிருப்பார்கள், எப்படியெல்லாம் கொட்டம் அடித்திருப்பார்கள் என்றுதான் இதையெல்லாம் பார்க்கின்றபோது பொதுமக்களுக்கு எண்ணத் தோன்றும். இதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்படி ஜனநாயக மரபுகளை மதிக்காமல் நடந்து கொண்டால் மக்கள் என்ன நினைப்பார்கள், பொது மக்கள் என்ன கருதுவார்கள் என்பதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், இப்படி தவறான வழியில் போனதால்தான், தவறான முறையில் நடந்து கொண்டதால்தான், கடந்த தேர்தலின்போது மக்கள், அவர்கள் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பலர் இன்று என்னையே அழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவது உண்மையே. என்னைப் பொறுத்தவரை, என் உயிரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என்றைக்குமே கவலைப்பட்டதில்லை, இப்போதும் கவலைப்படவில்லை, அப்படி கவலைப்படுபவராக இருந்தால் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க முடியாது. ஆனால் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் நாடு. நம் நாட்டின் அரசியல் எங்கே போய்க்கொண்டிருக்கிறது? அந்தக் காலத்தில், பண்டித நேரு அவர்கள் இருந்த காலத்தில், மூதறிஞர் ராஜாஜி இருந்த காலத்தில், ஏன் இன்னும் சற்று அண்மைக் காலத்திற்கு வருவோமேயானால் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் எல்லாம் அரசியல் ஆரோக்கியமான அரசியலாக இருந்தது. அன்று மாற்றுக் கருத்து உடையவர்கள் சட்டமன்றத்திலே அவர்களுடைய கருத்தை, எதிர்க்கருத்தை எடுத்துத் தெரிவிப்பார்கள், எடுத்துச் சொல்வார்கள். வெளியிலேயும், பொதுக் கூட்டங்களிலேயும் தங்களுடைய மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள். கொள்கைக்குக் கொள்கை என்ற வகையில் விளக்கங்களைக் கூறுவார்கள். ஒருவருடைய கொள்கையை எதிர்ப்பார்கள். ஆனால், ஒருவரைப் பிடிக்கவில்லை என்பதற்காக, தான் இருக்க வேண்டிய இடத்தில் இன்னொருவர் வந்து அமர்ந்துவிட்டாரே என்கிற காரணத்திற்காக 'இவரை ஒழித்தே விட வேண்டும்; அழித்தே விட வேண்டும்; இவருடைய உயிரையே பறித்துவிட வேண்டும்' என்பன போன்ற எண்ணங்கள் எல்லாம் அன்றைய காலத்தில்

இருக்கவில்லை, அந்தக் காலத்தில் இருக்கவில்லை. ஆகவே இது அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒரு விஷயம். இன்று எத்தகைய நிலைமையைப் பார்க்கிறோம்?

முற்பகல் 11-10

ஒருவர் சற்று உண்மையாக உழைக்க வேண்டும். மக்களுக்கு உண்மையிலேயே சில நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட முற்பட்டால் இது பலருக்குப் பிடிப்பதில்லை, எனவே அரசியல் ரீதியாக தேர்தலில் சந்தித்து தேர்தலில் போட்டியிட்டு வீழ்த்த முடியவில்லை என்றால் அவர்களை இந்த மண்ணை விட்டே ஒழித்து விட வேண்டும். உயிரையே பறித்துவிட வேண்டும் என்ற முடிவுக்குச் செல்கிறார்கள் என்றால் இது உண்மையிலேயே ஒரு நல்ல முன்னுதாரணம் அல்ல. இது ஒரு நல்ல எக்ஸாம்பிள் அல்ல. எனவே இந்த 25 ஆம் தேதி 1989 மார்ச்சில் என்ன நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை இன்றைய தினம் எண்ணிப் பார்க்கிற போது, எல்லாம் நல்லதற்கே என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. காரணம் அன்றையதினம் அந்தச் சம்பவம் நடைபெறவில்லை என்றால் ஒரு அராஜக ஆட்சி, ஒரு அரக்கர்களின் ஆட்சி இன்னும் நீடித்துக் கொண்டுதான் இருந்திருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி அன்று 1989-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி அத்தகைய ஒரு நிகழ்ச்சி, ஒரு அவல நிகழ்ச்சி இங்கே நடைபெற்றதால் தான் விரைவிலே மீண்டும் தேர்தல் வந்தது. ஒரு நல்ல, மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு ஆட்சி என்று மக்கள் நம்பிக்கை வைத்து பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழிவந்த புரட்சித் தலைவரின் வாரிசான எங்களை இங்கே ஆட்சி பீடத்தில் அமர்த்தியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எந்தக் கட்டத்திலும், எந்தக் காலக் கட்டத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் மக்களுக்கு நன்மைதான் நடக்க வேண்டுமென்று என்றைக்கும் விரும்புகிற ஒரு தேசிய நீரோட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட தேசியக் கட்சியாகிய காங்கிரஸ் கட்சி இங்கே எதிர்க்கட்சியாக வந்து அமரும் வாய்ப்பையும் மக்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இன்றைக்கும் சட்டமன்ற நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்கி



றார்கள். பத்திரிகையாளர்களும் பார்க்கிறார்கள். அன்றைய தினத்திற்கும், இன்றைக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பதை பத்திரிகை நிருபர்களே சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் அத்தகைய ஒரு அராஜக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் தேதி மட்டுமா அத்தகைய ஒரு அருவருக்கத்தக்க அவல நிகழ்ச்சி நடந்தது?. அதைத் தொடர்ந்து இங்கே என்னென்ன நடந்தன? இந்த அவையிலே எத்தகைய விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன என்பது இங்கேயுள்ள பலருக்கும் நினைவு இருக்கும். பத்திரிகையாளர்களுக்கும் நினைவு இருக்கும். பொதுமக்களுக்கும் நினைவு இருக்கும். All Parliamentary norms were thrown to the winds; were thrown to the dogs எல்லா ஜனநாயக மரபுகளும் மீறப்பட்டன. வேண்டுமென்றே வேறு கட்சிகளின், பிடிக்காத கட்சிகளின் உள்கட்சி விவகாரங்களில் புகுந்து கட்சியை உடைத்து அவர்களுடைய அரசியலையே நடத்த விடாமல் அரசியல் கட்சி அலுவலகங்களை எல்லாம் பூட்டி, சீல் செய்து அவர்களை விரட்டி அடித்து, அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் விலைக்கு வாங்க முயற்சி செய்து, இப்படி எத்தனையோ அலங்கோலங்களும் அவலங்களும் நிகழ்ந்தன. அவர்களை வைத்தே சட்டமன்றத்தில் மாறுபட்ட கருத்துக்களைப் பேச வைத்து தவறான கருத்துக்களைப் பேசவைத்து தாங்கள் அங்கம் வகித்த கட்சியின் தலைமைக்கே எதிராக எல்லாம் அவர்களைத் தூண்டிவிட்டு, ஏவிவிட்டு அப்படிப் பேச வைத்த நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த அவையிலே நடந்திருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்த தமிழக மக்களுக்கு எத்தனை கோடி முறை நன்றி சொன்னாலும் அது தகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

இன்று பேசியுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் எனக்கு வாழ்த்துக் கூறி இருக்கிறார்கள். என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ற போதிலும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் உண்

மையிலேயே பாராட்டுக்கு உரியவர்கள், வாழ்த்துக்குரியவர்கள் தமிழக மக்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). முன்பிருந்த அவல நிலை இனிமேல் தமிழகத்தில் ஏற்படக்கூடாது என்று முடிவு செய்தவர்கள் தமிழக மக்கள். முன்பிருந்ததைப் போன்ற ஒரு அராஜக ஆட்சி தமிழகத்திலே அமையக்கூடாது என்று முடிவு கட்டியவர்கள் தமிழக மக்கள். அதற்காக வாக்களித்து தாங்கள் யார் மீது நம்பிக்கை வைத்து இருந்தார்களோ, அவர்களே ஆட்சி பீடத்திற்கு வரவேண்டும், மக்களுக்கு நல்லதொரு ஆட்சியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இதற்கெல்லாம் வழிவகுத்துக் கொடுத்தவர்கள். இதை எல்லாம் செய்து காட்டிய சாதனையாளர்கள் தமிழக மக்கள். எனவே இப்போது அவையின் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவைமுன்னவர் அவர்களும், அரசுக் கொறடா அவர்களும் இங்கே வீற்றிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எனக்கு வாழ்த்துக் கூறியதை நான் பணிவோடு ஏற்றுக்கொள்கின்ற அதே நேரத்தில் தமிழக மக்களுடைய ஆதரவும், அன்பும் எனக்கு இருக்கின்ற வரை எனக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. என் நெஞ்சில் எந்தவிதமான ஒரு அச்சமும் இல்லை. உங்கள் அனைவரின் ஆதரவோடும், தமிழக மக்களின் ஆதரவோடும், தொடர்ந்து இந்த மாநிலத்தை மேன்மை அடையச் செய்ய, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக ஆக்குவதற்கு என்னால் இயன்றவரை, என் சக்திக்குட்பட்ட வரை தொடர்ந்து பாடுபட்டு உழைப்பேன் என்று கூறி மீண்டும் அனைவருக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. கவன ஈர்ப்பு.

### (அ) ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதி மற்றும் வாலக்கன்காடு கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு எஸ். சண்முகநாதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம்





வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள வெட்டன்விடுதி மற்றும் வாலக்கன்காடு ஊராட்சிகளில் குடிநீர் தட்டுப்பாடு குறித்து'' மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விளக்க அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்தைச் சார்ந்த வெட்டன்விடுதி மற்றும் வாலக்கன்காடு ஊராட்சிகளில் உள்ள தற்போதைய குடிநீர் வசதி விவரம் வருமாறு :—

வெட்டன் விடுதி : இக்கிராமம் முழு அளவு குடிநீர் வசதி பெற்றது. இங்கு 1066 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டத்திலிருந்து 13 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வாலக்கன்காடு ஊராட்சி : இவ்வூராட்சியில் 7 குடியிருப்புகள் உள்ளன. அவைகளின் விவரம் வருமாறு —

(1) பெரியவாடி : இக்குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்றது. இங்கு 539 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்குடியிருப்பிற்கு 2 கையிறைப்பான்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

(2) வண்ணான் விடுதி : இக்குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்றது. இங்கு 199 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்குடியிருப்பிற்கு 1 கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(3) வாலக்கன்காடு : இக்குடியிருப்பு பகுதியளவு குடிநீர் வசதி பெற்றது. இங்கு 1454 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்

கப்பட்டு வருகின்றது. குடிநீர்த் தேவையை கருத்திற்கொண்டு வரும் நிதி ஆண்டில் மின்னிறைப்பான் திட்டம் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(4) வாண்டன் விடுதி : 250 மக்கள் வாழ்ந்து வரும் இக்குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்றதாகும். இங்கு ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(5) செட்டியார் தெரு : இக்குடியிருப்பில் 150 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு, முழு அளவு குடிநீர் வசதி பெற்றதாக உள்ளது.

(6) வடக்குப்பட்டு ஆதிதிராவிடர் காலனி : இக்குடியிருப்பில் 180 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது 1 கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(7) வாலக்கன்காடு வடக்கு : இக்குடியிருப்பின் மக்கட் தொகை 200. தற்போது ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற அந்த குறிப்புகளிலே மேல்நிலை நீர்த்தொட்டியுடன் கூடிய மின் இறைப்பான் திட்டம் செயல்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 'வாட்டர் லெவல்' காரணமாக கிணற்றினுடைய நீர்மட்டம் குறைந்திருக்கின்ற காரணத்தினாலே அந்த சாதாரண மின் இறைப்பான் மூலம் குடிதண்ணீர், தேவையான குடிதண்ணீர், மக்கள் பெறமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே ஆழ்குழாய் நீர்மூழ்கி மோட்டார் இணைத்து, அந்த தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரசு அது குறித்து பரிசீலனை செய்து முடிவெடுக்கும் என்பதை, தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வெட்டன் விடுதி, பகுதியிலுள்ள பெரியவாடி, வண்ணான் விடுதி வாலக்கன்காடு, வாண்டன் விடுதி செட்டியார் தெரு, வடக்குப்பட்டு ஆதிதிராவிடர் காலனி, வாலக்கன்காட்டினுடைய வடக்குப் பகுதி ஆகிய பகுதிகளிலே எல்லாம் கையிறைப்பான் மூலம் இயங்குவதாக இந்த விவர அறிக்கை



யிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீர் மட்டம் குறைந்திருக்கிற காரணத்தினாலே கையிறைப்பானிலே நீர் வரத்து குறைந்திருக்கிறது. ஆகவே அந்த பாதிக்கப்பட்ட பகுதியிலே நீர் வரத்து குறைந்திருக்கிற காரணத்தினாலே உடனடி நடவடிக்கையாக அங்கே பொது மக்களுக்கு லாரிகள் மூலம் நீர் கொண்டு செல்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.20

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டம் வறட்சிப் பகுதியாக கருதப்பட்டு, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) பழனி நகராட்சியில் போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆ. சுப்புரத்தினம் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' பழனி நகராட்சியில் போதிய துப்புரவுப் பணியாளர்கள் இல்லாதது குறித்து '' மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

1942 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளின் (Norms) அடிப்படையில் நகராட்சிகளில் சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இந்தக் குறியீடுகள் இதுகாறும் திருத்தப்படவில்லை.

நகராட்சிகளுக்குத் தேவையான சுகாதாரப் பணியாளர்களின் தேவையை நகராட்சி நிர்வாக ஆணையாளர், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநருக்கு தெரிவித்து

பின், மேற்படி இயக்குநர் அரசு நிர்ணயித்த குறியீடுகளின் அடிப்படையில் சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க ஆணையிடுகிறார் ;

பழனி நகராட்சியைப் பொறுத்தவரை திருக்கோவிலைச் சார்ந்த சுற்றுலாத் தலமாக இருப்பதால் தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்து நாள் தோறும் பழனி நகரின் மக்கட்தொகை எண்ணிக்கைக்கு ஈடாகவும், திருவிழா நாட்களில் மக்கள் தொகைக்கு பல மடங்கு அதிகமாகவும் வருடம் முழுவதும் பக்தர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். மேலும் பெரும்பாலான பக்தர்கள் வேண்டுதல் காரணமாக ஒரு சில நாட்கள் தங்கிச் செல்கின்ற காரணத்தால் அவர்களால் ஏற்படுகின்ற சுகாதாரக் கேட்டைக் களைவதற்கு நகராட்சியில் தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு செய்வது கடினமாகும். எனினும் பழனி நகராட்சியில் தற்போது உள்ள துப்புரவுப் பணியாளர்களை வைத்து அதிக அளவில் பொது மக்கள் வந்து போகின்ற இடமாக இருப்பதால் இரவும் பகலும் துப்புரவு செய்து தூய்மையாக வைத்துக் கொள்ள பழனி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்டுள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையில் வைத்துள்ள விளக்கக் குறிப்பில் மிக அழகாக ஒன்றை குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்க் கடவுள் முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கக்கூடிய பழனியானது மிகப் பெரிய புண்ணிய ஸ்தலமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அன்றாடம் அங்கு வரக்கூடிய பக்தர்களுடைய எண்ணிக்கையானது அங்கு வாழக்கூடிய மக்களுடைய எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதாகவும், திருவிழாக் காலங்களில் பல லட்சம் மக்கள் அங்கு குவிந்து கொள்ளக்கூடிய காரணத்தினால் அங்குள்ள துப்புரவுப் பணியாளர்களை வைத்து துப்புரவு பணியை மேற்கொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதே பணியாளர்களை வைத்து அந்தப் பணிகளை இரவும் பகலும் சிறப்புற செயல்படுத்த வேண்டும், அந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமென்று நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விழைவது என்னவென்றால், அவ்வளவு பெரிய நகரமாக இருக்கக்கூடிய அந்த பழனி நகரத்தில் இன்றைக்கு வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் முன்னிலை வகிக்கக்கூடிய அந்த நகரத்தில், இன்னும் பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லை. அதுமட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய அந்தக் குறைகளைக் களையக்கூடிய துப்புரவுப் பணியாளர்கள் யாராவது விடுப்பில் சென்று விட்டால்



இன்னும் நிலைமை மோசமாக போய்விடுகிறது. எனவே, துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அங்குள்ள நிலைமையை தவிர்க்க, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 47—செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்.

(ஆ) கோரிக்கை எண் 51—சுற்றுலா.

(இ) கோரிக்கை எண் 52—தமிழ்—வளர்ச்சி—பண்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 47 செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 6,11,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 867— திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெளிவரும் ஒவ்வொரு திரைப்படங்களிலும் மதுவின் தீமைகளை விளக்க தமிழக முதல்வர் தோன்றுவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,11,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 894—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " கிராமப்புறத்தில் உள்ள டூரிங் டாக்கீஸ் வரியைக் குறைக்கவும், நகரங்களில் உள்ள ஏ.சி. தியேட்டர்களுக்கு வரியை உயர்த்த வேண்டிய அவசியம் குறித்து "விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,11,84,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 51 சுற்றுலா. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சுற்றுலா பற்றிய 51ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 98,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 935—திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " உவரியை ஒரு சுற்றுலா மையமாக்க வேண்டிய அவசியம் குறித்து " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் ;

" சுற்றுலா பற்றிய 51ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 98,21,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 934—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணப் பறவைகளும் அழகு நிறைந்த காடுகளும்



நிறைந்த லக்கூன் என்னும் இடத்தை சுற்றுலா மையமாக அமைத்து அங்கு சென்று வர விசைப்படகு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து " விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" சுற்றுலா பற்றிய 51ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 98,21,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 52—தமிழ் வளர்ச்சி—பண்பாடு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,57,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் "
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 957—திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "to discuss the need to provide pension to the freedom fighters who fought for the merger of Tamil areas with Tamil Nadu" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57 70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 972—திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் 100 அரிய நூல்களைக் கொண்டு நாகையில் ஒரு மாவட்ட நூலகம் அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 52ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[1992 மார்ச் 25

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பின் கூறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா மற்றும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு என்ற தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்த அவை நடவடிக்கையில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறுகிற கருத்துக்களை ஒட்டி, அரசின் தரப்பிலே கூறவேண்டிய விளக்கங்களையும், எடுத்துள்ள முடிவுகளையும் இறுதியாக என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி சுற்றுலா மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாடு ஆகிய மாண்புமிகு முதலமைச்சரவர்களின் துறைகளினுடைய மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை ஆற்றவிழைகிறேன்,

இன்றைக்கு மார்ச் 25ஆம் நாள், இந்த நினைவை இங்கே சிறப்பாக எல்லாருமே ஞாபகப்படுத்தினார்கள், ஆனாலும் கூட அன்று இந்த அவையிலே நானும் இருந்தவன் என்பதால் அது பற்றி ஓரிரண்டு வார்த்தைகளை நானும் சொல்லக் கடமைப்பட்டவன், அப்போது இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு, சிங்காரம் அவர்களும் இருந்தார்கள், அன்

@397–235ஆம் பக்கங்களில் I முதல் III இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.



1992 மார்ச் 25] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

றைக்கு இந்த அவையிலே இருந்த பல்வேறு உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்கூட அன்றைக்கு இங்கே இருந்தவர்தான், மாண்புமிகு அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் அன்றைக்கு இங்கே இருந்தார்கள், ஆனால், அன்றைக்கு நடந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்க்கையிலே, என்றைக்கும் என் மனதிலே குமுறிக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சிதான், அப்படிப்பட்ட ஒரு கொடுமையான நிகழ்ச்சியை என் கண்ணால் காண்பதற்கா இங்கே சட்டமன்றத்திற்கு வந்தேன் என்றுகூட நான் வெளியிலே பேசியிருக்கிறேன், சட்டமன்றத்திலும் பேசி இருக்கிறேன், அவ்வளவு பெரிய கொடுமை நடந்தது. அப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் வீழ்த்தி எறிந்து இன்றைக்கு வீராங்கனையாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதல்வரவர்கள் திகழ்கிறார்கள், அதுமட்டுமல்ல, அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிக்கு மறுநாள் எதிர்க கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஜோடித்தன, இங்கே இருக்கிறாரே, கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர், அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் என்ற உறுப்பினரை வைத்து அப்படி ஒரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையில் பேசுங்கள், (குறுக்கீடு), திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கவில்லை என்று ஒரு பெண் உறுப்பினர் இங்கே அறிக்கை கொடுத்தார், அன்றைக்கே, 26ஆம் தேதியே எல்லா பத்திரிகைக்காரர்களையும் அழைத்து நான் அறிக்கை கொடுத்திருக்கிறேன்,

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : இந்த அவையில் இருந்த ஒரு மாண்புமிகு பெண் உறுப்பினரே இங்கே அப்படி தாக்கப்பட்ட சம்பவத்தை என் கண்ணால் பார்க்கவில்லை என்று அந்தக் கட்சிக்கு ஆதரவாக சொன்னார் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், அத்தனை பெரிய கொடுமைகளிலிருந்து இன்றைக்கு மீண்டு ஆட்சி பீடத்தைப் பிடித்து மக்களுடைய பேராதரவோடு திகழ்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, உரையைத் தொடங்குகிறேன்.

இன்றைக்கு இந்தத் துறையானது மிகவும் முக்கியமான துறையாகும், சமுதாயத்தினுடைய வளர்ச்சியைச் சொல்வதற்கு, அரசினுடைய பல்வேறு திட்டங்களை எடுத்துச் சொல்

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1992 மார்ச் 25

வதற்கு, பல்வேறு செயல்பாடுகளை எடுத்துச் சொல்வதற்கு. அன்னிய நாட்டுக்கு நம்முடைய நாட்டினுடைய நிலைமையை எடுத்துச் சொல்வதற்கு இருக்கின்ற ஒரு முக்கியமான துறையாக இது திகழ்கிறது, இன்றைக்கு செய்தி சுற்றுலாத் துறை மூலமாகப் பொருட்காட்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம், தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருட்காட்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, சென்னையிலே நடக்கும் பொருட்காட்சி எப்போதும் இருக்கக்கூடிய அளவுக்கு நிரந்தரமாக ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்,

அடுத்து, திரைப்படங்கள் செய்தித் துறையின் மூலமாக எடுக்கப்படுகின்றன, நம்முடைய அரசினுடைய நிகழ்ச்சிகள் செய்திப் படமாக எடுத்து, திரையிடப்படுகிறது. இப்படி செய்தித் துறையின் மூலமாக எடுக்கப்படுகிற படங்களில் வெறும் விழாக்களுக்கும், சம்பிரதாயங்களுக்கும் இடம் கொடுக்காமல் பல்வேறு நிகழ்ச்சிகளை அதில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

முற்பகல் 11-30

குடும்ப நலம், விளையாட்டு போன்றவைகளையெல்லாம் படிப்படியாக அந்த செய்தித்துறைப் படங்களில் சொல்ல வேண்டும். மதுவிலக்குபற்றி பல்வேறு பிரச்சாரப் படங்களை அரசு தயாரிக்க வேண்டுமென்று நான் இங்கே கோரிக்கை வைக்கின்றபோது, அதிலே மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செங்கோட்டையன் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் போன்றவர்களை கதாநாயகர்களாகவும், எங்களைப் போன்ற உறுப்பினர்களை துணை நடிகர்களாகவும் நடிக்க வைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். இங்கே எதிர் அணியில் இருக்கின்ற அன்பிற்குரிய மாண்புமிகு குமாரதாஸ் அவர்களையெல்லாம் வில்லனாக அதிலே நடிக்க வைத்து இந்தத் துறை, திரைப்படங்கள் தயாரித்தால் மக்கள் மத்தியில் அது சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். (சிரிப்பு) அப்படி எங்களுக்கெல்லாம் வாய்ப்பு அளித்து இதுபோன்ற தீவிர மதுவிலக்குப் பிரச்சாரங்களை செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை இந்த மாமன்றத்தில் புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மக்கள் தலைவராக, அதாவது இந்த அவையில் ஒன்பது ஆண்டுக் காலம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள், புரட்சித் தலைவர்



1992 மார்ச் 25] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

அவர்கள் பல்லாண்டுக் காலம் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் இந்த அவையில் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பல்வேறு சாதனைகளைப் படைத்தவர்கள். அப்படி சாதனைகளைப் படைத்ததோடல்லாமல், தமிழகத்தில் நல்ல ஆட்சிகளையும் உருவாக்கியிருந்தவர்கள். அந்தப் பெருமக்களையெல்லாம் இந்தத் திரைப்படங்களின் வாயிலாக மேலும் எடுத்துச் சொல்லி, அவர்களின் வாழ்க்கை வரலாற்றையெல்லாம் திரைப்படங்களாக எடுத்து அரசு வெளியிடவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வீடியோ கேசட்டுகள் வெளியிடுகிறார்கள். இவைகளையெல்லாம் வெளியிடும்போது பெண்களின் பெருமையை காக்கிறவகையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பெண்களுக்கு பெருமை சேர்ப்பதுபோல அவைகள் இருக்க வேண்டும். இப்போது கருவிலேயே பெண் சிசுக்களைக் கொன்றுவிடும் கொடுமைகள் தமிழகத்திலே நடப்பதாக செய்திகள் வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இந்த அவையில் பேசும்போது இதுபோன்ற நிகழ்வுகளைத் தடை செய்ய வேண்டும், கருவிலே பெண் குழந்தைகளை அழிக்கும் செயல்களைத் தடை செய்ய பல சட்டங்கள் கொண்டுவரப்படும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வீடியோ கேசட்டுகள் வெளியிடும்போது, பெண்ணின் பெருமையை நிலை நிறுத்தும் வகையில் அவைகளை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சினிமாத் துறையிலும் பெண்களைக் களங்கப்படுத்துகின்ற வகையில் பல சம்பவங்கள் இருக்கின்றன. இன்றைக்குக்கூட கல்லூரி மாணவிகள் ஆபாசமான சினிமா போஸ்டர்ககளை ஒட்டுவதற்கும், மோசமான திரைப்படங்களை தயாரிக்கின்றதற்கும் எதிர்ப்பு தெரிவித்து அதற்காகப் போராடியிருக்கின்றார்கள். இதுபோன்ற நிலைமைகள் இருக்கக்கூடாது. சுவரொட்டிகள் ஒட்டுவதில் ஒழுங்குமுறை இல்லை. தெருத்தெருவாக ஒட்டிவிடுகிறார்கள். சுவர்களையெல்லாம் அசிங்கப்படுத்துகிறார்கள். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இதுபோன்ற சம்பவங்களே இல்லை என்று சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலே வால் போஸ்டர்களை ஒட்டவேண்டுமென்று சொல்லி, குறிப்பிட்ட இடங்களில் அளந்து ஒதுக்குகிறார்கள். அந்த இடங்களில்தான் ஒட்ட வேண்டும். ஆனால் இங்கே அப்படியில்லை. எல்லா இடங்களிலும் ஒட்டுகிறார்கள். அதுவும் ஆபாசமான போஸ்டர்கள் என்றால் தெளிவான இடங்களில் ஒட்டிவிடுகிறார்கள். இவைகளையெல்லாம் கண்டிக்கத்தக்க வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய வால் போஸ்டர்களுக்கு தடை விதிக்க வேண்டும். அவர்களுக்கு தனி

இடம் ஒதுக்கிக் கொடுத்தால், சென்னை நகரமட்டுமல்ல, தமிழகம் பூராவும் எங்கு பார்த்தாலும் அழகாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தொலைக்காட்சியிலே இப்போது பல்வேறு நிகழ்ச்சிகள் செய்தித்துறை மூலமாகக் காட்டப்படு கின்றன. கொடைக்கானலில் இருக்கின்ற தொலைக் காட்சி அஞ்சல் நிலையம் 20 கிலோவாட் திறனில் ஒளிபரப்பக் கூடிய நிலையில் இருக்கிறது. அதேபோல், திருநெல்வேலியில் குறைந்த சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பு அஞ்சல் நிலையத்தை எச்.பி.டி. என்று சொல்லக்கூடிய உயர்சக்தி அஞ்சல் நிலையமாக மாற்ற வேண்டும். கன்னியாகுமரியிலும் இதுபோல குறைந்த சக்தியாக இருப்பதை அதாவது எல்.பி.டி.-யாக இருப்பதை எச்.பி.டி.-யாக உயர்த்திக் கொடுக்க இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய ஒப்பற்ற தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தத் தமிழகத்திலேதான் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்தத் தலைவருக்கு நினைவாலயம் அமைப்பதற்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று இந்தக் கொள்கைக் குறிப்பில் அதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குரிய வடி வமைப்புப் பிளான் இந்திய அரசால் அமைக்கப்பட்ட குழு உரிய காலத்தில் மாநில அரசுக்கு வழங்கினால், ராஜீவ் காந்தி அவர் களின் நினைவாலயப் பணி மே 21-ம் தேதியன்று தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி கூறியுள்ளார்கள். அதை சீக்கிரமாக வாங்கி, விரைவில் அந்த மறைந்த தலைவருக்கு மிகச் சிறந்த நினைவாலயத்தை எழுப்ப வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதைப்போல அந்த தலைவனைக் கொன்ற கொடுமையான அந்த கொலைகாரர்கள் யார் என்பதை அடையாளம் காட்டக் கூடிய அளவிலே தமிழகத்திலே தமிழக அரசின் சார்பாக அங்கே தனியாக ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து அவர்களுடைய வர லாற்றை நீங்கள் சொல்ல வேண்டும் என்பதை உங்கள் மத்தியிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பத்திரிகையாளர்கள். இன்றைக்கு பத்திரிகையாளர்களுக்கு பல வசதிகள் இங்கே செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. வீடு கட்டுவதற்காக திட்டங்கள் சொல்லப் பட்டாலும் கூட இன்னும் வீடுகள் கட்டி கொடுக்கப்படாமல் இருக்கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே உள்ள பஸ்களில் பத்திரிகையாளர்களுக்கு சில வசதிகளை





செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு பாஸ் எல்லாம் கொடுக்கப்பட்டால்தான் சில இடங்களுக்கு சென்று வருவதற்கு அவர்களுக்கு வசதியாக இருக்கும். நிகழ்ச்சிகளை அவர்கள் படம் பிடித்து காட்டுவதற்கும், நிகழ்ச்சிகளை போடுவதற்கும் வசதி யாக இருக்கும் என்பதை உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல கேபிள் டி.வி. இன்றைக்கு நாம் அதை முறைப்படுத்தி, சட்டங்கள் எல்லாம் வகுத்து நிறுவப்பட்டிருக் கின்றன. இந்த கேபிள் டி.வி. வந்ததால் திரையரங்குகளில் கூட்டங்கள் குறைவாக இருக்கின்றன என்று கிராமங்களில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் சில இடங்களில் திரையரங்கு களை மூடக்கூடிய சூழ்நிலை கூட இருக்கிறது என்றும் சொல்லப் படுகிறது. அந்த கேபிள் டி.வி.-யில் சிலர் முறையில்லாமல் சில படங்களை போட்டு காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என் பதைக்கூட ஒரு குறையாக இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். அதை சற்று கடுமையாக நீங்கள் கவனிக்க வேண்டும் என்று உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்பு றேன்.

பத்திரிகைகள் சில வருகின்றன. நான் அதை முக்கியமாகச் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் சில வாரப் பத்திரிகைகள் இப்போது திடீரென்று முளைக்கின்றன. ஏதேதோ பெயரில் பல பத்திரிகைகள் வருகின்றன. பத்திரிகை களில் ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் போடுகிறார்கள். நான்கூட ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பார்த்து, ஏன் இப்படியெல்லாம் செய்திகளை போடுகிறீர்கள் என்று கேட்டபோது, பரபரப்பாக இருக்க வேண்டுமாம் செய்தி என்றால் ; இப்படி ஏதாவது பர பரப்பாக ஒரு செய்தியை போட வேண்டும் அப்போதுதான் பத்திரிகைகள் விற்கும் என்று போடுகிறோம் என்று சொன்னார், இதனாலே என்ன விளைவு ஏற்படுகிறது என்றால், ஒரு நல் லாட்சி நடப்பதை மக்களிடம் திசை திருப்பப் பார்க்கிறார்கள். அது மட்டுமல்ல. நல்லவர்களை கெட்டவர்களாக சித்தரித்துக் காட்டக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது, அது மட்டுமல்ல. சில நேரங்களிலே, சில இடங்களில் வன்முறையைத் தூண்டக் கூடிய அளவிலே இருக்கின்றன. சில இடங்களில் சாதி பிரச்சினை யைத் தூண்டக்கூடிய அளவிலே பத்திரிகைகளில் செய்தியை திரித்து எழுதுகிறார்கள், அது போன்று சில வாரப் பத்திரிகை கள் இருக்கின்றன. எல்லா பத்திரிகைகளையும் நான் சொல்ல விரும்பவில்லை, எல்லா பத்திரிகைகளும் தரமாக இருந்தாலும் கூட சில பத்திரிகைகள் இதுபோன்று வெளியிடுகிற சில பத்திரிகை களை தடைசெய்வதற்கு ஏதாவது சட்டம் வகுக்க வேண்டும், பத்திரிகைகளுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும்தான், பத்தி

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1992 மார்ச் 25

கைகளுக்கு சுதந்திரம் இருந்தாலும் இதுபோன்ற சில விஷமத்தனமான காரியங்களை சில பத்திரிகைகள் செய்வதை நாம் எப்போதும் கண்டிக்க வேண்டும், அவர்கள் இதுபோன்ற செயலில் இறங்கக் கூடாது, ஏனென்றால். சமுதாயத்தினுடைய நலனுக்குத்தான் பத்திரிகைகள் இருக்க வேண்டும் என்பதை உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

அடுத்தாற்போல் சுற்றுலாத் துறைக்கு நான் வருகிறேன், தமிழ்நாடு வளமிக்க கலாச்சாரம் மற்றும் இயற்கையெழில், கலை நுட்பங்கள் கொண்ட நாடு, அந்த கலை நுட்பங்களை காத்திடவும், திருக்கோவில்களின் பெருமை ஆகியவற்றையெல்லாம் உலகத்தாருக்கு எடுத்துச் சொல்லக்கூடிய அளவிற்கு சுற்றுலாத் துறை தமிழகத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது, மேலும் சுற்றுலாத் துறை வருமானம் வரக்கூடிய துறையாக இருக்கிறது, வெளிநாட்டினர் இங்கே வந்து செல்லும்போது நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய துறையாக இந்தியாவிற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கும் அது ஒரு முக்கியமான துறையாக இருக்கிறது, சென்னைக்கு வருகிற பயணிகள் இன்றைக்கு அதிகரித்திருக்கிறார்கள், 1991-இல் இருந்து 1992 வரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 13,19 சதவீதத்தினர் வெளிநாட்டினர் சென்னைக்கு வரக்கூடிய நிகழ்ச்சி அதிகரித்துள்ளது என்று சொல்கிறார்கள், எப்படி இந்த அதிகரிப்பு என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், இன்றைக்கு இலங்கையை எடுத்துக் கொண்டாலும் சரி, காஷ்மீரத்தை எடுத்துக்கொண்டாலும் சரி வெளிநாட்டினர் அங்கே செல்வதற்கு பயப்படுகிறார்கள், அங்கே அச்சுறுத்தல்காரர்கள். தீவிரவாதிகள் செயலில் இருப்பதால் அங்கே வெளிநாட்டினர் வருவதற்கு பயப்படுகிறார்கள், இன்றைக்கு தமிழகத்திலே தீவிரவாதிகள் அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பதால். இன்றைக்கு அமைதி பூங்காவாக திகழ்வதால் வெளிநாட்டினர் அச்சப்படாமல் தமிழகத்திற்கு வரக்கூடிய சூழ்நிலையில்தான் இன்றைக்கு இந்த 13 சதவீதம் உயர்ந்திருக்கிறது ; இன்னும் உயரும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை,

செய்தி துறையைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றை சொல்லாமல் விட்டுவிட்டேன், அதாவது செய்தித் துறையிலே பணியாற்றுகிறவர்களைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழக காலத்திலே சீனியர்கள் எல்லாம் ஓவர்லுக் பண்ணப்பட்டு ஜூனியராக கீழேஉள்ளவர்களுக்கெல்லாம் புரொமோஷன் கொடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது, அந்தச் செய்தி உண்மையானால் அது போன்று நிகழ்வை நீங்கள் தவிர்க்க வேண்டும், அது போன்ற சீனியர்களுக்கு நல்ல மதிப்பை கொடுக்க வேண்டும் என்று உங்கள் மத்தியிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,



1992 மார்ச் 25] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில் வெளிநாட்டினர் சுற்றுலாவிற்காக இங்கே வரும்போது அவர்களுக்கு சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது, சுற்றுலாத் துறை சில இடங்களில் அந்த வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும் கூட, வெளிநாட்டினருக்கு ஏற்றாற்போல் அவர்களுக்குத் தேவையான வசதிகள் இன்னும் காணாமல் இருக்கின்றன. அவைகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட வேண்டும்,

முற்பகல் 11-40

குற்றாலத்தை எடுத்துக்கொண்டோம் என்றால் இன்றைக்கு அது ஒரு சிறந்த முக்கியமான சுற்றுலா மையமாக இருக்கின்றது. அந்த நல்ல மையமானது பல்வேறு அருவிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது, அங்கே தேன் ஒழுகக்கூடிய தேனருவியும் அது போல இன்னும் பல்வேறு அருவிகளைத் தன்னகத்தே கொண்டு சிறப்பான ஒரு சுற்றுலா மையமாக அது திகழ்கின்றது. ஆனால் இப்போது அது கவனிப்பாரற்றுக் கிடப்பதுபோல் இருக்கிறது, ' காமன்மேன்ஸ் ஊட்டி ' என்று சொல்லக்கூடிய அளவிலே மிகச் சிறப்பான அந்தப் பகுதியை நல்ல டவுன்ஷிப் ஆக ஆக்கி, அங்கே சிறப்பான பல கட்டிடங்களைக் கட்டி, அங்கே வருகின்றவர்களுக்கு தங்குவதற்கு வசதியும், கழிப்பிட வசதியும், பூங்கா வசதியும் மேலும் இதுபோன்ற வசதிகளையும் செய்து கொடுத்தால்தான் அந்த இடம் மிக அருமையானதாக இருக்கும். அப்படிச் செய்தால் அங்கே பல்வேறு வெளிநாட்டினரும் வந்து போவதற்கு வசதியாக இருக்கும், கடந்த 10 ஆண்டுகளாக அந்த டவுன்ஷிப்பினுடைய கோரிக்கைகள் சொல்லப்பட்டும் கூட அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று உங்கள் மத்தியிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தென்காசியிலே இன்றைக்கு ஒரு கோபுரம், அன்பிற்குரிய சிவந்தி ஆதித்தன் அவர்கள் தலைமையிலே மிக அருமையாகக் கட்டப்பட்டதினாலே அந்நகரம் அழகு மிக்கதாக விளங்குகிறது, அப்படி ஒரு அருமையான கோபுரத்தை அங்கே கட்டியதன் மூலம் இன்றைக்கு அங்கே வெளிநாட்டினரும், வெளி மாநிலத்தவரும் வந்து பார்க்கக்கூடிய அளவிலே வருமானம் பெருகக்கூடிய அளவிலே அது அமைக்கப்பட்டு இருக்கிறது,

இன்னும் சொல்லப்போனால், வேடந்தாங்கல், மூன்றடைப்பு போன்ற பகுதிகளில் எல்லாம் இன்றைக்கு பறவைகள் வெளிநாட்டிலிருந்து வந்து தங்குகின்றன. அப்படிப் பறவைகள் வந்து தங்கக்கூடிய இடங்களுக்கு அந்தப் பறவைகளைப் பார்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அப்படி வந்து

செல்லும்போது, அந்த இடங்களிலே அவர்களுக்கு பல வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அங்கே ஹோட்டல் வசதி இல்லை, அங்கே தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றது, இவைகளை எல்லாம் செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பறவைகள் வருகின்ற சமயத்தில் அந்த இடங்களிலே குளங்களிலே தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். அங்கே தண்ணீர் இல்லாமல் இருந்தால் அந்தப் பறவைகள் வேறு எங்காவது சென்றுவிடும். எனவே, அவைகளை எல்லாம் சீர்திருத்தம் செய்து அதைச் சுற்றுலா மையமாக ஆக்கி, வேடந்தாங்கல், மூன்றடைப்பு போன்ற பகுதிகளில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் உங்கள் மத்தியிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடி,' என்று நம்முடைய தமிழ்க்குடியை நாம் சொல்கின்றோம்.

' யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்,

'பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!'

என்று சொன்னார்கள். தமிழைக் காக்க, தமிழினுடைய தொன்மையைக் காக்க, சங்ககால இலக்கிய நூல்களைக் காக்க, அறிஞர்களின் புலமையை வளப்படுத்தி இந்தத் துறை செவ்வனே செயலாற்றி வந்தாலும் கூட, இன்னும் பல்வேறு செயல்களை ஆற்றி, தமிழ் மொழியை வளர்ப்பதற்கு 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும், என்ற பாரதியார் கருத்திற்கேற்ப நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு அறிக்கையை வெளியிட்டு இருந்தார்கள். அதில் சொல்லும்போது, கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து, வெளியிட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். கம்ப இராமாயணத்திலே இன்னும் சிறிது, அதாவது சுந்தர காண்டம் அல்லது ஏதோ ஒரு காண்டம் மட்டும் ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க வேண்டி இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அது சீக்கிரம் வெளியிடப்படும் என்றெல்லாம் சொல்லி இருப்பது மிகவும் ஒரு அருமையான செய்தியாகும், அதேசமயத்தில் இன்னும் பல்வேறு மொழிகளையும் பல்வேறு மொழி நூல்களையும் நம்முடைய மொழியிலே மொழிபெயர்க்க வேண்டும், அதாவது இதற்கு முன்னால் இங்கே ஆட்சி புரிந்த



போது கல்வி அமைச்சராக இருந்த அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களுடைய காலத்தில் கலைக்களஞ்சியம் 'என்சைக்ளோபேடியா' என்று தமிழிலே போடப்பட்டது. ஆனால் அந்த 'என்சைக்ளோபேடியா' இன்று 'ரீ-பிரின்ட்' செய்யப்படாமல் இருக்கின்றது. ஒருசில இடங்களில் மட்டும் அது இருக்கிறது. பல்வேறு நூலகங்களில் அது இடம் பெறாமல் அது அழிந்து போகுமோ என்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே அது அழிந்து போகாமல் அந்த கலைக் களஞ்சியத்தை. தமிழுடைய கலைக் களஞ்சியத்தை நீங்கள் ரீ-பிரின்ட் பண்ணி ஒவ்வொரு நூலகத்திலும் அது வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,

அதுமட்டுமல்லாமல், சிறந்த நூல்களுக்காக பரிசுகள் எல்லாம் வழங்குகிறீர்கள். அப்படிப்பட்ட பரிசுகளை வழங்கும் போது சற்றுத் தொகை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்கள் மத்தியிலே கேட்டுக்கொள்கிறேன். திருக்குறள் ஆராய்ச்சி நூலுக்காக திருவள்ளுவர் விருதை மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு இன்றைக்குக் கொடுத்து இருப்பது மிகச் சிறப்பானதாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இசை மன்றம். நாடகத் துறையானது இன்றைக்கு நலிவுற்றுக் காணப்படுகிறது. ஒரு காலத்தில் தமிழகத்தில் நாடகத் துறை, இயல் இசை நாடகத்தில் நாடகத் தமிழ் மக்களால் மிகச் சிறப்பாக போற்றப்பட்டது. நாடகக் கலைஞர்கள் இன்றைக்குப்புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். டி.வி. போன்ற நிகழ்ச்சிகளினாலும் சினிமா டி,வி, நிகழ்ச்சிகளினாலும் இன்றைக்கு நாடகக் கலைஞர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவொளி இயக்கம். மது பற்றிய தீமை, பெண்ணின் பெருமை போன்ற சமூகச் சீர்திருத்த நாடகங்களை அரசே உருவாக்கி அதில் அந்த நாடகக் கலைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11—45

அதுமட்டுமல்ல, இன்றைக்கு உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்று ஒன்று இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே உலகத்தமிழ் மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்தி காட்டியிருந்தார் அடுத்து இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது, ஆனால் இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமானது இப்போது கவனிப்பாரற்ற நிலையில்

இருக்கிறது. அங்கே பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தமிழ் மொழி பற்றியும், தமிழ் கல்வெட்டுகள் பற்றியும் (மணி யடிக்கப்பெற்றது) பிற மொழி ஒப்பிலக்கணங்களைப் பற்றியும் இங்கே ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும் கூட இந்தத் துறையில் இரண்டு ஆண்டுக்காலமாக இயக்குநர் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு இயக்குநர் போட வேண்டும். அந்த இயக்குநர் போடப்பட்டு அந்தத் துறையினை சீர்திருத்தம் செய்ய வேண்டும். இன்றைக்குக் கூட சிலர் சொல் கிறார்கள். அதை தமிழ்ப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டு மென்று கூட கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழ்ப் பல் கலைக்கழகமாக மாற்றுவதற்கு— பெரியவர் ம.பொ.சி. அவர்கள் கூட, நாம் தமிழ் தாத்தா என்று அழைக்கிற டாக்டர் உ.வே. சுவாமிநாத அய்யர் அவர்களுடைய பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தை சென்னையில் நிறுவலாம் என்று சொல்லியிருக்கிறார் கள். இதுபோன்ற கோரிக்கையை நீங்கள் ஏற்று இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை பல்கலைக்கழகமாக மாற்றலாம், 'யுனெஸ்கோ' மூலமாக அதற்கு நிதியுதவி கோரப்பட்டு வந்து கொண்டிருந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிதியுதவியைப் பெறுவதற்கு அந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை பல்கலைக்கழகத்தோடு இணைப்பதற்கோ அல்லது தனிப் பல்கலைக்கழகமாக மாற்றவோ அரசு முன்வரவேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சினிமாவை எடுத்துக்கொண்டால் அங்கே பல் வேறு மோசமான நிலைமைகளை படமாக சித்தரித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள், வன்முறையைத் தூண்டி விடுவதைப் போல திருடுவதைப்போல காட்டுகிறார்கள். அப்படியெல்லாம் படம் பிடித்துக் காட்டும்போது அவை இளைஞர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. அதனால் வன்முறையைத் தூண்டக்கூடிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் அரசு தடை செய்ய வேண்டும் ஆபாச சினிமாக்களுக்கு தடை விதிக்கவேண்டும். இதுபோன்ற காட்சிகள் இல்லாமல் இருக்க வேண்டும் என் பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப் போது திருட்டுகள் எல்லாம் அதிகமாகி விட்டன. திருடுவதை சாதாரணமாக சினிமாவைப் பார்த்துவிட்டு செய்வதாகச் சொல்கிறார்கள். இந்த சினிமாவைப் பார்த்தேன். அதைப் பார்த்து தான் திருடினேன் என்றுகூட சிலர் போலீஸ்காரர்களிடம் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு சினிமா அவர்களை பாதித்து இருக்கிறது. எனவே தரமான சினிமாக்களை எடுக்கவேண்டு மென்று சொல்லி அதைப்போல சினிமாக்கலைஞர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு நல்ல உதவியை இந்த அரசு அளிக்க வேண்டுமென்று சொல்லி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் சொல்லிவிட்டீர் கள்.



திரு. எஸ். எஸ். ராமசுப்பு : இந்த ஆட்சியில் இந்த மூன்று துறைகளுக்கும் செவ்வனே காரியங்களைச் செய்து, இந்தத் துறை களை செவ்வனே நடக்கச்செய்து, வெளிநாட்டினர் எல்லாம் இங்கே வந்து செல்கிற ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, திராவிட இயக்கத்தின் பரிணாமத் தலைவியாம் எங்கள் இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய மானியங்களில் பேசுகிற வாய்ப்பு பெற்ற மையை உள்ளபடியே மிகச்சிறந்த பேறாகக் கருதுகிறேன். இன்று வரலாற்றின் மிக முக்கியமான ஒரு நாள் என்பதை விளக்கி இந்த மாமன்றத்தில் இருந்த நாங்கள் எல்லாம் உணர்ச்சி வசப்படுகிற அளவுக்கு இங்கே நம்முடைய பெருமக்களுடைய கருத்து மழைகள் இருந்தன. இதை நானும் நினைத்துப் பார்க் கிற நேரத்தில் தமிழக மக்கள் எல்லாம் கிளர்ந்தெழுந்து ஊர் வலங்களை நடத்தியும், திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் கள் எல்லாம் தமிழகத்தின் கிராமங்களில் செல்லமுடியாத அளவுக்கு தமிழக மக்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கி, விரட் டியடித்ததை நான் இந்த மாமன்றத்திற்கு நினைவு கூரக்கடமைப் பட்டிருக்கிறேன். வன்முறையாளர்கள் வன்முறையால் தாக்கிய பிறகும், ஜனநாயகச் சிந்தனையை கையிலே ஏந்தி. அந்த துச்சா தனனை எதிர்க்க ஒரு பெண்மணியைத் தேர்வு செய்து, அந்த துச்சாதனனைத் தேர்தலிலே தோற்கடித்த பெருமையை இந்த நாட்டிலே இருக்கிற எந்த ஜனநாயகவாதியும் இதுகாறும் பெற்ற தில்லை என்பதை நான் மீண்டும் நினைவுகூரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11—50

இன்றுகூட இதய தெய்வம். தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைத் தாக்கிய அந்தச் சண்டாளர்களை இந்த மன்றத்தில் அழைத்து வரவும், வேண்டுமானால் இழுத்து வரவும், அவர்களைக் கூண்டிலே ஏற்றவும், அவர்களைச் சிறைச் சாலையிலே அடைப்பதற்கும், இந்த நாட்டிலே இந்த மன்றத் திற்கு அதிகாரம் இன்றும் இருக்கிறது என்பதை நான் நினைவு கூர்வேன். ஆனாலும், நம்முடைய, புரட்சித் தலைவி அவர்கள் அதிகாரத்திற்கு வந்து, இதுகாறும் இத்தனை நாட்களுக்குப் பிறகும், ஒரு மனித நேயத்தினுடைய அடிப்படையில் இருக் கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, இதைச் சொல்கிற நேரத்தில், இந்தத் துறையினுடைய சில முக்கியமான காரியங்களை நான் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. கு. லாரன்ஸ்] [1992 மார்ச் 25

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஒழுக்கமான சமுதாயத்தை உண்டு பண்ணுவதில் இவ்வரசு எல்லா வகையிலும் போராடுகிறது என்பதை இந்த நாட்டுமக்கள் இன்றைக்கு அறிந்திருக்கிறார்கள். மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட, அந்த வகையிலேதான் சில கருத்துக்களை எடுத் வைத்தார்கள். அவர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்கள் இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்டு இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளிலே இருக்கின்றன. ஆனால் சில கருத்துக்களைப் பொறுத்த வரையில், இன்றைக்கு இருக்கிற இந்த பத்திரிகைத் துறை 'Fourth wheel of democracy' என்று சொல்லப்படுகிறது. சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகம் மூன்று வீல்களாக இருக்கிற இந்தச் சூழ்நிலையில், பத்திரிகைத் துறைதான் நான்காவது வீலாக இன்று ஜனநாயகத்தில் பேணிப் பாதுகாக்கப்படுகிறது, பத்திரிகைத் துறையாலே ஒதுக்கித் தள்ளப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட சில பத்திரிகைகள், தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சில பத்திரிகைகள், பொதுவாழ்வில் இருக்கின்றவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்குவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவதூறாக, கீழ்த்தரமாக, ஆபாசமாக எழுதுவதன் மூலமாக லாபம் கிடைக்கும் என்ற காரணத்தால், கற்பனைகளையே, அவர்கள் எழுதி வருவதையும் இன்றைக்கு இந்த நாடு கண்டுகொண்டு இருக்கிறது. அரசின் கொள்கைகளை அவர்கள் விமர்சிக்கட்டும், தவறுகளை விமர்சிக்கட்டும், அல்லது எதிர்க்கட்சிகளைச் சார்ந்தே அவர்கள் எழுதட்டும், எதிர்க்கட்சிகளின் உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்தட்டும், மக்களுடைய எண்ணங்களை அவர்கள் வெளிப்படுத்தட்டும், அரசுக்குச் சொல்லவேண்டிய செய்திகளை பிரதிபலிக்கட்டும், இன்வெஸ்டிகேட்டிவ் ஆர்ட்டிகல்ஸ் எழுதட்டும், மோசடித்தனங்களும், ஸ்காண்டல்களும் ஒரு அரசில் இருக்குமானால், அதையும் எழுதட்டும். ஆனால் அவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு, 'அப்யூஸ் ஆப் பிரிண்டிங் மெசின்' என்று சொல்கிற அளவிலே, ஜனநாயக உரிமை இருக்கிறது என்ற காரணத்தால், அவைகளை கிரிமினல் பர்பசுகளுக்காகப் பயன்படுத்துவதை நான் இன்றைக்கு ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, அந்த ஆபாசப் பத்திரிகைகளை, அந்த ஆபாச எழுத்தாளர்களைத் தண்டிக்கவேண்டும் என்பதல்ல, அவர்கள் மீது அபராதம் விதிக்க வேண்டும் என்பதல்ல, அவர்களை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்லவேண்டும் என்பதல்ல, அவர்களை அவமானப்படுத்தவேண்டும், அச்சுறுத்த வேண்டும் என்பதல்ல, அவர்களுடைய கீழ்த்தரமான இந்த நடவடிக்கைகளை நாம் தடுத்தாகவேண்டும் என்பதை இந்த மன்றத்தில் மிகத் தெளிவாக எடுத்து வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்,



1992 மார்ச் 25] [திரு. கு. லாரன்ஸ்]

இன்னும் சொல்லப்போனால், மொட்டைக் கடிதம் எழுதுவதைப் போன்று, புனைப் பெயரில் எழுதியவன், நான்தான் எழுதினேன் என்று சொல்லக்கூடிய அளவிற்குக் கூட இல்லாத அளவுக்கு எழுதுவதை நாம் தடுத்தாகவேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிற நேரத்தில், பாண்டவர்களுடைய ஆயுதம்போன்று இந்த ஆட்சி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன்.

இன்னொருபுறம் நம்முடைய நண்பர்கள் சொன்னதைப் போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, சென்னை மாநகரத்தினுடைய பல்வேறு விளம்பரப் பலகைகள் ஒரு சிலருடைய ஆதிக்கத்திலே இருக்கின்றன. பல்வேறு நீதிமன்றத் தடை உத்தரவுகளை வாங்கிக் கொண்டு, திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய அமைச்சராக இருந்த ஆற்காடு, என்ற புனைப்பெயரைக் கொண்ட ஒரு மனிதர் மாதந்தோறும் கொள்ளை லாபத்தை, சுமார் 20 லட்சம் ரூபாயை, தனியாக இருந்துகொண்டு இந்த விளம்பரப் பலகைகளிலே சில விளம்பரங்களைச் செய்வதன் மூலமாக பெற்று வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதைததடுத்து நிறுத்தி அரசே அந்தப் பணியை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாமல்லபுரத்திலே பொங்கல் விழாவில் சில வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்குவதற்காக இரண்டு கல்வெட்டுக்களைத் திறந்துவைத்தார்கள். அந்தப் பகுதியிலே இருந்த அந்த அதிகாரி, அந்தக்க ல்வெட்டுக்களை, சரியாகப் பாதுகாக்காததோடு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினர், பேரணி என்று சொல்லி சென்னைக்கு வந்து திரும்பிச் செல்கிற காலகட்டத்தில் அந்தக் கல்வெட்டுக்களை எல்லாம் உடைத்து சின்னாபின்னமாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள மீது நடவடிக்கை எடுப்பதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். கல்வெட்டுகளை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் உடைத்து விட்டார்கள். ஆகவே நீங்கள அரசினுடைய நல்வாழ்வுத் திட்டங்களை செய்தித் துறையின் மூலமாக வெளியிடுகின்ற நேரத்தில் அந்தச் செய்திப் படங்களை இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற எல்லா நகரங்களிலும் எல்லா கிராமங்களிலும அதை வெளியிடலாமா என்று இந்த அரசு பரிசீலனை செய்யவேண்டும். அவர்கள் மேற்பார்வை

யிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய கரங்களிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அது பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபிசருக்கே அதிகாரப்படுத்துவதாக இருக்குமேயானால் இன்னும் அதிகமாக அதைச் செயல்படுத்த முடியும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது.

முற்பகல் 11-55

அதைப்போன்றுதான் பஞ்சாயத்து யூனியன்களில் வி.சி.ஆர் வாங்கி வைத்தால்கூட கிராமங்களிலே டி.வி.க்கள் மூலமாக இந்தச் செய்திப் படங்களை காட்டுவதற்குரிய வசதிகள் இல்லாமல் இருப்பதாகத் தெரிகிறது. எனவே கிராமங்கள் அனைத்திலும் டி.வி.க்கள் மூலமாக அரசினுடைய செய்திகள், நல்வாழ்வுத் திட்டங்கள் நாட்டு மக்களுக்கு தெரிவிக்கப்படுகின்ற அளவு அந்தக்கருத்துக்கள் கிராமங்களிலே பரப்பப்பட வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன்.

அதேபோன்று செய்திகளைக் காட்டுகின்ற வீடியோ வேன் கன்னியாகுமரி, திருநெல்வேலி, சிதம்பரனார் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு ஒரே ஒரு வேன் தான் இருக்கிறது. எனவே மாவட்டத்திற்கு ஒரு வேன் இருக்குமேயானால் அது எல்லா கிராமங்களுக்கும் ஒழுங்காகச் சென்று மக்களுக்கு செய்திகளைக் காட்டமுடியும், சொல்லமுடியும் என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு 49 இலட்சம் கிரிமினல் வழக்குகள் பதிவாகி இருக்கிறது. இந்தியாவில் எப்படி விலைவாசி உயர்கிறதோ அப்படியே 4.9 சதவீதம் வழக்குகள் உயர்ந்து வருவதாகத்தான் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சூழ்நிலையில் சென்னை மாநகரம் இந்தியாவிலேயே மிகப் பாதுகாப்பான நகரம். இங்கே வழக்குகள் குறைவாக இருக்கிறது என்று சொல்கின்ற நேரத்தில் தமிழகத்தினுடைய தலைநகரமாக இருக்கின்ற சென்னை மாநகரம் இன்றைக்கு சர்வதேச அளவில் மிகச் சிறந்த நகரமாக போற்றிப் புகழப்படுகிறது என்றே நான் இங்கே கூறுவேன். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வழக்குகள் குறைந்திருக்கிறது. எனவேதான் நம்முடைய நண்பர்கள் சொன்னதைப் போல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல் இந்தியாவிலே காஷ்மீரும், அஸ்ஸாமும் மற்றும் பல்வேறு சுற்றுலாப் பயணிகள் செல்கின்ற இடங்களிலும் தீவிரவாத இயக்கங்களுடைய கரங்களிலே இன்று இருக்கின்ற சூழ்நிலையில் தமிழகம் இன்றைக்கு சர்வதேச சுற்றுலாப் பயணிகள் வருகிற ஒரு நல்ல இடமாக இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவு கூர்வேன்.





இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இந்த மாநிலத்தினுடைய 42 மையங்களில் புதிய சுற்றுலா மையங்களை ஆரம்பிக்கிற சூழ்நிலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே இதைச் சொல்கின்ற நேரத்தில் இந்தப் பகுதியிலே நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த தாய்மார்களும் சகோதரிகளும் செல்ல வேண்டுமானால் ஒரு நல்ல பாதுகாப்பான சூழ்நிலை இருக்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கிற ஆண் வர்க்கத்தினுடைய பிடிகளிலிருந்து தமிழகம் விடுபட வேண்டுமேயானால் காவல் துறையில் பெண் போலீஸ்களை அதிகமாக ஏற்பாடு செய்து. டிராபிக் டியூட்டிகள் மற்றும் இந்தத் துறையினர் செல்கின்ற பகுதிகளிலே அந்த வழிகாட்டிகள் போன்று இந்த டிராபிக் பெண் போலீஸ்களைப் பயன்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது சுற்றுலாத் துறைக்கு சிறப்பான ஒரு மாவட்டம் என்றே நான் நினைவுகூரவேண்டும். கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் பிறந்து, வாழ்ந்த வீடு ஒன்று நாகர்சோவிலிலே இருக்கிறது. அது மிகப்பெரிய, சிறந்த தமிழகத்தினுடைய திராவிட இயக்கத்தினுடைய மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவரான கலைவாணருடைய வீட்டை நினைவகமாக மாற்றித்தர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு வேண்டுகிறேன்.

கன்னியாகுமரியை மத்திய அரசும் நம்முடைய அரசும் ஒரு இண்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டராக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் சுற்றி வட்டக்கோட்டை, சுசீந்திரம் டெம்பிள் போன்ற இடங்கள் சிறப்பான அமைப்புகள் உடையதாக இருக்கின்றன. சின்னமுட்டத்துக் கடலில் உல்லாசப் படகுகளை விடமுடியும். அதைப்போன்று கன்னியாகுமரியில் மீன் காட்சியகம் ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று நான் வேண்டுகிறேன். கன்னியாகுமரி சவுத் வெஸ்ட் பகுதியில் அரபிக் கடலில் பெட்ஸ்பேங்க்என்று சொல்லுகிற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே இன்றைக்கு யாரும் செல்வது இல்லை. தமிழகத்திற்கு உரிய ஒரு சிறிய தீவு. அங்கே சர்வதேச அளவில் மிகச் சிறந்த மீன் இனங்கள் அதிகமாக இருப்பதாகச்சொல்லுகிறார்கள். நம்முடைய மீனவர்களும் அங்கே செல்வது இல்லை. சர்வதேச சுற்றுலாவின் கீழ் மீன்பிடிக்கிற ஒரு மையமாக அதை மாற்றித் தர வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன். பேச்சிப்பாறை அணை, திற்பரப்பு அணை போன்ற இடங்களில் எல்லாம் நல்ல பூந்தோட்டங்களை அமைத்துத் தரலாம். அதேபோன்று சிவறால் என்ற ஒரு மலைக்கோயில் ஜைனமதத்தைச் சார்ந்தவர்கள் 2 ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பகுதியிலே வந்து ஒரு மலைக்கோயிலை கட்டியிருக்கிறார்கள். அதையும் சுற்றுலா மையத்திற்கு உரிய ஒரு அருமையான இடமாக நான் கருதுகிறேன்.

நண்பகல் 12-00

அது போன்றுதான் கோதையாறு மேற்குத் தொடர்ச்சி மலையும். முத்துக்குளிவயல் என்று சொல்லுகிற மன்னர் குல ஆட்சியிலே இருந்த ஒரு ஹில் ரிசார்ட் இருக்கிறது. அதையும் டூரிஸ்ட் சென்டராக மாற்றித் தர வேண்டும். அது போன்று திருவட்டாறு என்னும் இடத்தில் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கட்டி அமைக்கப்பட்ட ஆதிகேசவப் பெருமாள் கோயில் என்னும் புகழ் வாய்ந்த கோயில் இருக்கிறது. அந்தப் பகுதியையும் டூரிஸ்ட் மையத்திற்கு உரிய பகுதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இது போன்று பத்மநாபபுரம் நகரத்தைப் பொறுத்த வரையில் அது நீண்ட நெடிய காலமாகவே தென் திருவிதாங்கூர் சமஸ்தானத்தினுடைய தலைநகரமாக இருந்தது. 300 ஆண்டுகளுக்கு முன்னர்தான் பத்மநாபபுரம் நகரத்தில் அங்கேயிருந்த மார்த்தாண்டவர்மா மகாராஜா திருவனந்தபுரத்தை தலைநகரமாகக் கொண்டு அங்கே ஆட்சி செலுத்தினார். அதுகாறும் இந்தப் பகுதிதான் தலைநகரமாக இருந்தது. இன்றும் ஒரு சிறப்பான அரண்மனையும் ஒரு சிறப்பான கோட்டையும் அங்கே இருக்கிறது. அந்தப் பகுதியை பாரம்பரியப் பெருமை பொருந்திய நகரமாக பத்மநாபபுரத்தை தமிழக அரசு தேர்வு செய்ய வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு வேண்டுகிறேன்.

அதுபோன்று இந்தப் பகுதியில் மிக முக்கியமான கோயிலாக இருக்கிற குமார கோயிலையும் தொன்று தொட்டு முருகப் பெருமானை வணங்கி வருகிற அந்தக் குமார கோயிலையும் மண்டைக்காட்டையும் இணைக்கிற அளவில் பஸ் வசதிகள் செய்து தர வேண்டும் என்று நான் கேட்பதோடு, பத்மநாபபுரம் பகுதியிலேயிருந்து வேளாங்கன்னி பகுதிவரை பஸ் போக்குவரத்து வசதியையும் செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தியாகிகளைப் பொறுத்தவரையில் திருவிதாங்கூர் பகுதியை தமிழகத்தோடு இணைப்பதற்காக போராடிய தியாகிகள் பட்டியலில் இன்னும் பலர் விடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எனவே அந்தத் தியாகிகளையும் அடையாளம் கண்டு கொண்டு அவர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டும் என்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுவதோடு சில்ட்ரன்ஸ் பார்க் ஒன்றை என்னுடைய தொகுதியிலே பத்மநாபபுரம் தொகுதியிலே அமைத்துத் தர



வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குழந்தைகளுக்குத் தேவையான அறிவு ஆற்றல் பொருந்திய ஒரு அமைப்பாக எந்தவிதமாக பார்க்குகளும் இந்தப் பகுதியிலே இல்லாமல் இருக்கிற காரணத்தால்—பத்மநாபபுரம் பகுதி தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற பகுதி— ஆயிரக்கணக்கான மக்களைத் தாங்கியிருக்கிற அந்தப் பகுதியில், ஆயிரக்கணக்கான மக்கள் கேரளத்திலே இருந்தும் பல்வேறு பகுதியிலேயிருந்தும் வருகிற அந்தப் பகுதியில் ஒரு சில்ட்ரன்ஸ் பார்க் அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்பதோடு, குமரி மாவட்டத்தை சிறப்பு சுற்றுலா பகுதியாக அமைத்துத் தரவேண்டும் என்று மெத்தப் பணிவோடு வேண்டி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. சி. இராமசுவாமி.

*<u>திரு. சி. இராமசுவாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல்தெய்வம், எங்கள் தங்க தலைவி, ஒப்பில்லா ஒரே தலைவி, உத்தமத் தாய், உன்னதத் தாய், சத்தியத்தாய், புனிதத் தாய், தெய்வத்தாய், அன்னை சந்தியா ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வி, தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களில் வீழ்ந்து வணங்கி இந்த மானியக் கோரிக்கையான செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, தமிழ் வளர்ச்சிப் பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச நான் விழைகிறேன்.

இன்று சட்டமன்ற வரலாற்றிலேயே ஒரு கருப்பு நாள் என்று இங்கே குறிப்பிட்ட கருத்துக்களை கேட்கும்போது, அன்று அந்த மார்ச் 25 ஆம் நாள் சூழ்ச்சிக்காரர்கள் சதிகாரர்கள் எங்களது தெய்வத்தை, கண்கண்ட தெய்வத்தை இம்சை செய்த போது எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அன்று இல்லையே என்று ஏக்கம் தான் தோன்றுகிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் வீரனாக இறப்பதே ஒரு முறைதான், அந்தச் சண்டாளர்கள்....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஆர். சிங்காரம்.

<u>திரு. ஆர். சிங்காரம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்று அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகத்தில் 29 பேர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தில் 26 பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து அன்று அம்மையாரை காப்பாற்றபட்ட பாடு பெரும்பாடாக இருந்தது என்பதை நினைவு கூர்கிறேன். அதேநேரத்தில் அன்று அத்தனை பேரும் உயிருக்குத் துணிந்து

தியாகம் செய்து அந்த அம்மையாரை காப்பாற்றித்தான் வெளியிலே கொண்டு போய்ச்சேர்த்தோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

திரு. சி. இராமசுவாமி : அவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். நான் சொல்வதெல்லாம் என்னைப் போன்ற ஒருவன் அங்கு இருந்திருந்தால் அந்தச்சண்டாளர்களின் ஒரு அடி கூட எங்கள் இதய தெய்வத்தின் மீது விழாமல் என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றியிருப்பேன் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்கள் இதய தெய்வத்தை நீங்கள் காப்பாற்றவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் சும்மா வேடிக்கை பார்த்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. என் கருத்தைக் கூறுகிறேன். என் உணர்வைக் கூறுகிறேன். என் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சியைக் கூறுகிறேன். அந்தச் சண்டாளர்களுக்கு மக்கள் நல்ல பாடம் கற்பித்ததை இன்று மனமார பாராட்டுகிறேன். ஒரு கிரிமினல் குற்றவாளி இன்று நாட்டிலே ஆயுதக் கலாச்சாரத்தை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு துணையாக இருந்த அந்தத் துரோகிகளை இன்று வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தவர் இந்த உத்தமத் தலைவி. அவர்கள் செய்த இம்சைக்குத்தான் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் அரியலூரிலே பேசும்போது அன்று ஒன்றைச் சொன்னார்கள். பிரபாகரன் அமிர்தலிங்கத்தைக் கொன்றது it is a political murder என்றார். உமா மகேஸ்வரனைக் கொன்றது It is a political murder என்றார். அடுத்தபடியாக இராஜீவ் காந்தியை கொலை செய்தது it is a political murder என்றார். அது ஒன்றும் தவறு இல்லை என்று பேசியிருக்கிறார் அரியலூரிலே. மறுநாளே அந்தச் செய்தி தினசரி இதழ்களில் வந்திருக்கிறது. நான் மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன். பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மீது Constitution of India—Article 191 and 192 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்று அவ்வாறு பேசிவிட்டு சட்டமன்றத்திலே பண்ருட்டி இராமச்சந்திரன் கூறும்போது இராஜீவ் காந்தி இறந்த இரண்டு நாள், நான் தூங்கவில்லை, சாப்பிடவில்லை என்று இரட்டைவேடம் போடுகின்றார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவி ஏற்கும்போது அவர் இந்த நாட்டிற்காக சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்று தான் பதவி ஏற்றுள்ளார். அப்படிப்பட்டவர் வெளியிலே பேசும்போது—ஜனநாயக நாட்டிலே எதை வேண்டுமானாலும் பேச வேண்டும் என்பது இல்லை. சட்ட உரிமைப்படி எப்படிப் பேசவேண்டும் என்று நியதி இருக்கிறது. அதை மீறி அவர் அரியலூரிலே பேசும்போது இராஜீவ் காந்தியைக் கொலை



செய்ததைநான் வரவேற்கிறேன், பிரபாகரன் செய்தது தவறு இல்லை, it is a political murder என்று பேசியுள்ளார். அது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. எனவே அப்படிப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மீது சட்டத்தின் மூலமாகவும் The Constitntion of India Article 191 and 192-ன் பிரகாரம் disqualification of membership என்பதன் மூலம் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று புரட்சித் தலைவி அவர்கள் இந்திய சரித்திரத்திலே ஒரு வரலாற்றைப் படைத்துள்ளார்கள். தமிழ்நாட்டிலே மனு நீதி சோழன் என்ற ஒருவன் ஆண்டு வந்தான். கன்றை இழந்த பசு மனுநீதிச் சோழனிடம் சென்று எனக்கு நீதி வேண்டும் என்று கேட்கச் சென்றது. அந்த மனுநீதிச்சோழன் என்ன விவரம் என்று அதனைக் கேட்டபோது, உங்கள் மகன் என் கன்றை தேரை ஓட்டி கொன்றுவிட்டான் என்று சொன்னது அந்த பசு. அந்த மனுநீதிச்சோழன் தன் ஒரே மகனைத் தேர்க் காலில் கொன்று நீதியை நிலைநாட்டினான் அப்படித்தான் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நீதியின் சிகரமாக. நாட்டினுடைய ஒப்பற்றத் தலைவியாக விளங்குகின்றார்கள். எனவே, இந்த கருப்பு நாளில் நான் முதலமைச்சரின் மானியக் கோரிக்கையில் பேசும்போது சற்று உணர்ச்சி வசப்படுகிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசாட்சியில் மிகவும் முக்கியமான அங்கம் வகிக்கிறது. மக்களாட்சியின் அடிப்படையையும், சமூக இலட்சியங்களையும் வற்புறுத்துவதே அதன் தலையாய பணியாகும், தொலை தொடர்பு சாதனங்களாகிய ஒலி, ஒளி சாதனங்கள் மூலம் அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் மக்கள் அறியுமாறு செய்கிறது. அறிவுச் சுடர் சட்ட வல்லுநர், டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாக்காலத்தை 14—4—1992 வரை நீட்டித்து. அவ்விழாக் காலத்தில் பல்வேறு நலத் திட்டப் பணிகளை செயல்படுத்தியிருப்பதை பாராட்டுகிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலை நிறுவ ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து நடவடிக்கை எடுப்பதையும் பாராட்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் செ. கு. தமிழரசன் கடந்த சட்டமன்றத்திலே மறைந்த மேயர் சிவராஜுக்கு சிலை வைக்க வேண்டுமென்று கேட்டார். எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மேயர் சிவராஜுக்கு சிலை மட்டும் வைக்கவில்லை, அவர் வசித்த இராயப்பேட்டை, ஆண்டித் தெருவுக்கு மேயர் சிவராஜ் வீதி என்று பெயர் சூட்டியுள்ளார்.

திரு. குமரி அனந்தன் அவர்கள் கடந்த சட்டமன்றத்திலே பேசும்போது விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் நினைவாக சென்னையிலே சிலை வைக்க வேண்டுமென்று கூறினார். எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கருத்தினை ஏற்று விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமனுக்கு சிலை வைக்க ஏற்பாடு செய்ததைப் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12–10

மேலும் இந்த மாமன்றத்தில் ஒரு கோரிக்கை விடுக்கிறேன். சட்டமேதை, சட்ட வல்லுநர் கிரிமினல் வழக்கறிஞர் எத்திராஜ் அவர்களுக்கு சென்னை அம்பேத்கர் சட்டக்கல்லூரி முன்னாலோ அல்லது உயர்நீதிமன்றத்திற்கு முன்னாலோ அவருடைய திருவுருவச் சிலையை நிறுவ வேண்டுமென்று வழக்கறிஞர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு இதுவரை 61 பொருட்காட்சிகளை நடத்தி அதன் மூலம் 3½ கோடி ரூபாயை அரசுக்கு ஈட்டித் தந்து மக்களுடைய வரவேற்பைப் பெற்றதை நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பில் உள்ள இந்த செய்தித் துறை நல்ல பல ஆக்கப் பணிகளைச் செய்து வருகிறது. 52 லட்சம் ரூபாய்ச் செலவில் காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் கட்டி திறக்கத் தயார் நிலையில் உள்ளதையும் ; தந்தை பெரியார் அவர்களுக்கு கேரள மாநிலத்தில் வைக்கத்தில், வைக்கம் சத்தியாகிரகத்தை நினைவுகூரும் வகையில். ரூ. 15 லட்சம் செலவில் நினைவகம் எழுப்ப அரசு முடிவு செய்து இருப்பதையும் ; மருது சகோதரர்களுக்கு 5.46 லட்சம் ரூபாய் செலவில் திருப்பத்தூரில் நினைவு வளாகம் ஒன்றை எழுப்ப அரசு முடிவு செய்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு, தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல பொலிவுடன் தமிழரசு என்ற பத்திரிகையை தமிழில் மாதம் இருமுறையும், ஆங்கிலத்தில் மாதம் ஒரு முறையும் வெளியிட்டு நல்ல பல செய்திகள் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன்.

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம். இந்த திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் இந்தியாவிலேயே சிறந்த பயிற்சி நிலையமாக இன்றைக்கு இருக்கிறது. தற்போது திரைப்படக் கலையில் பல்வேறு பிரிவுகளிலும் 162 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதை நான் வரவேற்கிறேன், இந்தியாவிலேயே இந்தப் பயிற்சி நிலையத்தில் மட்டும் தான் படச்சுருள் செயற் பாங்குத்துறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது, அதை நான் பாராட்டுகிறேன். (மணி யடிக்கப் பெற்றது)



மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பில் பேச எனக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கடலூரைத்தலைநகரமாகக் கொண்ட மாவட்டமாக தென்னாற்காடு மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டமாக வள்ளலார் மாவட்டம் என்றும் பெயர் வைத்து இருக்கிறார்கள். நான் இன்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வடலூர் என்ற ஊரில் தான் வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்கள் பிறந்தார்கள். அந்த ஊர் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. எனவே. தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு எங்கள் இதய தெய்வம் அவர்களை ஈன்று எடுத்த அன்னை, உத்தமத் தாய், அன்னை சந்தியா அவர்களுடைய திருநாமத்தைச் சூட்ட வேண்டுமென்றும்பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் திரைப்படங்கள் இன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இளைஞர்களும், மக்களும் பார்க்க முடியாத அளவுக்கு அருவறுக்கத்தக்க முறையில் படங்களை எடுக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மக்களுக்கும், மாணவர்களுக்கும் ஆபாசம் இல்லாமல் நல்லமுறையில் எடுக்க அவர்களை அறிவுறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 368 செய்திப் படங்களை உருவாக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள கல்வராயன் மலையில் ஒரு சுற்றுலா மையத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கல்வராயன்மலையில் மூங்கிலும், அருகிலே கரும்புச்சக்கை(bagasse) கிடைக்கின்ற காரணத்தால் கல்வராயன்மலைத் தொகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரத்தில் உள்ள பொதுமருத்துவமனையை நல்ல முறையில் நவீனமுறையில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. செ. கு. தமிழரசன்,

திரு. <u>செ. கு. தமிழரசன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள செய்தி

விளம்பரத் துறை, திரைப்படத் துறை, சுற்றுலாத் துறை ஆகிய நிதிக் கோரிக்கைகளின் பேரில் இந்திய குடியரசுக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை வழங்க வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உலக அளவிலே மிகப் பெரிய மக்கள் சாதனமாக விளங்கிக் கொண்டிருப்பது திரைப்படத்துறை. அந்தத் திரைப்படத் துறையிலே உலகிலே வேறு எவருமே சாதித்திட முடியாத சாதனைகளை, மாபெரும் வெற்றியை படைத்துக் காட்டியவர் முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள், அந்த வெற்றியை இன்றைக்கும் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறவர், கலைத் துறையிலிருந்து இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக நம்மிடையே விளங்கிக் கொண்டிருக்கிறவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்தத் துறை அவரிடம் இருக்கிறபோது அது மேலும் மெருகு பெற்று பல சிறப்புகள் பெற்று சாதனைகளை இன்றைக்கு நடத்திக் காட்டிக்கொண்டிருக்கிறது, எனவே நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த நிதிக் கோரிக்கைகளை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–15

எங்களுடைய வணக்கத்திற்குரிய தலைவர் பாபா சாகிப் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நம்முடைய அரசு பல நலத் திட்டங்களின் மூலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் கேட்காமலேயே கட்சி தொடங்கியபோதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகத்திலேயே அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப் படத்தை திறந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகும் இந்த மாமன்றத்திலே அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய படத்தை புரட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்கள். சென்னையிலே, பல கோடி ரூபாய் அளவிலே ஒரு மிகப் பெரிய நீரிழிவு நோய் மருத்துவமனையை அண்ணல் அம்பேத்கர் நீரிழிவு மருத்துவமனை என கீழ்ப்பாக்கத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல கடந்த சட்டமன்றத்திலே, இந்தியக் குடியரசுக் கட்சியின் முதல் தலைவராக விளங்கியவரும், நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவரும். தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடியவருமான, சென்னை மாநகர முன்னாள் தந்தை ராவ் பகதூர் சிவராஜ்



அவர்களுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடவேண்டுமென்று நான் கோரினேன். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக, நம்பிக்கை நட்சத்திரமாக, கலங்கரை விளக்கமாக, ஏன், ரட்சகராக விளங்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், நாங்கள் கோரிக்கை விடுக்காமலேயே சென்னை மாநகரத்திலே, அவருக்கு சிலை வைப்போம் என்று சொல்லி, இன்றைக்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறார்கள். நான் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக அவர்களை இந்த சந்தர்ப்பத்திலே பாராட்டுவதிலே மிக மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுமட்டுமின்றி, சென்னை நகரிலே அண்ணல் அம்பேத்கரின் நூற்றாண்டு குறித்து ஒரு சிலை நிறுவ இருப்பதாக நம்முடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1967-லேயே தமிழக முதல்வராக, பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்தவுடன், ஒரு சில மாத காலத்திலேயே. சென்னையிலே அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலையை நேரு ஸ்டேடியம் என்று அழைக்கப்படுகிற விளையாட்டுத் திடலிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள். வேறு சில திருவுருவச் சிலைகளையும் சென்னையிலே நாங்கள் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே திறந்து வைத்திருக்கின்றோம். எனவே, இனி ஒரு சிலை நிறுவுவதை கைவிட்டு, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பெயரிலே இந்த நூற்றாண்டு விழாவை நினைவுபடுத்துகிற வகையிலே, ஏதேனும் ஒரு நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்தைக் கட்டினால் சிறப்பாக இருக்கும் என்கிற கருத்தினை, யோசனையை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். மத்திய அரசும்கூட இப்படிப்பட்ட நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதற்கு பாதித் தொகையை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக நூற்றாண்டு விழா நினைவுக் கமிட்டியின் சார்பாக எல்லா மாநிலங்களுக்கும் அறிக்கை அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே ஒரு மணிமண்டபத்தைக் கட்டவேண்டுமென்கிற கோரிக்கையை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். அமரர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இங்கே படம் திறந்து இருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகத்திற்கு பெயர் வைத்திருக்கிறார்கள். அமரர் ராஜீவ் காந்திக்கு ஒரு மிகப் பெரிய நினைவகத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். தியாகி செண்பகராமனுக்கு சிலை வைத்திருக்கிறார்கள். சங்கரலிங்கத்திற்கு சிலை வைக்க இருக்கிறார்கள். தந்தை பெரியாருக்கு நினைவகம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதியை மிகச் சிறந்த அளவிலே புதுப்பிக்க இருக்கிறார்கள். இப்படி நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை இந்த அரசு மிக தாராள மனப்பான்மையோடு பாராட்டி, விழா நடத்திக்

[திரு. செ. கு. தமிழரசன்] [1992 மார்ச் 25

கொண்டு இருப்பதை, இந்த நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், இந்த நாட்டின் வரலாற்றிலே அக்கறை உள்ளவர்கள், நல்லெண்ணம் உள்ளவர்கள் நிச்சயமாக பாராட்டியே ஆகவேண்டும்.

நம்முடைய துறையின் சார்பிலே மாவட்ட அளவிலும் சென்னைத் தலைநகரிலும் பொருட்காட்சிகளை அவ்வப்போது நடத்திக் கொண்டு வருகிறோம். இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுவது நல்ல வருவாயைத் தருகின்ற ஒரு செயலாகவும் இருக்கிறது. சென்னையிலே ஒரு நிரந்தரப் பொருட்காட்சியை ஏற்படுத்தினால் என்ன? நிரந்தரப் பொருட்காட்சியை நாம் உருவாக்குவதன் மூலம் பல்வேறு பகுதிகளிலேயிருந்து வருகிறவர்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டின் வளத்தையும், தமிழ்நாட்டின் சிறப்புகளையும், ஏன் தமிழ்நாட்டையே அறிந்து கொள்கிற ஒரு கண்ணாடியாக அப்பொருட்காட்சி விளங்கும். எனவே, ஒரு நிரந்தரப் பொருட்காட்சியை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கவேண்டும் என நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12—20

நம்முடைய திரைப்படப் பயிற்சிக் கல்லூரி ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரிய கல்லூரியாக இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் கவின் கலைகளுக்காக ஒரு புதிய பல்கலைக் கழகத்தையே உருவாக்குவதாக அறிவித்திருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய முயற்சி. இந்தத் திரைப்படப் பயிற்சிக் கல்லூரியிலே கடந்த ஐந்தாண்டுக் காலமாக நிரந்தரமாக ஒரு முதல்வர் இல்லை. நாம் தற்காலிகமாகவே முதல்வர்களை நியமித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு நிரந்தர முதல்வரை இந்தக் கல்லூரிக்கு நியமிக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் நாட்டுப்புறக் கலைகளை ஆய்கிற வகையிலேயும், அதை ஊக்குவிக்கிற வகையிலேயும் ஒரு டிபார்ட்மெண்டை நாட்டுப்புறக் கலைக்கு என ஒரு துறையை உருவாக்கினால் அதுவும் சிறப்பாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்காக ஒரு முழு நீளப் படத்தை தயாரித்தாலும்கூட அது தேவையானதாக இருக்கும், இருபதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலேகூட இன்னமும் ஒரு தாழ்த்தப்பட்டவன் சுடுகாட்டுக்குப் போகாத நிலைமைகூட இன்றைக்கு இருந்துகொண்டிருப்பதை நாம் வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம், எனவே, மது விலக்குக்காக ஒரு முழு நீளத் திரைப்படம் தயாரிக்கப்படுவதைப்போல



1992 மார்ச் 25] [திரு. செ. கு. தமிழரசன்]

தீண்டாமை ஒழிப்பு என்கிற மையக் கருத்தைக் கொண்டு ஒரு முழு நீளப் படம் தயாரித்தால் அது நலமாக இருக்கும் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மத்திய அளவிலே திரைப்பட இளம் கலைஞர்களை ஊக்குவிக்க பைனான்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. கேரளாவிலே கூட இப்படிப்பட்ட ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. நம்முடைய திரைப்படக் கல்லூரியிலே இருந்து ஏராளமான இளம் கலைஞர்களை நாம் ஒவ்வொரு ஆண்டும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம், ஆனால், அவர்கள் சந்தைக்கு வருகிற பொழுது, அவர்களுடைய திறமைகளெல்லாம் மங்கிப் போகின்ற அளவிற்கு நிலைமைகள் வேறுமாதிரி வந்துவிடுகிறது. எனவே, அப்படிப்பட்ட இளம் கலைஞர்களை. திறமையான கலைஞர்களை உருவாக்க தமிழகத்திலேயேயும் ஒரு ஃபிலிம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் தொடங்க வேண்டும் என்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

திரைப்படக் கல்லூரியிலே தேர்வுகள் நடப்பதே ஆங்கிலத்திலேதான் நடக்கின்றன. நம்முடைய மொழியிலே அவர்கள் கலை வளர்க்க நம்முடைய மொழியிலே அவர்கள் இலக்கியம் வளர்க்க, தேர்வுகளை மாத்திரம் ஆங்கிலத்திலே எழுத வேண்டியிருக்கிறது. கேட்டால் அதற்குரிய புத்தகங்கள் தமிழிலே இல்லை. ஆங்கிலத்திலேதான் இருக்கின்றன. எனவே, தேர்வுகளை ஆங்கிலத்திலேயே வைக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழிலே புத்தகங்களை மொழி பெயர்த்து, தமிழிலே தேர்வுகள் நடத்தப்பட வேண்டும் என்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரைப்படக் கல்லூரியிலே ஐந்து துறைத் தலைவர்கள் பதவிகள் இருக்கின்றன என்றால் ஒரு துறைத் தலைவர் பதவி, ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குத் தர வேண்டுமென்று டி. என். பி. எஸ். சி.-யே கூட உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அந்த ஒரு பதவியை மாத்திரம் இன்னமும் நிரப்பாமலேயே காலியாக வைத்திருக்கிறார்கள். அதையும் நிரப்ப வேண்டும் என்று நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியாவிற்கே முன்னுதாரணமாக ஒரு பெரிய திரைப்பட நகரைச் சென்னையிலே உருவாக்குவதற்கு இன்றைக்கு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சியை நான் பாராட்ட விரும்புகிறேன்,

மொழிபெயர்ப்புத் துறை இருக்கிறது. நம்முடைய மொழிபெயர்ப்புத் துறை சில சமயங்களிலே சரியான மொழி பெயர்ப்புகளைச் செய்வதில்லை; நான் ஏதேனும் இங்கே

கிறவர்கள், கரகம் ஆடுகிறவர்கள், கழைக் கூத்து ஆடுகிற வர்கள் இப்படிப்பட்ட தொன்மையானக் கலைகள் இருந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப் பட்ட கலைஞர்களை உருவாக்குகிற விதத்திலே, அவர்களுக் கும் 'கலைமாமணி' பட்டம் வழங்கினால், அது கொஞ்சம் சிறப்பாக இருக்கும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். (மணியடிக்கப் பெற்றது) தீண்டாமை ஒழிப்பிலே, சாதி ஒழிப்பிலே பாடுபடுபவர்களுக்கு, 'கலைமாமணி' பட்டம் வழங்கி, சுதந்திரப் போராட்ட வீரர்கள் எப்படி முக்கியம் பெறுகிறார்களோ. அதேபோல் நாடு சுதந்திரம் அடைந்த தற்குப் பின்னால், மக்கள் விடுதலைக்காக, மக்கள் சமத்துவத் திற்காகப் போராடியவர்களை நாம் கௌரவிக்க வேண்டும். வட்ட அளவிலோ, மாவட்ட அளவிலோ, தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்புக்குப் பாடுபடுவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே. நாம் அவர்களை கௌரவித்து, அவர்களுக்குப் பாராட்டைத் தர வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது).

ஓவியக் கல்லூரி இருக்கிறது. ஓவியக் கல்லூரிகள் இரண்டே ஓவியக் கல்லூரிகள் தான் இருக்கின்றன. ஒன்று, சென்னையிலே, இருக்கிறது. இன்னொன்று, கும்பகோணத் திலே இருக்கிறது. ஆனால், சென்னையிலே இருக்கிற ஓவியக் கல்லூரி மாணவர்களின் வசதிகளை, கும்பகோணத்தில் இருக்கிற மாணவர்கள் பெறமுடியவில்லை. சுற்றுலா போவது, வேண்டிய உபகரணங்களைத் தருவது போன்ற வசதிகளை அந்தக் கல்லூரி மாணவர்கள் பெற முடிவதில்லை. காரணம், முதலில் போட்ட உத்தரவிலே, அந்தக் கல்லூரியினுடைய பெயரையே விட்டுவிட்டிருக்கிறார்கள். எனவே, அதனையும் சேர்த்தால், இந்த வசதி வாய்ப்புக்களை அவர்களும் பெறுவதற்கு வசதி யாக இருக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

சுற்றுலாத் துறையிலே நம்முடைய தமிழகம் முன்னணி யிலே இருக்கிறது; நிறைய பேர் சுற்றுலாப் பயணிகள் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள்; அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம், இன்றைக்கு தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு அமைதிப் பூங்காவாக ஒரு சீரிய தலைமையின்கீழ், நம்மு டைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியின்கீழ் இருந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி நீடிக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் வாழும்வரை தமிழகத்தின் முதலமைச்சராக வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் நீண்ட வாழ்வையும் நிறைந்த வளத்தையும், பெரும் புகழையும் பெற்று பல்லாண்டு வாழ வேண்டுமென எங்கள் கட்சியின் சார்பிலே வாழ்த்தி அமைகிறேன். நன்றி



164971

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

பிற்பகல் 12—30

*திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் நிர்வாகத்தில் செய்தித் துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஓர் அரசு எவ்வளவு அரிய சாதனைகளைச் செய்தாலும், அந்தச் சாதனைகளைப்பற்றி மக்கள் தெரிந்து கொள்ளச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். மத்திய மாநில அரசுகள் நமக்கு என்னென்ன உதவிகள் செய்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளாத மக்கள் இருக்கிறார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் செய்தித் துறையின் பங்கு மகத்தானது என்பதை அறியலாம். சேலம் போன்ற நகரங்களில் ஆண்டுதோறும் பொருட்காட்சியை தனியார் நடத்தி வந்தார்கள். அந்தக் காலக் கட்டங்களில் ஆபாசங்களும், சூதாட்டங்களும் தலைவிரித்து ஆடி, பொருட் காட்சி என்றாலே, மக்களைச் சுரண்டுகிற இடமாக இருந்ததை மாற்றி, பொருட்காட்சி என்றால் மக்கள் பல கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் பொருட்காட்சிகளை அரசாங்கமே நடத்தும் என்ற நல்ல கொள்கை முடிவு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் எடுக்கப்பட்டது. பொருட்காட்சிகளை அரசு நடத்த ஆரம்பித்த பிறகு, பொருட்காட்சிகளுக்கு மக்களிடையே நல்ல மரியாதை ஏற்பட்டுள்ளது. மாநில அரசின் சாதனைகளை விளக்குகின்ற வகையில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவல கங்களில் திரைப்படக் கருவிகள் உள்ளன. கிராமங்களில் சென்று கருத்துப் படங்களையும், சாதனை விளக்கப் படங் களையும் போட்டுக் காண்பிப்பதற்கு ஜீப் வண்டிகள் கொடுக் கப்பட்டு அதற்கென தனியாக நான்கு, ஐந்து ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கென நிறைய செலவழிக்கின் றோம். ஆனால், இந்தப் பணி சீராக நடைபெறுவதில்லை. இந்தப் பணிகள் செம்மையாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சென்னை நகரில், தியாகங்கள் புரிந்த தலைவர்களின் சிலை கள் பல வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், சென்னையில் தியாகச் செம்மல் கக்கன்ஜி அவர்களின் சிலையை நிறுவ தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்கிய இராஜிவ் காந்தி மறைந்த இடத்தில் மத்திய அரசு நினைவுச் சின் னம் அமைப்பதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் தேவையான

நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி சொல்லும் அதே நேரத்தில், சென்னை கத்திப்பாரா சந்திப்பிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை உள்ள சாலைக்கு 'இராஜீவ் காந்தி சாலை' என்று பெயர் சூட்டுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் வானொலி நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை பல வருடங்களாக இருந்து வருகின்றது. கோவை, திருச்சி வானொலி நிலையங்கள் குறைந்த அளவு சக்தி கொண்டதாக இருப்பதால், சேலம் மாவட்ட மக்கள் வானொலி நிகழ்ச்சிகளைச் சரிவரக் கேட்க முடிவதில்லை. சேலம், தர்மபுரி மாவட்ட மக்களின் வசதிக்காக சேலத்தில் வானொலி நிலையம் அமைக்க நமது அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் வாழும் மக்கள் சென்னைத் தொலைக்காட்சி 2-வது அலைவரிசையில் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகிறது. சேலம் போன்ற மாவட்ட மக்களும் 2-வது அலைவரிசை நிகழ்ச்சிகளைக் காணுகின்ற வகையில் கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தின் சக்தியை அதிகரிக்க மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ள வேண்டும்.

நாட்டின் அன்றாட நிகழ்ச்சிகளை கிராம மக்கள் அறிந்து கொள்வதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது வானொலி, தொலைக்காட்சி இவைகளாகும். அதற்கேற்றவகையில், மாநில அரசு, அனைத்து ஊராட்சிகளுக்கும் இலவச தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கியுள்ளது. ஆனால் அந்தத் தொலைக் காட்சிப் பெட்டிகள் அனைத்தும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்களின் வீட்டில் உள்ளன. அவைகளை மீட்டு, பொது மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், தொலைக்காட்சிப் பெட்டிகளை ஊராட்சி மன்ற அலுவலகங்களில் வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஓர் அரசாங்கத்தை நல்ல முறையில் நடத்த, சட்டமன்றம், நிர்வாகத் துறை, நீதித் துறை ஆகிய மூன்று பிரிவுகளுக்கு அடுத்தபடியாக, நான்காவதாக இருப்பது பத்திரிகைத்துறை என்று சொல்லலாம். பத்திரிகைத் துறையில் பணியாளர்களுக்கு நல்ல சம்பளம் கிடைப்பதில்லை. குறிப்பாக, பத்திரிகை நிருபர்களுக்கு அமைச்சர்களை நேரடியாகத் தெரியும், மாவட்ட ஆட்சித் தலைவர்களை, மாவட்டக் காவல் துறை அதிகாரிகளைத் தெரியும் என்ற பெருமைதான் மிஞ்சுகிறதேயொழிய, பொருளாதார ரீதியில் அவர்கள் நலிந்தவர்களாகவே உள்ளார்கள். மாவட்ட அளவில் குறைந்த செலவில் வீட்டுமனைப் பட்டாக்



களைக் கொடுத்து அவர்களுக்குக் கூட்டுறவு முறையில் காலனி அமைக்க அரசு உதவி செய்ய வேண்டும். மாவட்டத் தலைநகரங்களில் பணியாற்றும் பத்திரிகை நிருபர்கள் மாதம் 200 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குகின்ற நிருபர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களுக்கு சீரான சம்பளம் கிடைக்க சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டும். மாவட்ட நிருபர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களின் பஸ்ஸில் இலவச பஸ் பாஸ் வழங்குவது போல தாலூக்கா தலைநகரங்களில் பணியாற்றும் நிருபர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வு ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதோடு அதனைப் பரவலாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் பத்திரிகையாளர்களுக்கு அண்மையில் 900 ச.அடி. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. குறைந்தபட்சம் 2400 சதுர அடியாக அது இருந்திருக்க வேண்டும். 900 ச.அடியில் 2 அறைகள் கட்டுவதற்குக் கூட போதுமானதாக இல்லை. கொடுக்கப்பட்டுள்ள அந்த வீட்டுமனைப் பட்டாக்களையும் 'கண்டிஷன் பட்டாக்களாக' கொடுத்திருக்கிறார்கள். கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றிலிருந்து கடன் பெற முடியாத நிலையில் உள்ளார்கள். கோட்ட ஆட்சித் தலைவர் 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்' கொடுக்காததினால், கடன்பெற முடியாமல் பாதி வீட்டைக் கட்டிக்கொண்டு பத்திரிகையாளர்கள் தவிக்கிறார்கள். அதற்கான தடையை நீக்கி கடன் தர வசதி செய்து தர வேண்டும். வீட்டுமனை கொடுக்காமல் நிலுவையில் உள்ள நிருபர்களுக்கும் அதைக் கொடுக்க முன் வர வேண்டும்.

ஏழைகளின் ஊட்டி என்று சொல்லப்படும் ஏற்காடு நல்ல சீதோஷ்ண அமைப்புக் கொண்டது. கோடை காலத்தில் மட்டும் அல்ல; வருடம் பூராவும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கக்கூடிய சுற்றுலா தலம் அது. அங்கே சுற்றுலா பயணிகளுக்காக இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுத்து, மத்திய அரசின் சுற்றுலா படத்தில் ஏற்காட்டை இடம்பெறச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12—35

குற்றாலத்தில் இருப்பதுபோன்று கொல்லிமலையில் அரப்பளீஸ்வரர் நீர்வீழ்ச்சி உள்ளது. இது சுற்றுலா பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது. ஆனால் அதற்குச் செல்ல பாதை வசதி இல்லை. அங்கே பாதை வசதி ஏற்படுத்த மாநில அரசு முயற்சித்தபோதெல்லாம் வனத்துறை அதிகாரிகள் தடுத்துவிட்டார்கள். மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி, அரப்

பளீஸ்வர் நீர் வீழ்ச்சிக்குச் செல்ல பாதை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

மேட்டூர் அணையின் கீழே பொதுப்பணித்துறையின் பூங்கா உள்ளது. சமீப காலமாக இந்தப் பூங்காவுக்கு பொது மக்கள் செல்ல அனுமதி இல்லை. பொதுமக்களை அனுமதிக்க அரசு முன்வர வேண்டும். வேடந்தாங்கல் பகுதிக்கு வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். ஆனால் அங்கே அவர் கள் தங்க இடவசதிகள் இல்லை. பயணிகள் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். சென்னை தீவுத் திடலில் ஆண்டுதோறும் அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சி நடத்தப்படுகிறது. அந்த இடத்தில் நிரந்தரப் பொருட்காட்சி நடத்த ஏற்கெனவே பல முறை இந்த அவையிலே பேசப்பட்டும் உள்ளது. எனவே தீவுத் திடலில் நிரந்தரப் பொருட் காட்சி அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் உள்ள அரசு அரும்பொருள் காட்சியகம் பராமரிப்பு செய்யப்படாமல் பாழடைந்த இடத்தில் உள்ளது. இதைச் சரி யாகப் பராமரிக்காமல் போனால் சேலம் மாவட்ட வரலாற்றுச் சின்னங்கள் மறைந்துவிடும். இதைச் சரியாகப் பராமரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கு வசதியாக மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப் படங்களை முன்னணியில் உள்ள நடிகர், நடிகைகளை வைத்து தயாரித்து வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சினிமா தியேட்டரில் சில சுகாதாரக் குறைபாடுகள் ஏற்படு கிறபோது தியேட்டர்களை சஸ்பெண்ட் செய்கிறார்கள். அப்படி சஸ்பெண்ட் செய்கிறபோது அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைகிறது. அதற்கு பதிலாக சினிமா தியேட்டர்களுக்கு அபரா தம் விதிக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டு அமை கிறேன். வணக்கம்.

*திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி அன்று முன்னாள் முதல்வர் கருணாநிதி நமது தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களைத் தாக்கினார்கள், **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர்களை எல்லாம் சொல்லாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. எம். பூராசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இன்று இந்து சட்டப்படி இரண்டு தாரங்களை வைத்துக் கொள்ளக்கூடாது, ஒருவருக்கு ஒருத்தி என்ற அந்தச் செயல் பாட்டினை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தனிப்பட்ட முறையில் அதையெல்லாம் பேசக்கூடாது, மானியத்தில்பேசுங்கள்,

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அந்தத் தங்கத் தலைவியைத் தாக்கியவர்களை இன்று இங்கே இந்தச் சட்டமன்றத்தில் இடம் பெறாமல் செய்துவிட்ட நமது தங்கத் தமிழ்நாட்டு மக்களை நான் மிகவும் பாராட்டுகிறேன்,

மாண்புமிகு மதிப்பிற்குரிய தமிழக முதல்வரும் நன் மக்களால் நன்மக்களுக்காக சேவையாற்ற நல்லுள்ளம் கொண்டு தங்கக் கரங்களால் ஏழைகளின் வளர்ச்சிக்கு வாரி வழங்கிடும் எங்கள் அருமைப் புரட்சித் தலைவியே, என் இதய தெய்வமே தமிழின் மூத்த மகளே. தமிழை வாழ வைக்க வந்த எங்கள் பொன்மகளே தமிழுக்கோர் இடர் என்றால் தாங்கொண்ணாத் துயரம் கொண்டு இடர் அகற்றும் நவீன ஜான்சி ராணியே, நாட்டையே வீடாகக் கொண்டு எங்களை எல்லாம் உங்கள் அன்புச் செல்வங்களாக்கி தாயாக இருந்து பாசமழை பொழிந்து நல்ல வழிகாட்டும் நிகரில்லா அன்னையே, மக்களின் இன்னல் களைந்து இன்பத்தினை வாரி வழங்கும் ஈடு இணையில்லாத எங்கள் நாட்டரசியே, தகுதி உள்ளோரை தக்க இடத்திலே அமர்த்தி. நல்லோரை வாழவைக்கும் எங்கள் நல் மணிமுத்தே வீரத்திலே சொல் தீரத்திலே தலை நின்று சான்றோர் தமிழ் வளர்ப்பதில் போட்டி கொண்டு. தமிழ் பண்பாட்டிலே உயர்ந்து நின்று, தமிழ்நாட்டிலே பெருமை கொண்ட முத்தமிழ் தீரர்களாம் நம் சேர, சோழ, பாண்டியர் கண்டெடுத்த நல்விழாவாம், தமிழ் மக்களின் வாழ்க்கையிலே துன்பம் நீக்கி இன்ப ஒளி வீசிடச் செய்யும் எங்கள் சந்திர தலைவிபோல் வெண்ணொளி வீசி நம்மை வாழ வைக்கும் விவசாயிகளின் உயர் தெய்வமாம், இந்தி ரனுக்கோர் விழா அதுவும், காவிரி தந்திட்ட இந்த அன்னையின் காலடிபட தவங்கிடக்கும் காவிரிப்பூம்பட்டினமாம், எங்கள் பூம்புகார் தொகுதியிலே என்றால் முதற்பெருமை எனக்கல்லவா பின் நமக்கல்லவா?

பிற்பகல் 12.40

நம் தமிழகம் என்றுமில்லாத அளவுக்கு இன்று சுற்றுலா பயணிகளை கவர்வதற்கு அதிமுக்கிய காரணம், கடற்கரை சுற்றுலா தான். இதனால், மாசில்லா மனம் கொண்ட நம்

இதய தெய்வம், புரட்சித் தலைவியின் கறையில்லா தூய ஆட்சியைப் போல் நல்ல, தூய்மையான, சுகாதார ''ஓசோன்'' காற்று வீசும் சிறப்புச் சுற்றுலா வளர்ச்சி மையமாகவும், அரிய நல் பாரம்பரியம் மிக்க நகரமாகக் கண்டு அறியப்பட்ட தரங்கம் பாடியை உட்கொண்ட பூம்புகாரிலே, கதிரவனின் இளவெண்மை கதிரொளியில் தங்கமயமாய் ஒளிர்விடும் வங்கக் கடற்கரையிலே அமைந்திட்ட ஏழைகளின் வாழ்வு ஒளிர வாரி வழங்கிடும் கொடை வள்ளல், நம் தலைவி போல், அள்ள அள்ள குறையாமல், கேட்க கேட்க குறை கூறாமல் அன்னமாய் வாரி வழங்கிட்ட, அமுதசுரபி ஏந்திய, மணிமேகலை பிறந்திட்ட பூம்புகாரில் ஓர் விழா. . . . இந்த பொன்மனத் தலைவியின் பொற் பாதங்கள் பட எம் பூமி தாயும் தவங்கிடந்து வரவேற்கிறார் உங்களை.

என்றுமில்லாமல் இவ்வருடம் இந்திரனுக்கோர் பெருமை. பெருமையிலும் பெருமை அதிபெருமை, எம் வழிகாட்டி நீங்கள் கலந்து கொண்டால். நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பது எனக்கு மட்டுமல்ல, இந்த சுற்றுலாத் துறை வளர வேண்டும் என்பதனால், எம் தொகுதி மக்களின் சார்பாக அன்னையை வற்புறுத்தும் பிள்ளையாக நாங்கள் உங்களின் பொற்பாத மலர்களின் அடி தொட்டு வேண்டுகிறோம். வருகை தாருங்கள். இந்த இந்திரனுக்கோர் புகழ் சேருங்கள். இதனால் எங்கள் மனம் நீங்கா நன்றி உடையதாகும்.

சித்திரை திங்களாம், இந்திர விழாவாம், முழுநிலா பௌர்ணமி தினத்திலே, இந்த அன்னையின் கருணையால் அனை வரும் பங்கு கொண்டு மகிழ்ந்திடும் நம்அரசு விழாவாய்,விடுமுறை நாளாய் அறிவிப்பு செய்ய எங்களது விண்ணப்பம், இந்த தொண்டனின் எளிய ஆசையை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

எனது பூம்புகார் தொகுதியில் ஒரு லட்சம் ரூபாய் அளவுக்குக் கூட இதுவரை தொழில் வளர்ச்சிக்காக செலவு செய்யவில்லை. அருமை அன்னை அவர்களே, எங்கள் பூம்புகார் தொகுதி பின் தங்கிய மக்கள் வாழ்கின்றதொகுதி. அங்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில்கூட ஒரு தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. இங்கு சிப்காட் போன்ற நிறுவனங்கள் அமைக்க அறிவிப்போம் என்று சொல்கிறார்கள். ஆனால் இது நாள்வரை அந்தத் தொகுதியிலே ஒரு லட்சம் ரூபாய் அளவுக்குக்கூட தொழில் இல்லை. நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே பூம்புகார் தொகுதியில் சிப்காட் நிறுவனம் அமைக்க அன்னையை வேண்டிக் கேட்டுக் கொள்கி றேன்.

அங்கே மீனவ மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் இருக் கின்றனர். அந்த பகுதியை தாங்கள் தான் ஒரு முன்னேறிய தொகுதியாக ஆக்க வேண்டும். காயிதே மில்லத் மாவட்டத்தில் அந்த பூம்புகார் தொகுதியை உங்கள் தொகுதியாகக் கருதி



நல்லதொரு வழிகாட்ட வேண்டும். அந்த புனிதமான மக்கள் இருக்கின்ற அந்த இடத்திலே நீங்கள் பூம்புகார் இந்திர விழா விற்கு வருகை புரிய வேண்டும். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் எல்லாம் அங்கே வந்து கலந்துகொண்டு சிறப்பு செய்திருக்கிறார்கள். அதே போல, அந்த இந்திர விழாவிற்கு நீங்கள் வந்து சிறப்பு செய்ய வேண்டும் என்றும் அந்த தமிழ் உள்ள அளவுக்கும் உங்களுடைய பெயர் நின்று நீங்காத புகழ் பெறவேண்டும் என்றும் இந்த நேரத்திலே தெள்ளத் தெளிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இங்கே இருக்கின்ற அந்த பூம்புகார் தொகுதியில் பல நவீன திட்டங்களை தாங்கள் அமைக்க வேண்டும். பூம்புகார் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அந்த தொகுதியை நல்ல முறையிலே பராமரிக்க வேண்டும். அங்கு சேர, சோழ, பாண்டியர் எல்லாம் வந்து இருந்து இருக்கிறார்கள். அங்கே அந்த சோழ னுக்குத் தலைநகரமாக இருந்த அந்த காவிரிப்பூம்பட்டினத்தைத் தாங்கள் நல்ல நவீனப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

தரங்கம்பாடியை சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுகிறேன். அங்கே ' ஓசோன் ' என்ற புகழ்பெற்ற காற்று வீசுகிறது.

அதேபோல, அங்கே கோட்டை இருக்கிறது. பழங்காலத்தை நினைவுபடுத்துகின்ற தரங்கம்பாடியையும் பூம்புகாரையும் நல்லதொரு சிறந்த நகரமாக ஆக்க தாங்கள் எடுக்கின்ற அந்த முயற்சிக்கு தமிழ் மக்கள் அத்தனை பேர்களும் மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். ஆகவே இந்த நேரத்திலே எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்து, இந்த அரசு விழாவாக அந்த இந்திர விழா நாளை விடுமுறை நாளாக அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு தங்களை இந்திர விழாவிற்கு வருக, வருக என்று வரவேற்கிறேன். தாங்கள் வரவேண்டும் என்று கேட்டு, இந்த எளிய தொண்டனின் ஆசையை நிறைவேற்று வீர்கள் என்று நம்புகிறேன். என் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொண்டு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவிதை மழைக்கு பின்பு திரு. எச். எம். ராஜு. (குறுக்கீடு)

பிற்பகல் 12.45

திரு. செ. கு. தமிழரசன் : தலைவரவர்களே, ** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[1992 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது தனிப்பட்ட முறையில் உள்ள ஒன்று. இது point of order அல்ல. இது சட்டப்பிரச்சினையாகும்.

திரு. செ. கு. தமிழரசன் ; இதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறதா இல்லையா என்ற விளக்கத்தை மட்டும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை முன்னாள் முதல்வரிடத்திலே நீங்கள் கேட்பது நல்லது. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி முடிவு எடுக்க வேண்டியது இந்த சபை அல்ல, யார் எந்த அளவிலே உரிமைப் பிரச்சினையில் பாதிக்கப்படுகிறார்களோ அவர்கள் முறைப்படி சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். இந்த மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். இதிலே விவாதமே வேண்டாம். அவை முன்னவர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இதிலே விவாதம் வேண்டாம் என்று நினைக்கிறேன். திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு இந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் தன்னுடைய மனைவி உயிரோடு இருக்கிற போது இன்னொரு பெண்ணை மணந்து கொள்ளக் கூடாது என்கிற கடுமையான சட்டம் இருந்தபோதும் முதல்வராக இருந்த ஒருவரே தன்னுடைய இரண்டு மனைவிகளையும் சட்டப்பேரவைக்கே அழைத்து வந்தார் என்று சொன்னால் அது சரிதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கான சட்ட விளக்கத்தை அரசு கொறடா அவர்கள் தர விரும்புகிறார்கள்.



1992 மார்ச் 25]

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருமணச் சட்டத்தின்படி ஒரு கணவனோ அல்லது மனைவியோ அவர்கள் வாழுகின்ற காலங்களிலே ஒரு கணவன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொள்வதோ அல்லது ஒரு மனைவி வேறு ஒரு கணவனை திருமணம் செய்து கொள்வதோ சட்டத்திலே அனுமதிக்கப்படவில்லை. இது இந்தியச் சட்டம். அதாவது சென்ட்ரல் ஆக்ட். அப்படியே கிரிமினல் குற்றவியல் சட்டத்திலே இப்படி சட்டத்திற்கு புறம்பாக ஒரு கணவனோ மனைவியோ வாழுகின்ற காலத்தில் வேறு ஒரு பெண்ணையோ அல்லது ஆடவனையோ திருமணம் செய்து கொண்டால் அந்தச் சட்டத்தின் உட்பிரிவின்படி 7 ஆண்டுக் காலம் அவர்களுக்குச் சிறைத் தண்டனை அளிக்கப் பெறலாம். அதுமட்டுமல்ல பெண்ணைக் கொடுத்தவருக்கோ அல்லது ஆடவனைக் கொடுத்தவருக்கோ அல்லது அவர்களுடைய பெற்றோர்களும் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு திருமணத்திற்கு யார் யார் காரணமாக இருந்தார்களோ, அந்தத் திருமணத்திலே அங்கே இருந்து அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தார்களோ அத்தனை பேரையும் குற்றவாளிகள் செக்சனில் கொண்டு வந்து அவர்களும் நீதிமன்றத்திற்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்படலாம். எனவே, இப்படி ஒருவர் மனைவி இருக்கின்ற காலத்தில் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், சாதாரண ஒரு குடிமகன் கூட இந்தக் கிரிமினல் குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று அவர்கள் ஒரு புகார் கொடுப்பார்களேயானால் அந்தப் புகார் மீது அரசு நடவடிக்கை எடுக்க சட்டத்தில் வழி இருக்கிறது என்பதைச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான அர்த்தத்தில் சொல்லக் கூடாது என்பதற்காக சொல்கிறேன். Those who are affected have to go to the court and get their remedy

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு தார மணம் செய்வது என்பது சட்டப்படி குற்றமாகும். அப்படி ஒரு குற்றம் செய்தவர்கள்மீது, முதல் தாரம் வழக்கு தொடர்ந்தால்

அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். அதைத்தான் மாண்புமிகு கொறடா திரு. பட்டாபிராமன் அவர்கள் இங்கே சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் .

THIRU M. SUNDRADOSS : The affected Man or the affected Lady should go to the Court.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: நான் அதைத்தான் சொல்கிறேன். முதல் தாரம் புகார் செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அது குற்றம் என்று சொல்லி தண்டிப்பார்கள். ஆனால், இப்போதுள்ள பிரச்சினை, தண்டிப்பதற்குதான் புகார்தானே தவிர, அவர் குற்றம் செய்திருக்கிறார் என்பது உலகு அறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, முதலமைச்சராக இருந்தபோதே அந்தக் குற்றம் செய்த குற்றவாளியாகத் தான் இருந்தார். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இப்படி இரு தாரம் வைத்துக் கொண்டு இருந்தவர்கள் பதவியில் இருந்தது இல்லை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

பிற்பகல் 12—50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசு அலுவலர்களாக இருப்பவர்கள் இரண்டு தார மணம் செய்து கொண்டால், அது தெரிந்தாலே நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதமே இன்று இந்த அவையிலே தேவையற்றது என்று நான் கருதுகிறேன். எனவே இன்று எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தால் நன்றாக இருக்குமென்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்ந்து மானியக் கோரிக்கையின்மீது விவாதம், திரு. எச். எம். ராஜு.



*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதே தினத்தில் நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்தேன் என்பதைச் சொல்லி. ஜன்ம விரோதிக்கும் அந்த நிகழ்ச்சி நடக்கக்கூடாது என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று வாழ்த்தி, அவருடைய துறைகளான செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கைகளில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய கருத்துக்களைக் கூற ஆரம்பிக்கிறேன்.

அரசினுடைய திட்டங்கள், அறிவிப்புகள் முதலியன நாட்டு மக்களுக்குச் செய்தித் துறை மூலமாகத்தான் போய்ச் சேருகின்றன. முக்கியமான துறையான இந்தத் துறை சிறந்த வகையில் செயல்பட வேண்டும், தமிழ்நாடு அரசு கவர்மென்ட் அட்வெர்டைசிங் ஏஜென்சி என்று ஒன்றை அமைத்து அரசினுடைய விளம்பரங்கள், செய்திகள் திட்டங்கள் முதலியவைகளை இந்த ஏஜென்சி மூலம் நமது பத்திரிகைகளுக்குக் கொடுக்கலாம் என்ற கருத்தை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களுக்கும், செய்தித் துறை அலுவலர்களுக்கும் சிறப்பு முறை பயிற்சி அளிக்கும் வகையில் டெல்லியில் அமைந்திருப்பது போல மாஸ் கம்யூனிகேஷன் இன்ஸ்டிடியூட் ஒன்றை தமிழ்நாட்டிலும் நிறுவ வகை செய்யலாம். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் மக்கள் தொடர்புப் பணி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும், பி. ஆர். ஓ. இல்லாத அரசுத் துறை நிறுவனங்களில் இந்தப் பணியை உருவாக்கி, செய்தித் துறையிலிருந்து அனுபவம் வாய்ந்த அலுவலர்களை அங்கே நியமிக்கலாம்.

முதன் முறையாக திரைப்படப் பயிற்சிக் கல்லூரி தனியார்த் துறை மூலம் சென்னையில் இன்னும் இரண்டு மூன்று தினங்களில் மத்திய செய்தித் துறை அமைச்சர் மாண்புமிகு அஜீத் குமார் பாஞ்சா அவர்களால் திறக்கப்படவிருக்கிறது, ஸ்டில் போட்டோகிராபி, வீடியோ கேமராமேன், செய்தி வாசிப்பது போன்ற நான்கு மாத சர்டிபிகேட் பயிற்சியும், டைரக்ஷன் எடிட்டிங், டி. வி. பிலிம் ப்ரோட்யூசிங், ரிக்கார்டிங் போன்ற இரண்டு வருட டிப்ளமா பயிற்சியும் அங்கே அளிக்கவிருக்கிறார்கள். இதேபோல் நமது அரசு மேலும் ஒரு திரைப்படக் கல்லூரியை நமது நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுப் பழக்கத்தின் தீமைகள், போதை மருந்தின் கொடுமைகள், வரதட்சணையின் துன்பங்கள் போன்றவைகளின் அடிப்படையில் திரைப்படங்கள் எடுப்பதும், அம்மாதிரியான சிறந்த படங்களுக்கு அரசு சிறப்புப் பரிசுகள் அளிப்பதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம். அந்த மாதிரி தயாரிப்பாளர்களுக்கு சலுகைகளும் கொடுக்கலாம்.

திரைப்படத் துறையினர் தாய்க்குலத்தின் மனம் புண்படாமல் இருக்கும் வகையில் சினிமா சுவரொட்டிகள் தயாரித்தல் மிகவும் அவசியமாகும். வயது வந்தோர் பார்க்கும் திரைப்படங்களை குழந்தைகள் கண்டிப்பாகப் பார்க்க அனுமதிக்கக் கூடாது. ஆபாசப் படங்கள் தயாரிப்பைத் தவிர்க்க வேண்டுகிறோம்.

'விசிட் இந்தியா 1991' இம்மாதம் 31 ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது, தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை சிறப்பாக நடைபெற்றதால்தான் அந்நியச் செலாவணியை அதிகமாகப் பெற வாய்ப்பு இருக்கும். அந்நியச் செலாவணி அரசிடம் அதிக அளவில் இருந்தால்தான் மற்ற நாடுகளிலிருந்து நமக்குத் தேவைப்படும் பொருட்களை சுலபமாக இறக்குமதி செய்ய முடியும். அதற்கு வெளி நாட்டுப் பயணிகள் அதிக அளவில் நம் மாநிலத்திற்கு வருகை தர வழிவகை செய்ய வேண்டும், 1991 ஆம் ஆண்டு நம் மாநிலத்திற்கு 1,22,145 வெளி நாட்டுப் பயணிகள் வருகை தந்துள்ளனர், இவர்கள் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 12—55

சிங்கப்பூர் டூரிஸ்ட் புரமோஷன் போர்டு நிர்வாகிகள் நம் நாட்டிற்கு வருகை தந்து சென்னையிலும் கல்கத்தாவிலும் தங்கியிருந்து, நமது நாட்டு மக்களை சிங்கப்பூருக்கு அதிக அளவில் செல்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அது போல் நமது அரசும், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து. அமெரிக்கா. பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு நமது அதிகாரிகளை அனுப்பி வைத்து, அவர்கள் அதிக அளவில் நமது நாட்டுக்கு வருகைதர ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த நிலையில். 2.10.000 பேர் இந்தியாவிலிருந்து மட்டும் 1991 ஆம் ஆண்டு சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அயல் நாட்டு டூரிஸ்ட் ஆப்பரேட்டர்களை நமது விருந்தினராக வரவழைத்து வெளிநாட்டுப் பயணிகளின் தேவைகள்





அவர்களுடைய உணவு வகைகள், கேளிக்கை போன்றவைகளுக்கான அவர்களுடைய அபிப்பிராயத்தை அறியலாம். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நீலகிரி மாவட்டத்திற்கு நமது நாட்டு மக்களும், வெளி நாட்டு சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தங்கும் ஹோட்டல்கள் வசதிகள் நிறைந்தவையாக இருக்க வேண்டியது அவசியமாகும். அதோடு அவர்களுக்கு தரமான உணவும் அங்கே கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் பொதுமக்களின் வசதிக்காகவும் உதகை படகு இல்லத்தில் தற்போது இருக்கும் படகுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் நவீன படகுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்,

'புளூமவுண்டன் எக்ஸ்பிரஸ்' என்ற இரயில் மேட்டுப்பாளையம் ஊட்டி பாதையில் ஓடிக் கொண்டிருக்கிறது, அந்த பயணிகள் பெட்டிகள் (கம்பார்ட்மெண்ட்ஸ்) ஆங்கிலேயர் காலத்தில் செய்யப்பட்டவை என்பதை நாம் எல்லோரும் அறிவோம், பிரசித்தி பெற்ற அந்த இரயில் பொது மக்களையும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளையும் அதிகமாக கவரும் வகையில் புதிய நவீன பெட்டிகளைப் பொருத்த மத்திய அரசுக்கு நமது அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் நாட்டுப்புற கலைவிழா, கரக ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் களறி ஆட்டம், அழகு சிலம்பம், மயிலாட்டம், ஓயிலாட்டம், களியன் ஆட்டம் போன்றவைகளை ஊக்குவிக்க வேண்டும். அதேமாதிரி மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இருக்கும் போது கிராமிய நாட்டுப் பாடல்களுக்கு ஊக்கமளித்து வந்தார்கள் அந்த ஊக்கத்தை மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஆதிவாசிகள், பழங்குடியினர் கலாச்சார விழாக்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆதிவாசிகள் உபயோகப்படுத்துகின்ற ஆபரணங்களை எல்லாம் சேர்த்து வைத்து, ஒரு கண்காட்சி நடத்தி, அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குக் காண்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் ஆதிவாசிகளான தொதுவர்கள், கோத்தர்கள், இருளர்கள், குறும்பர்கள், பள்ளர்கள் போன்றவர்களுடைய குடியிருப்புகளுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்று அவர்களுடைய கலாச்சாரத்தைக் காண்பிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஏப்ரல், மே மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் சினிமா விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈடுபடுத்தும் வகையிலும் கவர ஏற்பாடு செய்தால் நாம் அதிக அளவில் 'ஃபாரின் எக்சேஞ்ச்' பெறலாம். மேலும் கோடை விழாக்களை இந்த ஆண்டில் மிகவும் சிறப்பான முறையில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தை நம் மாநிலத்தின் ஒரு சுற்றுலா மண்டலமாகச் சேர்க்க வேண்டுகிறேன்.

'டிப்ளமா இன் டூரிசம்' என்ற ஓராண்டு பயிற்சியை உதகையிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்துதர வேண்டுகிறேன்.

மேலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஓட்டல் தமிழ்நாடு அருகில் உள்ள காலி இடத்தில் கூடுதலாக அறைகளைக் கட்டிக் கொடுத்தால் அல்லது டீலக்ஸ் காட்டேஜஸ் கட்டிக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே ஓட்டலில் கண்டிப்பாக ஒரு 'லிப்ட்' தேவைப்படுவதால் அந்த லிப்ட் வசதியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளையும், பொது மக்களையும், குழந்தைகளையும் கவரும் வகையில் கேரள மாநிலம் பாலக்காடு மலம்புழா அணையில் அமைந்திருக்கும் 'ரோப்கார்' போன்ற ஒன்றை உதக மண்டலத்தில் அரசு பூங்காவிலும், படகு இல்லத்திலும் அமைத்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திலுள்ள தொட்டபெட்டா, அரசு பூங்கா, படகு இல்லம், குன்னூரில் உள்ள லாம்ப்ஸ் ராக், டால்பின்ஸ் நோஸ், கோத்தகிரியிலுள்ள கேத்தரின் வாட்டர் பால்ஸ், கோடநாடு வியூ பாயின்ட்ஸ் போன்ற சுற்றுலா இடங்களை மேலும் சிறப்பான வகையில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



நீலகிரி மாவட்டத்தில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய 'டிஸ்டிரிக்ட் டூரிஸ்ட் ட்ராபிக் அட்வைசரி கமிட்டி' என்ற ஒரு கமிட்டியை உடனடியாக அமைத்தால் 'டூரிசம் இம்புரூவ்மென்ட்' ஆவதற்கு அங்கே நாங்கள் எல்லாம் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வழிவகை ஏற்படும். அதற்கு நமது அரசு ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம்.

நீலகிரி மாவட்டத்தில் உதகையிலுள்ள ஏரியில் வளர்ந்துவரும் ஆகாயத் தாமரை (வாட்டர் ஹையாசின்த்) வளர விடாமல் நிரந்தரமாக படகு இல்லத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்களும், குழந்தைகளும், சுற்றுலாப் பயணிகளும் இன்புற்று பயனடையும் வகையில் உதகையில் படகு இல்லம் அமைந்துள்ள ஏரியை சுற்றிவர தற்போது இயங்கிவரும் 'மினி' இரயில் அந்த ஏரி முழுவதையும் சுற்றிவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1.00

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கலுக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் பறவைகளைக் காண வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு 'ஓட்டல் தமிழ்நாடு' ஒன்றை அங்கே அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். சுற்றுலாத் துறைக்கு நமது அரசு ரூ. 98,21,000 ஒதுக்கியுள்ளது. இது மிகவும் குறைவான தொகையாகும். சுற்றுலா என்பது இப்போது "Industry" யாக இருப்பதால் இந்தத் தொகையை அரசு அடுத்த ஆண்டிலாவது அதிகப்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுகிறேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அதிக அளவில் முக்கியத்துவம் தந்து வருகிறார்கள். தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் எல்லைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகிகளைத் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கௌரவித்தார்கள். ஆனால் இத்திட்டம் பின்னாளில் மாற்றப்பட்டது. மீண்டும் இத்திட்டத்தின் மூலமாக தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்ட மற்றும்

எல்லைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகிகளுக்கு ஒய்வூதியம் கொடுத்தும் விருதுகள் கொடுத்தும் கௌரவிக்க வேண்டுகிறேன்.

ஊட்டியில் உள்ள அருங்காட்சியகத்திற்கு அரசு புதிய ஒரு கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டுகிறேன். வயதான தமிழறிஞர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை ரூ. 400 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்த வேண்டுகிறோம்.

கவிதை வடிவில் முழுக்க முழுக்க வரும் 'கவிதை' என்ற மாதாந்திர பத்திரிக்கைக்கு அரசு உதவ வேண்டுகிறேன் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப் பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றியைக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. ஜெய்ஹிந்த்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. ஜி. பழனிசாமி.

<u>திரு. ஜி. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முதலமைச்சரால் கொண்டு வரப்பட்டிருக்கிற செய்தித்துறை. திரைப்படத் தொழில் நுட்பம், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத் துறை மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய துறைகளின் கொள்கைக் குறிப்புகளின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல நான் விழைகின்றேன்.

குறிப்பாக தமிழ்ப் பண்பாட்டை வளர்ப்பதற்கும், தமிழை பேணிக்காப்பதற்குமான இந்த மானியக் கொரிக்கை மீது பேசுவதில் நான் பெருமையடைகிறேன். அதேபோல், தொன்மையான நூல்களை அனேகமாக ஓலைச் சுவடிகள் மூலமாக இருப்பதை பல்வேறு திறனாய்வுகள் செய்யப்பட்ட போதும் கூட, அவைகளைத் தமிழ் நூல்களாக்கி இன்றைக்கு இருக்கின்ற மாவட்ட, வட்ட நூலகங்களில் நமது அரசு வைத்து, இன்றுள்ள இளைஞர் சமுதாயத்தினர் அவைகளைப் படிக்கக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையில் நான் முக்கியமாகக் கூற விரும்புவது, தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்ட தொன்மைக்கால வரலாறு உடைய மாங்குடி மருதனார் போன்றவர்கள் தஞ்சை மாவட் டத்தில் மாங்குடி என்ற ஊரில் தங்கி வாழ்ந்ததாகவும், அங்கிருந்து புலமை பாடியதாகவும் குறிப்புக்கள் கூறுகின்றன. அதற்காக இந்த இடத்திலே ஒரு நினைவாலயத்தை எழுப்ப வேண்டுமென்பதற்காக தமிழக அரசால் இடமெல்லாம் கையகப்





படுத்தப்பட்டும், அதற்குப் பின்னாலே அது திருநெல்வேலி யில் இருக்கிற மாங்குடி என்ற ஊருக்கு மாற்றப்பட்டு விட்டதாக நாங்கள் அறிகிறோம். தமிழ்நாட்டிலே எடுத்துக் கொண்டால் 116 மாங்குடிகள் இருக்கின்றன. என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில் முத்துப்பேட்டையில் இருக்கிற சாந்தத்தின் அருகில்தான் மாங்குடி இருக்கிறது. அவர் பாடிய பாடலில்தான் கோடியக்கரை என்ற ஊரே வருகிறது. உதயமார்த்தாண்டபுரம் என்ற ஊரே அவர் பாடிய பாடலில்தான் வருகின்றது. கோயில்களப்பால் போன்ற ஊரே அவருடைய பாடலில்தான் வருகிறது. வேதாரண்யம்—கோடியக்கரையில் கோயில்களில் இப்படிப் பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அதேபோன்று தஞ்சையில் இருக்கின்ற தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் ஓலைச் சுவடிகளில் அப்படியிருப்பதாக, பி.எச்.டி. ஆராய்ச்சிப் பட்டம் பெற்றிருக்கின்ற பல்வேறு மாணவர்கள் அரசுக்கு இது பற்றி பல்வேறு சான்றுகளை வழங்கியிருக்கின்றார்கள். ஆனால் அந்த இடத்தில் நினைவுச்சின்னம் எழுப்ப முயற்சிக்கிறபோது, அரசுக்கு குழப்பமான நிலைதான் ஏற்பட்டது, அதைப்பற்றி 1990 ஆம் ஆண்டு நான் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன், 1989 ஆம் ஆண்டிலும் அதை நினைவுபடுத்தியிருக்கிறேன், சரி யான குறிப்புகள் இல்லாமல், எந்த இடத்தில் சர்வே செய்து நினைவுச் சின்னம் கட்டுவது என்ற குழப்பம் இருந்தும் கூட, இன்றையதினம் திருநெல்வேலி மாவட்டத்தில், மாங்குடி என்ற இடத்தில் அது கட்டப்படும் என்று எல்லாம் செய்திகள் வரு கின்றன. அந்த இடமும் இருக்கட்டும், தமிழகத்தின் முதல்வர் அவர்கள் அதற்கான சான்றுகளைக் கண்டறிந்து, தஞ்சையிலே இருக்கின்ற தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்திடம் கேட்டறிந்து, அங்கேயும் ஒரு நினைவுச் சின்னத்தை கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான சான்று களை அங்கேயிருக்கிற மக்கள் தர மிக ஆர்வத்தோடு இருப்ப தோடு, அதற்கான நிலத்தைக்கூட எத்தனை ஏக்கர் வேண்டு மானாலும் தருகிறோம் என்று சொல்லி மனு அளித்தும் இருக் கிறார்கள். ஆகவே அந்த இடத்தில் நினைவுச்சின்னம் கட்டும் வாய்ப்பை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த சநதர்ப்பத் தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—05

அதேபோன்று தமிழ் படங்கள். இன்றைக்கு படத்துறையை எடுத்துக்கொண்டால், படத்துறை என்பது இந்த நாட்டினுடைய கலாச்சாரம், சமூக சீர்திருத்தம் ஆகியவற்றைக் கொண்ட படங் களாக அமைவதில்லை. அவைகள் வருமான நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. படங்களைத் தயாரிக்கும் போது எத்தனை இலட்சம் ரூபாய்க்கு தமிழ்நாட்டில் வியாபாரம்.

நடக்கும் என்று வியாபார நோக்கத்தோடு தயாரிக்கப்படுகிறது. பல்வேறு நாடுகளின் படங்களைப் பார்க்கும்போது தமிழ் படம் பரவாயில்லை என்று சொன்னாலும்கூட இன்றைக்கு இருக்கக் கூடிய இளைய சமுதாயத்தினரையும், வளர்ந்துவரும் மாணவ செல்வங்களையும் நலியவைக்கின்றன. தீய சிந்தனைகளை, கருத்துக்களை வார்த்தைகளின் மூலம் புகுத்துகிறார்கள். படத் துறையில் உள்ள சென்சார் போர்ட் இதையெல்லாம் கவனிக்க வேண்டும். அதைப்போல ஆபாச படங்கள். இளைஞர்கள் கூட வேண்டும் என்பதற்காகவே சாதாரண படமாக இருந்தாலும்கூட 'ஏ' என்று போட்டு நடத்தப்படக்கூடிய நிலைகளை நம்மால் பார்க்க முடிகிறது. ஆபாச படங்கள் மூலம் பெண்களை கேலிக் கூத்தாக ஆக்கக்கூடிய நிலைகளை நாம் பார்க்கிறோம். இத்தகைய நிலைகளையெல்லாம் காணும்போது கல்வி நிலையங்களில் உள்ள குழந்தைகள்கூட பாடம் படிப்பதற்கு நேரம் இல்லாத நிலையை நம்மால் காண முடிகிறது. சென்ற ஆண்டுகளில் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் 'மாட்னி' காட்சிகள் நடப்பது வழக்கம். இன்றையதினம் இத்தனை காட்சிகள்தான் நடத்த வேண்டும் என்று இல்லாமல், கணக்கு இல்லாமல் காட்சிகளை நடத்துகிற நிலையை நம்மாலே காண முடிகிறது. பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் படிக்க வேண்டும் என்று சொல்லி, தங்களுடைய வாழ்க்கை நிலைமையில், பாட புத்தகங்களை வாங்குகிறார்கள். ஆனால், குழந்தைகள் பள்ளிக்கு போக வேண்டும் என்று சொல்லி நேரிடையாக அவர்கள் படிப்பதெல்லாம் சினிமா தியேட்டர்களாகத்தான் அறிந்துகொண்டிருக்கின்றனர். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சனி. ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் மட்டும், மாட்னி காட்சிகளை நடத்துவதற்காக உத்திரவிடவேண்டும் 'என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கல்வித் திட்டங்களை, கல்லூரிகளில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கான பாடத் திட்டங்களை கேபிள் டி.வி.யின் மூலம் பரப்பவேண்டும். இன்றைக்கு கேபிள் டி.வி.யை வீட்டுக்கு வீடு பார்க்கும் நிலையை நாம் பார்க்கிறோம். பெண்கள் கூட காலத்தோடு தங்களுடைய குடும்ப வேலைகளை முடித்துவிட்டு கேபிள் டி.வி. பார்க்க வரிசையாக உட்கார்ந்திருக்கும் காட்சியை நம்மாலே பார்க்க முடிகிறது. தமிழ்நாட்டில் உள்ள மக்கள் ஓய்வு நேரங்களில் மூளைக்கு சிந்தனை தரக்கூடியவற்றுக்காக தங்களுடைய நேரங்களை ஒதுக்குகிறார்கள். இதுபோன்ற நேரங்களில் கல்விக்கான பாடத் திட்டங்களைக் கொண்டு வந்தால் படிக்கிற மாணவ மாணவிகள் தங்களுடைய பாடங்களை எளிதாக தங்கள் மனதில் பதித்துக்கொள்ள வாய்ப்பாக அமையும். அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர்' அவர்கள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று ஒன்றாக இருந்த தஞ்சை மாவட்டத்திலே மாவட்ட நூலக அமைப்பு இருந்தது. இதைப்பற்றி வெட்டுத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். புதிதாக துவக்கப்படுகிற நூலகத்தை நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில், பல நூல்களைக் கொண்ட, மொழி பெயர்க்கப்பட்ட நூல்களைக் கொண்டிருக்கக்கூடிய மாவட்ட நூலகத்தை நாகப்பட்டினம் தலைநகருக்குக் கொண்வர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விழைகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு தமிழ்மொழி. இன்றைக்கு அநேகமாக, பச்சிளம் குழந்தைகள், பெற்றோர்கள் கூட 'மம்மி' 'டாடி' என்று கூப்பிடுவதுதான் மரியாதை என்று நினைக்கிறார்கள். தமிழையே குழந்தைகள் மறந்துவிடும்போல இருக்கிறது, அம்மாவையும், அப்பாவையும் மறந்து ஏதோ ஒரு மொழியில் பேசிக்கொண்டிருப்பது போன்று நிலைமைகள் மாறும் நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே நர்சரி பள்ளிகளைக் கொண்டு வந்து அதிலே தமிழ் பாடங்களை போதிப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். தமிழை இந்தச் சமுதாயத்தில் வளர்க்க வேண்டுமானால், தமிழை பேணி காக்க வேண்டுமென்று சொன்னால் தமிழ் கேலி கூத்தாகக்கூடிய நிலைமையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமானால் அரசாங்கம் இதிலே புகுந்து நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு இதிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்,

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் திரைப்படங்கள் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, சுற்றுலாத் துறை ஆகிய இந்த மூன்று துறைகளும் முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பில் இருப்பது அநேகமாக நம்முடைய சுதந்திரம் வந்த பிறகு இதுதான் முதல் முறை என்று நான் கருதுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் இருக்கின்ற இந்த மூன்று துறைகளும் இதற்காகவே முக்கியத்துவம் பெறுகிறது என்ற காரணத்தால் நம்முடைய தமிழகத்திற்கு பல நல்ல காரியங்கள் நடைபெறும் என்ற நம்பிக்கையோடு இந்த மானியங்களில் நான் பேச விரும்புகிறேன்.

பிற்பகல் 1—10

முதலாவதாக நம்முடைய தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த வரை இன்று நம்முடைய தமிழகத்தில் தமிழ் வளர்ச்சி வேகமாக நடைபெறுகிறது என்றாலும் கூட, கடந்த காலங்களில் இருந்த அந்தத் தமிழ் வேகம் இப்போது குறைந்துவிட்டது என்பதனை நாம் உணர வேண்டும். அதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். இன்று ஏராளமான விஞ்ஞான வளர்ச்சிகள் வந்து இருக்கின்றன. அதன் காரணமாக நம்முடைய இளைஞர்களுக்கு அறிவு வளர்ச்சி வேகமாக இருக்கிறது. என்று சொன்னாலும்கூட தமிழ் வளர்ச்சி எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறது என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதோடு நம்முடைய தஞ்சையில் இருக்கின்ற, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு உ,வே, சாமிநாத அய்யர் அவர்களுடைய பெயர் வைக்கவேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உ.வே. சாமிநாத அய்யர் இல்லை என்று சொன்னால் தமிழ் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் ஒவ்வொரு ஊர் ஊராகச் சென்று, கிராமம் கிராமமாக அலைந்து. பட்டினி கிடந்து தமிழைக் கண்டுபிடித்தார்கள், சிலப்பதிகாரத்தை அவர்கள் பதிப்பிக்கின்ற நேரத்தில், அந்த அச்சுக்கு கூலி கொடுப்பதற்கு அவர்களுக்கு காசு இல்லை. அந்தநேரத்தில் என்ன இருக்கிறது என்றெல்லாம் தேடிப்பார்த்த நேரத்தில் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த எங்களுடைய இராமநாதபுரம் அரசர் அவர்கள் ஒரு தடவை பட்டு அணிந்து இருந்தார்கள். அந்தப் பட்டை எடுத்து மார்க்கெட்டில் விற்று, அந்தக் கூலியைக் கொடுத்து சிலப்பதிகாரத்தை அவர்கள் உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட மாமேதை, தமிழ் தாத்தா என்று சொல்லக்கூடிய உ. வே. சாமிநாத அய்யர் அவர்களுடைய பெயரை தஞ்சைப் பல்கலைக் கழகத்திற்கு. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு சூட்ட வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய முதுகுளத்தூர் தொகுதியில் பிறந்து, மதுரையிலே தமிழ் முழங்கிய பேராசிரியர் செந்நாப் புலவர் கார்மேகக் கோனார் அவர்களுக்கு, அவர்கள் பிறந்த ஊரான எங்களுடைய தொகுதியில் இருக்கின்ற அகத்தார் என்ற கிராமத்தில் ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முதன் முதலாக தமிழுக்கு ஒரு மரியாதையை உண்டாக்கியவர் கார்மேகக் கோனார் அவர்கள். அதற்கு முன்பெல்லாம் நம்முடைய தமிழாசிரியர்கள் ஒரு கேலிப் பொருளாக, கிண்டலுக்குரியவர்களாக வாழ்ந்த காலத்தில், தமிழ் முழங்குகின்ற ஒரு நல்லாசிரியராக விளங்கியவர் கார்மேகக் கோனார் அவர்கள். கார்மேகக் கோனார் அவர்கள், 'இந்தக் கார்மேகம் இடியும் இடிக்கும்; மழையும்



பொழியும், என்று கூக்குரலிட்டு தமிழ் விரோதிகளை அடக்கிய மாபெரும் பெரியவர் கார்மேகக் கோனார் என்ற முறையில் எங்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர் என்ற பெருமையோடு அவர்களுக்கு அவர்களுடைய கிராமத்திலே ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நானெல்லாம் ஏட்டுப் பள்ளிக்கூடத்திலே படித்தவன். அந்தக் காலத்தில் அரசு பள்ளிக்கூடங்கள் இல்லாத காலத்தில் ஏட்டுப் பள்ளிக் கூடத்தில் படித்தவன் என்ற முறையில் சொல்கிறேன். இந்த அவையிலே என்னைப்போல ஒன்றிரண்டு பேர் இருக்கக் கூடும். அப்போதெல்லாம் நல்ல பல இலக்கியங்கள், இலக்கணங்கள் எல்லாம் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். கி.வ. இலக்கணம் என்று ஒரு இலக்கணம் இருந்தது. அதெல்லாம் இப்போது பலருக்குத் தெரியாது. 'முக்காலுக்கு முக்கால்' எவ்வளவு என்று இப்போது கேட்டால், உடனே 3/4 × 3/4 என்று பெருக்கிக் கொண்டே இருப்பார்கள், ஆனால் எங்களைப் போன்றவர்கள் முக்காலுக்கு முக்கால் 'அரையே மாகாணி' என்று சொல்லி விடுவோம். அரையே மாகாணி என்பது 65; அதாவது ஒரு ரூபாயில் 65 பைசா என்று அர்த்தம். அதேபோல காலுக்கு கால் என்ன என்று கேட்டால் 'அரைக்கால்' என்று நாங்கள் ஈசியாகச் சொல்லி விடுவோம். அப்படிப்பட்ட பழந்தமிழர்களாகிய எங்களைப் போன்றவர்கள் இந்த நாட்டில் இன்னும் ஒன்றிரண்டு பேர் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை எல்லாம் தேடிப் பிடித்து, அந்த பழைய இலக்கியங்கள், இலக்கணங்களை எல்லாம் எழுத்து வடிவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) 25, 26 ஆண்டுகளுக்கு முன்பு எனக்குத் திருமணம் ஆகி ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையை என்னுடைய மனைவி தொட்டிலில் இட்டு,

" திங்க தினை விதைத்தேன்
திங்க தினை விதைத்தேன்
தேன்மொழியைக் காவல் வைத்தேன்"

என்று பாடுவாள்.

" திங்க தினை விதைத்தேன்
திங்க தினை விதைத்தேன்,
தேன்மொழியைக் காவல் வைத்தேன்
இது திங்கத் தெவிட்டாத தேன்மொழியாம் "

என்ற இன்பமயமான தாலாட்டுகள் எல்லாம் போய் இப்போது என்னுடையு பேரனை என்னுடைய மருமகள் எப்படி தாலாட்டு

கிறாள் என்றால் "'தூங்கறியா உன்னை அடிக்கவா', 'திருடன் வந்துவிடுவான்', 'இல்லையென்றால் அந்த தீக்குச்சியை எடு, சுட்டு விடுவோம்' என்று தாலாட்டுகிறாள். (சிரிப்பு).

பிற்பகல் 1—15

இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் பார்த்து உணர்ந்து அந்தத் தாலாட்டுகள் எல்லாம் இன்னும் நம் நாட்டில் இருக்கிறது. ஊதாலாட்டுகளை எல்லாம் வயதான பெரியவர்களை அணுகி அவற்றையெல்லாம் எழுத்து மூலமாகக் கொண்டு வந்து நம்முடைய தமிழ்ப் பல்கலைக்கழகம் அதற்கு சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல, 'இரவில் அழுதெழும் பெண் கூட
இசையோடு அழுவது கண்கூடு'

என்று நம்முடைய கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மட்டுமல்ல— நாமக்கல் கவிஞர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், செட்டி நாட்டில் ஒரு தாய்க்குலத்தின் தலைமகன் இறந்துவிட்டார். அதற்காக அவருடைய தாயாரும் தந்தையாரும் மலேசியா நாட்டிலிருந்து வந்தார்கள். அந்த அம்மையார் அழுத காட்சி இன்னமும் என் நினைவில் இருக்கிறது.—

" உன்னை அள்ளிக் கொடுப்பதற்கோ
ஆலாய்ப் பறந்து வந்தோம்
உன்னை வாரிக் கொடுப்பதற்கோ
வண்டாய்ப் பறந்து வந்தோம்"

என்று சொன்னார்கள். அதாவது ஆலாய் என்றால் அது கடலில் பறந்து வரும். அதைப்போல நாங்கள் விமானத்தில் வந்தோம் என்று சொல்கிறார்கள். வண்டாய்ப் பறந்து வந்தோம் என்றால் அது சத்தம் போட்டுக் கொண்டு வரும். அதைப் போல அந்த விமானத்தில் வந்தோம் என்று சொல்லி அழுத காட்சி என் மனக்கண்ணில் நிற்கிறது. அதாவது தன்னுடைய மகனைப் பறிகொடுத்த நேரத்தில்கூட இலக்கியங்கள்தான் அவர்களுக்கு நினைவுக்கு வருகிறது. அப்படிப்பட்ட இலக்கியங்கள், தாலாட்டுகளும், ஒப்பாரிகளும் நாட்டில் மறைந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது அழுவது என்றால் எவ்வளவு உரிமையானவர்கள் இறந்து விட்டாலும்கூட பேசாமல் உட்கார்ந்து இருக்கிறான். (சிரிப்பு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து எங்களுடைய பழைய மாவட்டம் அதாவது இப்போது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் பாகனேரி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு நூல் நிலை



யத்தை நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு சென்று பார்த்தேன். நம்முடைய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு சென்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அங்கே வந்திருந்தார்கள். அந்த நூல் நிலையத்தில் ஒரு பெரியவர், செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர் ஆண்டாண்டுக் காலமாக உலகத்தில் இருக்கிற அற்புதமான நூல்களையெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறார். அவர் இப்போது காலமாகி விட்டார். அந்த நூல்நிலையம் இப்போது கேட்பாரற்ற நிலையில், மிக மோசமான நிலையில் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதைப் பார்த்து விட்டு ஒரு கட்டிடம் வேண்டுமானால் கட்டித் தருகிறேன் என்று சொன்னார்கள். அதை நம்முடைய அரசு எடுத்து தமிழகம் தழுவிய ஒரு சிறந்த நூல் நிலையமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறை என்பதில் நம்முடைய அருமை தலைவர் நேருவின் பேரன், அருமை அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய குமாரன், ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவாக ஒரு சமாதி அமைப்பதற்காக நம்முடைய அரசாங்கம் 12 ஏக்கர் இடமும், அதற்காகப் பணமும் ஒதுக்கியிருப்பதாக நம்முடைய கொள்கைக் குறிப்பிலே பார்த்தேன். உலகெல்லாம் புகழ் மணந்த அந்த ஒப்பற்றத் தலைவனுக்கு இந்த 12 ஏக்கர் நிலத்தில் சமாதி ஏற்படுத்துவது என்பது சரியாக வராது என்று கருதுகிறேன். நீங்கள் எல்லாம்— நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட டெல்லியில் பார்த்து இருப்பீர்கள். அங்கே 'லோட்டஸ் டெம்பிள்' என்ற ஒரு கோவில் இருக்கிற 26 ஏக்கர் நிலப்பரப்பில் மிக அழகாக உலக மக்கள் எல்லாம் பார்த்து வியக்கிற அளவில் அந்தக் கோவில் அமைந்திருக்கிறது. அதைப்போல, இங்கேயும் 25 அல்லது 26 ஏக்கரில் மிக சிறப்பாக ஒரு பூங்கா அமைத்து, நடுவில் நம்முடைய அருமைத்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு சிறந்த நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1—20

அதேபோல், இந்த தேசிய பாரம்பரியம் மிக்க ஆட்சி போய் இந்த நாட்டிலே 25 ஆண்டுகள் ஆகிவிட்டதே என்கிற கவலையோடு இருந்த எனக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, தேசிய சிந்தனையும், தெய்வ சிந்தனையும் அவர்களுக்கு வந்திருப்பது எனக்கு மனநிறைவை அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்று இந்திய நாட்டில், தமிழகத்தைப் பொறுத்தவரையில்—தேசியமும் தெய்வீகமும் என்பதில், தமிழகம்தான் முதலிடம் என்கிற உணர்விலே

அவர்கள் மிக நன்றாகச் செயல்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நம்முடைய இராமேஸ்வரத்தை ஒரு சிறந்த சுற்றுலாத்தலமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் மட்டும் லேசாக ஒரு அறிக்கை விட்டால் போதும் இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலிருந்து 10, 20 கோடி ரூபாயைக் கொண்டு வந்து குவித்து விடுவார்கள். அந்தப் பணத்தை எல்லாம் வைத்து—நான் மலேசியா சென்றிருந்த போது, மலேசியாவில் ஒரு மலையைக் குடைந்து ராமாயணத்தை ஆரம்பத்திலிருந்து பட்டாபிஷேகம் தொடங்கியதிலிருந்து முழுமையாக அங்கே வடித்திருக்கிறார்கள்— இராமேஸ்வரத்தில் ராமாயணத்தினுடைய முழு பகுதியையும் அமைக்கின்ற அளவிற்கு 10 கோடி ரூபாய்த் திட்டத்தில் சிறப்பான ஒரு பகுதியாக அதை ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே கோதண்டராமசாமி கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அதை யாரோ ஒரு வடநாட்டுப் பெருந்தனக்காரர் கடலிலே பாலம் போட்டு, அழகாக ஒரு கோயிலைக் கட்டி இருக்கிறார்கள். அந்தக் கோயிலைச் சுற்றி 5 ஆயிரம் ஏக்கர் நிலம், அழகான நிலங்களாக, படகு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற அளவிற்கு ஒரு சிறப்பான இடமாக அமைந்திருக்கிறது, அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்த்து அந்த இடத்தை உலகமே வியக்கின்ற அளவிற்கு ஒப்பற்றத் தலமாக, சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், தெய்வமும், தேசியமும் கலந்த மிகப் பெரிய தலைவர். அந்தத் தலைவருக்கு என்னுடைய தொகுதியில் இருக்கிற பசும்பொன் கிராமத்தில் ஒரு சிறிய சமாதி இருக்கிறது இங்கே 19 மாபெரும் தலைவர்கள் அத்தனை பேர்களுக்கும், நினைவுச் சின்னங்களை நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதேபோன்று, எங்களுடைய அருமைத் தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சமாதியை உயர்ந்த சமாதியாக— மக்கள் எல்லாம் அங்கே திரண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இறந்து விட்டாலும் கூட, இன்னும் இறக்காத தலைவர் என்று எண்ணி மக்கள் நாள் தோறும் வந்து, அங்கே பூஜை செய்து கொண்டிருக்கிறார்கள். தலையை மொட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு தோறும் பெரிய விழாவை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை ஒரு நல்ல சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிறகு, இந்த மருதுபாண்டியர்களின் வாரிசு எங்கள் ஊரிலே இருக்கிறார்கள். வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள், அதாவது மல்லுக்குறிச்சி, விக்கிரவாண்டிபுரம், சாத்தனூர் என்ற அந்த மூன்று கிராமங்களில், உண்மையான வாரிசுகள் வறுமையோடு வாடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த பென்சன் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, கம்பராமாயணத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் வந்தபிறகும்கூட, கம்பர் சமாதி இன்னும் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற நாட்டரசன்கோட்டையிலே இருக்கின்ற அந்தச் சமாதியை மிகச் சிறப்பாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இன்னும் ஒன்றிரண்டு விஷயங்கள். மதுரையில் தெப்பக்குளம் என்பது மிகச் சிறப்பான ஒன்று. அது தற்போது எருமை மாடு மேய்க்கிற இடமாக இருக்கிறது. அந்த இடத்திலே போய்ப் பார்த்தால், எருமை மாடுதான் உள்ளே இருக்கிறது. அதிலே தண்ணீரைவிட முடியாதா என்ன? தெப்பக்குளம் என்பது மிக அருமையான தெப்பக்குளம். அதிலே தினமும் தண்ணீரை விட்டு, வாராவாரம் அதைச் சுத்தப்படுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, நம்முடைய கக்கன்ஜி அவர்கள் அரிசன சமுதாயத்தில் பிறந்து, காந்தியாக வாழ்ந்து, மறைந்த எங்களுடைய அருமைத் தலைவர் கக்கன்ஜி அவர்கள் பிறந்த ஊரில் நினைவாலயம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நம்முடைய பத்திரிகையாளர்கள். பாவம், அவர்கள் 400 ரூபாய்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது விலைவாசி எல்லாம் கூடிக் கொண்டிருக்கிற நேரத்திலே, அவர்களுக்கு மட்டும் என்ன 400 ரூபாய்? இந்த 400 ரூபாயில் எப்படி அவர்கள் தொழிலைச் செய்ய முடியும்? ஆகவே, இந்த 400 ரூபாயை 800 ரூபாயாக ஆக்கிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அவர்களுக்கு இடம் எல்லாம் ஒதுக்கிக் கொடுத்தார்களாம். பிறகு தி.மு.க. ஆட்சி இங்கே நடந்துகொண்டிருந்தபோது, ஏதோ பி.டி.ஐ. நிருபர் அன்றைய முதலமைச்சருக்கு விரோதமாக ஒரு செய்தியை அனுப்பினார் என்ற காரணத்திற்காக அந்த இடத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் விட்டு விட்டுப் போய் விட்டார்களாம். எனவே தயவுசெய்து, நம்முடைய

முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அந்த வீட்டு மனையைக் கொடுத்து, அவர்கள் வீடு கட்டி வாழ்கின்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

## 5. 25–3–1989 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் தொடர்பான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன்.

* திரு. டி. எம். ரங்கராஜன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே, இந்த அவையிலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், போன பேரவையில் உறுப்பினராக இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு, 25–3–1989 அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அந்த உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அசெம்பிளி நூலகத்திற்குச் சென்று அன்றைய அசெம்பிளி புரொசீடிங்சை நான் பார்க்க நேரிட்டது. அன்றைக்கு அந்த புரொசீடிங்சிலே பல நிகழ்ச்சிகளை இங்கே நம்முடைய உறுப்பினர்கள் கூறுவதற்கு மாறாக அந்த 'அபிஷியல் ரிப்போர்ட்டில்' ரிப்போர்ட் செய்யப்பட்டு இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவ்வாறு தவறாக தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அந்த குறிப்பிலிருந்து எடுப்பதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல் நானும் பேரவையின் அன்றைய அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிற தொகுப்பினையும், அன்றையதினம் பேரவைத் தலைவருக்கு வழங்கப்பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் பற்றிய பேரவையின் ரெக்கார்டுகளையும் சரி பார்த்தேன். பார்க்கிறபோது இந்தப் பேரவையின் மரபுக்கு மீறி—பேரவையில் வழக்கமாக நடக்கிற சில பேச்சுகள் ரெக்கார்டு ஆகும், ஆனால் செய்கைகள் என்று ரெக்கார்டு ஆகி வருவது, வெளிநடப்பு என்றால் இந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள் என்பது ரெக்கார்டு ஆகும். சிரிப்பு, கரவொலி இவைதான் ரெக்கார்டு ஆகும். பாராளுமன்றத்திலே கூட அதுதான் நடைமுறையில் இன்றைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது,—அதற்கு மாறுபாடாக பல்வேறு நிகழ்ச்சிகளை அடைப்புக் குறிக்குள்ளே போட்டு, இப்படி இப்படி



யெல்லாம் அவைக்குள்ளே நடந்தது என்று அச்சாகியிருக்கிறது. ஒருவேளை அதுவே பேரவைத் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்த்தேன். அதிலேயும் சிலபல இடைச் செருகல்கள் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது. எனவே இவற்றை எல்லாம் நீக்குவதா அல்லது வேறு வகையில் திருத்தம் செய்ய முடியுமா என்பதை எல்லாம் நம்முடைய பேரவை விதிகளையும், நாடாளுமன்ற மரபுகள், நடைமுறைகள் பற்றியவையையும் முழுமையாக ஆராய்ந்து என்னுடைய தீர்ப்பை நாளை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1992–93—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான இலக்கியங்களையும் பாரம்பரியப் பண்பாட்டுச் சிறப்புகளையும், தொன்மையான நாகரிகப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டது தமிழ்நாடு. உலகின் மூத்த மொழிகளில் முதன்மையானது நம் தாய் மொழி தமிழ். நீண்ட நெடிய சரித்திரப் புகழையும், காலத்திற்கேற்ற மாறுதல்களையும் உள்ளடக்கி என்றென்றும் நிலைத்து நிற்கும் பண்பாடு தமிழர் பண்பாடு. இந்த வரலாற்றுப் பெருமைகளின் வளர்ச்சிக்கு வழி காணுகின்ற திட்டங்களைச் செயல்படுத்தும் துறைதான், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையாகும். தமிழகத்தின் மொழி மேம்பாட்டுப் பெருமையையும், பண்பாட்டுப் புகழையும் உலகிற்கு வெளிப்படுத்துகின்ற பணியில் இத்துறை மகத்தான பணியாற்றி வருகின்றது. தமிழர்கள் வரலாறு புதைந்து கிடக்கும் தமிழகத் திருக்கோயில்களை ஒரு முறை வலம் வந்தாலேயே, தமிழர் பண்பாட்டை நிறைவாகக் கற்றதற்கு ஒப்பாகும். எனவே, கோவில்கள் அமைந்துள்ள நகரங்கள், நமது சுற்றுலாத் துறையின் திட்டங்களுக்கு உயிரோட்டமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. உள்நாட்டுப்பயணிகள் மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அனைவரிடமும், சுற்றுலாவிற்கான ஊக்கத்தை உற்சாகப்படுத்துகிற வகையில் திட்டங்களைத் தீட்டி பணியாற்றி வருவது நமது சுற்றுலாத் துறையாகும். ஒரு ஜனநாயக அரசின் திட்டங்கள் மற்றும் அதன் சாதனைகள் மக்களைச் சென்றடைந்தால்தான், மக்களை அரசின் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கேற்க வைக்கின்ற மக்களாட்சித் தத்துவத்திற்கு நிறைவு ஏற்படும். பெரும்பான்மையான தமிழ் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிலுள்ள எங்கள் அரசின் சாத

னைகளையும், செயல்பாடுகளையும் மக்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டுமென்பது தேவையானது மட்டுமல்ல, அவசியமானதும் கூட. ஏனெனில் உண்மை மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டால்தான் பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்லி மக்களை மாயையில் ஆழ்த்த நினைக்கும் சிலரது செயல்களும் நடவடிக்கைகளும் காலத்தோடு கட்டுப்படுத்தப்படும். அந்த வகையில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பணி ஒரு அரசுக்கு மிகவும் இன்றியமையாதது. தமிழ் மொழி வளர்ச்சி தமிழர் தம் பண்பாடு ஆகியவற்றை என்றென்றும் கட்டிக் காத்துவரும் எங்கள் அரசின் சார்பாக முதலாவதாக......

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : முதலாவதாக தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் மீதான என்னுடைய பதிலுரையை முன்வைத்து அதனைத் தொடர்ந்து செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியத்தின் மீதும் நிறைவாக சுற்றுலாத் துறைக்கான மானியத்தின் மீதான எனது பதிலுரைகளை எடுத்துரைக்க விழைகிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற இலட்சிய நோக்கில் பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழி நடக்கும் எங்கள் அரசு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறையின் செயல்பாடுகளில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் பணிகளை மேலும் மேம்படுத்தும் வகையிலும் பல முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெரு முயற்சியால் அவரது ஆட்சிக்காலத்தில் தமிழ் வளர்ச்சித் துறைகளும் கலை வளர்ச்சி துறைகளும் ஒரே குடையின்கீழ் கொண்டு வரப்பட்டு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை என்று தனியாக ஒரு துறை தோற்றுவிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. தாய் மொழிக்கல்வியும் தமிழில் எழுதுகிற பயிற்சியும் தந்து எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றும் தமிழ் என்ற நோக்கத்தில் எங்கள் அரசு செயல்படுவதால் இந்திய மாநிலங்களிலேயே மொழி வளர்ச்சியிலேயும் வட்டார மொழியை ஆட்சியில் நடைமுறைப்படுத்துவதிலேயும் நமது மாநிலம் சிறப்பான இடத்தை வகிக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



கலை பண்பாட்டு வளர்ச்சி தமிழகத்தில் நிறைவாக நடைபெற்றாலும், அயல் மாநிலங்களுக்கு கலைக் குழுக்களை அனுப்புவதில் பிற மாநிலங்களின் கலைக் குழுக்களை வரவழைப்பதில் தென்னகப்பண்பாட்டு மையம் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் அளித்தல் போன்ற திட்டங்களுக்கு மேலும் வலுவூட்டுவதற்காக கலை தொடர்பான அனைத்துப்பிரிவுகளையும் இணைத்து கலை பண்பாட்டு இயக்ககம் ஒன்று உருவாக்கப்படும் என்று எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததற்கு இணங்க கலை பண்பாட்டு இயக்ககம் ஒன்று இப்போது புதிதாக அமைக்கப்பட்டு செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழ் வளர்ச்சித் துறையில் வெளியிடப்பட்டிருக்கிற ஆட்சிச் சொல் அகராதிகள் பிற மாநிலங்களின் ஆட்சி மொழிகளில் மொழி பெயர்ப்புக்கு உதவுகிற மூல நூல்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். பழைய இலக்கியங்களைக் காத்தல், புதிய இலக்கியங்கள் உருவாக ஊக்கம் அளித்தல், வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி செய்தல், சங்க காலப் புலவர்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டறிந்து நினைவுத் தூண்கள் எழுப்புதல், முறையாக தமிழ்நாடு வரலாற்றை எழுதுதல் போன்ற பணிகள் இத்துறையில் நடைபெற்று வருகின்றன. 1968ஆம் ஆண்டு சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி பேரறிஞர் அண்ணா அவர்களால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்று ஒரு அமைப்பு தொடங்கப்பட்டது. யுனெஸ்கோவின் நிதி உதவியோடு நடைபெறுவதாக உருவான இந்த நிறுவனம் தற்போது தமிழக அரசிடம் இருந்து முழு நிதி உதவியைப் பெற்று நடைபெற்று வருகிறது. ஏறத்தாழ 165-க்கும் மேற்பட்ட அரிய நூல்களை வெளியிட்டும் பல கருத்தரங்குகளை நடத்தியும் வருகின்ற இந்நிறுவனத்தை மேலும் வலுப்படுத்த வழி வகைகளைக் கண்டறிய வேண்டும் என்பதே என் விருப்பமாகும். அதற்குரிய ஆலோசனைகளைத் தெரிவிக்க மூத்த தமிழ் அறிஞர்களைக்கொண்ட குழுவொன்றை விரைவில் நியமிக்கக் கருதியுள்ளேன். அனைத்துக்கும் மேலாக புரட்சித் தலைவர் அவர்கள் முன்பு மதுரையில் நடத்திக் காட்டிய உலகத் தமிழ் மாநாட்டைப் போல அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை தமிழகத்தில் சீரும் சிறப்புமாக நடத்தலாமென்றும் எண்ணியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழகம் தொன்மை வாய்ந்த மொழியையும், பெருமை மிகுந்த பண்பாட்டினையும் பழைமையான நிலப் பகுதிகளையும் கொண்டது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மையாகும். ஆழ் கடலில் அமிழ்ந்த நகரங்களை ஆராய்ந்து கண்டறியும் முயற்சி மிகப் பெரிய அறிவியல் முயற்சி-

1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

ஆகும். பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி வரையிலும் உள்ள பகுதியில், பண்டைய காவிரிப்பூம்பட்டினம் பகுதி அமைந்து இருந்திருக்க வேண்டுமென்ற கருத்து நம்மிடையே ஏற்கெனவே நிலவி வருகிறது. எனவே, கடல் அகழ்வு ஆராய்ச்சியைப் போலவே காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையிலும், நிலப் பகுதியிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமும் நம்மிடம் வலுப்பெற்றுள்ளது. கோவா தேசிய கடல் அகழாய்வு நிறுவனத்தின் தலைவர் டாக்டர் எஸ். ஆர். இராவ் அவர்கள் மேற்பார்வையில், அந்த நிறுவனத்தோடு தொல்பொருள் ஆய்வுத்துறையும் இணைந்து பூம்புகாரில் அகழ்வாராய்ச்சிகளைத் தற்போது நடத்தி வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை வழங்குமாறு, தொல் பொருள் ஆய்வுத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடத்தப்படும் கடல் அகழ்வு ஆராய்ச்சியினைப் பற்றி, Society for Marine Archaeology 1991 ஜூலைத் திங்களில் வெளியிட்ட, Journal of Marine Archaeology என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது. அதில், "It is really gratifying to find that Tamil Nadu is the first state to promote preservation of under water cultural heritage" என்று தமிழகத்தைப் பற்றி சிறப்பாக குறிப்பிட்டிருப்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

பிற்பகல் 1–35

இத்துறையின்கீழ் உள்ள சென்னை " அருங்காட்சியகம் ", நமது மாநிலத்திற்குப் புகழ்தேடித் தருகின்ற அமைப்பாகும். அருங்காட்சியகத்தின் காட்சிக் கூடங்களை நவீனப்படுத்தவும், கலையரங்குக்குக் குளிர்சாதன (Air-conditioning) வசதி அமைக்கவும், அண்மையில் ஆணையிட்டுள்ளேன். ' பண்பாட்டுப் பலகணி, (cultural window) என்ற பெயரில், ஒவ்வொரு மாதமும் அருங்காட்சியக அரங்கில், கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருவதுபோல, இனி வாரம் இருமுறை ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மொழி இயல் வல்லுநராக வாழ்ந்து மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்கள் உருவாக்கிய, சொற்பிறப்பு அகரமுதலித் திட்டத்தையும், இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றுகிறது. அதன் இரண்டாம் தொகுதி இந்த ஆண்டு வெளியிடப்பட உள்ளது.



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இத்துறையின் மூலம், கலைப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும், வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும், மொழிக் காவலர்களுக்கும் நிதியுதவி வழங்குவதில் எங்கள் அரசு தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகிறது. மொழிக் காவலர்களாகத் திகழ்ந்தவர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை உதவி பெற்று வருகிற 1,577 பேர்களைத் தவிர மேலும் 500 பேருக்கு உதவி வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இதனால் அரசுக்குக் கூடுதலாக 25 இலட்சம் ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

மாவட்டந்தோறும் உள்ள அரசு அலுவலகங்களில், அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்த, ஊக்கம் அளிக்கும் வகையில், எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட, வட்ட நிலை அலுவலர்கள் பங்குபெறும், ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை தொடர்ந்து அரசு சிறப்பாக நடத்தும். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள, இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கலைப் படிமங்களை வைத்து, அரிய ஒரு கண்காட்சியை இந்த ஆண்டு, முதல் முறையாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது, இந்தக் கண்காட்சி 1992 ஏப்ரல் திங்களில் தொடங்கும். (மேசையைத் தட்டும் ஒலி.)

பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் நாற்பது பேருக்கு, இப்போது கோடை விடுமுறையில், கல்வெட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் தொடக்கப் பள்ளி, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களையும், இவ்வாண்டு முதல் அனுமதிக்கத்தக்க வகையில், இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மொஹஞ்சோதாரோ, ஹாரப்பா முத்திரை எழுத்துக்களை அறிதல், குமரிக் கண்டம், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைமுகங்களில், கடல் அகழ்வு ஆய்வு செய்தல், நாணயவியல், கல்வெட்டியல், கட்டிடக்கலை, சிற்பக் கலை ஆகியவற்றின் ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆராய்ச்சியாளருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ. 30 ஆயிரம் வீதம், மூன்று ஆண்டுக் காலத்திற்கு நிதியுதவியும், அந்த ஆராய்ச்சியாளர் அரசு அலுவலராக இருப்பின், அவருக்கு மூன்று ஆண்டுக்காலத்திற்கு முழு ஊதியத்துடன் கூடிய சிறப்பு விடுப்பும் வழங்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). அதாவது "fellowship" என்று சொல்வார்களே அத்தகைய fellowship-ஐ முதன் முறையாக வழங்கலாம் என்று தமிழக அரசு இப்பொழுது தான் முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இது தொடர்பான விதிமுறைகள் விரைவில் வகுக்கப்பட்டு வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்துள்ள சில வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய விளக்கத்தை இப்போது கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீது 24 வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் கொள்கை பற்றி விவாதிக்க மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எச். எம். ராஜு மற்றும் திரு. சுவாமிநாதன் ஆகியோர் வெட்டுத்தீர்மானங்களைக் கொண்டுவந்துள்ளார்கள். தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை ஆற்றிவரும் பணி, செயல்படுத்தும் திட்டங்கள், நிகழ்த்திய சாதனைகள் ஆகிய வற்றினைக் குறித்து, இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கொள்கை பற்றிய வெட்டுத் தீர்மானங்களுக்கு அவற்றையே என்னுடைய பதிலாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறேன்.

பிற்பகல் 1-40

தமிழில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் சிறப்புச் சலுகை அளிக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்களும், தமிழை பாடமொழியாகக் கொண்டு பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் சிறப்புச் சலுகை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடேசன் அவர்களும், வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவந்துள்ளார்கள். குறிப்பாக தமிழில் பி. எச். டி. பட்டம் பெற்றவர்களில் ஒரு சிலரையாவது, தமிழ் கலைப் பண்பாட்டு இயக்ககத்தில், பணியில் அமர்த்தக்கோரியும் வெட்டுத் தீர்மானம் கொண்டுவந்துள்ளார்கள்.

தமிழ்வளர்ச்சி-பண்பாட்டுத் துறையில், உதவி இயக்குநர்களை நேரடியாகத் தேர்வு செய்யும்போது, தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது,

தமிழ் வளர்ச்சித் துறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கு, தமிழில் பி.எச்.டி. பட்டம், எம்.பில். பட்டம் பெற்றவர்கள்தான் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள், மேலும், தொல்பொருள் ஆய்வுத்துறையிலும், அருங்காட்சியகத் துறையிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும், தமிழ் வளர்ச்சித் துறையிலும் தமிழ் மொழியில் பட்டம் பெற்றவர்களுக்குத் தான் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தமிழ் மொழியில் பி.எச்.டி. பட்டம் பெற்றுள்ள ஒரு சிலரையாவது, தமிழ் வளர்ச்சித் துறையில் நியமிக்க, கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்த, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர், சிங்காரம் கோரியுள்ளார். தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ். 11 மாவட்டங்களில், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும், 10 மாவட்டங்களில் தமிழ் ஆய்வு அலுவலர்களும், அரசு அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படும் அளவு குறித்த ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இப்பணிகளின் மேம்பாடு குறித்த அறிக்கையை, தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமிருந்து அரசு பெற்று, ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்து அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகின் பல பாகத்திலும் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கு, தமிழகத்திலிருந்து பத்திரிகைகள் அனுப்பக்கோரியும், மதுரையில் தொடங்கப்பட்ட உலகத் தமிழ்ச் சங்கத்தை மேலும் சிறப்பாக செயல்பட வைப்பது குறித்தும், சட்டமன்ற உறுப்பினர் திரு, எஸ். திருநாவுக்கரசு வெட்டுத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார்,

வெளிநாடுகளிலுள்ள தமிழ்ச் சங்கங்கள், அங்கு வாழும் தமிழர்களின் துணை கொண்டு, எவ்வித இடர்பாடும் இன்றி மிகவும் நல்ல நிலையில் இயங்கி வருவதை நான் அறிவேன். இத்தகைய அமைப்புகள், தமிழ்ப் பத்திரிகைகளைத் தாங்களாகவே வாங்கிக் கொள்கின்றன. இருப்பினும், அவர்களிடமிருந்து இதுகுறித்து வேண்டுகோள் ஏதேனும் வரப்பெற்றால், அரசு அதைப் பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

1986 ஆம் ஆண்டு மதுரையில், உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்கவிழா மட்டுமே நடந்தது. தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றினால் நடைபெறும் பணிகளும், ஏறத்தாழ ஒத்த பணிகளாகவே உள்ளன, எனவே, இது தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு வாய்ப்பு இப்போதைக்கு இல்லை. காலம் வரும்போது ஆராயலாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், பழந்தமிழ் இலக்கியங்களையும், நூல்களையும் பாதுகாப்பது குறித்து, வெட்டுத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களையும், நூல்களையும் பாதுகாக்கும் பணியினை, அரசு ஓலைச்சுவடி நூலகம், தஞ்சை

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய அரசு நிறுவனங்களும், சில தனியார் ஆய்வு நிறுவனங்களும் செவ்வனே செய்து வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம், இந்நூல்களை முறையாக புதுப்பித்து வெளியிடும் பணியினையும் சிறப்பாக செய்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு, தமிழ் மொழியைக் காக்கப் பாடுபட்ட தமிழ் மொழிக் காவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதுகுறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்.

திருத்தணி மற்றும் கன்னியாகுமரி போன்ற பகுதிகளை தமிழகத்துடன் சேர்க்கப்போராடிய தமிழ் மொழிக் காவலர்களுக்கு, மொழிக் காவலர் திட்டத்தின் கீழ், தற்போது 1,577 தியாகிகளுக்கு ஓய்வூதியமாக ஒவ்வொரு மாதமும் ரூ. 400 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஏற்கனவே என் பதிலுரையில் கூறியவாறு, மேலும் 500 தமிழ் மொழிக் காவலர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு முதல் நிதி உதவி செய்ய, அரசு திட்டமிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய சில விளக்கங்களுடன் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைக்கான பதிலுரையை முடித்துக் கொண்டு செய்தித் துறை குறித்த எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

அரசின்கொள்கைகளை, திட்டங்களை மற்றும் அதன் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்கிற துறையாக, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயங்கி வருகிறது. ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பலப்படுத்தும் அமைப்பாகவும், ஜனநாயகத்தின் மரபுகளைப் போற்றிக் காக்கின்ற அமைப்பாகவும் இருப்பது, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையாகும்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தமிழகத்தில் மறைந்த தலைவர்களின் நினைவகங்களைச் சிறந்த முறையில் பராமரித்து வருகிறது. நமது போற்றுதலுக்குரிய இதய தெய்வம், புரட்சித்தலைவர், பாரத ரத்னா, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது நினைவகம் சிறந்த முறையில் மாற்றியமைக்கப்படும் என்பதை போன வருடம் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது எடுத்துரைத்தேன். மாற்றியமைக்கப்பட உள்ள நினைவகத்திற்கு ரூபாய் 1.25 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு புரட்சித் தலைவர்



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவு நாளான 24—12—1992-க்குள் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-45

அதேபோல, மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர், மரியாதைக்குரிய ராஜீவ்காந்தி அவர்களுக்கு ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி மத்திய அரசே ராஜீவ்காந்தி அவர்களுக்கு நினைவகம் நிறுவ முடிவு செய்து, நமது பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டு உள்ளது. அதில் என்னையும் ஒரு உறுப்பினராக நியமித்து உள்ளார்கள். அக்குழுவின் தீர்மானத்தின்படி விரைவில் நினைவகத்திற்கு வடிவமைக்கப்பட்டு மிக விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப்பாறைக்கு அருகிலுள்ள பாறையில் கருங்கல்லினாலான 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர்சிலை நிறுவ அரசு தீர்மானித்து அதற்காக ரூபாய் 3.6 கோடி அனுமதித்து இருந்தது. இப்பணி புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் திரு. கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சிலை எழுப்பும் பணியின் முதற்கட்டமாக சிலை, பீடம் ஆகியவற்றை வடிவமைக்கும் பணி கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம் மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள சோழிங்கநல்லூரில் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்காக போன வருடம் ரூபாய் 50 இலட்சம் வழங்கப்பட்டது. பணியின் தன்மைக்கேற்ப அவ்வப்போது தேவையான தொகை ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல தந்தை பெரியார் அவர்களுக்கு கேரள மாநிலம் வைக்கத்தில் ஒரு நினைவகம் எழுப்ப 1987-இல் புரட்சித் தலைவர் ஆட்சியில் முடிவு செய்யப்பட்டு தற்போது பணிகளெல்லாம் முடிவுற்று, திறக்க தயாரான நிலையில் இருக்கிறது. விரைவில் தந்தை பெரியாரின் நினைவகம் கேரள மாநிலம் வைக்கத்தில் திறந்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிவகங்கைச் சீமையிலே சிறப்பாக ஆட்சி புரிந்த மாமன்னர்கள் பெரிய மருது, சின்ன மருது சகோதரர்களுக்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பவும், அவர்களுக்கு

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

சிலை எழுப்பவும் முடிவு செய்து, நினைவகமும், சிலை செய்யும் பணியும் முடியும் தருவாயில் உள்ளது. அதனுடைய திறப்பு விழா மிக விரைவில் நடைபெறும், (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே திரைப்படத் தொழிலில் தமிழகம்தான் முன்னணியில் உள்ளது. ஆனால் பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் உள்ளதுபோல ஒரு ஃபில்ம் சிட்டி, திரைப்பட நகர் ஒன்று சென்னையில் இல்லை என்கிற பெருங்குறை இருக்கிறது. இக்குறையினை சரிசெய்கிற வகையில் ரூபாய் 70 இலட்சம் செலவில் சென்னையில் ஒரு திரைப்பட நகரம் உருவாக்கப்படும் என்பதை கடந்த ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது எடுத்துரைத்தேன். அப்பணியினைத் தொடங்கி நடத்த முதற்கட்டமாக ரூபாய் 70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது, திரைப்பட நகருக்கான அடிக்கல் நாட்டு விழா மிக விரைவில், அதாவது வருகிற ஏப்ரல் 16 ஆம் தேதி நடத்தப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

திரைப்பட நகர் அரசுக்கு மிகுந்த வருவாயினை ஈட்டித்தரக் கூடிய ஒன்றாக அமையும். மேலும் திரைப்படத் தயாரிப்பாளர்களும் அரசுத் துறை நிறுவனங்களும், தொலைக்காட்சி நிலையமும் தங்களது தயாரிப்புச் செலவினைக் குறைத்துக்கொள்ள வழிவகை செய்யும் நிறுவனமாக இந்தத் திரைப்பட நகரம் உருவாகும்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக பொருட்காட்சிகளை இத்துறை நடத்தி வருகிறது. இந்தப் பொருட்காட்சிகள் அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவும் அமைவதால் மிகப் பெரும்பாலானோர் பொருட்காட்சிகளைக் கண்டு களித்து வருகின்றனர். கடந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம், கும்பகோணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொருட்காட்சிகளை 20 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கண்டுகளித்து உள்ளனர். இதனால் தமிழக அரசுக்கு ரூபாய் 88.43 இலட்சம் வருமானமாகக் கிடைத்துள்ளது. பல்துறை பணி விளக்க முகாம்கள், அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் பல்வேறு வகையான மக்கள் தொடர்பு சாதனங்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக இத்துறையினால் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை ஐந்து முகாம்கள் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன, இம் முகாம்கள் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அரசு தொடர்புடைய தேவையான தகவல்களை வழங்குகிற மகத்தான



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பணியினைச் செய்து வருகின்றன. இந்த வருடம் பல்துறை பணி விளக்க முகாம் தர்மபுரி மாவட்டத்தில் நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

பல்வேறு அரசு விழாக்களை இத்துறை சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகின்றது. கடந்த ஆண்டு 29 விழாக்கள் இந்த வகையில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. மறைந்த தலைவர்களுடைய நினைவுநாள் விழாக்கள் மூலமும், தலைவர்களுடைய நினைவகங்களைப் போற்றிப் பாதுகாத்தல் மூலமும், மறைந்த தலைவர்களுடைய புகழினை குன்றாது, குறையாது பாதுகாத்து, அவர்களுடைய தியாகங்களை மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் எடுத்துச் சொல்லுகின்ற பெரும் பங்கினை இந்த விழாக்கள் நிகழ்த்தி வருகின்றன.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநரகம் மாவட்டத் தலைமையகங்களிலிருந்து செய்தியையும், புகைப் படங்களையும் விரைவாகப் பெற்றிடவும், தலைமையகத்திலிருந்து மாவட்டங்களுக்கு அரசு செய்திகளை விரைவாக அனுப்பிடவும் ஃபேக்சிமிலி என்ற சாதனம் ரூபாய் நான்கு இலட்சம் செலவில் சென்னை கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் தலைமையகத்தில் இந்த ஆண்டு நிறுவப்படும் என்ற செய்தியினை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஜனநாயகத்தின் முதுகெலும்பாக இருந்து மக்கள் நலனுக்குரிய கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிற வகையில் செயல்பட வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அந்த வகையிலே தான் 1986 ஆம் ஆண்டு முதல் வயது முதிர்ந்த பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூபாய் 400 ஆக உள்ளது. சென்னை நிருபர்கள் குழுமம் (Madras Reporters' Guild) மற்றும் சென்னை பத்திரிகையாளர்கள் சங்கம் (Madras Union of Journalists) ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இந்த ஓய்வூதியம் மிகக் குறைவாக இருக்கிறது, உயர்த்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். அரசுக்கு நிதி நெருக்கடி இருந்தாலும் பத்திரிகைக் கூட்டமைப்புகளின் கோரிக்கை நியாயமானது என்பதை உணர்ந்து 1—4—1992 இலிருந்து பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூபாய் 400 இலிருந்து 500 ஆக உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தின் தாய்மார்கள் [illegible] கண்ணீரில் மிதக்கக்கூடாது, அவர்கள் குடும்பத்தில் அமைதியைச் சீர்குலைக்கின்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதை உணர்ந்து மலிவு விலை சாராயத்தை ஒழிக்கும் ஆணையினை நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் என்னுடைய முதல் ஆணையாகக் கையெழுத்திட்டு ஒழித்தேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இருந்தாலும் மதுவின் அரக்கத்தனமான கொடுமைகள் அரசின் கண்காணிப்பையும் தாண்டி ஆங்காங்கே தலையைக் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றன. எனவே, ஏழை எளிய மக்களை அந்தக் கொடுமையிலிருந்து முழுமையாக மீட்கவும் மதுவின் தீமைகளைப்பற்றிய பிரச்சாரத்தைத் துரிதப்படுத்துவதற்காகவும் சினிமா, நாடகம் போன்ற சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி ஒரு முழு நீள மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படம் தயாரிக்க முடிவு செய்து பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஜி. வெங்கடேசுவரன் அவர்களிடம் அந்தப் பிரச்சாரத் திரைப்படத்தினைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 85 இலட்சம் செலவில் தயாராகும் இப்படத்தயாரிப்பு மிக விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திரைப்படம் வருகின்ற அக்டோபர் 2 ஆம் தேதி—அதாவது மகாத்மா காந்தி அவர்கள் பிறந்த நாளன்று வெளியிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோலவே தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் செயலாளர், நாடகக் காவலர் என அழைக்கப்படுகின்ற பிரபல நாடகத் தயாரிப்பாளரும் நடிகருமான திரு. ஆர். எஸ். மனோகர் அவர்களால் மதுவிலக்குப் பிரச்சார நாடகம் ஒன்றும் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் தயாராகும் ''வெளிச்சம்'' என்ற இந்த நாடகம் வருகிற மே மாதம் 1 ஆம் தேதி அரங்கேற்றப்படும். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் மதுவின் தீமைகளை எடுத்துச் சொல்லுகின்ற வகையில் இந்தப் பிரச்சார நாடகம் தொடர்ந்து நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அரசின் தீவிரப் பிரச்சாரத்தினால் மதுவின் தீமைகளை மக்கள் புரிந்து கொண்டு ஏழை எளிய மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலிருந்து மதுவினை முழுமையாக விலக்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.



பிற்பகல் 1—55

கடந்த ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றியபோது கேபிள் டி.வி.யை ஒழுங்குப்படுத்தவும் முறைப்படுத்தவும் ''தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், 1984'' திருத்தப்படும் என தெரிவித்தேன். அதன் அடிப்படையில் வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சியில் திரைப்படம் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு 11—11—1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு வீடியோ கேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிமுறைகளில் தேவையான திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மூலம் கேபிள் டி.வி. அமைப்பு, உரிமம் வழங்கும் முறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்கள், சென்னையில் காவல்துறை ஆணையாளர் ஆகியோர் அதற்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாக இருக்கிறார்கள். இதன்மூலம் கேபிள் டி.வி. அமைப்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது; ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் செயல்பாடுகளை விரிவுபடுத்துகிற வகையிலும் அதன்மூலம் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குகிற வகையிலும் சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

'பாலர் அரங்கம்' என்று முன்பு அழைக்கப்பட்டு, தற்போது 'கலைவாணர் அரங்கம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள கலையரங்கத்தில், 13—4—1992 முதல், குழந்தைகளுக்கான திரைப்படங்கள் மற்றும் தேசிய திரைப்பட தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்படுகின்ற திரைப்படங்கள் திரையிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஆண்டு ஜூன் மாதம், குழந்தைகள் திரைப்பட விழா ஒன்று, சென்னையில் தமிழக அரசும் இந்திய குழந்தைகள் திரைப்பட சங்கமும் சேர்ந்து நடத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். குழந்தைகளுக்கான திரைப்படங்கள், தமிழிலேயே தயாரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத்தினால், தயாரிக்கப்பட்ட அல்லது குழந்தைகள் திரைப்படச் சங்கத்தினால் உரிமம் பெற்று வெளியிடப்படுகின்ற திரைப்படங்

களுக்கு, கேளிக்கை வரி ரத்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் அதிக அளவில் குழந்தைகளுக்கான திரைப்படங்கள், தமிழ் மொழியில் தயாரிக்கவும் வெளியிடவும் வாய்ப்பு உருவாகும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் வருகின்ற வள்ளுவர் கோட்டத்தில், ரூ. 50 லட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வெளி மாநில மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் உதவுகின்ற வகையில், டெல்லியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் தகவல் மையம் ( Information Centre ) ஒன்று அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, இந்த மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு எனது விளக்கத்தினை அளித்திட விழைகிறேன்.

செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் மானியக்கோரிக்கையின் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் 47 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து விளக்கம் கோரியுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எச். எம். ராஜு, திரு, ப. ரங்கநாதன், திரு. சி. சுவாமிநாதன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. எஸ். பன்னீர்செல்வம் மற்றும் திரு. எஸ். ராஜாராமன் ஆகியோர் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். 1992–93 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண் 47இல் செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றி—சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பையே என்னுடைய விளக்கமாக ஏற்றுக்கொள்ளுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள், திரைப்படத் தொழில் தொடர்பாக, 8 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார். திரைப்படங்களில் வரும் கொலை, கொள்ளை போன்ற காட்சிகளை, மத்திய அரசினால் நியமிக்கப்படும் திரைப்படங்களுக்கான மத்திய தணிக்கைக் குழுதான் கட்டுப்படுத்த வேண்டும். உறுப்பினருடைய கருத்துக்கள், தமிழக அரசினால் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவதில் தேவையற்ற காலதாமதம் ஏதும் ஏற்படுவதில்லை என்பதை உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல், திரையரங்குகளில் விற்கப்படும் போலி டிக்கட்டுகளைத் தடுத்து நிறுத்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது, அனைத்து இடங்களிலும் ஏற்பட்டிருக்கிற விலைவாசி ஏற்றத்தால் திரையரங்குகளில் நுழைவுக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று, தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் திரையரங்குகளில் நுழைவுக் கட்டணத்தைக் குறைக்கும் வாய்ப்பு ஏதும் இல்லை.

பிற்பகல் 2-00

தமிழகத்தில் வெளிவரும் ஒவ்வொரு திரைப்படத்திலும் மதுவின் தீமைகளை விளக்க, தமிழக முதல்வர் தோன்றுவது என்பது சாத்தியம் இல்லாத காரியமாகும். ஆனால் மதுவின் தீமைகளை விளக்குகின்ற காட்சிகளைத் திரைப்படங்களில் சேர்க்குமாறு திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் ஒவ்வொரு செய்தி மலரிலும் மதுவின் தீமைகளை விளக்க முதல்வரின் கருத்துக்கள் சொல்லப்பட்டு தமிழகம் முழுவதும் திரையரங்குகளில் காட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எ. தெய்வநாயகம், டாக்டர் தே. குமாரதாஸ், மற்றும் பி. ஆர். எஸ். வெங்கடேசன் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கான ஓய்வு ஊதியத்தை உயர்த்துவது குறித்து வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். தற்போது பத்திரிகையாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை நிருபர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் சங்கங்களின் வேண்டுகோளினை ஏற்று, அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு பத்திரிகையாளர்களுக்கான ஓய்வு ஊதியத்தை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டேன். அதன்படி தற்போது பத்திரிகையாளர்களின் ஓய்வு ஊதியம் மாதம் 400 ரூபாயிலிருந்து 1—4—1992 லிருந்து மாதம் 500 ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு, திரு. சுந்தரதாஸ் மற்றும் திரு. ராஜாராமன் ஆகியோர், அரசு பத்திரிகைகளுக்குக் கொடுக்கின்ற விளம்பரங்கள் குறித்து, வெட்டுத்

தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்கள் தேவையின் அடிப்படையிலும், விளம்பரத்தின் தன்மை அடிப்படையிலும், குறைந்த செலவிலேயே வெளியிடப்படுகின்றன. மேலும் பத்திரிகைகளின் சர்குலேஷனுக்கு ஏற்றபடி பத்திரிகைகளின் தன்மை மற்றும் பத்திரிகையின் வாசகர்கள் எத்தகையவர்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டுதான், விளம்பரங்கள் தரப்படுகின்றன.

தமிழ்நாட்டில், அரசு விளம்பரக் கழகம் அமைப்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு, அரசு விளம்பரக் கழகம் ஏற்படுத்துவதில் புதிதாக எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பதால் கைவிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசு மற்றும் அதன் நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. மேலும், விளம்பரங்களுக்காகச் செலவிடப்படுகின்ற அனைத்துச் செலவினங்களும், மாநிலக் கணக்காயர் அவர்களால் ஆய்வு செய்யப்படுவதால் தனியாக பெண்கள், கல்வியாளர்கள், ஊனமுற்றோர் மற்றும் சமூக நலத் தொண்டர்களைக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சுவாமிநாதன், திரு. ஜி. பழனிசாமி, திருமதி ரமணி நல்லதம்பி, திரு. எச்.எம். ராஜு மற்றும் திரு. சிங்காரம் ஆகியோர், திரைப்படங்கள் மற்றும் சுவரொட்டிகளில் ஆபாசம் பற்றியும் திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கச் செய்ய வேண்டும் என்றும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். படங்களைத் தணிக்கை செய்து, சான்றிதழ் அளிப்பது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள மத்திய தணிக்கைக் குழு ஆகும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும். சுவரொட்டிகளில் ஆபாசம் இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசால் 24—8—1973-ல் எழுதப்பட்ட கடிதத்தில் கூறியுள்ளவாறு, மத்திய அரசின் அறிவுரைக்கேற்ப, திரையரங்குகளில் தேசிய கீதம் இசைப்பது நிறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே திரையரங்குகளில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. ஆனால் திரைப்படத்தின் முடிவில் அது இசைக்கப்பட்ட போது பெரும்பாலான மக்கள் நின்று அதற்கு மரியாதை கொடுக்கமாட்டார்கள். வெளியேறத் தொடங்கி விடுவார்கள். இதைப் பார்த்துத்தான் மத்திய அரசு இத்தகைய ஒரு ஆணையைப் பிறப்பித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தெய்வநாயகம், திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் மற்றும் டாக்டர் குமாரதாஸ் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் பற்றி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விரைவில் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. இருப்பினும், அன்றாடப் பணிகளைக் கவனிப்பதற்கு தனி அதிகாரிகள் இருப்பதனால், பத்திரிகையாளர்களுக்குக் காலனி கட்டும் பணி தொடங்குவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் திரைப்படப் பயிற்சி நிறுவனத்தைப் பற்றி வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். திரைப்படக் கல்லூரியின் முதல்வர் மற்றும் விரிவுரையாளர்கள் எல்லாம், அவர்களுக்கான பணி விதிகளில் சொல்லப்பட்டிருக்கின்ற தகுதியின் அடிப்படையிலும், கல்வித் தகுதி அடிப்படையிலும் நியமிக்கப்படுகிறார்கள். இந்த நியமனங்கள் அரசுப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்கு உட்பட்டுள்ளதால், தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்தான் அங்கே நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. வி. இராஜேந்திரன் மற்றும் திரு.எஸ். இராசாராமன் ஆகியோர் திரைப்படத் தொழில் நுட்பவியல் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவது பற்றி வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளார்கள். தேவையின் அடிப்படையிலும் மாணவர்கள் பயன்படுத்துவதற்காகச் செய்யப்பட்டிருக்கின்ற வசதிக்கு ஏற்பவும் இது பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரைப்படத் தொழிலுக்கு கேரளம் மற்றும் ஆந்திர மாநில அரசுகள் போல, கடன் மற்றும் நிதி வசதிகளைத் தமிழக அரசும் செய்ய வேண்டுமென்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். இந்த அரசு திரைப்படத் தொழிலுக்கு பல்வேறு வகையிலும், ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து இந்தத் தொழிலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான படங்களுக்கு, ஒரு படத்திற்கு ரூ. 2 இலட்சம் வீதம் 45 படங்களுக்கு மொத்தமாக ரூ. 90 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. சிறந்த படங்களுக்கும், கலைஞர்களுக்கும் இந்த அரசு விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. திரைப்பட நகர் ஒன்றினை உருவாக்கி

தயாரிப்புச் செலவைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்றைய அரசு நிதிநிலைமையில், திரைப்படத் தொழிலுக்கு கடன் மற்றும் நிதி உதவிகளைச் செய்வதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. சுவாமிநாதன். திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. கே. செல்வராஜ் ஆகியோர் இத்துறை மூலம் தயாரிக்கப்படும் செய்திப் படங்கள் பற்றி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். தமிழக அரசின் கொள்கைகளை, சாதனைகளை விளக்குவதற்கு, செய்திப் படங்களைத் தயாரித்து தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் அனைத்து மக்களுக்கும் இத்துறை எடுத்துச் செல்கிறது. இதன்மூலம் மக்களுடைய சமுதாய, பொருளாதார நிலைமைகள் மேம்பாடு அடைவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுகிறது. தமிழகத்தில் மறைந்த தலைவர்களின் தியாகங்களையும் புகழையும் தற்போதைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் வகையில் செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டு மக்களுக்குக் காட்டப்படுகின்றன. அதேபோல் குடும்பக் கட்டுப்பாடு, மதுவின் தீமைகள், வரதட்சணைக் கொடுமைகள் ஆகியவற்றை விளக்க, செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டு, அனைத்துத் திரையரங்குகளிலும் காண்பிக்கப்படுகின்றன. மதுவின் தீமைகளை விளக்க முழு நீளத் திரைப்படம் ஒன்றை அரசே தயாரிக்கவிருக்கிறது. எங்களுடைய ஆட்சி பதவி ஏற்றபிறகு, தயாரிக்கப்பட்ட செய்தி மலர்களின் எண்ணிக்கை 8 ஆகும். மாதத்திற்கு ஒன்று என்ற முறையில் வெளியிடப்படுகிறது. ஒரு செய்தி மலர் தயாரிக்க ஆகும் செலவு ஐம்பதாயிரம் ரூபாய் ஆகும். 148 பிரதிகள் எடுக்க ரூ. 5.5 இலட்சம் செலவாகிறது. இதுவரை 8 செய்தி மலர்களுக்கும் சேர்த்து, மொத்தச் செலவு ரூ. 48 இலட்சம் ஆகியுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சில நிகழ்ச்சிகளைத் திரைப்படமாக எடுத்து திரையரங்குகளில் காட்டுவது பற்றி விவாதிக்க வேண்டுமென்று 4 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். தொகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் குறை கேட்கப் போகும் நிகழ்ச்சிகளை எல்லாம் திரைப்படமாக எடுத்து, எல்லாத் திரையரங்குகளிலும் காட்டுவது என்பது சாத்தியம் இல்லாத ஒன்றாகும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் சிறப்புத் 'தன்னிறைவுத் திட்ட வளர்ச்சிப் பணிகளையும் அறிவொளி இயக்க நிகழ்ச்சிகளையும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்ச்சிகளையும், திரைப்படமாக எடுத்து, செய்தித்துறை மூலமாக திரையரங்குகளில் காண்பிக்கப்படுகின்றன. அதே போல், அவைகளையே வீடியோ மலர்களாக உருவாக்கி,



வீடியோ கேசட் மூலம் அனைத்து ஒன்றியங்களிலும் பொது மக்களுக்கும் காண்பிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள் வயது வந்தவர்களுக்கான படங்களை, குழந்தைகள் கண்டிப்பாகப் பார்க்கவிடாமல் தடுப்பது பற்றி ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். வயது வந்தவர்களுக்கான படங்கள், திரையரங்குகளில் காட்டப்படுகின்றபோது, 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு டிக்கெட்டுகளை வழங்கக் கூடாது என்று விதிமுறை இருக்கிறது. அதை மீறிச் செயல்படும் திரையரங்கு உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கிராமப்புறங்களில் உள்ள டூரிங் டாக்கீஸ் வரியைக் குறைக்கவும், நகர்ப்புறங்களில் உள்ள ஏ.சி. திரையரங்குகளில் வரியை உயர்த்தவும், வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

திரையரங்குகளில் நுழைவுக் கட்டணத்தின் அடிப்படையில் தான் கேளிக்கை வரி நிர்ணயிக்கப்படுகிறது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற திரையரங்குகளுக்கு, வெவ்வேறு அளவு கோலின் அடிப்படையில், நுழைவுக் கட்டணம் நிர்ணயிக்கப் படுகிறது. ஏ. சி. திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் அதிக அளவில் உள்ளது. ஆகையினால், கேளிக்கை வரியும் அதிகமாகவே உள்ளது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள், கேபிள் டி.வி.யை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். கேபிள் டி.வி. அமைப்பை ஒழுங்குமுறைப்படுத்த, சென்ற ஆண்டு இத்துறையின் மானியத்தின் மீது நான் ஆற்றியிருக்கின்ற உரையின்படி, சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து, கேபிள் டி.வி. ஒழுங்குபடுத்தப்பட்டு இருக்கிறது. தணிக்கை செய்யப்படாத திரைப்படங்களை கேபிள் டி.வி. மூலம் காட்டுபவர்களுக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் விதிக்க, சட்டத்தில் இடம் செய்யப்பட்டு இருக்கிறது. அதே போல், பதிப்புரிமை ( Copy right Act ) சட்டத்தின்படி உரிமையாளர்களின் இசைவினைப் பெற்ற பிறகுதான், கேபிள் டி.வி. மூலம் திரைப்படங்களை வெளியிடமுடியும். மேலும் இச்சட்டத்தின் கீழ் வேறு எந்தவிதமான குற்றங்கள் செய்யப்பட்டிருந்தாலும், அபராதமும் சிறைத்-

தண்டனையும் விதிக்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆகையினால், கேபிள் டி.வி., உரிமம் வழங்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவது குறித்து, ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துறையின் கருத்து பெறப்பட்டுள்ளது.

சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தின் தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் தினமும் ஒளிபரப்புவது குறித்து சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் கொள்கை அளவில் முடிவெடுக்கப்பட்டு உள்ளதா என்பதையும் இது குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதா என்பதையும் தெரிவிக்கும்படி செய்தி மற்றும் சுற்றுலாத் துறை கேட்டுக்கொண்டது.

மேதகு ஆளுநர் உரையின்போதும், வரவு—செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கும் போதும், சட்டமன்றக் கூட்டமாக இல்லாமல், சிறப்புக் கூட்டமாக விழா போன்ற முக்கிய நிகழ்ச்சிகள் சட்டமன்றப் பேரவையில் நடக்கும்போதும் தொலைக்காட்சி நிலையத்தாரால் நேரடி ஒளிப்பரப்பாக—லைவ் டெலிகாஸ்ட் இல்லாமல்—ஒருசில மணித் துளிகள் இந்த நிகழ்ச்சிகளை வீடியோ செய்து தொலைக்காட்சியில் செய்திகள் நேரத்தில் ஒளிபரப்பப்படுகின்றன. இதைத் தவிர தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளி பரப்பும் கருத்துரு இச்செயலகத்தின் ஆய்வில் இல்லை. மேலும் இது தொடர்பாக இச்செயலகம் மத்திய அரசுக்கு யாதொரு பரிந்துரையையும் அனுப்பவில்லை. தற்போது நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் நிகழ்ச்சிகள் மற்றும் நிதிநிலை அறிக்கை அவைக்கு அளிப்பது ஆகியவற்றின் நேரடி ஒளிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பலனை அறிந்தபின்னர் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்புவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருத்தில் கொண்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒட்டப்பிடாரத்தில் உள்ள பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியன் கோட்டையில் 9 நுழைவாயில்கள் வெள்ளையத் தேவன் உட்பட பல வீரர்கள் பெயரில் அமைக்கப்பட்டன. அதில் முதல் நுழைவாயில் கலைஞர் கருணாநிதி நுழைவாயில் என்று பெயரிடப்பட்டது. (குறுக்கீடு) அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.**





அவர்கள் ஆட்சியில் நீக்கப்பட்டது. ஆனால் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டபோது மீண்டும் கருணாநிதி அவர்களால் அவ்வாறே பெயரிடப்பட்டது. எனவே அதனை நீக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி).

ஹரிஜன மக்களின் வீரனாகத் திகழ்ந்தவரும் கட்டபொம்மனோடு கூடவே இருந்தவருமான மாவீரர் சுந்தரலிங்கம் அவர்களின் பெயரை இந்த நுழைவாயிலுக்கு வைக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜாராமன் அவர்கள், நுண்கலை பல்கலைக் கழகம் பற்றி வெட்டுத் தீர் மானத்தைக் கொடுத்துள்ளார்கள். நுண்கலை மற்றும் திரைப்படத் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் அமைக்க, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ் அவர்கள், தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியை, தேசியக் கண்ணோட்டம் கொண்ட, வர்த்தக ரீதியான படங்கள் தயாரிக்கப்படும் செயல் பாடுகள் கொண்டதாக மாற்றுவது பற்றி, ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். தேசியக் கண்ணோட்டம் கொண்ட செய்தித் திரைப்படங்களை, தமிழ்நாடு அரசு தயாரிக்கிறது. வர்த்தக ரீதியான திரைப்படங்களை, அரசின் சார்பில் தயாரிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் ஆகியோர், வறுமையில் வாடும் பழம்பெரும் நடிக நடிகையருக்கு பென்ஷன் அளிப்பது குறித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ளனர். நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம் ரூ. 400 ஓய்வூதியமாக வழங்கும் திட்டம், தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும், இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய சில விளக்கங்களோடு செய்தித் துறைக்கான பதிலுரையை நிறைவு செய்து சுற்றுலா பற்றிய எனது பதிலுரையைத் தொடங்கவிருக்கின்றேன்.

பிற்பகல் 2-15

**தமிழ்நாட்டின் வளமை மிக்க கலாச்சாரமும், வனப்புமிகு இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத் தலங்களும், பண்பாட்டுப்**

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

பாரம்பரியம் மிக்க திருக்கோவில்களும், திருவிழாக்களும், தமிழ்நாட்டை வெளியுலகுக்கு சிறப்பாக அறிமுகப்படுத்தும் பணியில் பெரும் பங்கு வகிக்கின்றன.

குறிப்பாக தமிழகம், இந்தியக் கலாச்சாரத்தின் மிகப் பழம் பெரும் அரணாக விளங்குவதுடன், திருக்கோவில் கட்டிடக் கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை, திருவிழாக்கள், திருக்கோவில் வழிபாட்டு முறைகள், கிராமப்புறக் கலைகள், கைவினைப் பொருட்கள், பட்டுத் துணிகள் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை முதலானவற்றை அறிந்து, அனுபவித்து, உணர்ந்து மகிழக்கூடிய தன்னிகரில்லா இடமாக விளங்குகிறது. வெளிநாட்டவர்களை நம் நாட்டிற்கு ஈர்க்கின்ற பெருமையும், அன்னியச் செலாவணியை நமக்கு அள்ளித் தருகின்ற சிறப்பும் மற்ற மாநிலங்களிலுள்ள சுற்றுலாத் தலங்களை விட, நமது தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு அதிகமாய் இருக்கின்றது என்றால், அது மிகையாகாது.

1991 ஆம் ஆண்டில், தமிழகம் வந்து சென்ற அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அது கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அயல்நாட்டுப் பயணிகளின் வருகை 7.9 விழுக்காடாகவும், உள்நாட்டுப் பயணிகளின் வருகை 15.05 விழுக்காடாகவும் கடந்த ஆண்டைவிட உயர்ந்துள்ளது.

சுற்றுலாவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டுதான், சுற்றுலா ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மற்ற தொழில்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளும், உதவிகளும், சுற்றுலாத் தொழிலுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் பல்வேறு சலுகைகள், தற்போது இந்த அரசால் முன்னுரிமையுடன் சுற்றுலாத் தொழிலுக்கு வழங்கப்படுகின்றன.

நிலத்தின் மதிப்பீடு நீங்கலாக, ரூ. 1 கோடிக்குக் குறைவாக முதலீடு செய்யப்படும், ஒன்று முதல் மூன்று நட்சத்திர ஓட்டல்கள் கட்டவும், பொழுதுபோக்குப் பூங்காக்கள் அமைக்கவும் (Amusement Park), அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலாப் பயணத் திட்டங்களை (Approved Tours) இயக்குபவர்களுக்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளை (Air-conditioned Coaches) வாங்கவும், கோல்ப் திடல்கள் (Golf Courses) அமைக்கவும், அரசு அங்கீகாரம் பெற்ற சிற்றுண்டியகங்களை நடத்தவும், சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகராட்சிகள் நீங்கலாக, இதர இடங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு பல சலுகைகளை அரசு வழங்கி வருகிறது. அவை :



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் சலுகை வட்டி வீதத்தில், சுற்றுலாத் தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படுகிறது.

ரூ. 10 லட்சத்திற்கு மேற்படாமல் செய்யப்படும் முதலீட்டிற்கு, நிலத்தின் மதிப்பு நீங்கலாக, 10 சதவிகிதம் ஊக்க உதவித் தொகை வழங்கப்படுகிறது.

புதிதாகத் தொடங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள், விற்பனை வரி செலுத்துவது, முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்கப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுகளுக்கு, ஓட்டல் அறைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இதர தொழில்களுக்கு இணையாக, சுற்றுலாத் தொழிலுக்கும், மின்கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது. மின்னாக்கி (Generator) வாங்குவதற்கான முதலீட்டில், ரூ. 5 லட்சத்திற்கு மேற்படாமல், 15 விழுக்காடு ஊக்க உதவித் தொகை வழங்கப்படுகிறது. "Special Tourism Development Area" —அதாவது, "சிறப்பு சுற்றுலாப் பகுதிகள்" என்று முட்டுக்காடு—மாமல்லபுரம்—காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை, முதல் கட்டமாக மைய அரசு அறிவிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ள இருக்கிறோம். போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் இப்பகுதிகளைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் வரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தற்போது இந்த இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, மத்திய அரசின் நிதியுதவியுடன், இந்தப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக தரங்கம்பாடிக்கு அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள், விரும்பிப் பார்க்க வரத்தக்க வகையில் ஒரு மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் அரசுத் துறைகளின் மூலமாக, இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதன்பின் இந்த மையங்கள் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2–20

பழமை வாய்ந்த சிறிய நகரங்கள் யாவும் "பண்பாட்டு பாரம்பரிய நகரங்களாக", அதாவது Cultural Heritage Towns—ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு நகருக்கும் "சிறப்பு சுற்றுலா மேம்பாட்டுக் குழுமம்"—Special Toursim

Development Authority அமைக்கும் திட்டமும் அரசிடம் உள்ளது. இந்த நகரங்களைப் பேணிப் பாதுகாத்து, தூய்மைப்படுத்தி, அழகாக வைத்திருக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நகரங்களில் பொது மக்களுக்காக சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். திட்டமிடப்படாத ஒழுங்கற்ற வளர்ச்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது. நமது மாநிலத்தில் மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், இராமேஸ்வரம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருத்தணி, கன்னியாகுமரி பழனி ஆகிய நகரங்கள் ''பண்பாட்டுப் பாரம்பரிய நகரங்களாகவும்—அதாவது, Cultural Hertitage Towns ஆகவும், உதகமண்டலம், குன்னூர் அடங்கிய நீலகிரி மலைப் பகுதி, கொடைக்கானல் அடங்கிய பழனி மலைப்பகுதி, ஏற்காடு அடங்கிய சேர்வராயன் மலைப்பகுதி, குற்றாலம் ஆகியவை ''இயற்கையெழில் பாரம்பரியப் பகுதிகளாகவும்'' அதாவது Natural Heritage areas ஆகவும் இனம் பிரிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சுற்றுலாவின் வளர்ச்சியினைத் துரிதப்படுத்தவும், அதன் பெருமையினை வெளிப்படுத்தவும், பல்வேறு முயற்சிகள் மேற்கொள்வது அவசியமாகும். எனவே, நமது வாழ்க்கை முறை, கலை, கலாச்சாரம், பழம்பெருமை, ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் ஆகியவற்றை முறையாகக் கொண்டாட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் பொங்கல், மாமல்லபுரம் நாட்டிய விழா, சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா, மதுரை சித்திரைத் திருவிழா, உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, கோத்தகிரி, கல்ராயன் மலைகள் ஆகிய இடங்களில் நடத்தப்படும் கோடை விழாக்கள், இந்த நோக்கத்தினைச் செயல்படுத்துகிற வகையில், தவறாமல் சிறப்பாக நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஆண்டு புதிதாக தருமபுரி மாவட்டத்தில், ''மாம்பழ விழா''வும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

பொதுவாக எந்தத் துறை என்றாலும், கூட்டுத் தொழில் முயற்சிகள் Joint Sector and Associate Sectors வெற்றி அடைந்திருப்பதுடன், மக்களுக்குப் பல்வேறு நன்மைகள் செய்திருப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த அடிப்படையில் தற்போது டிட்கோ நிறுவனம் அனுசரிக்கும் பங்கு மூலதன முதலீடு செய்தல் அல்லது ஊக்கத் தொகை மற்றும் பிற சலுகைகள் அளித்தல் அல்லது தேவையான நிலம்



ஒதுக்கீடு செய்தல் போன்ற முறைகளைப் பின்பற்றி, தனியார் துறையும் கூட்டுத் துறையும் சுற்றுலாத் திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்த வழிவகைகள் செய்யப்படும்.

சுற்றுலா மையங்களில் விளையாட்டுக்களையும் குறிப்பிட்ட நாட்களில் ஒருங்கிணைந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத் தலங்களுக்கு மிகுந்த விளம்பரம் கிடைப்பதோடு, மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தவும் வாய்ப்பு உள்ளது. தற்போது, வீர விளையாட்டுக்களான Water Sports நீர் விளையாட்டுப் போட்டிகள், மலைப்பாதைநடைப்பயணம் (Trekking), மலையேறுதல் (Mountaineering) மற்றும் Hang Gliding என்று சொல்லக்கூடிய வானில் பறத்தல் போன்ற விளையாட்டுகளுக்கான வசதி கொண்ட சுற்றுலாத் தலங்கள் நாட்டில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

நமது முயற்சிகளுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையில், முட்டுக்காடு உப்பங்கழியை ஆழப்படுத்தவும், அங்கே தேசிய நீர் விளையாட்டுப் போட்டி நடத்தும் நிறுவனம் ஒன்றினை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). அங்கே Kayaking, Canoeing, Waterking Wind Surfing போன்ற Water Sports, அதாவது நீர் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே இது போன்ற தேவையான நவீன விளையாட்டு வசதிகளை நமது சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தி, சுற்றுலாவை ஊக்குவிக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதகமண்டலத்தில் புதிதாக ஒரு மண்டல உணவாக்கப் பயிற்சி மையம் தொடங்கப்படும். இதற்கான இடம் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ள சிறு சிறு தீவுகள், சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து இழுக்கின்றன. ஆனால் அவற்றிற்குச் சென்றுவர படகு வசதிகள் இல்லாததால் பெரும்பாலான பயணிகள் தற்போது அங்கே வசதியாகச் சென்றுவர முடியவில்லை. மன்னார் வளைகுடாவில்தான், நமது தேசிய கடல் பூங்காவும் அமைந்துள்ளது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தீவுகளுக்குச் செல்லும் ஆராய்ச்சியாளர்களையும், மாணவர்களையும் தவிர பிறர் இங்கு செல்வதைப் பொதுவாகத் தவிர்க்கின்றனர். சிறப்பு

மிக்க இந்த சுற்றுலா மையத்திற்குச் சென்றுவரும் முற்றிலும் புதிய அனுபவத்தை, தற்போது சுற்றுலாப் பயணிகள் இழக்கின்றனர். எனவே மன்னார் வளைகுடாவில் உள்ள பல தீவுகளில் ஒன்றான முயல் தீவில், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு சிறிய உணவகத்தை அமைப்பதற்கும், முயல் தீவிற்கும், இதர தேசிய கடல் பூங்கா தீவுகளுக்கும், சுற்றுலாப் பயணிகள் எளிதில் சென்றுவர படகு வசதிகளையும் செய்துதர, அரசு முடிவு செய்து உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2—25

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் தலைமை அலுவலகப் பணியாளர்களுக்கும், மற்றும் போக்குவரத்துப் பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று ஓட்டல்களில் பணியாற்றும் 729 பணியாளர்களுக்கும் 1—4—1992 முதல் வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது இந்த நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்பதால் கழகத்திற்கு 4.61 இலட்ச ரூபாய் செலவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால் தற்போது ஈட்டுத் தொகையாக ரூ. 25,500 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. அவர்களது நீண்டநாள் கோரிக்கையை ஏற்று அந்த ஈட்டுத் தொகை அரசுப் பணியாளர்களுக்கு இணையாக ரூ. 60,000 ஆக உயர்த்தப்படுகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொளகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் ஆண்டொன்றுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பத்தாண்டுக் காலம் சிறப்பாக பணிபுரிந்த பணியாளர்களுக்குக் கைக்கெடிகாரம் பரிசாகக் கொடுக்கப்பட்டு வந்த திட்டம், 1988-ல் கைவிடப்பட்டது. அப்பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, பத்தாண்டுக் காலம் இச்சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்த எல்லா பணியாளர்களுக்கும் கைக்கெடிகாரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 247 நபர்கள் பயன் பெறுவார்கள். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1.25 இலட்சம் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி).





சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் நட்சத்திர ஓட்டல்கள், சிற்றுண்டி விடுதிகள் (Restaurants) சாலையோர உணவகங்கள் (Motels) நன்முறையில் செயல்படவும், ஓட்டல்களில் உள்ள தோட்டங்கள் சீரிய முறையில் பராமரிக்கப்படவும் அங்கு பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கவும் ஊக்கப் பரிசுகள் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறந்த ஓட்டல் என தேர்ந்தெடுக்கப்படும் ஓட்டல் மேலாளருக்கு, 5,000 ரூபாய் ரொக்கப்பரிசும், பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபாய் பரிசாகவும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறந்த சிற்றுண்டி விடுதியாக (Restaurant) தேர்ந்தெடுக்கப்படும் சிற்றுண்டி விடுதி ஒன்றுக்கு 5000 ரூபாய் பரிசு வழங்கப்படும். இதில் மேலாளருக்கு ஆயிரம் ரூபாயும், தலைமைச் சமையல்காரருக்கு (Chef) 1,000 ரூபாயும், மீதமுள்ள 3,000 ரூபாயை இதர பணியாளர்களுக்கும் சமமாகப் பகிர்ந்து ஊக்கப் பரிசாக அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

சிறந்த சாலையோர உணவகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் உணவகம் (Motel) ஒன்றுக்கு அதில் பணிபுரியும் மேலாளருக்கு 2,500 ரூபாயும், ஏனைய பணியாளர்களுக்கு தலா 250 ரூபாயும் பரிசாக வழங்கப்படும். ஓட்டல்களில் பராமரிக்கபடும் தோட்டங்களில் சிறந்ததோட்டம் என தேர்ந்தெடுக்கப்படும் தோட்டத்தில் பணியாற்றும் பணியாளருக்கு 2,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படும் மேலும் சிறந்தவை என தேர்ந்தெடுக்கப்படும் ஓட்டல், சிற்றுண்டிச்சாலை, சாலையோர உணவகம் மற்றும் தோட்டங்களுக்கு கேடயங்கள் (Shield) இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி). இப்பரிசுத் திட்டம், பணியாளர்களிடையே ஒரு ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தும் என்றும், இதனால் வாடிக்கையாளர்களின் நலன் மேலும் பேணப்படும் என்றும் நம்புகிறேன்.

தற்போது தமிழக அரசின் சுற்றுலாத்துறை டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் நடத்தி வரும் சுற்றுலா அலுவலகங்களில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்களுக்கு அறை முன் பதிவு செய்வது, சுற்றுலா பயணங்கள் (conducted tours) ஏற்பாடு செய்தல், அவற்றுக்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்வது போன்ற சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

பிற்பகல் 2-30

சென்னை மாநகரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் எதுவும் இல்லை என்ற குறையைப் போக்க ப்ராட்வேயில் 17 கிரவுண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ள பழைய சட்டக் கல்லூரி மாணவர் விடுதி நவீனமயமாக்கப்பட்டு, நட்சத்திர ஓட்டல்களாக மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் கட்டிடத்தை பொதுப் பணித் துறையிடமிருந்து, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குத்தகைக்கு எடுத்துள்ளது. இங்கு இரண்டு நட்சத்திர ஓட்டல் அமைப்பதற்கான திட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது. இதற்கான செலவு சுமார் ரூ. 2 கோடி ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய சுற்றுலா வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்றும், மாநில, மத்திய அரசின் நிதி உதவியோடும் இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது சுற்றுலா வளாச்சிக் கழகத்திடம் இரண்டு குளிர் சாதன வசதி உடைய சொகுசுப் பேருந்துகள் மட்டுமே உள்ளதால், சுற்றுலாப் பயணிகளைக் கவகிருன்ற வண்ணம் மேலும் இரண்டு குளிர்சாதன வசதி உடைய புதிய சொகுசுப் பேருந்துகள் சுமார் 20 இலட்சம் ருபாய் செலவில் வாங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு அதாவது 1991-92 ஆம் ஆண்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ. 3 இலட்சம் வரை இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல் ரூம்களின் மீது ஆடம்பர வரி, உணவுப் பண்டங்கள் வழங்கல் மூலம் விதிக்கப்படும் விற்பனை வரி ஆகியவற்றின் மூலமாக ரூ. 46 இலட்சம் அரசுக்கு ஈட்டித் தந்துள்ளது. அரசுக்கு மோட்டார் வாகன வரி மூலம் ரூ. 16 இலட்சம் ஈட்டிக் கொடுத்துள்ளது. அரசிடமிருந்து பெற்றிருந்த கடன் தவணை பாக்கி, கடன் மீதான வட்டி ஆகியவைகளுக்காக ரூ. 23 இலட்சம் அரசுக்கு இரண்டாண்டுகளுக்குப் பிறகு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு கடன் தவணை, கடன் மீதான பாக்கி ரூ. 18 இலட்சம் கட்டவுள்ளது. இந்த வருமானங்கள் அனைத்தையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் ஒரு கோடியே மூன்று இலட்சம் ருபாயை அரசுக்கு இந்தக் கழகம் ஈட்டித் தந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிந்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். சுற்றுலாத் துறைக்கான மானியக் கோரிக்கையின் மீது,



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் 56 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. ஆர். சிங்காரம் திரு. ஆர். நடேசன, திரு. தே. குமாரதாஸ் ஆகியோர் சுற்றுலாக் கொள்கையைப் பற்றி விவாதிக்க வெட்டுத தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். சுற்றுலாத் துறையின கொள்கை விளக்க குறிப்பிலும், இம்மானியக் கோரிக்கை மீது நான் ஆற்றிய உரையிலும், இது பற்றிய விளக்கங்கள் போதுமான அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். அவற்றையே என்னுடைய பதிலாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. வி. ராஜேந்திரன், திரு. வி. கே. லட்சுமணன் உட்பட 12 சட்டப் பேரவை உறுப்பினர்கள் தத்தம் தொகுதிகளிலுள்ள சில இடங்களை சுற்றுலா மையங்களாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள இடங்களில் பல, ஏற்கெனவே மாவட்ட உலாத்தலங்கள் ஆகும், சில தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட இடங்களாகும். சில இடங்கள் வனத்துறையின் பராமரிப்பில் உள்ளவை ஆகும். இந்த இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இவ்விடங்களிலுள்ள கவரத்தக்க அம்சங்கள், இவ்விடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள அடிப்படை வசதிகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நிதி நிலைக்கேற்ப, இவற்றை சுற்றுலா மையங்களாக அறிவிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எச். எம். ராஜு, திரு. ஆர். நடேசன், திரு. எம். சுந்தரதாஸ் உட்பட, 9 சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஏற்கனவே மாவட்ட உலாத்தலங்களாகவும், சுற்றுலா மையங்களாகவும் உள்ள இடங்களுக்குக் கூடுதல் வசதிகள் தேவை என்பது குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில் ஓட்டல் ஒன்று கட்ட வேண்டும் என்றும், வேடந்தாங்கலில் பறவைகளைக் காண்பதற்கு போதிய வசதிகள் செய்து தர வேண்டுமென்றும், பூம்புகாரை அழகுபடுத்த வேண்டுமென்றும். நீலகிரி மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களிலுள்ள தமிழ்நாடு ஓட்டல்களில் கூடுதல் அறைகள் கட்டிக் கொடுக்க வேண்டுமெனறும். பேச்சிப்பாறையில் இளைஞர் விடுதி ஒன்று கட்ட வேண்டுமென்றும், ஸ்ரீபெரும்புதூரில் ஒரு ஓட்டல் கட்ட வேண்டுமென்றும் பல்வேறு வகையான கோரிக்கைகளைக் கொடுத்துள்ளனர். அரசின் நிதிநிலைக்கேற்ப, இவ்வசதிகள் படிப்படியாக செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 மார்ச் 25

பிற்பகல் 2-35

சாந்தோம் கடற்கரையைத் தூய்மைப்படுத்த வேண்டுமென்றும், அதை ஒரு அற்புதமான கடல்-வாசஸ்தலமாக அமைக்க வேண்டுமென்றும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். இராசாராமன் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் மூலம் கோரியுள்ளார்கள். சாந்தோம் கடற்கரை, மெரினா கடற்கரையின் தென்பகுதியாகும். இக்கடற்கரையைப் பாதுகாக்க தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மெரினா கடற்கரை மேம்பாட்டிற்காக ஒரு திட்டத்தைத் தயாரிக்கப் பணிக்கப்பட்டுள்ளது, மெரினா கடற்கரையை மேம்படுத்திய பின்பு, சாந்தோம் கடற்கரையை அழகுபடுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள். நீலகிரி மாவட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய மாவட்ட சுற்றுலாப் போக்குவரத்து ஆலோசனைக் குழு ஒன்றை உடனடியாக அமைப்பது குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மாவட்ட சுற்றுலாப் போக்குவரத்து ஆலோசனைக்குழு ஒன்றைத் தமிழக அரசு ஆணை எண் 142 நாள். 26—3—1991 மூலம் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனாதிபதி ஆட்சியிலே அமைத்து இருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளையும் பொதுமக்களையும் குழந்தைகளையும் கவரும் வகையில் 'கேபிள் கார்' அல்லது 'ரோப் கார்' ஒன்றை உதகையில் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் அவர்கள் கடலூரைச் சுற்றுலா மையமாக அறிவிப்பதில் உள்ள சிக்கலைப் பற்றி விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார், சிக்கல்கள் ஏற்கெனவே களையப்பட்டு கடலூர் கடற்கரைப் பகுதியான தேவனாம்பட்டினத்தில் ரூ. 25.21 இலட்சம் செலவில் மத்திய அரசின் நிதி உதவியுடன் சுற்றுலா வளாகம் கட்டும் பணி, மத்திய பொதுப்பணித் துறை



1992 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

யினரால் விரைவில் தொடங்கப்பட உள்ளது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) அவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு சில பதில்களையும் விளக்கங்களையும் தரலாம் என்று எண்ணி இருந்தேன், ஆனால், நேரத்தைப் பார்க்கின்றபோது, சொல்லலாமா, வேண்டாமா என்ற ஐயப்பாடு எழுகின்றது ; அவையின் உறுப்பினர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்,

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் பேசுகின்றபோது, மதுவிலக்குப் பிரச்சாரப் படங்களில், அதாவது அரசு தயாரிக்கின்ற மதுவிலக்குப் பிரச்சாரப் படங்களில் உறுப்பினர் ராமசுப்பு, அமைச்சர் செங்கோட்டையன் போன்றவர்களைக் 'கதாநாயகனாக' நடிக்க வைத்து, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் போன்றவர்களை 'வில்லனாக' நடிக்க வைக்க வேண்டும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி,)

<u>டாக்டர் தே. குமாரதாஸ்</u> ; தலைவர் அவர்களே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது திரு. எஸ். எஸ். ராமசுப்பு பேசியது.

<u>டாக்டர் தே, குமாரதாஸ் :</u> தலைவர் அவர்களே, இதிலே கூட பாரபட்சம் ஏன் ? நான் கதாநாயகனாக நடித்தால் ஆகாதா ? (சிரிப்பு,)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது நீங்கள் பேசியதைப்பார்த்தால் அவர் பேசியதை உறுதிப்படுத்தி விட்டீர்கள் போல் இருக்கிறதே ! (குறுக்கீடு), இப்போது, இந்த பசி நேரத்தில் நீங்கள் எழுந்திருப்பதைப் பார்த்தால் அவர் சொன்னது சரிதான் என்பதைப் போல் காட்டிக்கொள்கிறீர்கள்,

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கு நான் விளக்க விரும்புவது—இது என்னுடைய யோசனை அல்ல ; மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் இந்த யோசனையைத் தெரிவித்தார்கள். இப்போது குமாரதாஸ் அவர்கள் கேட்டார்கள், 'என்னை ஏன் கதாநாயகனாக நடிக்க வைக்கக் கூடாது ? என்று, யாரை எந்த வேடத்தில் போட்டாலும், மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாமா ? (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி) முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த காலத்தில் எம். என். நம்பியாரும் இருந்தார்.

நம்பியாரைக் கதாநாயகனாக போட்டால் யார் ஏற்றுக்கொள்வார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்தால். . . (சிரிப்பு),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லன் இல்லாத படம், அது உப்பு இல்லாத பண்டமாக ஆகிவிடும், எனவே எனக்கு அந்த 'ரோலே' போதும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன், (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களையே கதாபாத்திரங்களில் நடிக்க வைத்து, படங்களை எடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி),

அடுத்து, இங்கே பேசிய சில உறுப்பினர்கள் சில பத்திரிகைகளில் தரக் குறைவான செய்திகள், பொய்யான செய்திகள் வெளியிடப்படுகின்றன; பத்திரிகைகள் விற்க வேண்டுமென்பதற்காக சில நாலாந்தர பத்திரிகைகளில் உண்மைக்கு, புறம்பான செய்திகளை எல்லாம், கற்பனைக் கதைகளை, கட்டுக் கதைகளை வெளியிடுகிறார்கள்; எனவே இத்தகைய பத்திரிகைகளை தடை செய்ய முடியாதா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசுப்பு அவர்கள் எழுப்பினார்கள். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—40

நேரத்தின் அருமையைக் கருதி சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன், நாலாந்தர பத்திரிகைகளோ, வேறு பத்திரிகைகளோ—பத்திரிகைகள் திட்டமிட்டு நடத்துகிற தாக்குதலால், வேண்டுமென்றே உண்மைகளைத் திரித்துக் கூறுவது, பொய்யான செய்திகளை வெளியிடுவது, தவறான குற்றச்சாட்டுகளை, அபாண்டமான குற்றச்சாட்டுகளை, பழிகளை சுமத்துவது—இத்தகைய தாக்குதலால் தமிழகத்திலேயே அல்லது இந்தியாவிலேயே என்னை விட அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,



உதாரணமாக. ஒரு பத்திரிகையில், ஒரு வாரப் பத்திரிகையில் வெளியூரில் இருக்கிற ஒரு வீட்டின் புகைப்படத்தைப் போட்டு, 'இதுதான் ஜெயலலிதாவின் பங்களா. இதுதான் சொகுசான பங்களா' என்று செய்தியைப் பிரசுரிக்கிறார்கள், இந்த பங்களா எங்கே இருக்கிறது, இது யாருடையது என்பதே எனக்கு தெரியாது. அதை நான் பார்த்ததே கிடையாது. அதைப்போலவே நான் இதுவரையில் பார்த்திராத ஒரு ஓட்டலின் பெயரைக் குறிப்பிட்டு இந்த ஓட்டலில்தான் நான் தங்கியிருந்தேன் என்பதைப் போன்ற செய்திகள் வருகின்றன, இன்னும் சொல்லப்போனால் டெல்லியில் உள்ள மிகப்பெரிய அரசியல் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுடன் நான் தொலைபேசியில் உரையாடியதாக, பேசியதாக. அந்தப் பேச்சுக்களை எல்லாம் பத்திரிகைகளில் வெளியிடுகிறார்கள், அப்படியே நான் பேசியிருந்தால் கூட இந்தப் பேச்சுகளைக் கேட்கிற வாய்ப்பு இந்தப் பத்திரிகையாளர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பது புரியவில்லை, இத்தகைய கற்பனை உரையாடல்கள் எல்லாம் உண்மையில் நடந்தவைகள் போல பத்திரிகைகளில் வெளிவருகின்றன, இன்னும் எத்தனையோ ஆபாசமான செய்திகளை என்னைப் பற்றி வெளிவந்திருக்கின்றன, அவற்றையெல்லாம் இங்கே குறிப்பிட்டு இந்தப் அவையினுடைய கண்ணியத்தை நான் கெடுக்க விரும்பவில்லை, ஆனால் இந்த பத்திரிகைகளின் நடவடிக்கைகள் அத்துமீறிப் போய்க் கொண்டிருக்கின்றன, எனவே, இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம் என்ற எண்ணம் ஏற்கனவே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் வந்தது, மத்தியில் மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் அந்தக்காலத்தில் வந்தது. ஆனால் அதற்கு பலத்த எதிர்ப்பு பல்வேறு தரப்புகளிலிருந்தும் கிளம்பியதால் அப்போது அத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் கைவிட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது, எனவே, இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைத்தால் இதுகுறித்து அவர்கள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தால் மக்கள் மத்தியில் இதற்கான அவசியத்தை அவர்கள் வலியுறுத்தி மக்களுக்குப் புரிய வைப்பார்களானால் நல்லது, இத்தகைய ஒரு சட்டரீதியான நடவடிக்கை கொண்டு வருவது அவசியம் என்று இந்த அரசு கருதுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி),

இன்னும் எத்தனையோ கருத்துக்களுக்கு என்னுடைய பதிலைக் கூறலாம் என்று இருந்தேன், ஆனால் நேரத்தின் அருமையைக் கருதி இத்துடன் என்னுடைய பதிலுரையை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன், நமது தமிழ் மொழியின் செழுமையையும், நமது பண்பாட்டு வளமையையும் எடுத்து

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] (1992 மார்ச் 25

இயம்புகிற தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை, அரசின் செயல்களையும் சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்கிற செய்தி—மக்கள் தொடர்புத் துறை, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற சுற்றுலாத் துறை ஆகிய இம் மூன்று துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு நான் ஆற்றிய பதிலுரை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனநிறைவு கலந்த மகிழ்ச்சியை அளித்து இருக்கும் என்று நம்புகிறேன், இம்மூன்று மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அரசின் சாதனைகளைப் பாராட்டியும், குறைகளைக் கோடிட்டு காட்டியும், இந்தத் துறைகள் மேலும் சிறப்பாகச் செயல்பட நல்லபல கருத்துக்களை எடுத்துரைத்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறைகள் மென்மேலும் பல்வேறு சிறப்புகளையும், வளர்ச்சியையும் பெறுவதற்கு ஆக்கப்பூர்வமான அரிய பல கருத்துக்கள் இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரால் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்துக்கள் எல்லாம் இம்மூன்று துறைகளுடைய செயல்பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதாக அமைந்துள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அரிய கருத்துக்களையும், புதிய சிந்தனைகளையும் அரசு கவனத்தோடு ஆராய்ந்து, நமது நிதிநிலையையும் கருத்திற்கொண்டு அவற்றுக்கு விரைவில் செயல்வடிவம் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

காலத்தின் அருமையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் பதில் கூறாவிடினும், அந்தக் கருத்துக்கள் அனைத்தும் அவைக் குறிப்புகளில் இடம் பெற்றிருக்கின்றன, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், அவைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மூன்று மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு,

(அ) கோரிக்கை எண் 47—செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 47—செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத்



1992 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, ஆர், சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது,

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 6,11,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 2–45

(ஆ) கோரிக்கை எண் 51—சுற்றுலா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 51— சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'' சுற்றுலா பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 98,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் '. என்க (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கோரிக்கை எண் 52— தமிழ் வளர்ச்சி-பண்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண். 52— தமிழ் வளர்ச்சி-பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. ஜி. பழனிசாமி, தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'' தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,57,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26—3—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-47 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

36. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த சிறப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்ற விதிகளை வகுப்பது குறித்து வருவாய்த் துறையின் 29—10—1990-ஆம் நாளிட்ட 2233-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் (நிலத் திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

37. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 1989—90-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளின்மீதான தணிக்கை அறிக்கை. [1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

45. 1992—93-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

46. 1992—93-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

47. 1991—92-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

48. 1991—92-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

49. 1991—92-ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

50. கோரிக்கை எண். 47—செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்)

51. கோரிக்கை எண். 51—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்).

52. கோரிக்கை எண். 52—தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992—93. (தமிழ், ஆங்கிலம்).



304—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

## மானியக் கோரிக்கை எண் 47

## செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 1992-93

ஒரு வளரும் சமுதாயத்தில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்ய வேண்டும் என்ற அரசின் முயற்சியின் ஒருங்கிணைந்த ஓர் அங்கமாக சமூகக் கல்வியும் மக்களின் பங்கேற்பும் அமைகின்றன. இந்த வகையில்தான் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணி இன்றியமையாததாக விளங்குகிறது. அரசின் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் விளக்கிச் சொல்வதோடு, மக்களாட்சியின் அடிப்படையையும் சமூக இலட்சியங்களையும் வலுப்படுத்துவதும் அதன் பணியாக அமைகிறது. இத்துறை அப்பணிகளை அனைத்து வகை மக்கள் தொடர்புச் சாதனங்களையும் (ஒலி-ஒளி சாதனங்கள்) பயன்படுத்தி அரசின் கொள்கைகளையும் திட்டப் பணிகளையும் மக்கள் அறியுமாறு செய்கிறது. அதே நேரத்தில் மரபுவழி மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், உள்ளூர் மக்களின் ஆற்றலையும் பயன்படுத்திக்கொள்கிறது. அனைத்து வசதி வாய்ப்புகளையும் ஒருங்கிணைத்து, அனைத்து மக்கள் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்தி, மக்களுக்கு அரசின் கொள்கைகளை எடுத்துரைப்பதுடன், அரசின் வளர்ச்சிப் பணிகளில், மக்கள் தொடர்ந்து பங்கேற்கும் வகையில் பணியாற்றி வருகிறது.

விழாக்கள் :

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பற்றியும், மாபெரும் தலைவர்களின் மகத்தான தியாகங்கள் பற்றியும் மக்களுக்கு, குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவும், தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நூற்றாண்டு விழாக்கள், நினைவு நாள் விழாக்கள் ஆகியவை இத் துறையால் நடத்தப்படுகின்றன. முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாள் விழா, ஒவ்வொரு ஆண்டும்

ஜனவரி 17–ஆம் நாள், மாநில அளவில் சென்னையிலும் மற்றும் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 75-வது பிறந்தநாள் விழா, 17–1–1992 அன்று தமிழக அரசால் தமிழகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**நூற்றாண்டு விழாக்கள் :**

செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் கொண்டாடப்படும் நூற்றாண்டு விழாக்கள் பற்றிய விவரம் வருமாறு :—

1. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவரும், தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவருமான டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழா 14–4–1990 முதல் 14–4–1991 வரை தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்திய அரசு டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழாக் காலத்தை 14–4–1992, வரை நீட்டித்து, இவ்விழாக் காலத்தில் பல்வேறு நலத்திட்டப் பணிகளை மேற்கொள்ளுமாறு, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி தமிழக அரசு, பல்வேறு நலத் திட்டப் பணிகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை மூலமாகச் செயல்படுத்தி வருகிறது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலை ஒன்றினைச் சென்னை நகரில் அமைத்திடப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு இதன் தொடர்பாகத் தேவையான நடவடிக்கையை எடுத்து வருகிறது.

2. சென்னையின் முன்னாள் மேயர், மறைந்த திரு. என். சிவராஜ் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சென்னை, இராயப்பேட்டையில்,



அவர் வாழ்ந்த ஆண்டித் தெருவுக்கு "மேயர் சிவராஜ் வீதி" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்ட திரு. என். சிவராஜ் அவர்களின் நினைவாக, சென்னையில், வெண்கலத்தால் செய்யப்பட்ட அவருடைய சிலை ஒன்று நிறுவப்படும். சிலை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

3. விடுதலைப் போராட்ட வீரர் திரு. செண்பகராமன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திரு. செண்பகராமன் நினைவாக சென்னையில் சிலையும், நினைவுச் சின்னமும் நிறுவ அரசு முடிவு எடுத்துள்ளது. அதன்படி சிலைசெய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**பொருட்காட்சிகள் :**

தமிழ்நாடு அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையில் உள்ள பொருட்காட்சிப் பிரிவு, மாவட்டத் தலை நகரங்களில் 1978–ஆம் ஆண்டிலிருந்து பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், நலத் திட்டங்களையும், அரசு பல்வேறு துறைகளில் புரிந்துள்ள சாதனைகளையும், மக்களுக்குத் தெரிவிக்கச் செய்ய அரசுத் துறைகளும், அரசு நிறுவனங்களும், விளம்பர அரங்கங்களை நிறுவி இந்தப் பொருட்காட்சிகளில் பங்கேற்கின்றன.

இதுவரை 61 பொருட்காட்சிகள், கோவை, மதுரை, சேலம், கடலூர், தஞ்சாவூர், ஈரோடு, வேலூர், திண்டுக்கல், திருச்சி, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டுள்ளன. இப்பொருட்காட்சிகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறுவதோடு அரசுக்கு வருவாயையும் ஈட்டித் தருகின்றன. இதன் மூலம் இதுவரை அரசுக்கு 3.5 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. அண்மையில் கும்பகோணத்தில், மகாமகம் சிறப்பு அரசுப் பொருட்காட்சி 8–2–92 முதல் 1–3–92 வரை நடத்தப்பட்டது. உதகமண்டலத்தில் கோடை விழாவின் போது, 1992 மே மாதத்தில் பொருட்காட்சி ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கோடை விழாவின் போது, ஒரு நாள், குழந்தைகளின் பேரணி நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்படும். இவ்விழாவில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பையும், கிராமியக் கலை நிகழ்ச்சிகளையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்யும்.

புதுடெல்லியில் நடத்தப்படும் இந்திய - பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், செய்தி-மக்கள் தொடர்புத் துறை தமிழ்நாடு அரங்கு ஒன்றினை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக அமைக்கிறது. மேலும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் டெல்லியில் நடைபெறும் ''பூப் பேரணி விழாவிலும்'' (Phool Walon-ki - Sair) இத்துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 1991-ல் சிறந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்காகவும், வண்ண மலர்ப்பதாகை (Pankas) அமைப்புக்காகவும் இரு முதல் பரிசுகளை வென்றது. ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதும் இத்துறையின் முக்கியப் பணியாகும். ஓணம் பண்டிகையையொட்டி கேரள மாநில தலைநகரம் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அலங்கார அணிவகுப்பிலும் இத்துறை கலந்து கொண்டது.

## நினைவகங்கள் :

செய்தி-மக்கள் தொடர்புத் துறை பின்வரும் 19 நினைவகங்களைப் பராமரித்து வருகிறது.

1. வள்ளுவர் கோட்டம், சென்னை.
2. அண்ணா சதுக்கம், சென்னை.
3. காமராசர் இல்லம், சென்னை.
4. இராஜாஜி நினைவகம், சென்னை.
5. காமராசர் நினைவகம், சென்னை.
6. காந்தி மண்டபம், சென்னை,



7. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்.
8. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்.
9. காந்தி மண்டபம், கன்னியாகுமரி.
10. காமராசர் இல்லம், விருதுநகர்.
11. பெரியார் - அண்ணா நினைவகம், ஈரோடு.
12. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி.
13. வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.
14. அண்ணா நினைவகம், காஞ்சிபுரம்.
15. செய்குத்தம்பிபாவலர் நினைவகம், நாகர்கோவில்.
16. பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். நினைவகம் (மெரினா கடற்கரை), சென்னை.
17. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.
18. இலங்கையின் கடைசி மன்னர் விக்ரமசிங்கராஜா நினைவகம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர்.
19. அண்ணா அருங்காட்சியகம், அண்ணா சதுக்கம், சென்னை.

## காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் :

காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் அவர்களுக்கு ரூபாய் 52 இலட்சம் செலவில் ஒரு மணிமண்டபம் அமைக்க அரசு எடுத்த முடிவின்படி நினைவு மண்டபம் கட்டும் பணி முடிவு பெற்று, மணிமண்டபம் திறக்கத் தயார் நிலையில் உள்ளது.

## தந்தை பெரியார் நினைவகம் :

தந்தை பெரியார் அவர்களின் நினைவாக, கேரள மாநிலம் வைக்கத்தில், வைக்கம் சத்தியாகிரகத்தை நினைவுகூறும் வகையில், நினைவகம் எழுப்ப அரசு முடிவு செய்தது. இதற்குக் கேரள அரசு வைக்கத்தில்

91 சென்ட் அளவுள்ள நிலத்தை இலவசமாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, நினைவாலயம் எழுப்பும் பணியைக் கேரளப் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இப்பணி முடிக்கப்பட்டு நினைவகம் திறக்கத் தயார் நிலையிலுள்ளது.

மருது சகோதரர்களுக்கு நினைவகம் :

மருது சகோதரர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில், மருது சகோதரர்களுக்காக நினைவு வளாகம் ஒன்றை எழுப்ப அரசு முடிவு செய்தது. நினைவு வளாகம் கட்டுவதற்கும் மற்றும் சிலை நிறுவிடவும், ரூபாய் 5.46 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி முடியும் தருவாயிலுள்ளது.

தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்குச் சிலை :

சென்னையில் தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் சிலையை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூபாய் 1.28 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டுச் சிலை செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் இல்லம் :

சென்னை, திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தை ரூபாய் 5.70 இலட்சம் செலவில் அரசு கையகப்படுத்தி உள்ளது. இந்தக் கட்டடத்தினை செப்பனிடவும், புதுப்பிக்கவும் ரூபாய் 5 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டு, பொதுப்பணித்துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களுக்குச் சிலை :

சென்னையில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் நினைவாகச் சிலை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி சிலை செய்யும் பணி முடிவு பெறும் நிலையில் உள்ளது.



சட்டமன்றப் பேரவையில் முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை நிறுவுதல் :

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் திருவுருவப்படம் 31—1—1992-ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழரசு :

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் 'தமிழரசு' ஏடு அரசின் செய்திகளை மக்களுக்குத் தெரிவிப்பதுடன், அரசின் கொள்கைகள், வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள், பல்வேறு துறைகளில் அரசின் சாதனைகள் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்கு விளக்கமளித்துத் தெளிவுபடுத்துகிறது. 'தமிழரசு' தமிழில் மாதம் இருமுறையும், ஆங்கிலத்தில் மாதம் ஒருமுறையும் வெளியிடப்படுகிறது. தமிழில் 53,300 பிரதிகளும், ஆங்கிலத்தில் 6,000 பிரதிகளும் அச்சிடப்பட்டு விற்பனையாகின்றன. தமிழரசு இதழில் வேளாண்மை, மருத்துவம், பொறியியல், கல்வி போன்ற பல்வேறு பொருள்கள் பற்றிய கட்டுரைகளும், ஏனைய பல்வேறு பொருள்கள் குறித்துப் புகழ்பெற்ற எழுத்தாளர்களும், அறிஞர்களும் எழுதும் கட்டுரைகளும் வெளியிடப்படுகின்றன. தமிழரசுப் பிரதிகள் தனியார் முகவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களில் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக விற்கப்படுகின்றன. சந்தாதாரர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படுகின்றன.

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் :

செய்திகளைப் பரப்புவதில் திரைப்படத்தின் ஆற்றலை அறிந்து, அதனைப் பயன்படுத்துவதும், மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதும் சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களாக மாணவர்களை உருவாக்குவதும், மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உண்டாக்குவதும் இந்

நிலையத்தின் குறிக்கோளாகும். தமிழ்நாடு திரைப் படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் இந்தியாவில் உள்ள சிறந்த பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் படம் தயாரிப்பதற்கும், மேலும் அவை தொடர்பான பிரிவுகள் அனைத்திலும் திறன்பெறவும் மாணவர் களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

தற்போது திரைப்படக் கலையில் பல்வேறு பிரிவுகளிலும் 162 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே இந்தப் பயிற்சி நிலையத்தில் மட்டும் தான் படச்சுருள் செயற் பாங்குத்துறையில் (Film Processing) பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்நிலையம், தனது படப்பிடிப்புத் தளங்கள் மற்றும் தளவாடங்களைத் தனிப்பட்ட படத்தயா ரிப்பாளர்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாயினை ஈட்டித்தரு கிறது. அத்துடன் மாணவர்கள், படப்பிடிப்பு அனு பவங்களை பயிற்சி நிலைய வளாகத்திலேயே நேரி டையாகப் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. இந் நிலையத்தில் பயிற்சிபெற்றுத் தேர்வு பெறும் மாண வர்கள் நாடு முழுவதும் உள்ள தொலைக்காட்சி நிலையங்களிலும், திரைப்படத் துறையிலும் நல்ல வரவேற்பும் வாய்ப்பும் பெறுகிறார்கள்.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு :

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 1968 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசின் செய்திப்படங்களைத் தயாரிப்பதற்காக மட்டுமே முதலில் உருவாக்கப் பட்டது. பின்னர் 1986 முதல் மாதந்தோறும் 1,000 அடி நீளமுள்ள 35 எம்.எம். படங்களை வண்ணத்தில் தயாரிக்கத் தொடங்கியது. இப் போது, அப்படங்கள் வீடியோ படங்களாகவும் மாற்றம் செய்யப்பட்டு களவிளம்பரப் பணிகளுக் காக மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலு



வலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இது வரை, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 368 செய்திப் படங்களை உருவாக்கியிருக்கிறது.

## கருத்து விளக்கப்படங்கள்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு குடும்பநலம், சமூகக்காடு, வேளாண்மை, பொதுச் சுகாதாரம், வனவாழ்வியல், மாசுக்கட்டுப்பாடு போன்ற அரசின் பல்வேறு துறைகளுக்கான கருத்து விளக்கப்படங் களை அந்தந்த துறைகளின் நிதி ஒதுக்கீட்டிற் கேற்ப 35 மி.மீ. மற்றும் 16 மி.மீ. படங்களைத் தயாரித்து அளித்துள்ளது. இதற்குரிய படத் தயா ரிப்பாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்களின் பட்டி யல் தயாரிக்கப்பட்டு, அப்பட்டியலில் இடம் பெற்ற வர்களைப் பயன்படுத்தி இதுவரை 104 கருத்து விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## வீடியோ செய்திப்படங்கள்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு வீடியோ செய்திப் படங்களை 1989 ஆம் ஆண்டு முதல் தயாரித்து வருகிறது. தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங் களை விளக்கும் இந்த வீடியோ செய்திப்படங்கள் 60 நிமிடம் முதல் 90 நிமிடம் வரை ஓட்டக்கூடியவை. ஒவ்வொரு வீடியோ மலரும் 870 வீடியோ கேஸட் பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப்புற மக்களுக்குக் காட்டுவதற்காக அனைத்து ஊராட்சி ஒன்றியங் களுக்கும் அனுப்பப்படுகின்றன. வீடியோ படம் காட்டும் கருவிகள் பொருத்தப்பட்ட பத்து ஊர்திகள் மூலமாகவும், கிராமப்புறங்களில் வீடியோ செய்திப் படங்கள் காட்டப்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை ஏழு வீடியோ செய்தி மலர்களைத் தயாரித்துள்ளது.

## வீடியோ கருத்து விளக்கப் படங்கள்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 1989 ஆம் ஆண்டு முதல் 'யூமாட்டிக்' வீடியோ மூலம் கருத்து விளக்கப் படங்களைத் தயாரித்து வருகிறது. குடும்பநலம்,

சுகாதாரம், கல்வி, சமூகக்காடு போன்ற பல்வேறு துறைகளுக்குரிய கருத்து விளக்கப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை 50 வீடியோ கருத்து விளக்கப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

<u>வீடியோ செய்திப்படங்கள் எடுத்தல்.</u>

தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிற முக்கிய நிகழ்ச்சிகள் வீடியோ செய்திப்படங்களுக்காக எடுக்கப்படுகின்றன. இவை வீடியோ செய்தி மலர்கள் தயாரிக்கப் பெரிதும் பயன்படுகின்றன. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 1,200 நிகழ்ச்சிகளை வீடியோ செய்திப் படங்களாகத் தயாரித்துள்ளது. வீடியோ படங்களைத் தயாரிப்பதற்காகவென்றே முழு அளவிலான வீடியோ படப்பிடிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அதற்கான கட்டட வேலைகள் அனைத்தும் முடிந்து விட்டன. மின் இணைப்புப் பணிகளும், குளிர்சாதனப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

<u>சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்.</u>

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை 1968-ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. விருதுக்குரிய சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களை தெரிவு செய்வதற்கென ஒரு குழுவை ஒவ்வொரு ஆண்டும் அரசு ஏற்படுத்துகிறது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி நல்ல திரைப்படங்கள் மூன்றிற்குப் பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றும் பின்வருமாறு வழங்கப்பட்டு வந்தன.

| | ரூபாய் | |
|---|---|---|
| முதல் பரிசு | 1,00,000 | ரொக்கமும், பரிசுக் கேடயமும். |



| | | |
|---|---|---|
| இரண்டாம் பரிசு | 50,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |
| மூன்றாம் பரிசு | 25,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |
| சிறப்புப் பரிசு | 25,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |

1991-92 ஆம் ஆண்டில் பரிசுத் தொகையை, அரசு பின்வருமாறு உயர்த்தியுள்ளது.

| | ரூபாய். | |
|---|---|---|
| முதல் பரிசு .. | 1,25,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |
| இரண்டாம் பரிசு | 75,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |
| மூன்றாம் பரிசு | 50,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |
| சிறப்புப் பரிசு | 50,000 | ரொக்கமும் பரிசுக் கேடயமும். |

திரைப்படத் துறையில் சிறந்த கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள், சிறந்த சேவை செய்தோர் ஆகியோருக்கு, ஒவ்வொன்றும் 5 சவரன் எடையுள்ள மொத்தம் 27 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளுக்குப் பரிசு பெறுவதற்கான சிறந்த திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கென ஒரு குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது.

## குறைந்த செலவில் சமுதாய நோக்குடன் உயர்தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் திட்டம்—ஆதரவு உதவித் தொகை : (Subsidy)

குறைந்த செலவில், நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப் படங்களுக்கு ஆதரவு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு வரை 12 முதல் 20 பிரதிகள் எடுத்து வெளியிடப்பட்ட, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் ஒவ்வொன்றும் ரூ. 1.5 இலட்சமும், 21 முதல் 30 பிரதிகள் எடுத்து வெளியிடப்பட்ட திரைப்படங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சமும் ஆதரவு உதவித் தொகையாக வழங்கப்பட்டன. கடந்த ஆண்டு, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட 9 திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது. குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரே மாதிரியாக ரூ. 2 இலட்சம் ஆதரவு உதவித் தொகை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. 1991–ஆம் ஆண்டில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 2 இலட்சம் வீதம், ஆதரவு உதவித் தொகை 45 திரைப்படங்களுக்கு வழங்குவதற்காக ரூ. 90 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான திரைப்படங்களை தெரிவு செய்வதற்காக, ஒரு குழுவை அரசு ஏற்படுத்தியுள்ளது.

## குடும்ப நலனை வலியுறுத்தும் வகையில் எடுக்கப்படும் திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித் தொகை வழங்கும் திட்டம்.

"திட்டமிட்ட குடும்பம்" அவசியம் என்ற கோட்பாட்டை இம்மாநிலத்தின் அனைத்து மூலை, முடுக்குகளிலும் பரப்பும் வகையில், இந்தக்கோட்பாட்டை அடிப்படையாக வைத்து எடுக்கப்படும் திரைப்படங்களுக்கு



ஊக்கமளிக்கும் நோக்குடன் மூன்று பரிசுத் திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நல்ல தரமுள்ள மூன்று திரைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு, ரூ. 50,000 ரூ. 25,000, ரூ. 10,000 என்ற வீதத்தில் முறையே முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகள் வழங்கப்படும். திட்டமிட்ட குடும்பம் என்ற கொள்கையைப் பரப்பிடும் நல்ல திரைப்படங்களைத் தெரிவு செய்ய ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம் :

இத்துறை பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தை 1987-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இப்பொழுது ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் 25 பேருக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ஒவ்வொருவருக்கும் ரூ. 400 வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாட்டில் வானொலி— தொலைக்காட்சி நிலையங்களின் விரிவாக்கப்பணி :

மத்திய அரசு தமிழ்நாட்டிற்குப் புதிய வானொலி நிலையங்களையும், தொலைக்காட்சி ஒளிபரப்பு அஞ்சல் நிலையங்களையும் நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு வசதியாக இந்த வானொலி நிலையங்கள் அமைவதற்கு வேண்டிய இடங்களைத் தெரிந்தெடுப்பது, தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களுக்குத் தேவையான இடங்களைத் தெரிந்தெடுப்பது, அவற்றை மத்திய அரசிடம் ஒப்படைப்பது ஆகியவை தொடர்பாக நமது அரசு முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## பண்பலை வரிசை :

கொடைக்கானலில் 20 கிலோ வாட் திறனில் பண்பலை வரிசை ஒலிபரப்பு நிலையம் ஒன்று அமைக்கும் பணியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இந் நிலையம் அமைவதற்கு ஏற்கனவே தமிழ்நாடு அரசு 2 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு வழங்கியுள்ளது.

மத்திய அரசு கீழ்க்கண்ட வானொலி ஒலிபரப்பு அஞ்சல் நிலையங்களின் திறனை எட்டாவது திட்டக் காலத்தில் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

(1) கோயம்புத்தூர் மத்திய அலைவரிசை 10 கிலோ வாட்டிலிருந்து 20 கிலோ வாட்டாக அதிகரித்தல்.

(2) மதுரை மத்திய அலைவரிசை 10 கிலோ வாட்டிலிருந்து 2 X 10 கிலோ வாட்டாக அதிகரித்தல்.

(3) நாகர்கோவில் பண்பலை வரிசை 1 கிலோ வாட்டிலிருந்து 10 கிலோ வாட்டாக அதிகரித்தல்.

புகைப்படப் பிரிவு :

செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் புகைப் படப் பிரிவு நவீன வசதிகளுடன் தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்கள், நலத்திட்டங்கள், முக்கிய அரசு விழாக்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் நகல் களை நாளேடுகளுக்கு புகைப்படப் பிரிவு வழங்கு கிறது. சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிடப்படும் செய்திகள் தாமதமின்றி தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் உடனடியாகக் கிடைத்திடவும், மாவட்டங்களிலிருந்து தலைமைச் செயலகத்திற்குக் கிடைத்திடவும் நகல் பதிவு இயந் திரங்கள் (Facsimile Machines) ரூபாய் 4 இலட்சம் செலவில் 1992-93-ஆம் ஆண்டில் வாங்கிட திட்ட மிடப்பட்டுள்ளது. இதனால் மிக விரைவாக செய்தி வெளியீடுகள் வழங்கிடும் வசதிகள்அமைந்திடும்.

விளம்பரம் :

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் விளம் பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாக செய்தி-



மக்கள் தொடர்புத்துறை இருந்து வருகிறது. அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின்கீழ், சிறிய பத்திரிகைகள், நடுத்தரப் பத்திரிகைகளுக்கு அரசுத் துறை விளம்பரங்களை அளிப்பதன் மூலம் அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

அரசின் நலத் திட்டங்களைப் பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக விளக்கும் சாதனை விளக்க முகாம் :

அரசின் வளர்ச்சிப் பணிகள்—அவற்றால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் ஆகியவற்றையும், அரசின் சாதனைகளையும் மக்கள் அறியவும், அதன் பயனைத் துய்க்கவும் பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் துணையுடன் செயல்படுத்துவது சாதனை விளக்க முகாமின் நோக்கமாகும். இப்பணியில் மத்திய-மாநில அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கள் (மக்கள் தொடர்புச் சாதனங்கள்) சிறப்பாகப் பங்கேற்கின்றன.

அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் நன்மை களைக் கிராம மக்களும் அறியும் வகையில் இந்தச் சாதனை விளக்க முகாமின் பணி அமைகிறது. மக்கள் தொடர்புச் சாதனங்களின் பல்வேறு விளம்பர பிரச்சார முறைகள், மரபுவழி பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் வாயிலாகவும் அரசின் நலத் திட்டங்கள் விளக்கப்படுகின்றன.

தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு, சட்டம் ஒழுங்கு, வரதட்சணை ஒழிப்பு, பெண் கல்வி, வயது வந்தோர் கல்வி, சுற்றுப் புறச் சூழல், போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல், ஆகிய பொருட்களில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கவியரங்கங்கள் முதலியனவும் இந்த முகாம்களில் நடத்தப்படுகின்றன. நமது அரசு நிறைவேற்றிவரும் பல்வேறு நலத்திட்டங் களின் பயன்களை மக்கள் உணரும் வகையில் தகவல்கள் பரவிட இந்த முகாம் பெருந்துணையாக விளங்கு கிறது.

## 1992-93ஆம் ஆண்டிற்கான செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் முக்கிய திட்டங்கள்.

### பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சமாதியை மாற்றியமைத்தல் :

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சமாதியை ரூ. 1.25 கோடி செலவில் மாற்றி அமைத்து, சிறப்பான முறையில் புதுப்பிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### முன்னாள் இந்தியப் பிரதமர் பாரத ரத்னா, மறைந்த திரு. இராஜீவ் காந்திக்கு நினைவாலயம் கட்டுதல் :

ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த திரு. இராஜீவ் காந்தியின் மதிப்புமிக்க உயிரைக் குடித்த குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்ற இடத்தைத் தமிழ்நாடு அரசு, தன்வசம் எடுத்துப் பாதுகாக்கும் நோக்குடன், ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலத்தை, மொத்தம் ரூ. 8,41,110-க்கு அரசு கையகப்படுத்தியுள்ளது. முழுப் பகுதியும் வேலி அமைக்கப்பட்டு குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் செயற்கை இழைக் கண்ணாடிக் கூரையுடன் கூடிய, கொட்டகை தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

மறைந்த திரு. இராஜீவ் காந்தியின் நினைவாலயத்தினை உருவாக்கிட, இந்திய அரசு, இந்தியப் பிரதமரின் தலைமையில் ஒரு குழுவினை ஏற்படுத்தியுள்ளது. தமிழக முதல்வர், இக் குழுவின் உறுப்பினராக உள்ளார். நினைவாலயம் கட்டுவதற்கான முழுச் செலவினையும் இந்திய அரசு ஏற்பதெனக் குழு தீர்மானித்துள்ளது. கட்டுமானப்பணி தமிழக அரசால் மேற்கொள்ளப்படும்.



தமிழக முதல்வர் அவர்கள், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் மற்றும் வடிவமைப்புக் கோட்பாட்டுத் துணைக் குழுவின் உறுப்பினர்களுடன் 2—2—1992 அன்று ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் பேரில், நினைவாலயத்திற்கான வடிவமைப்புக் கோட்பாடு இறுதி செய்யப்பட்டது இந்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள குழு, உரிய காலத்தில் மாநில அரசுக்கு கட்டட வரைப்படம் மற்றும் வடிவமைப்பினை வழங்குமேயானால் ஸ்ரீபெரும்புதூரில் திரு. ராஜீவ் காந்தியின் சமாதி அமைந்துள்ள இடத்தில் மே 21-அன்று நினைவாலயப்பணி தொடங்கப்படும்.

### கன்னியாகுமரியில் திருவள்ளுவர் நினைவாலயம் :

கன்னியாகுமரியில், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு அண்மையிலுள்ள பாறையில் கருங்கல்லிலான 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை நிறுவ அரசு தீர்மானித்துள்ளது. மேற்சொன்ன பணிக்கான அரசு ரூ. 3.6 கோடி அனுமதித்துள்ளது. இப்பணியைப் புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் திரு. கணபதி ஸ்தபதியிடம் அரசு ஒப்படைத்துள்ளது. நினைவாலயம் எழுப்பும் பணி தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக சிலை, பீடம் ஆகியவற்றை வடிவமைக்கும் பணி, கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள சோளிங்கநல்லூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றது. இதுவரை மேற்கண்ட பணிக்காக ரூ. 50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### திரைப்பட நகர் :

சென்னை அடையாறில் உள்ள தமிழ்நாடு திரைப்பட, தொலைக்காட்சி பயிற்சி நிலைய வளாகத்தில் திரைப்பட நகரினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. திரைப்பட நகர் வணிகப் படங்களின் படப் பிடிப்பிற்கு, ஏற்றதோர் இடமாக

இருப்பதோடு, மாநில அரசுக்குக் கணிசமான அளவு வருவாய் ஈட்டித் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் முதல் கட்டப் பணிகளுக்காக 1991–92-ஆம் ஆண்டிற்கு அரசு ரூ. 70 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

திரைப்பட நகரப் பணிகளைக் கவனிக்க என ஒரு தனி அலுவலரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திரைப்படநகரம் பற்றிய வடிவமைப்புக் கோட்பாட்டை உருவாக்கத் திரைப்படப் பிரமுகர்களுடன் 5—3—1992 அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இது தொடர்பாக வடிவமைப்புக் கோட்பாட்டுத் துணைக் குழு (Concept Sub-Committee) ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திரைப்பட தொலைக்காட்சிப் பயிற்சி நிலைய வளாகத்தில் திரைப்பட நகரின் முதல் கட்டப் பணிகள் தொடங்கப்படும். பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் அமைந்துள்ள திரைப்பட மையங்களுக்குச் சென்று பார்வையிட அலுவலர்கள் குழு ஒன்றை அரசு அனுப்பியுள்ளது.

## கவின் கலை-திரைப்படத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் :

இந்தியப் பழங்கலை மற்றும் கவின் கலை கலாச் சாரத்தை பாதுகாத்துப் போற்றவும், இதற்கான உயர்கல்வி நிலையத்தை உருவாக்கும் நோக்கத்துடனும் '' கவின் கலை-திரைப்படத் தொழில் நுட்பப் பல் கலைக் கழகம் '' தொடங்கப்பட உள்ளது. இப் பல்கலைக் கழகத்தில், கீழ்க்கண்ட துறைகளுடன், திரைப்பட, தொலைக்காட்சி பயிற்சி நிலையம், இசைக் கல்லூரி, கலை-கைத்தொழில் கல்லூரி, கட்டடக் கலை மற்றும் சிற்பக் கல்லூரி, இதர அரசு தனியார் துறைகளைச் சார்ந்த பழங்கலை, நவீன நுண்கலை நிறுவனங்கள் ஆகியவை இடம் பெறும்.

1. மரபு (சாஸ்திரிய) இசை

2. நாட்டியம்



3. கிராமிய, நவீன நாடகங்கள்

4. தகவல் தொடர்பு

5. கிராமிய, தற்கால ஓவியம், சிற்பம்

6. கிராமிய இசை

7. கிராமிய நடனம்

8. கிராமியக் கலை-கைத் தொழில்கள்

9. திரைப்படத் தொழில் நுட்பம்.

இது போன்ற பல்கலைக் கழகம் தேசிய ஒற்றுமைக்கு முன் மாதிரியாக விளங்கும். உயர் கல்வி ஆராய்ச்சி வாய்ப்புகளுக்கு மையமாக இப்பல்கலைக் கழகம் அமையும். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும், மாணவர்கள் இப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்துப் பயன் பெறுவார்கள். இப் பல்கலைக் கழகம், டிப்ளமோ, இளங்கலை, முதுகலை, எம்.ஃபில் (M.Phil.) முனைவர் (P.hd.) உயர் முனைவர் (Post Doctorate), பட்டங்களையும் வழங்கும்.

இக் '' கவின் கலை-திரைப்படத் தொழில் நுட்ப பல்கலைக் கழக''த்தினை அமைப்பதற்கான சட்ட முன்வடிவு தயாராகி வருகின்றது.

## புதுடெல்லியில் செய்தி நிலையம் :

1992–93ஆம் ஆண்டில் புதுடெல்லியில் ஒரு செய்தி நிலையத்தைத் திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கீழ் ஏற்கனவே சென்னை, மதுரை, தஞ்சை, திருச்சி, கோவை ஆகிய ஐந்து நகரங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

புதுடெல்லியில் ஆரம்பிக்கப்படவுள்ள செய்தி நிலையம் டெல்லியில் உள்ள செய்தித் தாள்கள் வாயிலாகவும், மற்ற மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், தமிழ்நாடு அரசின் சமுதாய நலம் மற்றும் வளர்ச்சிப் பணிகளை விளம்பரப்படுத்த மிகவும் உதவியாக இருக்கும். இந்த மையம், தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், சுற்றுலாத் தலங்கள் மற்றும் விடுமுறை வாசஸ்தலங்கள் ஆகியவை குறித்த தகவல்களை வழ்ங்கி, தமிழ்நாட்டைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தையும், நன்மதிப்பையும் டெல்லியில் உருவாக்க உதவும். டெல்லியில் உள்ள பத்திரிகையாளர்கள் தமிழ்நாட்டைப் பற்றிய செய்தியை நேரடியாகவும், விரைவாகவும் பெற இந்த மையம் பெரிதும் உதவிகரமாக அமையும்.

தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம்,

தமிழ்நாடு 1957-ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகள்.

அரசு, ஊராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றின் வருவாய்க்கான வாயிலாக இருப்பதோடு, தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு குறிப்பாக, வறிய மற்றும் நடுத்தர மக்களுக்குப் பொழுதுபோக்காகவும் திரைப்படத் தொழில் விளங்குகிறது. திரைப்படத் தொழிலை மேம்படுத்தவும், திரையரங்குகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், விதிகள், விதிமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இம்மாநிலத்தில் உள்ள முக்கிய நகரங்கள், மாநகரங்கள் ஆகியவற்றில் தரமான திரையரங்குகளின் எண்ணிக்கை கணிசமாகப் பெருகியுள்ளது.

திரையரங்குகளுக்குச் செல்லும் பொதுமக்களுக்குத் தேவையான வசதியும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என்பதில் அரசு மிகக் கண்டிப்பாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 2,602 திரையரங்குகள் உள்ளன. அவற்றுள் 1,392 திரையரங்குகள் (சீர்வளி வசதியுடன் 127, பகுதி சீர்வளி வசதியுடன் 20, சீர்வளி வசதியின்றி 1,245) நிரந்தரத் திரையரங்குகளாகும். 360 திரையரங்குகள் ஓரளவிற்கு நிரந்தரமானவை. 11 திரையரங்குகள் திறந்தவெளித் திரையரங்குகளாகும். 839 திரையரங்குகள் இடம்பெயர் திரையரங்குகளாகும்.



வீடியோ சட்டமும் விதிகளும்.

தமிழ்நாட்டில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் காட்டுவதற்கும், அவை தொடர்பானவற்றை முறைப்படுத்துவதற்கும் வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு, ''வீடியோகேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம்'' ஒன்றினை தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. தனிநபர்கள் வீடியோ கேசட் கடைகள் நடத்தவும், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டவும் உரிமங்கள் வழங்க இச்சட்டம் வகை செய்கிறது. சென்னை மாநகரில் காவல் துறை ஆணையாளரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். எனினும் இச்சட்டத்தின் விதிமுறைகளின்படி, குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் பார்ப்பதற்கு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் வீட்டில் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் போடுவதற்கு எவ்வித உரிமமும் பெறத் தேவையில்லை.

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப் படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் உரிமம் வழங்கப்பட்டுள்ள வீடியோ கேசட் கடைகளின் எண்ணிக்கை 3,463.

கேபிள் டி. வி. அமைப்பு (கம்பிவழி தொலைக்காட்சி அமைப்பு).

தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றத்தின் காரணமாக ''கேபிள் டி. வி.''

உருவாகியுள்ளது. ''கேபிள் டி. வி.'' இயக்கு பவர்கள், தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு கேபிள் வழியாக அவரவர் வீடுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளை இணைத்து திரைப் படங்களைக் கண்டு களிக்கும் வகையில் காட்டு கின்றனர். முதலில் இந்த இணைப்பு முறை தொலைத் தொடர்புத் துறையிலிருந்து உரிமம் பெற்று, ''டிஷ் ஆண்டனாவின்'' மூலம் இயக்கப் பட்டு வந்தது. தற்பொழுது இத்தகைய இணைப்பு முறை டிஷ் ஆண்டனாவின் உதவியின்றியும் இயக் கப்பட்டு வருகிறது.

கேபிள் டி. வி. அமைப்பு முறையை முறைப்படுத்த, 1984-ஆம் ஆண்டு வீடியோ சேகட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தில், குறிப்பான விதிமுறைகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே கேபிள் டி.வி. மூலம் திரைப்படங்களைக் காட்டுவதை உரிமம் வழங்கி முறைப்படுத்த, தமிழ்நாடு 1991-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டம் ஒன்றினை, அரசு இயற்றியது. இச்சட்டம், 11—11—1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) விதி முறைகளுக்கும் தேவையான திருத்தங்கள் வெளியிடப் பட்டன. இதன் மூலம் கேபிள் டி. வி. அமைப்பு, உரிமம் வழங்கும் முறையின் கீழ் கொண்டு வரப்பட் டுள்ளது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலை வரும், சென்னை நகரத்தில் காவல் துறை ஆணை யாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர்.

கேபிள் டி. வி. அமைப்பினை நடத்தக் கோரும் மனுக்களை உள்ளூர் அதிகாரிகளுடன் ஆலோசித்து உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஆய்வு செய்ய ஆரம் பித்துள்ளார்கள். இருப்பினும், சென்னை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள அறிவுரைகளின் படி , கேபிள் டி.வி. அமைப்புக்கு உரிமம் கோரும் மனுக்களை பரி சீலனை செய்து இறுதி ஆணை வழங்கும் வரை தங்கள் தொழிலை நடத்தி வருகிறார்கள்.



''டிஷ் ஆண்டனா'' மூலம் நடத்தும் கேபிள் டி.வி. அமைப்புக்கு தொலைத் தொடர்புத் துறையின் அனுமதியும் பெறப்படவேண்டும்.

## வீடியோ மற்றும் கேபிள் டி.வி. அமைப்பு திருட்டு.

வீடியோ மற்றும் கேபிள் டி.வி. அமைப்பில் திருட்டைத் திறம்படத் தடுக்கும் நோக்குடன், அரசு, தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு, வீடியோ கேசட் ரெக் கார்டர்கள் மூலம் தொலைக் காட்சியில் திரைப் படங்களைக் காட்டுதல் மற்றும் கேபிள் டி.வி. அமைப்பு (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றி யுள்ளது. வீடியோ தியேட்டர், வீடியோ கடை மற்றும் கேபிள் டி.வி. அமைப்பினை நடத்துவதற்கு இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெறவேண்டும். சட்டத் தையும், விதிகளையும் மீறுபவர்களுக்கு தண்டனை வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச் சட்டத்தையும் அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை யும் கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டுமென்று, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர், மாவட்ட ஆட்சியாளர்கள் ஆகியோருக்குத் தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மானியக் கோரிக்கை எண் 51

## 1992-93-ஆம் ஆண்டிற்கான சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழகம் இந்தியக் கலாச்சாரத்தின் மிகப் பழம் பெரும் அரணாக விளங்குவதுடன், தமிழ் மொழியானது அனைத்து இந்திய மொழிகளிலும் வளமை மிக்கவைகளுள் ஒன்றாக திகழ்கிறது. தமிழகம் திருக்கோவில் கட்டிடக் கலை, சிற்பக் கலை, நாடகக் கலை, கைவினைப் பொருட்கள், பட்டு, நாட்டிய வகைகள், திருக்கோவில் சடங்குகள், கிராமப்புறக் கலைகள், இலக்கியம், திருவிழாக்கள் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை முதலானவற்றை அனுபவித்து நுணுகி ஆய்வதற்குரிய தன்னிகரில்லா இடமாக விளங்குகிறது.

சித்தன்ன வாசலில் உள்ள புதைவுகள் போன்ற வரலாற்றுக்கு முந்தைய காலத்திய இடங்கள், சமண முனிவர்கள், புத்த மதத் துறவிகளின் படைப்புகள், திருவள்ளுவரின் '' திருக்குறள் '', போன்ற பழங்கால அறிஞர்களின் இலக்கியப் படைப்புகள், ஆழ்வார்கள், நாயன்மார்களின் தெய்வீகப் பாடல்கள், பல்லவ சோழ, சேர, பாண்டிய, நாயக்க மற்றும் மராத்தியப் பேரரசுகளின் காலத்தில் உருவான காலத்தால் அழியாத கட்டிடக் கலை, சிற்பங்கள், ஓவியங்கள், முதலானவை தமிழ்நாட்டின் பாரம்பரியங்களாகும்.

தமிழ்நாட்டின் வளமைமிக்க கலாச்சாரம் மற்றும் இயற்கை எழில் பாரம்பரியங்களை பிறர் அறிந்து பாராட்டப்படவும், அவற்றை பாதுகாப்பதற்காகவும், உலகறியச் செய்தல் வேண்டும். தமிழ்நாட்டின் பல்வேறு சிறப்புகளை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது.



### சுற்றுலாவின் பங்கு :

இந்தியப் பொருளாதாரத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாகச் சுற்றுலா விளங்குகிறது. சுற்றுலா வளர்ச்சி பின்தங்கிய வளர்ச்சியடையாத பகுதிகள் வளம் பெறவும் வேலைவாய்ப்பினைப் பெருக்கவும் வழி வகை செய்கிறது. அது அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதன் மூலம் இன்றைய சூழ் நிலையில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களின் சமுதாய, கலாச்சார வாழ்விலும் சுற்றுலா இன்றியமையாத பங்காற்றி வருகிறது. எனவே சுற்றுலா தகுந்த வளர்ச்சியடைவதற்குச் சிறப்புக் கவனம் தேவைப் படுகிறது.

சுற்றுலாவானது மிகுந்த போட்டிகளை எதிர் நோக்கும் தொழிலாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் எதிர்பார்ப்புகளை நினைவு செய்யும் வகையில் தேவைக்கேற்ப சுற்றுலா கூறுகளை எப்போதும் மாற்றி அமைத்துக் கொண்டே இருக்க வேண்டும். கடற்கரை சுற்றுலா, மற்றும் நீர்நிலை விளையாட்டுக்கள், மலையேறுதல் போன்ற துணிச்சலான செயல்களை உள்ளடக்கிய சுற்றுலாக்களை மேம்படுத்துவது தற் போதைய நிலைமையாக உள்ளது. தமிழ் நாட்டில் கலாச்சார சுற்றுலா, விடுமுறைக்கால சுற்றுலாக் களுக்கு நிறைய வாய்ப்பு வளம் உள்ளதைப் போலவே கடற்கரை சுற்றுலா, துணிகரச் செயல் மிக்க சுற்றுலாக்கள் வளர்ச்சியுற போதுமான வாய்ப்புகள் உள்ளன.

### சுற்றுலாப் பயணிகளின் வருகை :

சென்னை விமான நிலையத்திற்கு 1991ஆம் ஆண்டு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1990 ஆம் ஆண்டு வருகை தந்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் 13.19 சதவீதம் அதிகமாகியுள்ளது. சென்னைக்கு 1990 ஆம் ஆண்டு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,07,904 ஆகும். 1991 ஆம் ஆண்டு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,22,145 ஆகும்.

சென்னைக்கு 1992 ஆம் ஆண்டு சனவரியில் வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 14,502. இது முந்தைய ஆண்டான 1991 சனவரியில் வருகை தந்த 10,275-க் காட்டிலும் 41 சதவீதம் அதிகமாகும்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்த மட்டில், 1991ஆம் ஆண்டு தமிழகம் வருகை தந்தோரின் எண்ணிக்கையைக் காட்டிலும் 15.05 சதவீதம் அதிகமாக உள்ளது. 1991ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பொதுவாக குறைந்துள்ள நிலையில் தமிழகம் வந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க திருப்பமாகக் கருத இடமுண்டு.

**சுற்றுலாக் கொள்கை :**

தமிழ்நாடு அரசின் சுற்றுலா குறித்த கொள்கைகள் கீழ்க்காணும் நோக்கங்களையும் அணுகு முறைகளையும் கொண்டுள்ளது:—

1. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மனதிற்கொண்டு சுற்றுலா வாய்ப்புள்ள பகுதிகளை மேம்படுத்தும் அணுகுமுறை.

2. தனியார் துறைகளை சுற்றுலாவில் முதலீடு செய்ய ஊக்கமளித்தல்.

3. வட்டார, உள்நாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்துதல்.

4. ஓட்டல், சுற்றுலாத் தொழில்களில் மனித ஆற்றல் மேம்பாடு.

5. வெளிநாட்டிலும், இந்தியாவிலும் சுற்றுலா மேம்பாட்டுக்காகப் போதுமான அளவு விளம்பரம் அளித்தல்.

6. பொருட்காட்சிகள், விழாக்கள் வாயிலாக கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துதல்.



7. கூடாரச் சுற்றுலா, துணிகரச் செயல்மிக்க சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா முதலியவை மேம்பாடு அடைய வசதிகள் செய்து கொடுத்தல்.

8. வளர்ச்சி மைய அணுகு முறையைக் கொண்டு, மக்களையும் அவர்கள் சார்ந்த இடங்களின் ஒட்டு மொத்த மேம்பாட்டினை சுற்றுலா மேம்பாட்டுடன் ஒருங்கிணைத்தல்.

<u>சிறப்புச் சுற்றுலா பகுதிகள் :</u>

கடந்த காலத்தில் சுற்றுலா மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட சிறிதளவு நிதி வசதி பரந்த அளவில் எல்லா இடங்களிலும் முதலீடு செய்யப்பட்டன. ஆனால் தற்போது சுற்றுலா. மேம்பாட்டுக்காகவும், வளர்ச்சிக்காகவும் சிற்சில பகுதிகளின்மீது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பது உணரப்பட்டுள்ளது. அத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட அணுகு முறைக்கு, சிறப்புச் சுற்றுலாப் பகுதிகள் கொள்கை வழி வகுக்கிறது. நாட்டிலுள்ள மிக முக்கிய சுற்றுலா மையங்கள் இக் கொள்கையின்படி கண்டறியப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவைப்படும் வசதிகளை வழங்குவதன்மூலம் அந்தந்த பகுதிகளை மேம்பாடு அடையச் செய்ய ஒருங்கிணைந்த நடவடிக்கை திட்டம் ஒன்று உருவாக்கப்படும். இத்தகைய பகுதிகளில் சுற்றுலா மேம்பாட்டிற்கான வசதிகளை அளிப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் சிறப்பு ஊக்குவிப்பு தொகையும், சலுகைகளையும் வழங்கும். இதற்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்படவிருக்கிற சுற்றுலா வளர்ச்சி நிதியிலிருந்து உதவித்தொகை கிடைக்கும்.

ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சிறப்பு சுற்றுலா வளர்ச்சி மன்றம் ஏற்படுத்தப்படும். இப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெறுகின்ற ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படும். முட்டுக் காட்டுக்கும், பாண்டிச்சேரிக்கும் இடையிலுள்ள பகுதிகளை ''சிறப்பு சுற்றுலாப் பகுதியாக'' அறிவிப்பது தொடர்பான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதைப்

போன்றே வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதைக் கருத்திற் கொண்டு தரங்கம்பாடி, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் சிறப்பு சுற்றுலா வளர்ச்சி மன்றங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரியப் பெருமைமிக்க நகரங்களைக் கண்டறிந்து பாதுகாத்தல்.

தொன்மை வாய்ந்த அனைத்து நகரங்களும் ''பாரம்பரியப் பெருமைமிக்க நகரங்களாக'' அங்கீகரிக்கப்படவேண்டும். கீழ்க்காணும் நோக்கங்களுடன் இந்நகரங்களில், சிறப்புப் பகுதி வளர்ச்சி மன்றங்களை நிறுவக் கருதப்பட்டுள்ளது :—

1. துப்புரவு செய்து அழகு படுத்தல்.

2. தொல்பொருட்களையும், கட்டிடக் கலை பாரம்பரியம் கொண்ட இடங்களையும் பேணுதல், பாதுகாத்தல்.

3. பார்வையாளர்கள், யாத்திரிகர்கள், சுற்றுலா பயணிகள் ஆகியோருக்காக, பூங்காக்கள், கழிப்பிடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், ஓய்விடங்கள், ஓட்டல் அறைகள், நினைவுப் பொருட்கள், விற்பனைக் கடைகள், உலவுவதற்கான பகுதிகள், கார்கள் நிறுத்துமிடங்கள், பேருந்து நிறுத்தங்கள், அலங்கார விளக்குகள், விளக்குகள், ஓர நடைபாதைகள், நடைபாதைகள், கடை வீதிகள், கேளிக்கைப் பகுதிகள் போன்ற பொதுவான வசதிகளுக்கு வகை செய்தல்.

4. இந் நகரங்களில் திட்டமற்ற முறையிலும் ஒழுங்கற்ற முறையிலும் வளர்ச்சியைத் தடுத்தல்; இட நெருக்கடிகளை நீக்குதல்.

5. சாக்கடை நீரையகற்ற முறையான ஏற்பாடுகளுக்கு வகை செய்தல்.



6. உள்ளாட்சி மன்றங்களை வலுப்படுத்தல், சிறப்புப் பகுதி வளர்ச்சி மன்றத்தை ஏற்படுத்தல். இதனால், சிறப்புப் பகுதி வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தும் பொறுப்பையும் அந்த அமைப்பே ஏற்கும்படி செய்ய இயலும்.

நகராட்சி நிருவாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை போன்ற நிருவாகத் துறைகளின் மூலம், பாரம்பரியப் பெருமைமிக்க நகரங்களைக் கண்டறிந்து அவற்றிற்குரிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், சிதம்பரம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், தரங்கம்பாடி, தஞ்சாவூர், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருத்தணி, பழனி ஆகியவை முதற் கட்டத்தில் கண்டறியப்பட்ட பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களாகும்.

## சுற்றுலா ஒரு தொழில் :

இந்த அரசு சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவித்துள்ளது. கீழ்க்காணும் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது :—

1. சென்னை, கோயம்புத்தூர், மதுரை மாநகராட்சிகள் நீங்கலாக மற்ற இடங்களில் ரூபாய் ஒரு கோடிக்கும் குறைவான முதலீடு கொண்ட 1 முதல் 3 நட்சத்திர ஓட்டல்கள்.

2. பொழுதுபோக்கு பூங்காக்கள்.

3. ஏற்பளிக்கப்பட்ட சுற்றுலாப் பயண ஏற்பாடு செய்பவர்களால் இயக்கப்படும் சீர்வளி வசதி செய்யப்பட்ட பேருந்துகள்.

4. கோல்ப் விளையாட்டிடம்.

5. அரசால் ஏற்பளிக்கப்பட்ட சிற்றுண்டி விடுதிகள்.

இந்த அரசு மேற்காணும் திட்டங்களுக்கு கீழ்க் காணும் சலுகைகளை வழங்கலாம் என முடிவெடுத் துள்ளது:—

1. 14 சதவீத வட்டி வீதத்தில் அல்லது அரசினால் இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப் படும் வட்டி வீதத்தில் சுற்றுலாத் திட்டங்களுக்கு கடன்கள் வழங்கப்படும்.

2. ஒரு திட்டத்திற்கு உயரளவு ரூபாய் 10 இலட்சம் என்ற அளவுக்கு உட்பட்டு, புதுச் சுற்றுலா திட்டங்களுக்கு நிலத்தின் விலை நீங்கலாக மொத்த முதலீட்டில் 10 சதவீதம் என்ற வீதத்தில் மூலதன ஊக்கத் தொகை.

3. தகுதியுடைய ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலை களில் சிற்றுண்டி விற்பனைகளின் மீது 5 ஆண்டு காலத் திற்கு விற்பனை வரி வசூலித்தலைத் தள்ளி வைத்தல்.

4. புதிய ஓட்டல் திட்டங்களைப் பொறுத்தவரை யில் அறைகளுக்கு விதிக்கப்படும் ஆடம்பர வரியில் 50 சதவீதத்தை 5 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி ,செய் தல்.

5. புதிய தொழிற்சாலைகளுக்கு இணையாக புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மின்சாரக் கட்டண வீதத்தில் சலுகை.

6. ரூ. 5 இலட்சம் உச்ச வரம்புக்கு உட்பட்டு, புதிய சுற்றுலாத் திட்டங்களுக்காக நிறுவப்படும் மின் உற்பத்தி இயந்திரங்களை (Generators) வாங்க 15 சதவீதம் என்ற வீதத்தில் மூலதன ஊக்கத் தொகை திட்டத்தின் மொத்த முதலீட்டின் மீது மூலதன ஊக் கத் தொகையாக வழங்கப்படும். ரூ. 10 இலட்சம் என்ற உச்ச வரம்புத் தொகை இதில் அடங்காது.

சுற்றுலாத் தொழிலில் தேவையான இன்றியமையாத அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இந்தச் சலுகைகளும், ஊக்கத் தொகையும் பெரிதும் உதவும். சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றியமையாத சிறந்த தரமான சேவைக்கும், போட்டிக்கும் இது வழிவகுக்கும்.



**கூட்டு/இணைத்தொழில் முயற்சியை ஊக்குவித்தல் :**

மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான முக்கியத்துவத்தை அளிக்கும் பொருட்டு அரசு, கீழ் காணும் அடிப்படையில் கூட்டு/இணைத் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும்:—

1. ‘டிட்கோ’ முறையில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 26 சதவீதம் சமபங்கு மூலதனத்துடன் கூட்டு சேர்தல் அல்லது 11 சதவீதம் சமபங்கு மூலதனத்துடன் இணைந்து நடத்துதல் மற்றும் தனியார் தொழில் முனைவோர்களின் மேம்பாட்டுக்கு அனைத்து உதவிகளையும் அளித்தல்.

2. சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடுதல்.

3. அரசுத் துறையின்கீழ் தற்போது இயங்கி வரும் ஓட்டல்களையும், அவற்றின் சொத்துக்களையும் தனி யாருக்கு குத்தகைக்கு விட்டு வரும் ஆதாயத்தைப் பங் கிட்டுக் கொள்ளுதல்.

4. கூட்டு/இணைமுறை அடிப்படையில், ஓட்டல்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், நீச்சல் விளையாட்டு வசதி கள், சிற்றுண்டியகங்கள், ஏனைய சுற்றுலா வசதிகளை அமைத்தல்.

5. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், கூட்டு/ இணைமுறை நிறுவனத்துடன் மூலம் குறைந்த செலவிலான கூடாரங்கள் அமைப்பதை ஊக்குவித்தல், அதற்கு ஏற்ற இடங்களை ஒதுக்கீடு செய்தல்.

**மாவட்ட சுற்றுலா மையங்கள் :**

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா பற்றிய விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களிடையே சுற்று லாப் பயணத்தை ஊக்குவிக்கவும், அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சுற்றுலா மையம் அமைக்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், ''மாவட்ட சுற்றுலா மையமாக'' மேம் படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அணைக்கட்டுப் பகுதிகள், அருவிகள் போன்ற இடங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

இம்மையங்களில், குடிநீர், கழிவறைகள், உடை மாற்றும் அறைகள், பேருந்து வசதி, இருப்பிட வசதி, பொழுதுபோக்கு பூங்காக்கள், உணவகங்கள் போன்ற வசதிகள் அளிக்கப்படும். இதன் பொருட்டு, அரசு அனைத்து மாவட்டங்களிலும் 42 மையங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.

1992-93-ல் வைகை, சாத்தனூர், மேட்டூர் ஆகிய இடங்களிலுள்ள அணைக்கட்டுப் பகுதிகளை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## பயிற்சியும் மனித ஆற்றல் மேம்பாடும்:

சுற்றுலாத் துறையில் பயிற்சி பெற்ற மனித ஆற்றலின் தேவையை அரசு உணர்ந்துள்ளது. உணவுக்கலையில் பயிற்சி அளிப்பதற்காக மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து திருச்சிராப்பள்ளியில் உணவுக்கலைப் பயிற்சி நிறுவனத்தை 1981 அக்டோபரில் ஏற்படுத்தினர். இந்நிறுவனம் பின்வரும் துறைகளில் ஓராண்டு முழு நேர சான்றிதழ் பயிற்சி வகுப்பு நடத்துகிறது :

1. ஓட்டல் வரவேற்பு மற்றும் கணக்கு வைப்பு முறை
2. சிற்றுண்டி மற்றும் நிலையப்பணி
3. ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டம் தயாரிப்பு
4. சமையல் முறை
5. இல்லப் பராமரிப்பு

இந்நிறுவனம், இல்லத்தரசிகளுக்காக ரொட்டித் தயாரிப்பு, சமையல் முறை, இல்லப் பராமரிப்பு ஆகிய துறைகளில் பகுதி நேர பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. தென்னக ரயில்வே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஏனைய தனியார் அமைப்புகள் முதலியவற்றின் பணியாளர்களுக்காக நினைவுகூர் பயிற்சி





நடத்துகிறது. இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருப்பதால் 1992-93-லிருந்து மேலும் 100 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், தற்போதுள்ள வசதிகளை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

## நீலகிரியில் வட்டார உணவக நிறுவனம் அமைத்தல்

மத்திய அரசின் ஒத்துழைப்புடன் நீலகிரியில் வட்டார உணவுக்கலை நிறுவனம் அமைக்க கருதப்பட்டுள்ளது.

## பணியிருப்பு பயிற்சி :

இத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், பணியாளர் ஆகியோருக்குப் பயிற்சியளிக்க ரூ. 55 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீர் விளையாட்டுகள், சுற்றுலா மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சியளிக்கக் கருதப்பட்டுள்ளது. துறைப் பணியாளருக்கும், தெரிந்தெடுக்கப்பட்ட வழிகாட்டிகளுக்கும் இந்திய வெளிநாட்டு மொழிப் பயிற்சியும் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

## வெளிநாடுகளில் நம் சுற்றுலா மையங்களை அறியச் செய்தல்.

தமிழ்நாடு பற்றி உண்மையான, சரியான தகவல்கள் கிடைப்பதில்லை என்று தெரிய வருகிறது. வெளிநாடுகளில் இத்தகவல்கள் கிடைக்கச் செய்ய பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள சிறந்த சுற்றுலா மையங்கள் தவிர தமிழ்நாட்டு கலை, கைவினைகள், பாரம்பரியம் கலாச்சாரம் பற்றியும் அவர்கள் அறியும் வகையில், நல்ல தரமான துண்டு வெளியீடுகள், விளம்பர சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், திரைப் படங்கள், வீடியோ திரைப் படங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது.

இவைக் கீழ்க்கண்ட இடங்களுக்கு அனுப்பப்படும்:—

1. வெளி நாடுகளிலுள்ள அனைத்து மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள்.

2. வெளிநாடுகளிலுள்ள அனைத்து மத்திய அரசு தூதரக அலுவலகங்கள்.

3. வெளிநாடுகளிலுள்ள அனைத்து ஏர் இந்திய விற்பனை அலுவலகங்கள் (110 அலுவலகங்கள்).

4. வெளிநாடுகளிலுள்ள முக்கிய சுற்றுலா முகவரமைப்புகள்.

5. இந்தியாவிற்கு வரும் அனைத்து முக்கிய ஏர் லைன்ஸ் விமானங்களில் காட்டும் வகையில், அவர்களுக்கு வீடியோ திரைப்படங்கள் அனுப்புதல்.

''ஃபாம்குழு'' (விருந்தோம்புதல்). (தெரிந்துகொள்ளவரும் குழுக்கள்):

சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் பயண எழுத்தாளர்களை வரவேற்று விருந்தோம்புவது சுற்றுலாத் துறையின் ஒரு முக்கிய நடவடிக்கையாகும். இத்திட்டத்தின் கீழ், பயண முகவர்கள், பயண எழுத்தாளர்கள், பத்திரிகை தகவல் தொடர்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை நமது மாநிலத்தில் உள்ள சுற்றுலா முக்கியம் வாய்ந்த இடங்கள், கிடைக்கப்பெறும் வசதிகள் ஆகியவற்றை காண அழைக்கப் படுகின்றனர். இதனால் அவர்கள் நம் மாநிலத்தில் நேரில் கண்டு மகிழ்ந்தவற்றையும், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் குறிப்பிட்டு கட்டுரைகள், நிழற்படங்கள், வீடியோ படங்கள் மூலம் அவர்களுடைய நாட்டில் தெரிவிப்பதால் நம் மாநில சுற்றுலாத்தலங்களுக்கு அவர்களால் நல்ல விளம்பரம் கிடைக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா மையங்களில், வெளிநாட்டு பயணிகள் திரைப்படம் எடுக்க விரும்பினால், இவர்களுக்கும் இந்த விருந்தோம்பல் அளிக்கப்படுகிறது. ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளுக்காக மாமல்லபுரத்தைப் பற்றியும் அங்கு நடைப்



பெற்ற நாட்டியக் கலை விழாவையும் திரைப்படம் தயாரிப்பதற்காக ஃபியுஜி ஃபிலிம் நிறுவனத்திற்கு இவ்வாண்டு விருந்தோம்பல் அளிக்கப்பட்டது. வெளிநாட்டிலிருந்து வரும் ''ஃபேம் குரூப்'' என்னும் ஒரு பிரிவினருக்கு மே—ஜூன் திங்களில் ஏர் இந்திய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் விருந்தோம்பலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பொருட்காட்சிகளும் திருவிழாக்களும் :

தமிழ்நாட்டில் நடைபெறும் முக்கியமான பொருட்காட்சிகளையும், திருவிழாக்களையும் வெளிநாடுகளில் பிரபலப்படுத்த தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவியைக் கோரியுள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்து அவற்றைப் பார்க்க திட்டமிட இயலும் வகையில் இத்தகைய விழாக்கள் தவறாமல் நடத்தப்பட்டு அவை குறித்து முன் கூட்டியே விளம்பரப்படுத்தப்படும். மத்திய அரசு நம் மாநிலத்தில் பொங்கல் திருநாளையும், சித்திரைத் திருவிழாவையும் விளம்பரப்படுத்தி நிதியுதவியளிப்பதற்குரிய விழாக்களாக தெரிந்தெடுத்துள்ளது. ஜனவரி, பிப்ரவரியில் மாமல்லபுரத்தில் நடைபெறும் நாட்டிய நிகழ்ச்சியையும், பிப்ரவரி-மார்ச்சில் சிதம்பரத்தில் நடைபெறும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியையும், ஏப்ரல்-மே திங்களில் உதகமண்டலத்தில் நடைபெறும் கோடைக்காலத் திருவிழாவையும், இந்தியத் திருவிழாக்கள் குறித்த சுற்றுலா பயணத் திட்டத்தில் சேர்த்து, அவை குறித்து வெளிநாடுகளில் 1992-93-ம் ஆண்டில் விளம்பரப்படுத்த வேண்டும் என மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்படவுள்ளது.

முட்டுக் காட்டில் தேசிய நீர் விளையாட்டு மையம் அமைத்தல் :

சென்னையிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள எழில் மிகு கிராமம் முட்டுக்காடாகும். இது கடலையும், பக்கிங்காம் கால்வாயையும்,

இணைக்கும் ஒரு பரந்து விரிந்த உப்பங்கழிப் பகுதியாகும். கயாக்கிங் (Kayaking) கேனோயிங், (Canoeing) விண்ட்சர்ப்பிஃங் (Wind surfing) போன்ற நீர் விளையாட்டுக்களை நடத்துவதற்குரிய சிறந்த இடமாகும். ஆகவே, இந்த உப்பங்கழிப் பகுதியை ஆழப்படுத்தி நீர்விளையாட்டு மையமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

<u>திட்டப்பணிகள் :</u>

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின், முதல் ஆண்டான 1992–93ஆம் ஆண்டில், ரூ. 50.51 இலட்சம் மொத்தச் செலவில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கோவாவில் புதிய சுற்றுலா அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தல் | 2.00 |
| 2. பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் | 10.00 |
| 3. குற்றாலத்தில் படகுத்துறை கட்டுதலும் படகு விடுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதலும் | 3.50 |
| 4. விளம்பரச் செலவுகள் | 15.00 |
| 5. திருச்சிராப்பள்ளி மாவட்டம் தூவாக்குடியில் உள்ள உணவு கலை நிறுவனத்தின் தரத்தை உயர்த்தல் | 10.00 |
| 6. சுற்றுலாத் தொழிலுக்கு ஊக்கத்தொகை | 10.00 |
| 7. வட்டார உணவுக்கலை நிறுவனம் ஏற்படுத்தல் | 0.01 |
| மொத்தம் | 50.51 |



<u>புதிய திட்டங்கள் :</u>

1992–93 ஆம் ஆண்டில் சில புதிய திட்டங்களை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது.

<u>தரங்கம்பாடியை மேம்படுத்தல் :—</u>

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடி ஒரு காலத்தில் டென்மார்க் நாட்டவரின் குடியிருப்புப் பகுதியாக இருந்தது. இங்கு சில வரலாற்றுச் சின்னங்களை இன்றும் காணலாம். தரங்கம்பாடிப் பகுதியில் இங்கு காற்று மண்டலத்தில் 'ஓசோன்' மிகுந்து காணப்படுவதால் இதனைச் சுகாதார கடற்கரை தலமாக மேம்படுத்தலாம். அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிலையம் ரூ. 4.65 கோடி மதிப்பீடு மூலதனச் செலவில் தரங்கம்பாடியை மேம்படுத்துவதற்கான விரிவான பெருந்திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற ஒரு சுற்றுலாத் தலமாக இந்த இடத்தை மேம்படுத்த வேண்டுமென்பதில் தமிழ்நாடு அரசு மிகவும் ஆர்வம் காட்டி வருகிறது. ஆகவே, அங்குள்ள பழைய கோட்டையையும், ஏனைய கட்டிடங்களையும் புதுப்பிப்பதற்கு ''டானிடா'' நிறுவனத்திடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் நிதியுதவி பெறக்கருதப்பட்டுள்ளது. மேலும், குடிநீர் வசதிகள், மின் இணைப்பு வசதி, போக்குவரத்து, தொலை தொடர்பு வசதி முதலியன போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புப் பகுதி மேம்பாட்டு மன்றம் ஒன்றை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. சுற்றுலாவளர்ச்சியின் பயனை நகர மக்களுடனும், அண்டைய கிராமங்களைச் சேர்ந்தவர்களுடனும் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் வளர்ச்சி மைய அணுகுமுறையைப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

<u>மெரினா கடற்கரையை அழகுபடுத்துதல் :—</u>

உலகிலேயே இரண்டாவது பெரியகடற்கரையான மெரினா கடற்கரை பல்வேறு நெருக்கடிகள் காரணமாக மாசுபடிந்தும், அசுத்தமடைந்தும்

வருகிறது. எழில் மிகுந்த இக்கடற்கரையை சேதமடைந்து, சீர்குலைந்து போவதைத் தடுப்பது மிகமிக அவசியமாகும். எனவே பொலிவற்ற அமைப்புகளை அகற்றி இக்கடற்கரை முழுவதையும் அழகு படுத்தக் கருதப்பட்டுள்ளது. தலைமைச் செயலாளர் தலைமையிலான ஒரு தனிக்குழு, இப் பணியை மேற்கொள்ளும். மெரினா கடற்கரையை மேம்படுத்துவதற்குறிய ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை தயாரித்தளிக்குமாறு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிண்டி சிறுவர் பூங்காவை மேம்படுத்தல் :—

கிண்டியிலுள்ள சிறுவர் பூங்கா, சென்னை மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள, மற்றொரு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இப்பூங்காவை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று வனத் துறையைக் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழக அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா மாளிகைகளை ஏற்று இரு பேருந்துகளுடன் 1971 ஆம் ஆண்டு சிறிய அளவில் தொடங்கப்பெற்றது. இன்று அது 2,355 படுக்கை வசதிகள் கொண்ட பல ஓட்டல் களைத் தமிழ்நாட்டில் அமைத்து பெருமைப்படும் அளவுக்கு வளர்ந்துள்ளது. இக்கழகத்தின் போக்கு வரத்துப் பிரிவுகளையும் 22 பேருந்துகளையும் (20 சீர் வளிவசதி செய்யப்படாதது 2 சீர்வளிவசதி செய்யப் பட்டது) சீர்வளிவசதி செய்யப்பட்ட மூன்றுகார்களை யும், கொண்டுள்ளது. இந்தக் கழகத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களின் எண்ணிக்கை 1971-72ஆம் ஆண்டில் 297 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை 1991-92 ஆம் ஆண்டில் 1,067 ஆக அதிகரித்துள்ளது.



இக்கழகம் தற்போது கீழ்க்காணும் சுற்றுலா வசதி களை அளித்து வருகிறது.—

| | | |
|---|---|---|
| 1. | ஓட்டல்கள் | 23 |
| 2. | இளைஞர் இல்லங்கள் | 11 |
| 3. | சிற்றுண்டிச்சாலைகள் | 4 |
| 4. | சுற்றுலா வளாகங்கள் | 2 |
| 5. | படகு வீடுகள் | 8 |
| 6 | தொலைநோக்காடி இல்லங்கள் | 4 |

ஏற்காட்டிலுள்ள சுற்றுலா வளாகம் 1991-92 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள திட்டமிட்ட சுற்றுலாக்கள் சுற்றுலாப் பயணிகளிடையே மிகப்பிரபலமாகியுள்ளன.

இக்கழகம் தற்போது கீழ்க் காணும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.—

1. சென்னை மாநகரைச் சுற்றிக் காட்டும் அன்றாடச் சுற்றுலா
2. சென்னை-காஞ்சீபுரம்-மாமல்லபுரம் அன்றாடச் சுற்றுலா
3. சென்னை-திருப்பதி-அன்றாடச் சுற்றுலா
4. ஐந்து நாள் தென்னிந்தியச் சுற்றுலா
5. எட்டுநாள் தமிழ்நாடு சுற்றுலா
6. ஏழுநாள் மந்திராலயம்-கோவா சுற்றுலா
7. ஐந்து நாள் மூகாம்பிகை சுற்றுலா
8. மாணவர்களுக்காக திட்டமிட்ட சுற்றுலா
9. பதினான்கு நாள் தென்னிந்தியச் சுற்றுலா

இவை தவிர, சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் திட்டமிட்ட சிறப்புச் சுற்றுலாக்களும் ஏற்பாடு செய்யபடுகின்றன.

சுற்றுலாக் காலத்தின்போது, மலை சார்ந்த தலங்களைச் சுற்றிப் பார்க்க கோடை கால சுற்றுலாப் பயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

பொருட்காட்சிகள் :

சென்னையில் ஆண்டுதோறும் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. 1992 ஆம் ஆண்டுப் பொருட்காட்சியில் கீழ்க் காணும் கண்கவர் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

1. வின்டேஜ் மோட்டார் கார் கண்காட்சி.

2. குழந்தைகள் குதூகலித்து மகிழ பாட்டரியில் இயங்கும் கார் மற்றும் கேபிள் கார் ஆகியவை இயக்கப்பட்டன.

3. ''பாம்புக் கூண்டில் வேலாயுதம்'' என்ற அற்புத நிகழ்ச்சி. இக் கண்காட்சியில் வேலாயுதம் என்னும் ஒருவர் நச்சுப் பாம்புகள் உயிருடன் உலவுகின்ற கூண்டிற்குள் துணிச்சலுடன் தங்கி சாதனை புரிகிறார்.

4. ''மங்கையர் மலர்'' என்ற தமிழ் மாத இதழுடன் இணைந்து சென்ற ஆண்டைப் போன்றே இவ்வாண்டும் ''கோலப் போட்டி'' வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

புது டெல்லியிலுள்ள பிரகதி மைதானம் போன்ற நிரந்தரமான பொருட்காட்சி மையம் ஒன்றை சென்னைக்கு அருகில் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1989-90ஆம் ஆண்டில் மொத்த வியாபாரத் தொகை ரூ. 841.21 இலட்சம் ஆகும். நிகர இழப்பு ரூ. 24.53 இலட்சம் ஆகும். ஆனால் 1990-91 ஆம் ஆண்டில், இக்கழகத்தின் வியாபாரத் தொகை ரூ. 974.91 இலட்சமாகும். அதே ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் நிகர ஆதாயம் ஈட்டியது. வளைகுடாப் போர், நாட்டில் நிலவி வந்த சமூக அரசியல் நிலைமைகள், ஏனைய கூறுகள் ஆகிய வற்றின் காரணமாக சுற்றுலாவைப் பொறுத்தவரை 1991-92 ஆம் ஆண்டு ஒரு மோசமான ஆண்டாக விளங்கியது. அப்படி இருந்தபோதும் 1991-92 ஆம் நிதியாண்டின் இறுதிக்குள் இக்கழகத்தின் வியாபாரத் தொகை ரூ. 1,077.22 இலட்சத்தை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இழப்பு எதுவும் ஏற்படாமல் தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகளையும், வசதிகளையும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் :

1. ஊட்டி, கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொலைபேசித் தொடர்பு இணைப்பக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. மாமல்லபுரத்திலுள்ள பழைய குடில்களைப் புதுப்பித்தல்.

3. உணவுக் கலை நிறுவனத்தின் உணவகப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

4. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரிய ஓட்டல்களில் இந்திய எண்ணெய் கழகத்தின் (I.O.C.) பணியாளர்களுக்கு அறைகளை ஒதுக்கீடு செய்து கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

5. ஓட்டல்களின் அறைகளை ஒதுக்கீடு செய்வதற்கும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு (Package Tours) ஏற்பாடுகள் செய்வதற்கும் வசதியாக சுற்றுலா அலுவலர்களை முன்பதிவு மற்றும் பதிவுச் சீட்டுக்கள் விற்பதற்கு இக்கழகத்தின் விற்பனை முகவர்களாக (Selling Agent) நியமித்தல்.

6. விடுப்பு பயணச் சலுகையை (L.T.C.) பயன்படுத்திக் கொள்ளும் மாநில அரசுப் பணியாளர்களின் நலனுக்காக திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு ஏற்பாடுகள் செய்யுமாறு இக்கழகத்தை மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

7. உதகமண்டலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் பயன் கருதி கூடுதலாகப் படகுகள் வாங்குதல்.

8. நடப்பு ஆண்டில் மாமல்லபுரத்தில் 1,300 இரவுகளுக்கும் ஏனைய இடங்களில் 500 இரவுகளுக்கும் தங்கும் வசதி பயன்படுத்திக் கொள்ள உத்திரவாதமளிக்கும் வகையில் இதர நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9. கணிப்பொறி மூலம், சுற்றுலா பயணச் சீட்டுகள் விற்பனை செய்தல்.

10. சுற்றுலா வழிகாட்டிகளுக்கு, ஆங்கிலம், இந்தி, ஏனைய இந்திய மொழிகளில் நன்கு பேச பயிற்சி அளிப்பது உட்பட, சுற்றுலா தொடர்பான அனைத்து வகை பயிற்சிகளும் அளிக்கும் திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

11. திருச்சி, தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள ஓட்டல்கள் மேம்படுத்தப்பட்டன.

12. இக்கழகத்திற்குத் தேவைப்படும் நிதியைத்திரட்டுவதற்காக, சுற்றுலா வைப்பீட்டு இடவசதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 28 இலட்சம் திரட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஓராண்டிற்கு மொத்தமாக தொகை வைப்பீடு செய்பவர்களுக்கு உத்தரவாதத்துடன் இடவசதி அளிக்கப்படுகிறது.



**1992-93இல் எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள்:**

1. ஓட்டல்களில் நவீன அறைகலன் வசதி, நன்கு திட்டமிடப்பட்ட உட்புற அலங்காரம், ஒளி-ஒலிக்காட்சிப் பெட்டிகள், சீர்வளி வசதி ஆகியவற்றை அமைக்கவும், நல்ல சுற்றுலாப்பணி வசதிகளை அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடப்பாண்டில் குறைந்தது இரண்டு ஓட்டல்களை நட்சத்திர ஓட்டல்களாக நிலை உயர்த்தும்.

2. சென்னையிலுள்ள பழைய சட்டக்கல்லூரி விடுதியைப் புதுப்பித்து, சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஓட்டலாக மாற்றக் கருதப்பட்டுள்ளது.

3. ஆண்டுதோறும் சுற்றுலாப்பயணிகள் தொடர்ந்து வரும் பொருட்டு மொரிஷீயஸ் நாட்டிலுள்ள சுற்றுலா வணிக நிறுவனத்துடன் சுற்றுலாத் தொடர்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

4. தெரிந்தெடுக்கப்பட்ட உய்விடங்களில் ''காலப் பகிர்வு'' திட்டத்தின்படி சுற்றுலாப் பயணிகள் ஒரு குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி ஒரு வார கால அளவிற்கு தங்குமிடத்தை உறுதி செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

5. 1992-93ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஊர்களில் ஓட்டல்கள் கட்டும் பணியைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:-

கடலூர்
சேலம்
திருநெல்வேலி
கும்பகோணம்
புதுக்கோட்டை

6. தங்குமிடம் மற்றும் சுற்றுலாக்கள் ஆகியவற்றை பதிவு செய்யும் பொருட்டு இதர சுற்றுலாக் கழகங்களுடன் கூட்டு முயற்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

7. ஊட்டியிலும், சென்னையில் பொருட்காட்சித் திடலிலும் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக கேளிக்கை வளாகங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. நமது ஓட்டல்கள் அனைத்திலும் உடனடியாக இடவசதி பதிவு செய்யும் வசதியை உருவாக்கும் பொருட்டு சென்னையில் ஓட்டல் இடவசதி பதிவு செய்வதை கணிப்பொறிமயமாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. ஓட்டல் மற்றும் சுற்றுலாக்களுக்கு முன்பதிவு செய்யப்படுவதை அதிகரிக்க முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றார்கள்.

10. விமான பயணச்சீட்டு வழங்குவதில் அங்கீகாரம் பெறுவதற்காகப் பணியாளர்கள் பயணச்சீட்டு வழங்கும் பயிற்சி பெறுவதற்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

11 மாநில அரசின் சுற்றுலா அலுவலர்களின் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு டெல்லி, பம்பாய், கல்கத்தா நகரங்களிலிருந்தும், மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பதிவு செய்யும் வசதியைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



## தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை

மக்களினத்தைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவற்றுள் மொழி தலையாய இடம் பெறும். மக்களால் மக்களுக்காகவே உருவாக்கப்பட்ட கலை வடிவே மொழியாகும். மொழியால் எண்ணம் வெளிப்படுகிறது. எண்ணமும், வெளியிடும் மொழியும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்கலாகா உறவுடையன. எனவே தாய்மொழி வழியாகவே மாநில மக்களின் பன்முக வாழ்க்கையும், பண்பாடும் நிலைத்து வருகின்றன. தாய்மொழியின் உயர்வு தாழ்வுக்கேற்பவே மக்கள் வாழ்க்கை நிலைகள் உருவாகின்றன. இவ்வகையில் அரசுப் பணிகளிலும் சமுதாயக் கடமைகளிலும் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்-என்றும் தமிழ்". என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது.

2. அரசு, ஆட்சி, அறிவியல், தொழில் நுணுக்கம், வணிகம், போக்குவரவு, புதிய படைப்புகள், அன்றாட நாகரிக வளர்ச்சி முதலிய பல்வேறு பொருண்மைகளின் தொடர்ந்த வளர்ச்சியால் அவ்வத் துறைகளில் பயன்படும் அளவுக்குப் புதிய சொற்களுடனும், பொலிவார்ந்த வெளிப்பாடுகளுடனும் பல்கிய சொற்றொகுதிகளால் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் சூழல், அந்தந்த மாநில மொழிகளுக்கு இன்றியமையாத் தேவையாக அன்றாடம் அமைந்துள்ளது. எனவே மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படையாகின்றன. மொழி வளர்ச்சியோடு பண்பாட்டு மலர்ச்சியும், கலை வளர்ச்சியும், இலக்கிய எழுச்சியும் இணைந்தே உரம் பெறும். மொழியால் உயர்வும், கலையால் கனிவும், பண்பாட்டால் பெருமிதமும், இலக்கியத்தால் உயர் நோக்கும் முறையாக அமையும் என்பர்.

3. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு, மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், ஆவணங்களிலும், அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்தல், கலை

இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாகத் தலைமைச் செயலகத்தில் 1984 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை எனத் தோற்றுவிக்கப்பட்டது. இப்பெருமை முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். இத்துறையின் பொறுப்பில் அமைந்த அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன் மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன :**

(அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்
(ஆ) மொழிபெயர்ப்புத் துறை
(இ) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
(ஈ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

**தொன் மரபு காப்பன :**

(உ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்
(ஊ) அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்
(எ) அரசு அருங்காட்சியக இயக்ககம்

**வளர்கலை ஊக்குவன :**

(ஏ) கலை - பண்பாட்டு இயக்ககம்—

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
ஜவகர் சிறுவர் இல்லம்
அரசு இசைப் பயிற்சி மையங்கள்
அரசு ஓவிய-கைவினைத் தொழிற் கல்லூரிகள்
அரசு கட்டட-சிற்பக் கல்லூரி



## (அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1968 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும் ஆட்சிமொழியாகிய தமிழ், மொழிப் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சிக்குரிய பிற பணிகளும் இத்துறையின் பாற்படும்.

**ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் :**

2. ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தில் அமைந்த முன்னேற்றம் குறித்து, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலமைந்த சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும், தமிழாய்வு அலுவலர்களும் ஆய்வு செய்கின்றனர்.

3. ஆட்சிமொழித் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கென மூவாண்டு முனைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, முதனிலையில், 17 துறைகளும் எஞ்சிய துறைகள் பின்னருமாக மேற்கொள்ளப்பட்டன.

4. தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலுள்ள மாவட்ட உதவி இயக்குநர்களாலும், தமிழாய்வு அலுவலர்களாலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அலுவலகங்களில் விரிவாக ஆய்வு நடத்தப்பெற்று ஆட்சிமொழித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலைமை என்றும் நிலவ தமிழிலேயே அரசு அலுவல்களை மேற்கொண்டு, அரசின் திட்டங்களும், பயன்களும் மக்களுக்குச் சென்று சேரவேண்டுமென்பது அரசின் நோக்கமாகும்.

5. ஆட்சிமொழிச் செயலாக்கத்தைத் தன்னாட்சி நிறுவனங்களில் விரிவுபடுத்தும் வகையில், அரசுக்குக் கூடுதல் செலவில்லாமல் இப்போதுள்ள அலுவலர்களைக்

கொண்டே ஆட்சி மொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்ற "ஈராண்டு எழுச்சித் திட்டத்தை" மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் அனைத்துத் தன்னாட்சி நிறுவனங்களிலும் அரசு சார்நிலை அலுவலகங்களிலும் ஆட்சி மொழித் திட்டம் செயற்படுத்தப்படும்.

6. ஆட்சி மொழித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்குத் தமிழ் தட்டச்சுப் பொறிகள் வழங்கும் செயற்பாடுதான் முதலிடம் பெறுகிறது. எந்த அலுவலகமும் புதிதாக ஆங்கிலத் தட்டச்சுப் பொறி வாங்குவதற்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் இசைவினைப் பெற வேண்டுமென்பது அரசாணையாகும்.

**ஆட்சிச் சொல்லகராதி :**

7. ஆட்சிச் சொல்லகராதி இதுவரை நான்கு பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளது. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. அலுவலர்களும், பணியாளர்களும் எளிதில் பயன் கொள்ளும் வகையில் ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு அச்சில் உள்ளது. பல்வேறு துறைகளுக்கு அவ்வத் துறைகளில் வழங்கப்படும் அலுவலக ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களைத் தரும் முறையில் 72 துறைச் சொல்லகராதிகள் வெளியிடப் பெற்றுள்ளன. அலுவலர்கள் தங்குதடையின்றி எளிதில் தமிழைப் பயன்படுத்தும் வகையில், அரசு சார்பு அல்லாத நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்று, ஆங்கிலம் - தமிழ், தமிழ் - ஆங்கில அகராதிகளை வெளியிடவும் கருதப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் வழக்கில் வந்த சொற்களும் இவ்வகராதிகளில் இடம் பெறும்.

**ஆட்சி மொழிக் கருத்தரங்கு :**

8. அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழித் திட்டக் கருத்தரங்குகளை நடத்தவும் துறை கருதியுள்ளது. இவ்வாண்டு நீலகிரி,



தென்னார்க்காடு, திண்டுக்கல்-அண்ணா, சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஆறு மாவட்டங்களில் இக்கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழிற் சிறந்த வரைவுகள் - குறிப்புகள் - பரிசு வழங்குதல்:**

9. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழிற் சிறந்த வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு திருத்தியமைத்து, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும், 5 பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவுகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

**கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கு நிதியுதவி:**

10. மாணவர்கள், தமிழ் மொழியின்பால் காட்டும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கக் கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கென ரூ. 75,000 நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கல்லூரித் தமிழ் மன்றங்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மொழியாக்க நூல் வெளியீடு:**

11. தமிழிற் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிற் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட இத் திட்டம் வகை செய்கின்றது. இத் திட்டத்தின்படி இதுவரை 13 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. இம் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்படி கம்பராமாயணத்தின் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் முதன் முதலாக மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. சுந்தர காண்டம், கிட்கிந்தா காண்டம் மொழி பெயர்க்கப்பட்டு விரைவில் வெளியிடப் பெறும். எஞ்சிய யுத்த காண்டத்தையும் முடித்துக் கம்பராமாயண ஆங்கில மொழியாக்கம்

இவ்வாண்டிலேயே முழுமைபெறும். மேலும் தமிழ் இலக்கியத்தில் சிறந்த படைப்புகளை மொழிபெயர்க்க முன்வரும் தமிழறிஞர்களுக்கு அரசு உதவி புரியும்.

**தமிழிற் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம்:**

12. தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில 21 தலைப்புக்களில் சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் 63 பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகையாக முதற் பரிசு ரூ. 5 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ. 3 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூபாய் ஆயிரமும் வழங்கப் பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்குப் பாராட்டுச் சான்றிதழ்களும் அளிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டில் வெளிவந்த நூல்களில் 42 சிறந்த நூல்களுக்கு ரூ. 1.27 இலட்சம் பரிசாகத் ''திருவள்ளுவர் திருநாளில்'' வழங்கப் பட்டது.

**நூற்பதிப்பு - நிதியுதவி வழங்கு திட்டம்:**

13. நிலையான மதிப்பும், தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நூலாசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகிறது.. இத்திட்ட விதிகளில் குறித்த தலைப்புகளுக்கிணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி, நூலாசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்கப் பெறுகின்றன. வல்லுநர் குழு தெரிவு செய்து பரிந்துரைக்கும் எழுத்துச் சுவடிகள், நிதியுதவிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி நூலாசிரியர்களுக்குப் பெரும் அளவாக ரூ. 8,000 அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50 % என்னும் அளவில் எது குறைவோ, அத் தொகை நிதியுதவியாக வழங்கப்பெறும். நிதியுதவிக்குரிய தொகையில் பாதித்தொகை முன்பணமாகவும், அச்சிட்டு வெளியிட்ட பின்னர் எஞ்சிய தொகையும் வழங்கப் பெறுகிறது. 1991-92 இல் 19 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.



**தமிழிருக்கை நிறுவுகை - ஆராய்ச்சிப் பணிகள் - பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல்- நிதியுதவித் திட்டம்:**

14. அயல் மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை நிறுவவும், தமிழ்ப் பிரிவு, பட்டய வகுப்புத் தொடங்கவும் அரசு நிதியுதவி நல்குகிறது. தமிழ்ப் பணி மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி அமைப்புகளும் நிதியுதவி பெறுகின்றன. ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாட்டு மன்றத்தின் 'கூரியர்' இதழை வெளியிடும் தென் மொழிகள் புத்தக நிறுவனம், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிடமொழியியற் பள்ளி, சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனம், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், முதலிய நிறுவனங்கள் நிதியுதவி பெறுகின்றன. புது தில்லியில் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டுக்கு நிதியுதவி வழங்கியது போல இராஜஸ்தான் மாநிலத் தலைநகராகிய ஜெய்ப்பூரில் இயங்கும் தமிழ்ச் சங்கத்திற்குக் கட்டடம் அமைப்பதற்குரிய வகையில், குத்தகை அடிப்படையில் நிலம் வாங்க ரூ.2.05 இலட்சம் மானிய உதவியை அரசு வழங்கியுள்ளது.

**தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புத் திட்டம்:**

15. தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புப் பணியைத் தொடர்ந்து நிகழ்த்துகிறது. இது காறும் 24 தொகை நூல்கள் வெளிவந்துள்ளன. 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு நூல்களின் விளக்கம் -- பொருள் அகர வரிசை எழுதி முடிக்கப்பட்டுளளது. எட்டாம் தொகுதியில் இரண்டாம் பகுதிக்கான ஆசிரியர் அகர வரிசை, நூல் அகர வரிசைத் தொகுப்புப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம் :**

16. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் முப்பதின்மர் ஆண்டுதோறும் இத்திட்டத்தின்படி நிதியுதவி பெறுதற்குரியர். நிதியுதவிக்குத் தேர்வு செய்யப்பெறுவோர்

நிதியுதவியாகத் திங்கள் தோறும் ரூ. 400 பெறுவர். இதுகாறும் மொத்தம் 380 தமிழறிஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம் :

17. மொழிக் காவலருக்குத் திங்கள்தோறும் ரூ. 350 நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. இதுவரை, 1,577 பெருமக்கள் இத்திட்டத்தின்படி பயன் பெற்றுவருகின்றனர்.

வரலாற்று வரைவுத் திட்டம் :

18. முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல் பழங்காலம், சங்க காலம் பகுதி-1 (அரசியல்); சங்ககாலம் பகுதி-2 (வாழ்வியல்), பல்லவர் பாண்டியர் காலம் (முதற் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பல்லவர்-பாண்டியர் காலம் (இரண்டாம் பகுதி), சோழப் பெருவேந்தர் காலம், பிற்காலப் பாண்டியர்-விசயநகரவேந்தர் காலம், பெருவேந்து அமையாக் காலம், வெள்ளையர் ஆட்சிக் காலமும் - விடுதலைக்குப் பின்னரும் (இரு பகுதிகள்) ஆகிய ஐந்து தொகுதிகளை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விழாக்களும் விருதுகளும் :

திருவள்ளுவர் திருநாள் விழா :

19. திருவள்ளுவர் திருநாளை அரசு விழாவாகத் தமிழ் வளர்ச்சித் துறை நிகழ்த்துகிறது. ஆண்டுதோறும், திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் எழுதும் சிறந்த அறிஞர்களுக்குத் திருவள்ளுவர் விருது வழங்கப் பெறுகிறது. ரூ. 20,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் வழங்கப் பெறுகின்றன. இவ்வாண்டு, சனவரித் திங்கள் 15 ஆம் நாளில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர். நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப் பெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் விருது :

20. ஆண்டுதோறும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவருக்கு விருதாக ரூ. 10,000 வழங்கப் பெறுகிறது.



21. பாவேந்தரின் நூல்கள் 1-11-1991 முதல் நாட்டுடைமையாக்கப்பட்டன. பாவேந்தர் நூல்களை நாட்டுடைமையாக்கிய வகையில் பாவேந்தரின் குடும்பத்தார்க்கு ரூ. 8 இலட்சமும், பாவேந்தரின் நூல்களுக்குப் பதிப்புரிமை கொண்டிருந்த இரு பதிப்பகங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ஓரிலக்கம் ரூபாய் வீதம் ரூ. 2 இலட்சமும் ஆக ரூ. 10 இலட்சம் பாவேந்தர் நூல்களுக்கான பதிப்புரிமையைப் பெற செலவினம் மேற்கொள்ளப்பெற்றது. எவரும் பாவேந்தர் நூல்களை வெளியிடும் வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட பாவேந்தர் நூல்கள் பல்வேறு பதிப்பகங்களால் வெளியிடப் பெறுகின்றன.

திரு. வி. க. விருது :

22. தெரிவு செய்யப்படும் நாடறிந்த எழுத்தாளருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ரூ. 10,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் விழாவில் அளிக்கப் பெறும். 'பெண்ணின் பெருமை' என்னும் பேரிலக்கியம் தந்த திரு.வி.க. பெயரிலமைந்த இவ்விருது, இவ்வாண்டு முதன் முதலாகப் பெண் எழுத்தாளரும், நாடறிந்த கதையாசிரியருமாகிய திருமதி. இராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

கம்பர் விழா :

23. நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் திருவழுந்தூரில் ஆண்டுதோறும் கம்பர் விழா அரசு விழாவாக நடத்தப்படுகிறது. தமிழ்ச் சான்றோர்களின் நூற்றாண்டு விழாக்களும், தமிழ் வளர்ச்சித் துறைவாயிலாக அவ்வப்போது கொண்டாடப்படுகின்றன.

சங்கச் சான்றோர் நினைவுத் தூண் நிறுவுதல் :

24. சங்கப் புலவர்களின் பெருமைகளைப் போற்றிப் பரப்பும் வண்ணம் நினைவுத் தூண் நிறுவும் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. சங்கப் புலவர்கள் வாழ்ந்த இடங்கள் என அறியப்படும் முதன்மையான இடங்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண்கள் நிறுவப்பெறும்.

25. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள ஒக்கூரில் மாசாத்தியார்-மாசாத்தனார் நினைவுத் தூண் அமைக்கப் பெற்று 10-12-1991 அன்று திறப்பு விழா நடைபெற்றது.

26. செங்கற்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டம் இடைகழிநாட்டுநல்லூரில், நல்லூர் நத்தத்தனார்க்கும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மாங்குடியில், மாங்குடி மருதனார்க்கும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருவூரில், கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர்க்கும் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுத் திறப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன.

**ஊர்ப்பெயர்ச் செம்மை :**

27. தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களுக்குத் தமிழில் சரியான எழுத்துக் கூட்டல் வழங்கும் பொறுப்பும் இவ்வியக்ககத்திற்குரியதாகும். இலக்கணப் பிழை, பொருட்பிழை மலிந்த ஊர்ப் பெயர்கள்ளத் திருத்திச் சரியான பெயர்களை நடைமுறையில் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. இதற்கென மாநிலப் பெயராணைக் குழுவையும் அரசு தோற்றுவித்துள்ளது. தெருப் பெயர்களையும், பொதுக் கட்டடப் பெயர்களையும் செம்மையுடன் அமைப்பதற்கு இத்துறை உறுதுணை புரிகின்றது.

**திருக்குறள் வகுப்பு :**

28. தமிழ் மக்களின் மாமறையாகத் திகழும் திருக்குறளின் அருமை பெருமைகளை மக்கள் அனைவரும் அறிந்துணர வேண்டுமென்பது அரசின் விழைவாகும். இதன் பொருட்டு ''வள்ளுவர் கோட்டத்தில்'' வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறுகிறது. நாள்தோறும் காலை, மாலை இரு வேளைகளிலும் வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் பாட்டிசையும் நிகழ்கிறது.



## (ஆ) மொழி பெயர்ப்புத் துறை

தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெறவேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். மொழி பெயர்ப்புத் துறை இந் நோக்கத்திற்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழி பெயர்க்கின்றது.

2. அறிவிக்கைகள், அறிக்கைகள், பொதுக்கணக்கு, பொது நிறுவனக் குழு அறிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், விதிகள்-துணை விதிகள், விதி முறைகள்,பொதுத்துறையின் மறைபொருள் கோப்புகள் முதலியன மொழியாக்கம் பெறுகின்றன.

3. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழி பெயர்க்கப் பணியாளர்களின் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித்துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

## (இ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

வளர் தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்துவதற்காகப் பிரஞ்சு அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை என்னும் நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை 1970ஆம் ஆண்டில் அரசு நிறுவியது.

2. ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. தமிழ் பயில விரும்புவோர்க்கு ஒலியிழை வாயிலாக மொழி கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் உள்ளன. மொழிப் பயிற்சிக் கூடத்தில் தமிழ் வகுப்புகளில் அயல் நாட்டு மாணவர்கள் தமிழ் கற்று வருகின்றனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிற மொழியினர்க்கேற்ற பாடநூலுடன், ஒலியிழையால் ''தானே தமிழ் கற்கும் முறை'' உருவாக்கப்பட்டுள்ளது.

3. இந்நிறுவனத்தில் திங்கள், வாரக் கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. அறிஞர்களும், ஆய்வாளர்களும் கட்டுரையளிக்கும் கருத்தரங்கேற்றமாக நிகழ்வுகள் திகழ்கின்றன. தமிழும் பிற துறைகளும், தகவல் பண்பாட்டு நோக்கில் தமிழ்த் திரைப்படம், நாட்டுப்புறத் தெய்வங்கள், விழாக்கள், சடங்குகள் தமிழ் நாளிதழ்களின் தமிழ்ப் பணி, ஆகிய பொருண்மைகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தப்பெற்றன. தமிழர் சமூக மரபுச் செல்வம் என்னும் தேசியக் கருத்தரங்கு நடத்தப் பெற்றது.

4. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை ஆந்திரத்தில் திருப்பதியிலும், கருநாடகத்தில் பெங்களூரிலும், கேரளத்தில் திருவனந்தபுரத்திலும் தென்னகப் பண்பாட்டு மைய நிதியுதவியுடன் இணைந்து இந்நிறுவனம் சிறப்பாக நடத்தியது. பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவில் பாவேந்தரின் 100 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளில் மொழியாக்கம் பெற்று நூலாக வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

5. ஆண்டுதோறும் அறக்கட்டளைப் பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று, நூல்களாக வெளியிடப் பெறுகின்றன. சுவடியியல் குறுங்காலப் பயிற்சி வகுப்பு, தமிழ்ப் பயிற்சி வகுப்பு, பட்டய வகுப்பு, முனைவர் பட்ட ஆய்வு என இந்நிறுவனத்தில் அமைந்த பல்வேறு கல்விக் களங்கள் பயன்மிகு மாணவர்களை உருவாக்குகின்றன. அயல் நாடுகளைச் சார்ந்த எண்மர் தமிழ்ப் பயிற்சி பெற்றனர். இரு திங்களுக்கொரு முறையான செய்திக்கதிர் தொடர்ந்து இந்நிறுவனத்தால் வெளியிடப்பெறுகிறது. உயராய்வு நிலையில் மதிக்கப்பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரைநூல்கள், அறக்கட்டளைப் பொழிவுகள் என்ற வகையில் இவ்வாண்டில் எட்டு நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

6. அறிவியற் பெருந்தகை திரு. பெ. நா. அப்புசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்நிறுவனம்



நிகழ்த்தியது. இந்நிறுவன நூலகத்திற்கு மறைந்த பெருந்தகை திரு. பெ. நா. அப்புசாமி அவர்களின் குடும்பத்தினர் 2,300 அரிய நூல்களை வழங்கியுள்ளனர்

7. 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்), தமிழர் சமூகவியல், தமிழ் அறிமுக நிலை, சென்னை நகரக் கிளைமொழிகள் ஆய்வு, 18ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழரல்லாதவர்க்கான எளிய இலக்கணம், அழகியல்-தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும், பெருந்தகை பெ. நா. அப்புசாமி நூற்றொகை, கணினியின் உதவியால் சொல்லடைவு தயாரித்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான தரவுகள் திரட்டப்பெற்று பணிகள் வளர் நிலையில் உள்ளன.

### (ஈ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

மறைந்த மொழிஞாயிறு தேவநேயப்பாவணரால் தனி வகையில் ஆய்ந்து தொகுக்கப்பட்ட அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலம் 1985ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தனி இயக்ககமாக 1989இல் மீளவும் தோற்றுவிக்கப்பட்டு இயங்குகிறது. பேரகரமுதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்கள் சொல்லடைவு செய்யப்பட்டுள்ளன. ‘ஆ’ முதல் ‘ஔ’ முடியவுள்ள இரு பகுதிகள் இவ்வாண்டில் வெளியிடப்பெறும்.

### (உ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்

தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சின்னங்களைக் காத்தோம்பும் நோக்கத்தில் 1961இல் உருவாயிற்று. தமிழகத்தில் 66 வரலாற்று நினைவிடங்கள் தொல்

பொருள் ஆய்வுத் துறையால் தெரிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெறுகின்றன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை தரங்கம்பாடிக் கோட்டை, இராமநாதபுர இராமலிங்க விலாசம் முதலியவை இவற்றுள் முதன்மையானவை.

2. கல்வெட்டுக்களைப் படியெடுத்து நூல் வடிவில் கொண்டு வருதல், வரலாற்றுச் சின்னங் களைக் காத்தல், தொல்லிடங்களில் அகழ்பொருள் வைப்பகங்கள் அமைத்தல், ஊராய்வுகளை நிகழ்த்தித் தொன்மைச் சிறப்பிடங்களைக் கண்டறிதல் போன்ற பணிகளை இத்துறை ஆற்றுகிறது.

**காப்புப் பிரிவு :**

3. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையைப் பேணிக் காக்கும் பொருட்டு ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றன. அரண்மனை அடித் தளத்தின் தாங்கு தன்மைகள் பற்றியாராய்ந்த வல்லுநர், பொறியாளர் அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

4. தஞ்சை அரண்மனையின் பல்வேறு பகுதி களைச் (தர்பார் மண்டபம், மணிக்கோபுரம், ஆயுதக் கோபுரம், சர்ஜா மண்டபம் போன்றவை) சீராக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. வரலாற்றுச் சின்னங்களுக்கருகில் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய தகவல் பலகைகள் 27 இடங்களில் அமைக்கப் பெறவுள்ளன.

**அகழாய்வு :**

5. கங்கைகொண்ட சோழபுரம் (திருச்சி மாவட்டம்), அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டம்) ஆகிய இடங்களில் அகழாய்வுகள் நடந்தன. அகழ்ந்தெடுக்கப்பெற்ற தொல் பொருள்கள், மேலை நாடுகளுடனும், தொலை கிழக்கு நாடுகளுடனும் தமிழகம் கொண்டிருந்த வணிகத் தொடர்பையும், பண்பாட்டுறவையும் அறிந்து



கொள்வதற்குப் பெருந்துணை புரிகின்றன. சிந்து சமவெளியிற்கண்ட குறியீடுகளைப் போன்ற குறியீடு பொறிக்கப் பெற்ற மண்உருளை (தாயக்கட்டை), கி. பி. 4-5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமானியர் காசுகள், பித்தளை எடைக்கல், யவனர் தந்த நன்கலங்கள் ஆகிய தொல்பொருட்கள் அழகன்குளம் அகழாய்வில் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கல்வெட்டுப் பிரிவு :**

6. கல்வெட்டாய்வாளர்கள் ஆங்காங்கே ஊர்ப் புறங்களுக்குச் சென்று பழங் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் விரிவான ஆய்வு நடத்தியதில் 7,550 கல்வெட்டுக்கள் கண்டறிந்து படிக்கப் பெற்றன. சுமார் 2,000 கல்வெட்டுக்கள் பல்வேறு தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இப்பணியை மேலும் விரிவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

**ஆழ்கடல் அகழாய்வு :**

7. நமது மாநில அரசின் பெருமுயற்சியால் ஆழ் கடல் தொல்பொருளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல்லியல் துறையும், கோவா தேசியக் கடலாய்வு மையமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் ஆய்வு கள் நிகழ்த்தின. ஆய்வின் விளைவாகத் தரை தட்டிய கப்பல் ஒன்றும், சில கட்டடப் பகுதிகளும் கடலடி யில் 22 மீட்டர் ஆழத்தில் கண்டறியப்பெற்றன. கடற்கரையை ஒட்டிக் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் சில சிதைந்த பழங் கட்டடப் பகுதிகளும், கடற்கரையிலிருந்து சுமார் 4½ கிலோ மீட்டர் தொலைவில் கடலடியில் ஒரு கட்டடப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் முழு விவரங்கள் மேலும் ஆய்வில் உள்ளன. தரை தட்டிய கப்பலில் இரும்பு வளையமும், சில ஈயத் துண்டுகளும் காணப்படு கின்றன. இந்த ஈயத்துண்டில் ஒரு புறம் W. BLACKETT என்றும் மற்றொரு புறத்தில் 1792 என்றும் எழுதப் பட்டுள்ளன. ஆதலால், இக்கப்பல் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தரை தட்டிய கப்பலாகலாம் என்று உணரமுடிகிறது. வரலாற்றுத் தொன்மையை வரம்பிட்டு

அறியவும், இலக்கியக் குறிப்புகளை உறுதி செய்து தெளியவும் முற்படும் இவ்வரிய ஆழ்கடல் அகழாய்வு நெடுங்காலப் பணியாகவும் நினைந்து நினைந்து உறுதி கண்டுபிடிக்க வேண்டிய நிலைப்பணியாகவும் மலைப்பை உண்டாக்குகிறது. முன்னரே சில முறை முயன்று நின்றுபோன இப்பணியில் தனியார்வம் காட்டி இவ்வரசு ஊக்கியுள்ளது. பூம்புகார்ப் பகுதி கடலடியில் மறைந்தது போலவே இப்போது மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியின் கீழும் தரங்கம்பாடி வரையிலும் நிலப்பரப்பு புதைந்திருக்கலாம் என்றெல்லாம் புதிய ஊகங்களும் இப்போது கருத்துக்கு விருந்தாயமைந்துள்ளன. அவ்வகையில் கடலாய்வுத் திட்டம் தொடர்ந்து செயற் படுத்தப்படும்.

**தொல்பொருள் சேமிப்புப் பிரிவு :**

8. தொல்பொருள் அலுவலர்கள் இதுவரையில் கண்டறியப்படாத 4,000 தொன்மையான ஓலைச் சுவடிகளையும், அருங்காசுகளையும் திரட்டியுள்ளனர். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கொண்டு வரப்பெற்ற சுமார் 2,000 அரிய ஓலைச் சுவடிகள் வேதியியல் முறையில் காக்கப்பெறுகின்றன. மேலும் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் ஆகியவை சேகரிக்கப் பெற்று அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளன.

**கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் :**

9. முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும் (ஓராண்டுக் காலம்), கோடைக் காலப் பயிற்சியும் (மூன்று வாரம்) நடத்தப்பெற்றன. ஓராண்டுப் படிப்பில் முதுகலை பயின்ற மாணவர்களும், கோடைக் காலக் கல்வெட்டுப் பயிற்சியில் பள்ளி, கல்லூரி ஆசிரியர் களும் பயின்றனர்.

**சிறப்பு மிக்க கண்டுபிடிப்புகள் :**

10. பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள், நடு கற்கள், மதகுக் கல்வெட்டுக்கள் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் என முப்பத்தைந்து தொன்மங்கள் கண்டெடுக்கப் பெற்றன.



**பண்டைய ஓவியங்களைக் காக்கும் பணி :**

11. லக்னோவில் உள்ள 'இன்டாக்' உதவியுடன் இராமலிங்க விலாசத்தில் உள்ள பழமையான ஓவியங்களைக் காப்பதற்கு உரிய ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

**சிறப்புக் கண்காட்சி :**

12. அழகன்குளத்தில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொருட்களைப் பொதுமக்கள் பார்வையிடச் சிறப்புக் கண்காட்சி அமைக்கப்பெற்றது.

**அகழ்வைப்பகங்கள் :**

13. ஆறு அகழ்பொருள் வைப்பகங்களில் காட்சிப் பேழைகள், குறிப்பு அட்டைகள், சிற்பங்கள் முதலியன பொது மக்கள், பள்ளிக் குழந்தைகள் காண்பதற் கேற்ப பல்வேறு வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன. குளுமை நீர்க்கலன்கள், தகட்டுப்படப் பேழைகள் பொதுமக்களின் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளன. பதினைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற தொல் பொருட்கள் பொதுமக்கள் எளிதில் காணும் வகையில் அகழ்வைப்பகங்கள் உருவாக்கப் பெற்றுள் ளன. இந்திய மாநிலங்களுள் நெடும் பழமை வாய்ந்த பகுதிகள் சிலவும் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வகையில் பழந்தரைப் பகுதியாகக் கருதப்படும் பூண்டியில் தொல்மனை நினைவகம் ஒன்றை உருவாக்க அரசு கருதியுள்ளது.

**அச்சுப் பிரிவு :**

14. அச்சுப் பிரிவில் ''கல்வெட்டு'' என்னும் காலாண்டிதழ் அச்சிடப்படுகிறது. அழகன்குள அகழாய்வு, நாகப்பட்டின வரலாறு, குடந்தை மாமகச் சிறப்பு போன்ற சிற்றேடுகள் சிறப்பு வெளியீடுகளாக வெளியிடப்பெற்றுள்ளன. இராசராசன் அகழ் பொருள் வைப்பகம், ஆர்க்காடு அகழ்பொருள் வைப்பகம், தருமபுரி அகழ்பொருள் வைப்பகம், இராமலிங்க விலாசம் அகழ்பொருள் வைப்பகம் ஆகியவற்றின் வழிகாட்டி நூல்களும் வெளியிடப் பட்டுள்ளன.

**பழம்பொருட்கள் பதிவு :**

15. நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழம்பொருட்களைப் பதிவு செய்து காக்கும் முறையை இத்துறை செயற்படுத்தியுள்ளது. கோயிற் சிலைகள் அவ்வப்போது பதிவுகளின்படி ஒப்பு நோக்கிக் காக்கப்பெறுகின்றன.

**கல்வெட்டுக் கலைச் சொல்லகராதி :**

16. கல்வெட்டுக்களிலுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கல்வெட்டுக் கலைச் சொல்லகராதி தொகுக்கப்பெற்று வருகிறது. இதுவரை 3,000 சொற்கள் திரட்டப்பெற்று இடக்குறிப்பு, காலம் ஆகியுவை எழுதப்பெற்றுள்ளன.

**(ஊ) அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்**

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கும் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம், கர்னல் மெகன்சி, லாங்டன், பிரவுன் போன்ற மேனாட்டுப் பெருமக்களின் அரிய தொகுப்புகள் கொண்ட பெரிய நூலகமாகும். இந்நூலகம் படிப்படியாகப் பெருகித் தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி, உருது, அரபு, பாரசீகம், ஆகிய மொழிகளில் இலக்கியம், வரலாறு, மருத்துவம், கணிதம், சோதிடவியல், வானவியல், மெய்யியல், இசையியல் முதலிய துறைகளில் 70,000 சுவடிகளைக் கொண்டுள்ளது. மேலும் 22,887 அரிய நூல்களும் இங்கு காக்கப்பெறுகின்றன. அச்சில் வராத ஓலைச் சுவடிகளை அச்சிடுதலும், ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்குப் பயன்பட உதவுவதும், இந்நூலகத்தின் பணிகளாகும். தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, அரபு, பாரசீகம் ஆகிய மொழிகளில் 207 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஓலைச் சுவடிகளின் பெயர் விவரம் பற்றிய விவரச் சுவடிகள் என்ற வகையில் இதுகாறும் 143 விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை வெளிவராத ஓலைச் சுவடிகளை நூலாக வெளிக் கொணரும் பணியும் இந்நூலகப் பணிகளில் அடங்கும். ''ஊர் வரலாறு'' என்னும் நூல் அச்சில் உள்ளது.



**(எ) அரசு அருங்காட்சியக இயக்ககம்**

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும், பெருமையும் பூண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு, பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இக்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல்பழங்காலப் பொருள்களையும் பேணிக் காக்கிறது. பல்வேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள், ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்த பெருமை இந்த அருங்காட்சியகத்திற்குரியது.

**மாவட்ட அருங்காட்சியகங்கள் :**

2. மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி 1979 ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயமுத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் திருநெல்வேலி-கட்டபொம்மன், தருமபுரி, திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களில் (கொடைக்கானல்) அருங்காட்சியகங்களைத் தொடங்கவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டம் கிருட்டினகிரியில் காட்சியக அமைப்புப் பணிகள் முடிந்து திறக்கப்படவுள்ளது.

**சிறுவர் அருங்காட்சியகம் :**

3. அருங்காட்சியக வளாகத்தில் அமைந்த சிறுவர் அருங்காட்சியகம் வரலாற்று மாட்சி, வனப்புமிகு பொம்மைக் காட்சிகள், இயற்கை எழில், இயற்பியல், அறிவியல் புதுமைகள் தொடர்பான கூடங்களைக் கொண்டதாகும். கலை இயற்கையியல் தொடர்

புடைய பொருண்மைகளைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளச் செயல்முறை வடிவுகள் அமைக்கப் பட்டுள்ளன. சிறுவர்கள் தாமே இயக்கி அறியும் வண்ணம் மின்னணு விளையாட்டுக் கருவி, சுழலாடி வழியாக மின் ஆக்கம், வளிமத் தந்திக் கருவிகள் முதலியன சிறுவர் அருங்காட்சியகத்தில் நிறுவப் பட்டுள்ளன. தொல்பழங்காலத்தே இருந்து மறைந்த பெருவிலங்கின இழைம வடிவங்கள் காட்சியக முகப்பு வெளியில் நிறுவப்பட்டுள்ளன.

**கூடங்கள் சீரமைப்புப் பணி :**

4. நாற்புறமும் காணும் வகையில் திருத்திய படிமங்களைச் சீரமைக்கும் முதற் கட்டப் பணி முடிந்து இரண்டாம்நிலைப் பணி நடந்து வருகின்றது. பாலூட்டிகள் கூடத்தை மாற்றியமைக்கும் பணியும் முடிக் கப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் பிற காட்சிய கங்களை மறுசீரமைப்புச் செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது. புவியியற் கூடம் புதுப்பிக்கப்பட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

**பண்பாட்டுப் பலகணி :**

5. திங்கள் தோறும் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சி நடந்து வருகிறது. இசை, நாட்டியம், ஓவியம், கைவினைக் கலை, இலக்கியம் முதலிய துறைகளில் புகழ் வாய்ந்த கலைஞர்களும், அறிஞர்களும் தாமாற்றிய பணிகளைக் காட்சியுரைகளாக விவரிக்கின்றனர். மாவட்ட அருங்காட்சியகங்களிலும் இத்தகைய நிகழ்ச் சிகள் நடைபெறுகின்றன. இவ்வாண்டு முதல் இக்கலை நிகழ்ச்சிகளைக் கலை-பண்பாட்டு இயக்ககத்தோடு இணைந்து, சிறப்பான முறையில் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளது.

**கல்விப் பணிகள் :**

6. இயற்கையியல், மரபுச் சிறப்பு, கலையியல் பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள், ஆர்வலர் களிடையே தூண்டும் வகையில் அருங்காட்சியகங்களில் சிறப்புக் கண்காட்சிகள், வாரத் திரைக்காட்சிகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.



**தனியார் அருங்காட்சியகத்திற்கு நிதியுதவி :**

7. மாவட்டங்களில் அமைந்த அரசு அருங்காட்சிய கங்கள் தவிர, தனியார் பேணி வரும் அருங்காட்சியகங் களுக்கும், அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வகையில் மதுரையிலுள்ள அண்ணல் காந்தி அருங்காட்சியகத் திற்கு ஆண்டொன்றுக்கு இலட்ச ரூபாய் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

**வருங்காலத் திட்டங்கள் :**

8. இந்நிதியாண்டில் சென்னையிலுள்ள புகழ்வாய்ந்த அருங்காட்சியகக் கலையரங்கைச் சீர்வளியரங்காக மாற்றுதல், சேகரித்த கலைச் செல்வங்களைக் காட்சிக்கு நிறுவக் கட்டட விரிவாக்கம், அருங்காட்சியக வளாகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கத் தனியார் ஒத்துழைப்பை நாடுதல், அருங் காட்சியகத்தின் சிறப்புக்களைச் சுற்றுலா வளர்ச்சித் துறையினரோடு இணைந்து வெளியீடுகள், விளம் பரங்கள், படங்கள் வாயிலாகப் பரப்பி பொதுமக்கள் கவனத்தை ஈர்த்தல், புகழ் பெற்ற கலைஞர்கள், கைவினைஞர்கள், ஓவியர்களின் கண்காட்சிகளை அவ்வப் போது நடத்துதல், தஞ்சை ஓவியக் கூடம் என்ற தனிப் பிரிவு அமைத்தல், அருங்காட்சியகத்திலுள்ள காட்சிப் பொருட்களின் விவரங்களை ஆவணப்படுத்தி வகைப் படுத்துதல், அருங்கலைச் செல்வங்களின் உருவங்களை இழைம வடிவாக்கி விற்பனைக்கு வழங்குதல், படிமங் களின் பட்டியலைத் தொகுத்தல் ஆகிய பணிகள் திட்ட மிடப்பட்டுள்ளன.

## (ஏ) கலை-பண்பாட்டு இயக்ககம்

கலைவளம் பொலிந்த நம் தமிழகத்தில் தனியார் அமைப்புகளுடன் அரசின் பல்வேறு நிறுவனங் களும் அமைப்புகளும் கலைப்பணிகளை ஆற்று கின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம், அரசு இசைப் பயிற்சி மையங்கள், அரசு ஓவிய கைவினைத் தொழிற் கல்லூரிகள், அரசு கட்டடச் சிற்பக் கல்லூரி ஆகியன கலைப் பணிகளுக்கு

உரிய ஆக்கமும், ஊக்கமும் வழங்குகின்றன. கலை-பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் இவ்வமைப்புக்களை ஒருங்கிணைத்துப் புதிய இயக்ககத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற அரசின் அறிவிப்புக்கேற்ப 1991, திசம்பர்த் திங்களில் கலை-பண்பாட்டு இயக்ககம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் :**

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மைய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மைவாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து மேம்பாடடையச் செய்யவும், மாநில அரசால் தோற்றுவிக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற கலை நிறுவனமாகும். இயல், இசை, நாடகம், நாட்டியம், ஊரகக் கலைகள் ஆகியவற்றை நமது மாநிலப் பண்பாட்டு மரபுப் போக்கில் இம்மன்றம் போற்றி வளர்த்து வருகிறது.

2. இந்திய மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுக் கொள்கொடைத் திட்டத்தின்படி பிற மாநிலங்களுக்குக் கலைக் குழுக்களை அனுப்பியும், பிற மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று நிகழ்ச்சிகள் அமைத்து பண்பாட்டை மேம்படுத்துதல், நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவி வழங்கல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கல், திறனார்ந்த இளங்கலைஞர்களை ஊக்குவித்தல், கலைத்துறைச் சாதனையாளர்களைக் கண்டறிந்து ' கலைமாமணி ' விருது வழங்கிப் போற்றுதல், பண்பாட்டை மேம்படுத்தும் கருத்தமைந்த நாடகங்களை உருவாக்கத் தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு மானியம் வழங்குதல், அருங்கலை நூல்களை வெளியிட நிதியுதவி அளித்தல், கலைப்பேரறிஞர்களின் நினைவு விழாக்களை நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி வழங்குதல், தொன்மைக் கலைக் கூறுகளை வருங்காலப் பயன்பாட்டிற்குகந்த வகையில் ஆவணமாக்குதல், கவின்மிகு நுண்கலை, மரபு வழி ஊரகக்கலை ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல், அரசு இசைப் பயிற்சி மையங்கள், தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றில் பயிலும் திறமிக்க மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்குதல்—எனக்



கலை வளர்க்கும் நோக்கிலமைந்த பன்முகப் பணிகளை இம்மன்றம் ஆற்றுகின்றது. மேற்குறித்த போற்றத்தக்க திட்டங்களை முறையாகவும் திறனோடும் கடந்த 36 ஆண்டுகளாக இம்மன்றம் செயற்படுத்தி வருவது குறிக்கத்தக்கதாகும்.

3. கலைத் துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்க கலைஞர்களைப் பாராட்டுகின்ற வகையில் இம்மன்றத்தால் ' கலைமாமணி ' விருது வழங்கப்படுகிறது. இதுவரை 791 கலைஞர்களுக்கு ' கலைமாமணி ' விருதுகள் வழங்கப் பெற்றுள்ளன. புகழொடு பொலிந்து மறைந்த இருநூறு கலைப் பேரறிஞர்களின் திருவுருவப் படங்கள் ' கலைமாமணி ' விருதுகள் வழங்கும் விழாவின்போது திறந்து வைக்கப் பெற்று, காக்கப் பெறுகின்றன. ' கலைமாமணி ' விருது பெற்ற நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 147 கலைஞர்களுக்கு ரூபாய் 1,000-மும், 1990-91, 1991-92 ஆகிய ஆண்டுகளில் 8 கலைஞர்களுக்கு ரூபாய் 5,000-மும் பொற்கிழியாக இதுவரையில் வழங்கப் பெற்றன. கலைத் தொண்டாற்றும் தனியார் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டு வரும் நாடகக் குழுக்களையும், மன்றம் பாராட்டிக் கேடயம் வழங்கி வருகின்றது.

4. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், இந்தியப் பண்பாட்டு மரபினை பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ள உதவும் வகையிலும் இம்மன்றம் மைய சங்கீத நாடக அகாதமியுடன் இணைந்து, கடந்த 20 ஆண்டுகளாக மாநிலங்களுக்கிடையேயான பண்பாட்டுக் கொள்கொடைத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஒவ்வோராண்டும் கலைக் குழுக்களைத் தமிழகத்திலிருந்து மூன்று மாநிலங்களுக்கு கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அனுப்புகிறது; மூன்று மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு கலைக் குழுக்களை வரவழைத்து, மாவட்டாட்சியர்களின் உதவியுடன் நிகழ்ச்சிகளை நடத்துகிறது. இவ்வாண்டு இலட்சத் தீவு, அரியானா, குஜராத் ஆகிய மாநிலங்களுக்குக் கலைக்குழுக்களை அனுப்பவும், அரியானா, குஜராத், பீகார் ஆகிய மாநிலங்களிலிருந்து கலைக் குழுக்களை வரவேற்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[1992 மார்ச் 25

5. வாழ்நாள் முழுவதும் வளர் கலைக்குத் தொண்டாற்றி நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெறுகிறது. 2,767 கலைஞர்கள் இந்நிதியுதவி பெறுகின்றனர். திங்களொன்றுக்கு ரூ. 250 ஆக இருந்த இந்நிதியுதவியை 26-1-1992 முதல் ரூ. 400 ஆக இவ்வரசு உயர்த்தியுள்ளது. இச்சீரிய திட்டத்தினை இந்திய மாநிலங்களுள் தமிழ்நாடு மட்டுமே பெரிய அளவில் செயற்படுத்தி வருவது குறிக்கத்தக்கதாகும்.

6. மறைந்த புகழ்மிக்க கலைஞர்களின் குடும்ப நலனுக்காக ரூ. 3,000 நிதியுதவியாக மன்றத்தால் வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 44 குடும்பங்கள் இந்நிதிப் பயன் பெற்றுள்ளன.

7. மறைந்து வரும் நம் மரபு வழி ஊரகக் கலைகளின் சிறப்பினை இளைய தலைமுறையினர் கண்டுணரும் வகையிலும், வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கும் வகையிலும் ஆண்டுதோறும் ஊரகக் கலை விழாக்கள் நடத்தப் பெறுகின்றன. 1991-92 இல் நாகர்கோவிலில் ஊரகக் கலை விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு திரைப்பட-தொலைக்காட்சித் தொழில் நுட்ப நிறுவனம், அரசு இசைப் பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் பயிலும் வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை மன்றத்தால் வழங்கப்படுகிறது.

9. சிறந்த தமிழிலக்கியத்திலுள்ள சீரிய காட்சிகளை நாடகமாக அரங்கேற்றும் தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு அரசு ரூ. 10,000 மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்படி இதுவரை பல நாடகக் குழுக்கள் பயனடைந்துள்ளன. நலிந்து வாடும் தொழில்முறை நாடகக் கலைஞர்களை ஊக்குவிக்கு முகத்தான் 'பாரி பெற்ற பைங்கிளிகள்' எனும் வரலாற்று நாடகம் மன்றத்தினால் தயாரிக்கப்பட்டு மே 1991 இல் அரங்கேற்றப் பெற்றது. இதற்காக அரசு ரூபாய் ஓரிலக்கத்தை நல்கையாக வழங்கியது.



1992 மார்ச் 25]

10. கலையைப் போற்றிப் புகழால் உயர்ந்த கலைப் பேரறிஞர்களான கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாச சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், டி. என். இராசரத்தினம் ஆகியோரின் பிறந்த நாள்களை மன்றம் ஆண்டுதோறும் கொண்டாடுகிறது. இவ்வாண்டில் சென்னையில் இக் கலைப் பேரறிஞர்களின் விழாக்களை மன்றம் நடத்தியது.

11. தமிழக மரபு வழிக்கலையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவற்றைப் பதிவு செய்யும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்திலுள்ள புகழ் வாய்ந்த வாய்ப்பாட்டுக் கலைஞர்களின் இசையையும் ஒலியிழையில் பதிவு செய்ய மன்றம் கருதியுள்ளது.

12. பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த புகழ்மிக்க கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை நூலாக வெளியிடவும் கருதப்பட்டுள்ளது.

13. தமிழ்நாட்டின் அரிய கலை, பண்பாடு தொடர்பான நூல்களை வெளியிடுவதற்கென ஆண்டுதோறும் மானியம் வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 88 நூல்களை வெளியிட மன்றம் நிதியுதவி அளித்துள்ளது.

14. பரதநாட்டியம், இசை ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளம் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அக்கலைஞர்களின் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தனிப்பட்ட கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி. தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு சிறந்த கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. 1991-92 இல் கலை நிகழ்ச்சிகளை 11 கலை நிறுவனங்களின் மூலம் நடத்துவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் 35 கலைஞர்கள் வல்லுநர் குழுவினால் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர். இதற்கென அரசு ரூ. 1.5 இலட்சம் சிறப்பு மானியமாக வழங்கியுள்ளது.

15. அரசின் ஆய்விலுள்ள திட்டங்கள் வருமாறு :—

1. நாட்டுப்புறக் கலைக் குழுக்கள், கலைஞர்களின் நைந்து போன அரங்காடை அணிகலன்களுக்குப் பதிலாக புதிய அரங்காடை அணிகலன்கள் வாங்குவதற்கு மானியம் அளித்தல்.

2. அரிய, புகழ் மிக்க கலை வடிவான பரத நாட்டிய நட்டுவாங்கத்தில் பயிற்சி பெற விரும்பும் இளங்கலைஞர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கல், தமிழ்ப் பழங்கலைகள், தமிழிலக்கியம், தமிழ்ப் பண்பாட்டு மரபு ஆகியவற்றை எடுத்தியம்பும் புதிய தமிழ் மேடை நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்ற முன்வரும் ஐந்து தொழில் முறை நாடகக் குழுக்களுக்கு ரூ. 20,000 வீதம் மானியம் வழங்கல்.

16. மேற்குறித்த திட்டங்களைத்தவிர, நாடக விழாக்கள் நடத்துதல், பல்வேறு கலைகள் குறித்த சொற்பொழிவுகளும், காட்சிகளும் நடத்துதல் போன்ற குறிப்பிடத்தக்க திட்டங்களையும் மன்றம் மேற்கொண்டு வருகிறது. பழங்கலைகளைக் காத்துப்பேண வேண்டியதன் இன்றியமையாமையையும் முக்கியத்துவத்தையும் குறித்த விழிப்புணர்ச்சியை மக்களிடையே மன்றம் தோற்றுவித்து வருகிறது.

**தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு :**

தமிழ் நாட்டில் ஓவிய, சிற்பக் கைவினைத் தொழிற் கலை வளர்ச்சி தொடர்பாக மைய லலித கலா அகாதமியுடன் சில இடங்களில் இணைந்தும் செயற்படும் நிலையில் தமிழக அரசால் 1975 இல் தோற்றுவிக்கப்பட்ட கைவினைக் கலை மன்றமாகிய ஓவிய நுண்கலைக் குழு, கலை வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறது.

2. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் அரிய படைப்புகளின் வாயிலாகக் கலைச்சூழல் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்குவதோடு, மக்களிடையே கலையார்வத்தை வளர்க்க அனைத்து மாவட்டங்களிலும் கலைக் காட்சிகள், கலை வல்லுநர்களின் செயல் விளக்கப்



பொழிவுகள், மாணவர்களிடையே ஓவியப் போட்டிகள், பயிலரங்குகள் ஆகியவற்றை நுண்கலைக் குழு நடத்தி வருகிறது.

3. தகுதி வாய்ந்த திறமிக்க இளங்கலைஞர்களின் கலைத் திறங்களைக் கண்டறிவதோடு, வாய்ப்பில்லாதோருக்கு வாய்ப்பு வழங்கியும் கலைத் திறமைகளை வெளிப்படுத்தவும், கலை நுணுக்கங்களை மேம்படுத்திக் கொள்ளவும், நடத்தப்படும் இளங்கலைஞர்களின் பயிலரங்குகளால் பயன்விளைந்துள்ளன. கலையார்வலாளர்களுக்கும் ஓவியம் பயிலும் இளங்கலைஞர்களுக்குமாக இவ்வாண்டில் ஈரோடு, கோயமுத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் பயிலரங்குகள் நடந்தன. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காக, கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஓவிய ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சியையும் இக்குழு நடத்துகிறது.

4. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை ஆண்டுதோறும் காட்சியரங்காக அமைத்து அரிய படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் வல்லுநர் குழுவால் சிறந்த ஓவிய, சிற்பப்படைப்பாளிகள் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் "கலைச் செம்மல்" விருது வழங்கப் பெறுகின்றனர். இளங்கலைஞர்கள் ஓவிய, சிற்பக் கலைகளில் ஆய்வு மேற்கொள்ளவும், இராசத்தானிலுள்ள பனஸ்தாலி நகருக்குச் சென்று தனிப் பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப் பெறுகிறது. ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓவிய நுண்கலைக் குழு கலைப்படைப்புகளை குழுவின் தனியரங்கச் சேமிப்புக்காக வாங்கி வருகிறது. பல்வேறு கலைபபிரிவுகளைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம் அமையும் வண்ணம் ஆண்டுதோறும் கலைஞர்கள் உலா அரங்கையும் நடத்தி வருகிறது. தகுதி வாய்ந்த ஓவிய, சிற்பப் படைப்பாளர்கள் தாமே காட்சியரங்கு நடத்தவும் குழு நிதியுதவி வழங்குகிறது. மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சியும் அவ்வப்போது நடத்தப்படுகின்றது. "நுண்கலை" என்னும் அரையாண்டுத் திறனாக்க இதழ், குழுவால் வெளியிடப்படுகிறது.

5. நலிந்த கலைஞர்கள் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய, சிற்பத் துறையில் சிறப்புற்று மிளிரும் மூத்த கலைஞர்களுக்கும் இளங்கலைஞர்களுக்கும் மைய அரசு வழங்கும் விருதுத் தொகை பெறுவதற்காகவும் விண்ணப்பங்களைக் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் உரைகளையும் செயல் விளக்கங்களையும் இக்குழு காணொலிப் பதிவும் செய்துள்ளது.

6. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு இதுகாறும் புகழ் பெற்ற 112 கலை வல்லுநர்களுக்கு விருதுகளையும் 23 கலை மேதைகளுக்குக் ''கலைச் செம்மல்'' விருதுகளையும் வழங்கியுள்ளது. ஓவியக் கலைக் கல்லூரிகளில் கலை பயிலும் 236 இளங்கலைஞர்களுக்கு ஓவியப் பணி மேற்கொள்ளவும் சிறப்புப் பயிற்சி பெறவும், படிப்புதவித் தொகையும் வழங்கியுள்ளது. இவ்வாண்டில் புதுதில்லி, சண்டிகார், குஜராத் ஆகிய மாநிலத் தலைநகர்களில் கலைப்படைப்புக் காட்சிகளையும் குழு நடத்தியது. இவ்வாண்டு பம்பாயில் மைய லலித கலா அகாதமி நடத்திய ஐந்தாம் தேசியக் கலை விழாவில் ஓவிய நுண்கலைக் குழு பங்கு கொண்டதோடு சிறந்த காட்சிக் கூட அரங்கிற்கான பரிசையும் இரண்டாம் முறையாகப் பெற்றுள்ளது.

7. மரபுசான்ற ஓவியங்களும், சிற்பங்களும் நடைமுறைக் கால ஓவிய வரைவுகளும் இடம் பெறும் வகையில் ஓவியக் கலையரங்கை நீலகிரி மாவட்டத் தலைநகராகிய உதகையில் அமைப்பது தொடர்பான பணிகளை ஓவிய நுண்கலைக் குழு மேற்கொண்டுள்ளது. அவ்வண்ணமே மதுரையிலும் ஓவியக் கலையரங்கு இவ்வாண்டு அமைக்கப் பெறும்.

**ஜவகர் சிறுவர் இல்லம் :**

ஜவகர் சிறுவரில்லம், 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பாரதப் பிரதமர் ஜவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு வழங்கிய தொகை ரூ. 15.73 இலட்சத்தைக் கொண்டு அரசு தோட்டத்திலமைந்த காந்தி இல்லத்தில் இந்நிறுவனம் செயற்படுகிறது.



2. ஏட்டுக் கல்வியோடு, ஆக்கத் திறமைகளையும் மாணவர்கள் தாமே வளர்த்து வெளிப்படுத்தும் வகையிலும், தன் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளும் நெறியிலும் பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங்களையும், பயிற்சிகளையும், சிறுவர்களுக்குப பயிற்றுவிக்கும் இல்லமாக இந்நிறுவனம் பணியாற்றுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் சென்னை ஜவகர் சிறுவர் இல்லத்தில் 725 மாணவர்களும், மதுரை, புதுக்கோட்டை பொன்புதுப்பட்டியில் அமைந்த கிளை நிறுவனங்களில் முறையே 250, 150, 100 மாணவர்களும் சேர்ந்து பயன்பெறுகின்றனர்.

3. ஜவகர் சிறுவரில்லத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியர் பெங்களூரில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் பங்கு கொண்டனர். புதுதில்லியில் நடைபெற்ற '' இராக்கெட் தொழிற் பட்டறையில் '' இப்பள்ளியின் மாணவர்கள் மூவர் கலந்து கொண்டனர். தென்னகப் பண்பாட்டு மைய நிதியுதவியுடன் கொடைக்கானலில் நடைபெற்ற ' தொழிற் பட்டறை'யில் மதுரை, புதுக்கோட்டை, கொடைக்கானல், சென்னை ஆகிய பகுதிகளைச் சார்ந்த எழுபது மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். கட்டாக்கில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் இந்நிறுவன மாணவியர் பங்குபெற்றுப் பரிசுகள் பெற்றனர். புதுதில்லி பாலபவன் சங்கத்தில் நடைபெற்ற தேசிய சுற்றுப்புறச் சூழல் மாநாட்டிலும், தேசிய குழந்தைகள் விழாவிலும் இந்நிறுவன மாணவர்கள் கலந்து கொண்டனர். சென்னையில் நடைபெற்ற ' ஒருமைப்பாட்டு வாரத் தொடக்க விழா '', புதுக்கோட்டையில் நடைபெற்ற '' விடுமுறைப் பயில்களம் '', புதுதில்லியில் நடைபெற்ற '' குடியரசு நாள் அணிவகுப்பு '', கோவா மாநிலத்தில் நடைபெற்ற '' மாதிரி விண்வெளிக்கோள் பட்டறை '' ஆகியவற்றில் இந்நிறுவன மாணவ மாணவிகள் பங்கு கொண்டு பயிற்சி பெற்றதோடு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.

4. 1983 ஆம் ஆண்டு முதல் சென்னையில் நடைபெறும் ''குடியரசு நாள் அணிவகுப்பில்'' இச்சிறுவரில்ல மாணவர் பங்கு கொண்டு பத்தாண்டுகளாகத் தொடர்ந்து பரிசு பெற்று வருவது குறிக்கத் தக்கதாகும்.

5. கடந்த 12 ஆண்டுகளாக வைப்பு நிதி வட்டித் தொகையிலேயே இயங்கி வந்த இவ்வில்லத்திற்கு ஆண்டுதோறும் ஓரிலக்கம் ரூபாய் தொடர் மானியமாக வழங்க அரசு ஒப்பளித்துள்ளது.

**அரசு இசைப்பயிற்சி மையங்கள் :**

சென்னையிலும், மதுரையிலும் அரசு இசைப் பயிற்சி மையங்கள், குரலிசையையும், கருவியிசையையும், ஆடற்கலையையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. கடம், கஞ்சிரா, நுகர் சங்கம், நட்டுவாங்கம், முதுகலை இசைக் கலைமணி ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கப் பெற்றுப் பயிற்சியளிக்கப் பெறுகிறது. ஊர்ப்புறக் கலைகளைப் பயிற்றுவிக்கப் புதிய வகுப்பும் தொடங்கப் பெற்றுள்ளது.

2. சென்னை, மதுரை, இசைப் பயிற்சி மையங்களில் நாதசுரம், தவில், கடம், கஞ்சிரா, நுகர் சங்கம், நட்டுவாங்கம் ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்கள் அரசின் உதவித் தொகை பெறுகின்றனர். முறையான வகுப்புகளில் 312 மாணாக்கர்களும், மாலைநேர இசை வகுப்புகளில் 182 மாணாக்கர்களும் இசை பயில்கின்றனர். புகழ் வாய்ந்த இசைப் பேராசிரியர்கள் தனி நிலையில் பெருந்தகையாளர்களாக அமர்த்தப்பட்டு மாணவர்களுக்கு இசை பயிற்றுவித்து வருகின்றனர். புதிதாக மாலைநேர இசைப் பயிற்சி மையம் தொடங்குவது, மாலைநேர இசைப் பயிற்சி மையங்களில் பரத நாட்டிய வகுப்பு நடத்துவது, மாணவர்களுக்காக இசைக் கருத்தரங்குகள், இசைப்போட்டிகள் உள்ளிட்ட விழாக்கள் நடத்துதல் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ள பணிகளாகும்.



இயல், இசை, நாட்டியம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணாக்கரைத் தேர்ந்தெடுத்து அவர்களை அரங்கேற்றும் வகையில் ''முத்தமிழ் விழா''வும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை இசைப் பயிற்சி மையத்தில் குரலிசை, கருவியிசை, இசையியல், ஆடற் பயிற்சி, இசையாசிரியர் பயிற்சி ஆகிய துறைகள் அமைந்துள்ளன. தமிழிசையின் தனிமாட்சியையும், கருநாடக இசையில் பழந்தமிழ்ப் பண்கள் கலந்து நிலவும் அமைதியையும், இசையிலக்கண விளக்கங்களையும் மாணாக்கர்கள் அறிந்து கற்கும் வகையில், பாட வகையிலும், பயிற்சி நிலையிலும் தொடர்ந்து இசைப் பயிற்சி மையங்கள் சிறப்புறச் செயற்பட்டு வருகின்றன. சீர்காழியில் தமிழிசை மூவர் விழாவும், இசைப் பயிற்சி மைய மாணவிகளின் ஆடல் அரங்கேற்ற விழாவும் நடத்தத் திட்டமிடப் பெற்றுள்ளன.

**அரசு ஓவிய-கைவினைத் தொழிற் கல்லூரிகள் :**

சென்னையில் படைத்துறை மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் அலெக்சாண்டர் அன்டர் 1850 இல் ஓவிய-கைவினைத் தொழிற் பள்ளியைச் சென்னையில் தோற்றுவித்தார். புகழ்பொலிந்த இந்த ஓவிய-கைவினைத் தொழிற் பள்ளியை 1852 இல் அரசு ஏற்றுக்கொண்டது. கல்வித்துறை, தொழில் வணிகத் துறைகளின் பொறுப்பில் இயங்கி வந்த ஓவிய-கைவினைத் தொழிற் பள்ளி 1963 இல் கல்லூரி நிலைக்கு மேம்படுத்தப்பட்டது. சென்னையிலும், குடந்தையிலும் இக்கல்லூரிகள் அமைந்துள்ளன.

2. சென்னை, குடந்தையில் அமைந்த ஓவிய-கைவினைத் தொழிற் கல்லூரிகளில் வண்ணம், சிற்பம், திரைக்கலை வடிவமைப்பு, ஆடை அணிகலன் தொழிலியல் வடிவமைப்பு, தொழிலியற் சுடுமண் வடிவமைப்பு ஆகிய பிரிவுகளில் பட்டக் கல்விக்குரிய பயிற்சிகள் அளிக்கப்பெறுகின்றன. சென்னை ஓவியக் கைவினைத் தொழிற் கல்லூரியில் 80 மாணவர்களும், குடந்தைக் கல்லூரியில்

40 மாணவர்களும் ஆண்டுதோறும் பயிற்சிக்கெனச் சேர்க்கப் பெறுகின்றனர். மாணவ, மாணவியர், தாமே விரும்பி ஆர்வத்தோடு சேர்ந்து அருங்கலைப் பயிற்சி பெறும் வாய்ப்புப் பெற்றிருப்பது குறிக்கத் தக்கதாகும்.

**மாமல்லை-கட்டடச் சிற்பக் கல்லூரி :**

கல்லெல்லாம் கலைபேசும் கலைப்பெருமை வாய்ந்த மாமல்லையில், மரபு சான்ற சிற்பங் களை வடித்தல், செப்புத் திருமேனிகள் வடிவமைத்தல், கட்டடக் கலைப் பயிற்சி ஆகிய கலைப் பிரிவுகளில் பட்டக் கல்விக்குரிய பயிற்சிகளை மாணவர்கள் பெறுகின்றனர். ஆண்டுதோறும் 40 மாணவர்கள் பயிற்சிக்கெனச் சேர்க்கப்பெறுகின்றனர். இக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கைவினைத் திறன் பாரெங்கும் பாராட்டப்பெறுகிறது. கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடத்தையும், வகுப்பறை களையும் புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. ஓவிய-கைவினைத் தொழிற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் படிப்புதவித் தொகை வழங்கப்பெறுகிறது. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவும், இக்கல்லூரிகளில் பயிலும் தகுதிவாய்ந்த 28 மாணவக் கைவினைக் கலைஞர்கள் ஓவியப் பணி மேற்கொள்ளவும் சிறப்புப் பயிற்சி பெறவும் ஆண்டுதோறும் படிப்புதவித் தொகை வழங்கி வருகிறது.

இவ்வாறு இத்துறைகள் ஆட்சிமொழிச் செயலாக்கம், கலைநலம், மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்த்துக் காத்துப் பரப்பும் விழுமிய பணிகளில் முறையோடு ஆற்றிவருகின்றன.

164971
-600 008.